

# மண்ணின் கனவுகள்

துை வைத்திலிங்கம்

# “மண்ணின் கனவுகள்”

## து. வைத்திலிங்கம்

வெளியீடு:

யாழ் இலக்கிய வட்டம்

"மண்ணின் கனவுகள்"
சிறுகதைத் தொகுதி

★ முதற்பதிப்பு: யூன் 1994.

★ பிரசுர ஏற்பாடு: கல்யாணி பிரசுரம்
"கலைச்சோலை"
செம்பியன் லேன்
கொக்குவில்.

★ வெளியீடு: யாழ் இலக்கிய வட்டம்

★ அச்சுப்பதிப்பு: அபிராமி அச்சகம்
செம்பியன் லேன்
கொக்குவில்.

★ ஓவியம்: தயா

# முன்னுரை

திரு. துரையப்பா வைத்திலிங்கம் அவர்களின் ''மண்ணின் கனவுகள்'' என்ற இச் சிறுகதைத் தொகுதியை முழுமையாகப் படித்து முடிக்கும்போது மனதில் எஞ்சி நிற்கின்ற உணர்வுகள்- ஏக்கம், தவிப்பு துயரம், எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மண்ணின் கீழ்மட்ட மக்களை அழுத்தி நிமிரவிடாது அமுக்குகின்ற அயோக்கியத்தனங்களின் பல்வேறு வடிவங்கள் சமூகத்தின் சிந்தனைக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் சத்திய ஆவேசம் இதயத்தைக் கனக்க வைக்கின்றது. நல்ல சிறுகதைகளின் சமூகப்பயன் அதுவெனவே நான் கருதுகிறேன்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக ஆக்க விலக்கியத் துறையில் ஈடுபட்டுவருபவர் து. வைத்திலிங்கம். சிறுவயதிலிருந்தே தன் ஆளுமையை அவர் வளர்த்துக்கொண்டதை நானறிவேன். யாழ் இந்துக்கல்லூரியில் சிந்தனைத்தெளிவும் ஆற்றலும் வாய்ந்த ஆசிரியப் பெருமக்களான மு. கார்த்திகேசன், அற்புதரட்ணம், ஏரம்பமூர்த்தி, சிவராமலிங்கம், கணேசரட்னம் போன்றவர்களிடம் கல்விகற்கின்ற தகுதி அவருக்கிருந்தது. கல்விகற்கின்ற காலத்திலேயே நிறைய வாசிக்கின்ற பழக்கமுடையவர். மற்றவர்களையும் நல்ல நூல்களை வாசிக்கச் செய்யும் இயல்பினர். பாடசாலை நாட்களில் நல்லதொரு நடிகனாகவும் விளங்கியவர்.

பொது நிறுவனங்களில் சமூகப்பணிசெய்யும் நோக்குடன் இணைந்து கொள்பவர்கள் சமூகவட்டத்தில் பல்தரத்திலும் உயர்வர் என்பதற்கு து. வைத்திலிங்கம் அங்கத்தவராக இணைந்து செயற்பட்ட கலாஜோதி சனசமூகநிலையம் (கலாஜோதி இளைஞர் ஒன்றியப்) உருவாக்கியவர்கள் தக்க உதாரணமாவர்.

கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் அவர்களின் தலைமையில் உருவாகிய கலாஜோதி சனசமூக நிலையம் இன்று இலங்கையின் உயர்நிர்வாகிகளை உருவாக்கித் தந்திருக்கின்றது.

யாழ்ப்பாணப் பிரதேசச செயலாளராக விளங்கும் கலாநிதி க. குணராசா, உள்ளூராட்சி உதவி ஆணையாளராக விளங்கும் சுந்தரம் டிவகலாலா, மாலைதீவுகளின் உயர் ஸ்தானிகராக விளங்கும் சி. பூலோகசிங்கம், சண்டிலிப்பாய் பிரதேசச் செயலாயளராக விளங்கும் இந்த நூலாசிரியர் து. வைத்திலிங்கம் ஆகியோர் ஒரே சுற்றாடலில் பிறநது வளர்ந்து இச்சனசமூக

நிலையத்தில் தம் நிர்வாக ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்கள். நண்பன் து. வைத்திலிங்கம் மாணவனாக விளங்கிய காலத்திலேயே நிறைய வாசிப்பதிலும் கற்பதிலும் அதேவேளை பொதுப்பணிகளில் தளராது ஈடுபடுவதிலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

திரு. து. வைத்திலிங்கத்தின் எழுத்துப்பணிக்கு அவரது சமூக அவதானிப்பு எவ்வளவு தூரம் உதவியிருக்கின்றது என்பதை நானறிவேன். வெற்றிபெற்ற இலக்கியப் படைப்புக்கள் அவற்றைப் படைத்தவர்களின் அவதானிப்பின் திறனில் பெரிதும் தங்கியிருக்கின்றமையை மறுப்பதற்கில்லை. து. வைத்திலிங்கத்தின் சிறுகதைகளில் நுணுக்கமான அவதானிப்பினைக் காணமுடிகின்றது. இத்தொகுதியிலுள்ள கிணறு, எங்கே போகிறோம்? தீர்ப்பு எனபனவற்றில் ஆசிரியரின் அவதானிப்புச் சிறப்பினை நன்கு காணமுடிகிறது. அதனால் இந்த மூன்று சிறுகதைகளும் இத்தொகுதியில் மிகச் சிறப்பானவையாக அமைந்துவிடுகின்றன.

து. வைத்திலிங்கத்தின் புரட்சிகரச் சிந்தனையைக் கிணறு சுட்டுகின்றது. பொதுக் கிணற்றில் ஒரு பகுதி மக்களைத் தண்ணீர் அள்ளக்கூடாது என ஒருபகுதியினர் மறிக்கின்றனர். அப்பிரச்சினையை அப்பிரதேச உயர் அதிகாரி தீர்த்துவைக்கிறார். அதற்காக எம்பியும் அவர்பின்னால் இயங்குகின்ற தம்பிமாரும் சேர்ந்து அந்த உயர் அதிகாரியை இடம் மாற்றிவிடுகின்றனர். இச்சிறுகதையில் இரண்டு பிரச்சினைகள் அவரால் அணுகப்பட்டிருக்கின்றன. ஒன்று சமூகப்பிரச்சினை: மற்றையது அதிகாரப் பிரச்சினை. எங்களது சமூகத்தில் புரையோடிப்போன சமூகப் பிரச்சினை சாதி வேறுபாடு. சத்திரசிகிச்சை மூலம் தான் இதனைத் தீர்க்க முடியும் என்பது து.வைத்திலிங்கத்தின் கருத்து அதனைச்செய்து காட்டியவர்களில் ஒருவர் அவர். ஆலயப்பிரவேசம் நடந்த காலகட்டத்தில் அவரது தந்தையாரின் பரிபாலனத்திலிருந்த வீரகத்தி பிள்ளையார் கோயிலை அதற்கு முதலே அனைவருக்கும் வழிபாட்டிற்குத் திறந்து விட்டவர். ஆகவே சமூக பிரச்சினையை எழுத்தில் காட்டுவதுமட்டுமன்றி, செயற்படுத்துவதிலும் வைத்திலிங்கம் முன் நிற்பவர்.

அதிகாரப் பிரச்சினைகளை வைத்து து. வைத்திலிங்கம் அற்புதமான சில படைப்புகளைத் தந்திருக்கிறார். உயர் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற மோசத்தனங்களை அவர் தனது ''பூம்பனி மலர்கள்'' என்ற நாவலில் அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார். ஈழத்துக் குறுநாவல் வரலாற்றில் அவர் எழுதிய ''ஒரு திட்டம் மூடப்படுகின்றது'' என்ற குறு

நாவல் ஒரு முக்கியகட்டமாகும். ஒரு அபிவிருத்தித்திட்டம் மூடப்ப டுவதற்கான காரண காரியங்களை, அதன் பின்னணியில் இயங்கிய சக்திகளை அவ்வளவு தத்ரூபமாக எவராலும் சித்திரிக்கமுடியாது ஒரு அபிவிருத்தித்திட்டம் இலக்கியத்தின் முழுப்பொருளாக அமைந்த முதலாவது ஆக்கம் அக்குறுநாவல் தான். ஒரு அலுவலகச் சோலைகூட அற்புதமான ஒரு இலக்கிய ஆக்கமாக மாறமுடியும் என்பதை து வைத்திலிங்கம் அக்குறுநாவலில் சித்திரித்திருக்கிறார். வலு துணிவும குற்றங்களைத் தட்டிக்கேட்கின்ற திறனும வாய்ந்த அதிகாரிகள் எழுத்தாளர்களாக இருக்கும்போதே அந்நிலை சாத்தியமாகுமென நான் நினைக்கிறேன. அதிகாரப்பிரச்சினைகள் இச்சிறுகதைத்தொகுதியில் பரவலாக அணுகப்பட்டிருக்கின்றது. பாராளுமன்றக் கதிரைகளைப் பற்றிக்கொண்டவர்களும் அதனைப் பற்றுவதற்குப் பிரதேசமட்டத்தல இயங்கியவர்களும் சமூகப்பிரச்சினைகளைத் தீர்க்காது, அப்பிரச்சினைகள் தொடர்ந்திருப்பது தமது தொடர்ந்த வெற்றிக்குச் சாதகமானதென்பதைப்புரிந்து செயற்பட்ட அயோக்கியத்தனத்தை து. வைத்திலிங்கத்தின் சிறுகதைகள் மக்கள் முன் வைத்திருக்கின்றன.

பணம் படைத்த ஒருவரது குடும்பம் எவ்வாறு ஒரு கிராமத்து ஏழைப் பெண்ணை பந்தாடியது என்ற கருவை உள்ளடக்கிய படைப்பு "மண்ணின் குழந்தைகள்". அந்த நாவலிலும் காணி ஆணையாளர் திணைக்கள குட்டி அதிகாரிகள் கிராமங்களில் கொலனிகளில் புரியும் அட்டூழியங்களை துணிவுடன் எடுத்துக் கூறினார்.

இச்சிறுகதைத் தொகுதியிலுள்ள "தீர்ப்பு" கட்டுக்கோப்பான நல்லதொரு கதை. பணமும் செல்வாக்கும் படைத்தவர்கள் சட்டத்தினைக்கூடத் தமக்குச் சாதகமாக மாற்றிவிடக் கூடியவர்கள் என்பதை அச்சிறுகதை காட்டுகின்றது. அதனைப் படித்து முடிந்ததும் நெஞ்சின் ஒரு மூலையில் மெல்லிய வலி ஏற்படுவதை உணரமுடிகின்றது. 'எங்கே போகின்றோம்' என்ற சிறுகதையில் ஆசிரியர் ஒருபடி மேலேசென்று இச்சமூகம் இப்படியா இயங்க வேண்டுமென ஆதங்கப்படுகிறார். குண்டடிப்பட்டு விழுந்துகிடக்கின்ற ஒரு அப்பாவிப்பெண்ணின் மணிக்கூட்டைக் களவாடிச்செல்கின்ற கயவர்களை அவர் பெரும் ஏமாற்றத்துடன் காட்டுகிறார். 'தூரத்து நட்சத்திரங்கள்' என்ற கதையில் வெளிநாட்டு ஆசைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார், 'எதிரொலி' வித்தியாசமான ஒரு சிறுகதை. வினை விதைத்தவன் வினையறுப்பான் என்பதை

வற்புறுத்த அவர் விரும்புகிறார். ஆற்றாமையால் எழுகின்ற அவலம், கற்பனையிலாவது பழிவாங்கி விடுகின்ற தப்பியோடும் உணர்வு; எதிரொலியில் ஊடுபரவியிருக்கின்றது.

வைத்திலிங்கத்தின் சிறுகதைகள் ஒவ்வொன்றைப்பற்றியும் எடுத்துக்கூற முடியும் இச்சிறுகதைத்தொகுதியில் இரு கட்ட வளர்ச்சியைக் சுட்டும் சிறுகதைகள் இருப்பதாக எனக்குப்படுகின்றது. இச்சிறுகதைத் தொகுதியிலுள்ள முதல் ஐந்து சிறுகதைகளும் ஆசிரியரின் ஆரம்ப காலக்கதைகள் முதிரா இளமையின் எண்ணக் கனவுகளாகவும் கற்பனா வாதச்சிந்தனைகளாகவும் அவை விளங்குகின்றன. ஆசிரியரின் திடீர்பாய்ச்சலை இத்தொகுதியிலுள்ள 'கிணறு, என்ற சிறுகதையிலிருந்து அவதானிக்க முடிகின்றது அவரது சிந்தனையிலும் கருப்பொருளிலும் அவரது பாய்ச்சல் தெரிகிறது. உயர் அதிகாரியாக நலிந்த கிராமப் புறங்களுக்குப் பதவிவகிக்கச் சென்றதன் பின்னர் அவரின் பார்வையில் தெளிவும் சமூகத் தாழ்நிலைக்கான குமுறலும் அச்சிறுகதையில் தெரிகின்றது. அனுபவம் கற்றுத்தரும் திறன் அது

தான் சொல்லவிரும்பும் சங்கதியை ஆற்றொழுக்காகச் சொல்லிவிட ஆசிரியரால் முடிகின்றது. வலிந்து சொற்களைப் புகுத்தி வாசிப்பவரைக் களைப்படைய வைக்க அவருக்குத்தெரிந்திருக்கவில்லை. பெரும் உத்திகளை அவர் இச்சிறுகதையில் கையாண்டிருப்பதாகக்கூற மாட்டேன். ஆனால் தனது, கருத்தை எவருக்குக் கூற விரும்பினாரோ அதனை கூறுவதற்கு அவர் வரித்துக்கொண்ட வடிவம் திருப்திகரமானதாக இருக்கின்றது. இலக்கியம் மக்களுக்காக என்றால் அது அந்த மக்களைச்சென்றடைய ஆசிரியரின் எழுத்து நடையும் சலிப்பின்றிக்கூறும் விவரணமும் கைகொடுக்கின்றன.

ஐ. வைத்திலிங்கத்தின் 'மண்ணின் கனவுகள்' நிறைவான ஒரு சிறு கதைத்தொகுதி. ஈழத்துச்சிறுகதை இலக்கியத்திற்கு இன்னொரு பங்களிப்பாக இத்தொகுதியமையும் என்பதில் இருகருத்திருக்க முடியாது.

''கமலம்''
82, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
10-05-1994

செங்கை ஆழியான்
(கலாநிதி க. குணராசா)

# உங்களோடு நேயத்துடன் சில வார்த்தைகள்

நிறைய வாசிக்க வேண்டும் என்ற ஆவல் நிறைய எழுத வேண்டும் என்ற ஆவலாய் மாறிய காலகட்டம் 1960 களில் என்னுள் எழுந்த எண்ணக் குவியல்களுக்கு உறுதுணையாய் நின்றது.

யாழ். இந்துவில் மாணவனாய் இருந்த காலம் என்வாழ்வில் பொன்னான காலமாகும் என் அதீதமான எண்ணங்களுக்கு கட்டுப்பாடு விதித்தும், என்நியாயமான எண்ணங்களை வளர்த்தும் என் இலக்கியத் தாகத்தை வளர்த்தவர்கள் எனக்கு தமிழ் அறிவு ஊட்டிய ஆசிரியர்கள். நான் உண்மையில் என் எழுத்துக்கள் அச்சிலவரும் ஒவ்வொரு சமயமும், என் ஆசிரியர்களாகத் திகழ்ந்து மறைந்து போன திருவாளர்கள் இராமசாமி, சுப்பையா, வித்துவான் கார்த்திகேசு, ஏரம்பமூர்த்தி மற்றும் இப்பொழுது தமிழுக்கும் சைவசமயத்துக்கும் நற்பணியாற்றும் ஆசிரியர் திரு. சிவராமலிங்கம் ஆகியோரை நான் நன்றியுடன் நினைத்துக் கொள்வேன்

திருகோணமலை, மட்டக்களப்பு, பூநகரி, சங்கானை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணியாற்றிய காலங்களில் நான் தினமும் சந்தித்த பாமரர்முதல் படித்து பெரும் பதவி வகித்தவர்கள்வரை ஒவ்வொருவரும் தத்தமது செய்கையாலும், பேச்சாலும் என்மனதில் நிறையவே இடம்பிடித்துள்ளனர். சமூகத்தில் இடம் பெறும் சம்பவங்கள் எல்லாம் என்னைப் பலவித உணர்வுகளுக்கு ஆளாக்கியுள்ளன. என்னைப்போல் மற்றவர்களும் இப்படி ஆளாகியிருக்கலாம். ஆனால் எனக்கு இவைகளை வைத்து பேனாவால் ஒரு உருவகத்தன்மையைக் கொடுக்கும் தன்மையை அடைந்துள்ளேன் இதை எனக்கு அளித்த ஆண்டவனைப் போற்றுகிறேன். சம்பவங்களை வெறுமனே கேள்விப்பட்டோ பார்த்துவிட்டோ ஜடமாகச் சொல்ல நான் விரும்பாததன் காரணமே என்னழுத்துப் படைப்புக்கள்.

என் எழுத்தினால் என் மன இறுக்கம் விடுபடுகிறது. உலகத்தைத் திருத்த எழுதுகிறேன் என்று கூற நான் முன்வரவில்லை ஆனால். இலக்கிய ஆக்கங்களை படிப்பவர்களில் நூறுபேரில் ஒருவருக்காவது, இந்த எழுத்து மன ஆழத்தில் பதிந்து அதனால்

அவனது உள்ளத்தில் சலனம் ஏற்படாமலா இருக்கப்போகிறது? அச்சலனம் வந்து பலர் என்னை நேரில் கண்டு கூறும்போதும் கடிதங்கள் எழுதும்போதும், நான் நிறைவெய்துகிறேன்.

என் ஆக்கங்களுக்கு தேவையேற்பட்ட போதெல்லாம் எனக்கு நல் யோசனைகள் வழங்கி என்னைத் தூண்டி நிற்கின்ற என் இனிய நண்பன் செங்கை ஆழியனுக்கு நான் நன்றிகூற வேண்டும்

இதுவரை நாவலும் குறுநாவலுமாய் நான்கு ஆக்கங்கள் நூலுருவில் வெளிவந்த போதிலும், 1965 முதல் இன்றுவரை நான் எழுதியுள்ள சிறு கதைகள் சிலதேஇத் தொகுப்புள் அடங்கியுள்ளன.

வாசகர்களது உண்மையான உற்சாகமளிக்கும் துணையுடன் தான் ஒருவரால் நிறைய எழுத இடமுண்டு. இவனும் எழுதுறானே என்று குறிப்புரைகள் வழங்கவும் ஆட்கள் இருக்கின்றனர். ஆனால் நான் அதைப்பற்றி என்றுமே கவலைபட்டதில்லை.

அட்டைப்படத்தை வரைந்து உதவிய ஓவியர் நண்பர் தயா, முகப்பு அட்டையை கொழும்பில பதிப்பித்து சிரமம் பாராது உதவிய அநு.வை நாகராஜன், முன்னுரை அன்போடு எழுதிய என் இனிய நண்பன் செங்கை ஆழியான் ஆகியோருக்கு என் இதயபூர்வமான நன்றிகள்.

வாசகர் உலகம் இந்தநூலை உவந்தேத்தக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு.

வணக்கம்.

பிரதேச செயலாளர் பணிமனை　　　　து: வைத்திலிங்கம்
சண்டிலிப்பாய்
19 - 06 - 1994

# சுட்டிப் பிள்ளையார்

இன்று வெள்ளிக் கிழமை. வழக்கமாக சுட்டிப் பிள்ளையார் கோவிலுக்கு பக்தர்கள் ஏராளமாக வருவார்கள். சுட்டிப் பிள்ளையார் என்ற பெயர் என்ன காரணத்தைக் கொண்டு அழைக்கப்படுகின்றது என்பது அந்த ஊர்க்காரர்களுக்கோ, அல்லது பிள்ளையார் கோவிலில் தொடர்ந்து நாலு பரம்பரையாய் அர்ச்சகர் பணி புரிந்து வந்த குடும்பத்தில் இப்பொழுது கடைசியாய் திருப்பணியைச் செய்கின்ற நடேசய்யருக்கோ தெரியாது. யாராவது. கேட்டால், 'ஏனோ தெரியாது! ரொம்பக் காலமாக சுட்டிப் பிள்ளையார் என்றே அழைத்து வருகிறார்கள்!, என்று சொல்லி ஐயர் மழுப்புவார். நாமும் சுட்டிப் பிள்ளையார் எனவே அழைத்து விடுவோமே!

ஊர் பெரிய ஊர் அல்ல. இன்றைக்கு எண்ணினாலும் அறுபது வீடுகளுக்கு மேல் போகாது. எல்லோரும் குடியானவர்களே. சின்னப் பள்ளிக்கூடமொன்று. அங்கு தலைமையாசிரிய ராகவிருக்கும் கந்தையா வாத்தியார்தான் சகலதும். அவர் ஏதும் தலையிடிஎன்று லீவு போட்டால் அன்று பாடசாலை முழுவதும் மூடிக்கொண்டுவிடும். முப்பது மைல்களுக்கப்பால் அமைந்திருக்கும் நகரத்துக்குப் போகும் 'எக்ஸ் பிரஸ்' பஸ் ஓடும் நெடுஞ்சாலையே கிராமத்திலிருந்து ஒரு மைலுக்கப்பால் அமைநதிருந்தது. படு பட்டிக்காட்டுக் கிராமமாய் இருக்கும் அவ்வூரில இப்பொழுது பட்டணதது நாகரிகத்தின் சாயல மெதுவாகப் பரவததொடங்கி விட்டது.

நாகரிகம் பரவினால் பரவாயில்லை. ஆனால் பரம்பரைபரம்பரையாக ரத்தத்தில் ஊறிவநதிருந்ததெய்வ நம்பிக்கையையுமல்லவா இந்தப் புது நாகரிகம அழிககப்பார்க்கின்றது!

முன்பெல்லாம் வெள்ளிக்கிழமை சாயங்காலப் பூசை முடிந்தவுடன் கோவில் முன் மண்டபத்தில் ஊர்ப் பிள்ளைகள் எல்லோரும் இருந்து பக்திப் பாடல்களை பஜனையாகப் பாடுவார்

கள். முடிவில் பிரசாதம் கொடுப்பார் நடேசய்யர். இந்தப் பிரசாதத்துக் கென்றே அநேகம் பிள்ளைகள் வருவார்கள்.

ஆனல், இப்பொழுது கொஞ்சங்கொஞ்சமாக வெள்ளிக் கிழமை பஜனை நின்றேவிட்டது. இளம் பிள்ளைகள் வளரத் தொடங்க, பக்திநிலையும் வளர்ச்சியடைவதற்குப் பதில், அருகி வருகின்றதே என்று நினைக்க நடேசய்யரின் மனம் வருந்தும்.

அர்ச்சனை முடிந்து கற்பூர ஆராத்தி காட்டினர். கற்பூர ஒளியில் பிள்ளையாரின் எண்ணெய்க்காப்புப் போட்ட திருமுகம் பளபளத்தது. தும்பிக் கையின் இதழ்க் கடையில் ஒரு மாருத புன்னகை! நடேசய்யரின் மனஎருத்தத்தைக் கண்டு பிள்ளையார் தம்முள் நகைத்தாரோ?

பூஜைகள் யாவும் முடிந்து, வந்திருந்தவர்கள் யாவரும் போய்விட்டனர். நடேசய்யர் தனியே நிற்கிருர். கோவில் பிரதேசம் வெறுமையாகிவிட்டது.

கோவில் மட்டுமா?

ஐயரின் உள் மனமும் சூனியமாய் இருந்தது. இனி வீட்டுக்குப் போகவேணும்.

அவர் தான் இரவு ஆகாரத்தைத் தயார் பண்ண வேண்டிய நிலை!

அவரின் மனைவி பூரணம்மா என்று மறைந்தாளோ, அன்றிருந்து இந்த நிலைதான்.

ஐயர் மட்டும்தான் என்றல் பேசாமல் படுத்துவிடுவார். ஆனல் இன்னெரு ஆத்மாவும் அந்த வீட்டில் இருக்கின்றதே!

அந்த ஆத்மா வேறுயாருமில்லை, அவருடைய ஒரே மகன் சுந்தரம்தான்.

மகனைப் பெற்ற கையோடு தான் வந்த பணி முடிந்ததென எண்ணி சடுதியாக இறந்துபோன ஐயரின் மனைவியின் மறைவுக்குப் பின்னர், அவர் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து நிற்பவை இந்தச் சுட்டிப் பிள்ளையாரும், மகன் சுந்தரமும்தான்.

அவனைப்பற்றி எத்தனையோ கற்பனைகள் அவர் மனதில்

வம்சம் வழங்க ஒரு புத்திரன் இருக்கின்றானே என்ற மகிழ்ச்சி ஒருபுறம் இருக்கதன் குலத்தொழிலுக்கு ஒரு வாரி சாசவும் இருந்து தங்கள் பரம்பரைத்தெய்வமான சுட்டிப் பிள்ளையாரைக் கவனிக்க ஒருவன் இருக்கிறானே என்று தம் மூன் நிறைவெய்துவார். ஆனால், நடேசய்யரின் ஆசை, அபிலாஷைகள் யாவும் அவருடன் ஐக்கியமாகிவிடுமோ? நினைக்க நினைக்க அவருக்கே கசத்தது!

ஐயர் தனக்கும், மகனுக்கும் இரவு ஆகாரமாக சிறிது உப்புமா தயாரித்தார். இரவு எட்டுமணியாகியும் சுந்தரம் இன்னும் வீடு திரும்பவில்லை.

வாசலையே பார்த்துக் கொண்டிருந்தார் ஐயர்... சுந்தரத் தின் போக்கே திசைமாறிவிட்டது.

முன்பெல்லாம் சிறுவயதில் இரவு நேரங்களில் அவரது மடியில் அமர்ந்து அவர் சொல்லிக்கொடுக்கும் தேவார, திரு வாசகங்களைச் சொல்லுவான். சிறு வயதில் சுந்தரத்துக்கு நல்ல சன்னக் குரல். அதில் மகிழ்வார் நடேசய்யர்.

இடுப்பில் கட்டிய சிறு வேட்டியுடன், நெற்றியில் திரு நீறு துல்லியமாக பூசிய படி தந்தை கோயில் காரியங்களைக் கவனிக்க, அவர் பின்னும் முன்னும் திரிவான் சுந்தரம். சிறு சிறு வேலைகளைத் தானே இழுத்துப்போட்டுச் செய்வான் அவன்

'ஐயருடைய இடத்துக்கு மகன் வருவான்'— ஊர் ஜனங் கள் சொல்லும் போது ஐயர் மகிழ்வார். வாஞ்சையோடு சுந்தரத்தைப் பார்ப்பார்.

ஆனால் எல்லாமே பொய்த்துவிட்டதே! வயது ஆக, ஆக அவர் ஒரேமகன் என்று காட்டிய செல்லம் சுந்தரத்தின் போக்கையே மாற்றிவிட்டது. பத்து வகுப்புகளுக்கு மேல் அவன் படிப்பைத்தொடர விரும்பவில்லை.

அவனை அடித்துத் திருத்துகிற வயதா? சிறு வயதில் தேவார, திருவாசகங்களை அடிக்கடி படித்த சுந்தரத்தின் வாய் இப்போழுதெல்லாம் மட்டரகமான சினிமாக் கீதங்களை இசைக் கத்தொடங்கிவிட்டதே!

பட்டண நாகரிகத்தின் சின்னங்கள், என்று அந்தக் கிராமத்துக்கு அடி எடுத்து வைத்ததோ, அதன் சாயல் சுந்தரத்தையும் தொற்றிக்கொண்டது!

கோவில் அவனுக்கு வேம்பாகக் கசந்தது. முன்பெல்லாம் காலையில் ஐயரோடு அதிநேரத்தோடு எழுந்துவிடுவான் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு கோவில் வாசலில் நின்ற பெரிய பவள மல்லிகை மரத்தினின்றும் கீழே வெண். மணலில் வீழ்ந்து சிதறியிருக்கும் மலர்களை ஒரு ஓலைக்குடலையில் சேகரித்து வைத்து விட்டுத்தான் பள்ளிக்கூடம் செல்வான்.

ஆனால், இப்பொழுதெல்லாம் அவன் எழுந்திருப்பதோ காலை வெய்யில் முகத்தில் சுள்ளென்று அடிக்கும்போதுதான்.

கிராமத்துக்கு அடிக்கடி வந்த கூடார சினிமாப் பைத்தியம் கிராமத்தவர் யாவரையும் பிடித்த போது சுந்தரம் மட்டும் விதிவிலக்காய் நிற்கவில்லை. ஒரே மகன்தானே, பாவம் தாயில்லாப்பிள்ளை என்று ஐயர் அவன் காசு கேட்ட போதெல்லாம் கொடுத்து விடுவார். அப்படிக்கொடுத்தது தவறோ......?

காலம் கடந்த யோசனை யாகவே அவருக்குப் பட்டது. அவனின் போக்கு மாற மாற ஐயர் மிரட்டி உருட்டிப் பார்த்தார். பயனில்லை!

அவர் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவித்தார். சடை நாய்க்குட்டி போல, முகம் எங்கே இருக்கின்றதுஎன்று பார்க்க முடியாத அளவுக்கு கேசம் வளர்ந்து பரட்டைத் தலையாய் திரிவதே தாங்கள் பிறவி எடுத்ததின் பயன் என்று தம்முள் பெருமைப்பட்டுக்கொண்டு திரியும் வாலிபர் கூட்டம் ஒன்றில் சுந்தரம் முக்கியமானவன். நடேசய்யர் எதையெல்லாம் அநாசாரம் என்று வெறுத்தாரோ, அவை யாவும் சுந்தரத்திடம் பலமாக வேரூன்றி அமைந்திருந்தன.

'தம்பி சுந்தரம், நாங்கள் ஆசாரத்தோடு பின்னிப் பிணைந்தவர்கள். நீ இப்படி நடந்துகொள்வது சரியா என்று யோசித்துப்பார்!'

-ஒருநாள் நயமாகச் சொல்லிப் பார்த்தார்.

'அப்பா, என்னுடைய வழி எனக்குத் தெரியும்! அதில் நீங்கள் தலையிடாதீர்கள்! உங்கள் மாதிரி நானும். கோவிலைக் கட்டிக்கொண்டு அழ முடியாது;'

—வீறுப்புடன் சொல்லிவிட்டு சுந்தரம் போய்விட்டான்.

வீண்செலவுகள்கூட, கையில் அதிக பணம் வேண்டுமே! தந்தையின் பணப்பெட்டியில் இருந்து சில்லறை மாயமாக மறையத் தொதுங்கியது.

பணத்தைப் பெட்டியில் வைக்காமல் கோவிலில் கொண்டு போய் மறைவான இடத்தில் வைத்தார் ஐயர்.

வீட்டில் இருந்து சில வெள்ளிப் பாத்திரங்களும் மறையத் தொடங்கின!

நிலவுக்குப் பயந்து பரதேசம் போக முடியுமா? ஐயர் என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார்.

சில நேரங்களில் இரவில் வீடு திரும்ப மாட்டான். அடுத்த நாள் பொழுது விடிந்து வெகு நேரத்துக்குப் பின்னர் வருவான்

ஏன் இரவு வீட்டுக்கு வரவில்லை என்று ஐயர் கேட்டால் பக்கத்து ஊருக்குச் சினிமா பார்க்கப் போன தாயும் அங்கு ஒரு நண்பன் வீட்டில் தங்கியதாகவும் கூறி மழுப்புவான்.

ஆனுல் சுந்தரம் என்ன செய்திருப்பான் என்பது ஐயருக்குப் புரிந்து விடும்.

சில நாட்களாக ஊரில் குடியானவர்களின் கோழிகள் மாயமாக மறையத் தொடங்கியிருந்தன, ஊரில் திருட்டைத் தடுக்க தொண்டர்கள் கூட்டம் கூட்டமாக திரியத் தொடங்கினர்.

கோயில் ஐயரின்மகன் சுந்தரமும் இத்திருட்டுக் கோஷ்டியில் ஒருவன் என பராரியாகச் செய்தி வந்த போது ஐயர் நெருப்பில் இட்ட மெழுகென அவமானத்தால் கூனிக் குறுகிஞர்.

'இறைவா இப்படி ஒரு துஷ்டனுக எனக்கு ஒரு பிள்ளையைக் கொடுத்த நேரம்கொடுக்காமல் இருந்திருக்கலாமே, என்று கண்ணீர் விட்டு அழுதார்!

சுந்தரத்தை திருத்தும் வழி தெரியபமல் தடுமாறினர்.

இப்பொழுது பக்கத்து ஊர்களில் ஒரு புதுவகைத் திருட்டு இடம் பெற்றுக் கொண்டிருந்தது. முன் பெல்லாம் பொன்னுக்கு ஆசைப்பட்டு கோயிலை உடைத்துசாமியின் கீழ் இருக்கும் தங்க யந்திரத் தகட்டையே திருடினர்கள். ஆனல் இப்பொழுதோ விக்கிரகங்களையே திருடிக் கொண்டு போகத் தொடங்கி விட்டனர்.

வெளிநாட்டுக்காரர் இப்படியான அழகிய விக்கிரகங்கள், சிலைகள் முதலிய வற்றை பெரும் பணம் கொடுத்து வேண்டுவதாலேயே இந்தக் திருட்டு எல்லா இடங்களிலும்பரவி இருந்தது.

இந்த ஊரைப்பற்றிய வகையில் இருப்பது ஒரே ஒரு கோயில் அது தான் சுட்டிப்பிள்ளையார் கோயில்.

கோயில் சிறியதாயினும் உள்ள எழுந்தருளி இருக்கும் விக்கிரம் ஒரு காலைத் தூக்கி நின்று நர்த்தனமாடும் பாணியில் அமைந்த பஞ்சலோகத்தில் வார்க்கப்பட்ட சிலை.

சிறபியின் கைவண்ணம் பூரணமாக இடம் பெற்று கலை அழகுசொட்ட அமைந்திருக்கும் பிள்ளையாரின் உருவத்தைநடேசய்யர் உள்ளத்தை உவகை கொள்ள அடிக்கடி பார்த்து ஆனந்திப்பார். உற்சவ காலங்களில் அவர் செய்யும் 'அலங்காரத்தில் சுவாமி யின் அழகு மென்மேலும் கூடி பார்ப்போரை மயங் வைக்கும்.

இருளில் யாரே இருவர் வாசலில் பேசிக் கொண்டிருந்து ஐயரின் சிந்தனையைக் கலைத்தது. சந்தேகம் தலைதூக்க வாசலுக்கு மெதுவே வந்தார். இருட்டில் நின்றவர்களது முகங்கள் தெரியவில்லை, ஒன்று சுத்தரத்தின் குரல் என்று புரிந்தது.

பிள்ளையார் சிலை... நல்ல விலை போகும்... இரவு பன்னிரண்டு மணி... தொடர்பில்லாவ சொற்கள் நடேசய்யரின் காதில் விழுந்தன. அவரின் உடல் விதிர் விதிர்த்தது.

தனது பிள்ளையார் கோயிலில் இருக்கும் நர்த்தனமாடும் இந்தச் சின்னப் பிள்ளையாருக்குத் தான் ஏதோ ஆபத்து என்று புரிந்து விட்டது.

உடலும் உள்ளமும் பரபரக்க வெளியே வந்தார்; ஆனால் அங்கு ஒருவரும் இல்லை. வீட்டுக்குள் திரும்பி வந்தார்.

இருளில் கேட்ட குரல்களில் ஒன்று தன் மகன் சுந்தரத்தினுடையது என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்தது.

அப்படியானால் ..

'பாவி, பரம்பரை பரம்பரையாய் போற்றி வணங்கும் இச்சுட்டிப்பிள்ளையார் கோயிலிலேயே கன்னம் வைக்கத் துணிந்து விட்டானே!'

இதை எப்படியாவது தடுத்தேயாக வேணும் என்று அவரையுமறியாமல் ஒரு வெறி வந்து விட்டது.

கொடியிலிருந்த ஒரு துண்டை எடுத்துவெளியே வீசிக் கொண்டிருந்த பனிக்கு இதமாக மேல் உடம்பை மூடிக் கொண்டார். கோயில் திறப்புகளையும் எடுத்துக் கொண்டு வாசல். கதவைச் சாத்தி விட்டு வெளியே புறப்பட்டார்.

அவர் தயார் பண்ணிய இரவு ஆகாரமான உப்புமா கவனிப்பாற்று ஒரு மூலையில் ஆறி அவலாய்க்கிடந்தது.

பேயும் நடுங்கும் நாடுநிசி! அங்கும் இங்கும் இரைந்து கொண்டிருந்த சுவர்கோழிகளின் சத்தத்தைத் தவிர வேறு ஒலியில்லை. கோயில் அமைந்துள்ள இடம் அமானுஷ்யமாய் காட்சி அளித்தது.

ஒரு உருவம் இருளோடு இருளாய் கோயில் வெளிச்சுவரைத் தாண்டி உள்ளே குதித்தது. மேலே உத்தரத்து ஓடுகளைப் பிரித்துலாலாவகமாக உள்ளே இறங்கி முன் கதவுகளை, கொழுக்கிகளை இழுத்து பலவந்தமாகத் திறந்து வைத்து விட்டு எழுந்தருளிப் பிள்ளையார் விக்கிரகம் இருந்த மூலையை நோக்கி நடந்தது.

டோச்' வெளிச்சத்தில் விக்கிரகம் பளபளத்தது. சிவப்புப் பட்டுத்துணி அலங்கரிக்க சில மணித்தியாலங்களுக்கு முன்னர்

நடேசய்யரால் அர்ச்சிக்கபட்ட வெள்ளை, சிவப்பு நிற மலர்கள் தலையிலும், புஜங்ளிலும் வீற்றிக்க இருளில் நடப்பனவற்றை ஒரு இள நகையுடன் அந்த நர்த்தனமாடும் பிள்ளையார்பார்த் கொண்டிருந்தது போன்ற ஒரு பிரமை!

டோர்ச் விளக்கை பக்கத்தில் எரித்தபடி வைத்து விட்டு பிள்ளையார் விக்கிரகத்தை அலாக்காகத் தூக்கியது அவ்வுருவம்.

'டேய் சுந்தரம்!'

நடேசய்யரின் குரல் பயங்கரமாக ஒலித்தது.

இருளிலிருந்து ஒலித்ததன் தந்தையின் குரலைக் கேட்டுத் திகைத்த சுந்தரம் சற்றுத் தடுமாறினான்.

ஆனால் அவனின் உடலில் பூரணமாக ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த நாட்டுச் சாராயம் அந்தத் திடீர் தடுமாற்றத் தைப் போக்கடித்து விட்டது!

விக்கிரகத்தை அணைத்தபடி ஓடி எடுத்து வைத்தான். ஆனாய் லபக்கென்று ஓடி வந்து அவனை அப்பால் நகர விடாமல் பிடித்துக் கொண்டார் ஐயர்.

'பாவி! எங்கேயெல்லாமோ திருடியதை, உன்குலதெய் வத்தையுமல்லாவா திருடத் துணிந்துவிட்டது!

ஐயரால் பேச முடியவில்லை.

சுந்தரம் தன் திட்டம் பலிக்கவில்லை என்ற ஆத்திரத்து டன் விக்கிரகத்தை இறுகப் பற்றிக்கொண்டே தந்தையின் பிடியினின்றும் நகர டுயன்றன்.

நடேசய்யர் விட்டுக் கொடுக்கவில்லை.

இருவரும் இழுபறிப்மட்டனர்,

போதையும் தலைக்கேறியபடியால் தடுமாறியபடியே சுந்தரம் பிடரி நிலத்தில் பட கீகழ படாரென்று விழுந்தான். விக் கிரகம் அவனுக்கு மேல்!

நடேசய்யர் விக்கிரகத்தைப் பற்றி இழுத்தரே.

'சுந்தரம்! ஓடிப்போய் விடு! இங்கு நின்றாயானால் ஒரு கொலை விழும்.

ஐயர் கத்தினர்.
சடாரென்று எழுந்தான் சுந்தரம்.

விக்கிரகத்தை கொழும்புக்குக் கொண்டு போய் அதிகம் விலைக்கு விற்கலாம் என்று அவனது சகா காட்டிய நப்பாசை யினல்தான் இவ்வளவுக்குத் துணிந்தான். தன் திட்டத்தை நத்தை தகர்த்தெறிந்து விட்டாரே என்று நினைக்க அவனது உடல் சூடேறியது!

'போறன்! கிழடா எல்லாவற்றையும் கெடுத்து விட் டாயே!

-சொல்லிக் கொண்டே இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்துப் பலம் கொண்ட மட்டும் நடேசய்யரின் மார்பில் குத்தினன்.

'ஐயோ!

நடேய்யரின் ஓலக்குரல் கோயில் பிரதேசத்தைக் கடந்து காற்றில் கலந்தது.

ஐயர் நிலை சாய்ந்து விட்டார்.

அந்த நிலையிலும் விக்கிரகத்தைக் கீழே போட்டு விடா மல் தன் பக்கத்தில் சார்த்தி வைத்தார்.

சுந்தரம் ஒரு கணம் நிலை குலைந்து விட்டான். செய லிழந்து ஒன்றும் பேசாமல் நின்றவன்பின் என்ன தோன்றியதோ வெளியே ஓடி வந்தான்.

வெளியே ஊர்க்காவலுக்கு சென்று கொண்டிருந்த நான்கு தொண்டர்கள் நடேசய்யரின் ஓலக்குரலைக் கேட்டுத் துணுக் குற்று கோயில் வாசலில் நின்றனர்.

ஓடி வந்த சுந்தரம் வெளி கேற்றைத் தாண்டிக் குதித்தான்

நின்ற தொண்டர்களிடம் வசமாக அகப்பட்டுக் கொண் டான்.

சுட்டிப் பிள்ளையார்சிரித்துக் கொண்டிருந்தார்!

-வீரகேசரி -1976-

# முறைப்பெண்

இனம் புரியாத ஏதோ உணர்வுகள் இதயத்தில் கொப்புளிக்க, ஒரு விதப்பதட்டத்துடன், சயிக்கிள் வண்டியை விட்டுக் கீழே இறங்கினுன் பாலசிங்கம். சயிக்கிலே வீட்டு வாசலில் நிறுத்திவிட்டு, பூட்டி சாவியை எடுத்து தன் சட்டைப்பையில் போட்டுக் கொண்டான்.

'தலே குழம்பி இருக்குமோ...

-தனக்குள் சொல்லிக் கொண்டவன், தன் சட்டைப்பையில் இருந்த சிறிய சீப்பினுல் தலேயை ஒரு முறை வாரிவிட்டுக்கொண்டு நெற்றியையும் சிறு கைக்குட்டையால் துடைத்து விட்டுக் கொண்டான்.

சட்டைக் கொலரை' நீவி விட்டு சில இடங்களில் கசங்கியிருந்த பகுதிகளேயும் கைவிரல்களினுல் நளினமாக தடவி விட்டான்.

எப்படிச்செய்தாலும் இப் 'பொக்கற்' பெரிதாய் நிற்கின்றதே...!

—சட்டைப்பையை அமர்த்திவிட்டான். அந்தப் 'பையில் மணிப்பர்ஸ்' சின்னஞ்சிறு சீப்பு, சிறு கைக்குட்டை இவ்வளவும் இருந்தன.

''நான் லோங்ஸ் போட்டுக் கொண்டு வந்திருக்கலாமோ...? பரவாயில்லே! இதுவும் நல்லாய்த்தான் இருக்கிறது. பத்மா சில நேரம் ஆடம்பரத்தைவிரும்ப மாட்டாள் ''

-ஒரு விதத் திருப்தி நிலவ, வாசல் கதவைத் தட்டினுன்.

கதவு திறந்து கொண்டது. எழுதிவைத்த சித்திரம்போல் பத்மா நின்ருள். நீல நிறத்தில் பூப்போட்ட மெல்லிய 'வாயில், புடவை கட்டி பால்வெள்ளே நிறத்தில்ரவுக்கை அணிந்து, பிறை போன்ற நெற்றியில்சின்னஞ் சிறு திலகம் மின்ன, சிரிப்பைச்சிந்தியபடியே நின்ருள்.

பாலசிங்கம் பத்மாவை வைத்தகண் வாங்காமல் பார்த்தபடி அப்படியே நின்ருன்.

நெஞ்சை ஏதோ வந்து அடைக்க, உணர்வுகள் உள்ளத்தைத் தாக்க அதற்கு நிலைநிற்க முடியாது ஒருகணம் தள்ளாடிப் போனான் அவன்.

''பத்மா —

குரல் தளதளத்தது அவனுக்கு

அவன் அழைத்த குரலில் என்னதான் இருந்ததோ...?

'அத்...'

வார்த்தையை பத்மாவால் முடிக்க முடியவில்லை. பொல பொலவென்று கண்ணீர் துளிகள், அவளது மினுமினுத்த கன்னக் கதுப்புகளில் முத்தென உருண்டன.

பாலசிங்கத்தினால் ஒன்றுமே பேசமுடியவில்லை.

மௌனமாகவே சிலகணங்கள் சென்றன.

பத்மாவின் பால் வடியும் முகத்தையும் அவளது கண்ணீரை யும் கண்டு அவன் ஈடாடிப் போனான். அவனுக்கு வார்த்தைகள் வரவேயில்லை. தன்னை அறியாது அழுதுவிடுவான் போலிருந்தது

'சீ! ஆண்பிள்ளை அழலாமா...?' தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

—.. பத்மா நீ நீ... அழாதே! இதோ நான்தான் நீ எழுதிய படி வந்துவிட்டேனே!'

முற்றும் பார்க்கின்றான் ஏதோ ஒரு உத்வேகம் தோன்ற பத்மாவுக்கு அருகில் வந்து. தன் கைகளினால் அவளது கண்ணீரைத் துடைத்தான்.

ஆனால் பத்மாவோ...

அவனது இரு கைகளையும் தன் கைகளினால் பற்றி தன் பட்டுக் கன்னத்துடன் சேர்த்துக் கொண்டாள்.

பாலசிங்கம் தன்னை மறந்து விட்டான்.

இந்த ஒரே ஒரு கணத்துக்காக . இந்த ஒரே ஒரு உணர்வுக்காகத்தானே இவ்வளவு தூரம் அடித்துக்கொண்டு ஓடிவந்தான்!

தன்னை மறந்த நிலையில் மின்னலைப்போல, மனத்திரையில் ஏதேதோ எண்ணஓட்டங்கள்...

அவன் தன் சுயநிலைக்கு வர சில கணங்கள் பிடித்தன. மெதுவாகத் தன் கைகளை விடுவித்துக்கொண்டான்.

'பத்மா, மாமா, மாமி எங்கே?'

—பரபரப்புடன் கேட்டான்.

'உள்ளே தான்...'

'என்ன, உள்ளேயா ?'

அவனது கேள்வியில், அவனது தேகமும் நடுங்கியது தெரிந்தது.

'என்ன பயந்து விட்டீர்களோ ...? மகா தைரியசாலி! இப்படிப் பயந்து பயந்துதான் வாழ்வையே அமைக்கத் தெரியாதபடி நிற்கிறீர்களே!'

—சிரித்தபடியே கேட்டாள் பத்மா.

சோனவாரியாக மழை பொழிந்த பின், ஆதவன் வானத்தில் தோன்றும் போது, வானவெளியில் காட்சியளிக்கும் ஒளி போல், பத்மாவின் முகம் விகசித்தது.

இவள் என்னை இப்படிக் கேலி செய்கிறாளே!

அவனுக்குக் கோபம் தான் வந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டான்.

''அத்தான், வந்தவரை இருக்கக்கூட சொல்லவில்லை என்று கோபிக்காதீர்கள். இருங்கள்! இருந்து கொண்டே பேசுவோம்!'

பத்மா நாற்காலியை சுட்டிக் காட்டினாள். ஆனால் அச்சம் தொனிக்கும் பார்வையுடன் உள்ளே நோக்கினான். அவனது நோக்கத்தைப் புரிந்து கொண்டாள் பத்மா.

'அப்பாவும் அம்மாவும் கோவிலுக்குப் போயிருக்கின்றார்கள்; இன்று புரட்டாசி மாத கடைசிச் சனிக்கிழமையல்லவா! எள் எண்ணெ எரிப்பதற்காக பெருமாள்கோவிலுக்குப் போயிருக்கின்றார்கள்.

'ஓ! அப்படியா', ..

அனது குரலில் ஒரு ஆறுதல்.

'ஏன் இப்படி என் அப்பாவிடம் பயப்பிடுநீர்கள்? இப்படிப் பயந்து எத்தனை நாள் இருக்கப் போகின்றீர்கள்...?'

பத்மாவின் கேள்விகளுக்கு பாலசிங்கம் பதிலிறுக்காமல் மௌனமாக மேல் உத்தரத்தையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

உண்மையில் நான் பயந்து பயந்தே வாழ்க்கையைப் பாழடிக்கின்றேனு? பத்மா கூறுவது உண்மையா?

அவள் பெண்! அவளுக்கு இருக்கும் தைரியம் கூட எனக்கில்லையா!

பாலசிங்கம் எஸ். எஸ். சி. பரீட்சை பாஸ் பண்ணி 'கிளரிக்கல்' பரிட்சையும் கையுடனே பாஸ் பண்ணி உத்தியோகம் ஏற்றுக் கொண்டவுடன் அவனது வீட்டில் சந்தோஷம் களை கட்டியது. அவனின் தந்தை சுருட்டுத் தொழில் பார்த்து குடும்பத்தை ஒரு மாதிரி ஓட்டிக்கொண்டு போனுரே தவிர, சொத்து ஏதும் சேர்த்து வைக்கவில்லை.

சொத்துச் சேர்க்கக் கூடிய வகையிலா அவரது தொழில் அமைந்திருந்தது?

அவன் உத்தியோகம் பார்க்கத் தொடங்கியபின், மாதா மாதம் சம்பள தினத்தன்று வீட்டுக்கு பணம் அனுப்பி விடுவான். அவனுக்கு ஒரே ஒரு தங்கை மட்டும் தான். அவளும் கல்யாணத்துக்கு தயாராய் நின்ருள்.

இந்நிலையில் மூன்று நாள் காய்ச்சலில் தந்தை இறந்து விட அவன் திக்கு முக்காடிப் போனுன். தங்கைக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும்......இதுதான் அவனை இரவு பகலாய் வாட்டும் பிரச்சினை!

இருந்த ஒரு வீட்டைத் தவிர, வேறு சொத்தில்லை;

'தம்பி, மாத்துச் சம்பந்தம் மாதிரிச் செய்தால் தங்கச்சிக்கும் நல்லது ! உனக்கும் நல்லது;'

'பாலு, நீ முதலில் எங்கேயாவது நல்ல சீதனம் வாங்கிச் செய்து போட்டு, தங்கச்சிக்கும் கல்யாணத்தைச் செய்து வை! அதுதான் ஒரே ஒரு வழி!'

—பல பேர் பல மாதிரி உபதேசம் செய்தனர். அவன் குழம்பினன். மாற்றுச் சம்பந்தம், செத்தாலும் வேண்டாம். ஊரில், மாற்றுச் சம்பந்தம் செய்து விட்டு, கஷ்டப்படுகிற ஆட்களைத் தெரியாதே...? இனி, சீதனம் வேண்டிச் சீதனம் கொடுக்கும் வேலையும்வேண்டாம்...!

பாலசிங்கம் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான், அப்படியானல் தங்கையின் கல்யாணம்?

பிரச்சினை மலையாய் நின்றது;

'தம்பி சிங்களம் பாஸ் பண்ணியாச்சோ? வேலையில் ,கொன்போம்', தானே!,

'நீச் இளாஸ்ரு' எடுக்க வில்லையோ?'

அவன் லீவில் யாழ்ப்பாணம் வரும் போது, சரமாரியாய் கேள்விக்கணைகளைத் தொடுப்பார்கள் சிலர். இப்பொழுதெல்லாம் கொழும்பில் வேலை பார்க்கும் யாழ்ப்பாணத்து இளைஞர்கள். லீவில் ஊருக்கு வரும் பொழுது. ஊரில் உள்ளோர் கேட்கும் பொதுவான கேள்விகள் இவை. சிங்களம் பாஸ் பண்ணுவிடில் வேலையில் 'கொன்போம்' பண்ண மாட்டார்கள் என்றவிஷயம், யாழ்ப்பாணத்தில் படியாத சாதாரண ஆட்களுக்கும் தெரிந்த விஷயமாகும்'

இப்படி ஒரு குமாஸ்தாவைப் பார்த்துக் கேட்பதை அவர்கள் ஒரு வழக்க மாக்கிக் கொண்டனர்.

அவர்களது அனுவசியமான விசாரணைகள் அவனை சலிப்படையச் செய்யும். வீட்டில் மலைபோல் பிரச்சினைகள் இருக்கும் பொழுது, சிங்களம் படிக்கவும், 'இளாஸ்ரு' பரீட்சை எடுக்கவும் அவனல் எப்படி தயார் செய்ய முடியும்?

அவன் விரக்தியுடன் சிரிப்பான்.

இந்த 'கிளாக்' வேலை ஒன்றுக்குத்தானே இவ்வளவு சாபக்கேடு! இதில் நாங்கள் என்னத்தைக் கண்டோம்? எங்கள் குடும்பநிலை, எஸ். எஸ். ஸி. படிப்புக்கு மேல், வேறு படிப்பு படிக்க முடியாத நிலை! இது ஒன்றுதானே வரப்பிரசாதமாய் அமைந்து விட்டது!

தனக்குள் வேதனையுடன் சொல்லிக் கொள்வான். ஆனால் மனதைக் கட்டுப்படுத்தி, படித்துச் சிங்களம் பாஸ் பண்ணி, உத்தியோகத்தையும் ஸ்திரப் படுத்திக் கொண்டான். சம்பள உயர்வும் படிப்படியாக வந்து.

தன்னுடன் வேலைபார்க்கும் உயிர் நண்பனும் பழகிய ராஜா விடம் கேட்டு மூவாயிரம் ரூபாய் கடன் வேண்டி தங்கையின் திருமணத்தை முடித்து வைத்தான். பெரிய நிம்மதி கிடைத்த தென்று அவன் சிந்தை தெளிந்தான்.

ஆனால் மழைக்காலத்தில் புற்றிலிருந்து புறப்படும் ஈசல் பூச்சிகள் போல், அவனைச் சுற்றி உறவுக்காரர் வந்தனர். முன்பு தங்கை மணமாகாமல் வீட்டில் இருக்கும் பொழுது எட்டிப் பாராது இருந்த உறவினர்கள் இப்பொழுது வீட்டுக்குப் படை எடுத்தனர்.

'தம்பி நீ கேட்கிற சீதனம் தரலாம். நன்கொடை வேண்டுமானாலும் தரலாம். வீடும் தரலாம்'......!

அவனுக்கு விலை பேசினர்.

அவன் ஒன்றும் புரியாமல்கிடந்து குழம்பினான். பெண்ணைப் பெற்றவர்கள், கூறிய சீதனம், நன்கொடை இவையாவும் அவனுக்கு வேம்பாகக் கசந்தது.

அவனது எண்ணமெல்லாம், அவனது மாமன்மகள் பத்மாவைச் சுற்றியே வட்டமிட்டது.

அவனின் உள்ளமெல்லாம், நீக்கமற நிறைந்திருந்தாள் பத்மா, வயதில் அவனுக்கு பத்து வருடங்கள் இளமையான பத்மா இளமைக் கோலங்கள் கொலு வீற்றிருக்கும் அழகுப்

பதுமையாக அவனது உள்ளத்தில் சாதுதோன்றி அவனை வேதனைக்குள்ளாக்கினாள்.

ஃ

அவனது மன ஒட்டத்தைப் புரிந்த தாய் தன் சகோதரனை அணுகினாள்.

பாலசிங்கத்தின் மாமா கந்தசாமி ஒரு ஆசிரியர். 'இருந்த ஒரு பெரிய கல் வீடும், பாங்கில்' ரொக்கமாக பத்தாயிரமும் நூற்று ஐம்பது பரப்பு வயலும் உடையவராய்நல்லஸ்திதியில் இருக்கின்றார்.

'கந்தசாமி என்னுடைய மகன் பாலசிங்கத்துக்கு ஏன் அங்கே இங்கே பார்க்க வேண்டும்? உன்னுடைய மகள் பத்மாதானே அவனுக்கு முறைப்பெண்!' அவளைச் செய்து வைதால் என்ன?'

''அக்கா உனக்கென்ன பயித்தியமே? அவள் குழந்தைப் பெட்டை!படிக்கிறாள். இனி வயதும் தோதுப்படாது! அவனுக்கு, நல்ல சீதனம் வாங்கிச் செய்யவேண்டும்! அது, நான் பார்க்கின்றேன். நீ கவலைப்படாதே!'

அவர் தன் தமக்கையின் வேண்டுகோளைத் தட்டிக் கழித்து விட்டார்.

பாலசிங்கம் கிடந்து மனம் குமுறினான்.

'நல்ல சீதனம் வேண்டித்தருகின்றாராம்! யாருக்குக் காது குத்துகிறார்?'

தன் தாயிடம் ஆத்திரப்பட்டான். தாய் என்ன செய்வாள்?

ஆனால் கந்தசாமிக்கு வேறு எண்ணம். முன்பு ஒரு சமயம்: பத்மாவை பாலசிங்கத்திற்கு கல்யாணம் செய்து வைத்தால் ஒன்றுக்குள் ஒன்று எல்லோரும் நல்லாய் இருப்பார்கள் என்று எண்ணியவர்—

ஆனால் அவர் மனைவி பாக்கியத்துக்கு அது பொறுக்கவில்லை!

'உங்களுக்கென்ன பைத்தியமே? விசர்கதை பேசிறியள்! பாலசிங்கம் ஒரு 'கிளாக்' தானே! வேற நல்ல உத்தியோகாரனைப் பார்த்துகொடுத்தால் என்ன? இனி, இவள் பிள்ளை பத்மா பத்து வயது இளமை எண்டு உங்களுக்குத் தெரியாதே...?'

பாக்கியத்தின் எதிர்ப்பு அவரை மௌனமாக்கி விட்டது.

ஆனால் பத்மாவோ...

இளமையிலிருந்தே தான் நன்கு அறிந்த பாலசிங்கத்தையே தன் இதயத்தில் இருத்திக் கொண்டவள்!

தன் தந்தையின் தங்கை மகன் என்ற பாச உணர்வு மேலிட அவனைவிட வேறு ஒருவரையும் கணவனாக ஏற்க மனம் துணிய வில்லை. லீவில் யாழ்ப்பாணம் வரும் பாலசிங்கம், தன் வீட்டுக்கு வரும் போதெல்லாம் ஆவலோடு அவன் முக தரிசனத்துக்காக ஏங்கியிருப்பாள். பேசும் சந்தர்ப்பம் வந்தால், ஏக்கம்தொனிக்க தன் உள்ளத்தை கூறாமல் புரியவைப்பாள் அவனுக்கு.

பாலசிங்கம் புரிந்து கொண்டான்.

ஆனால் அவன் என்ன செய்யமுடியும்?

''தம்பிநல்ல சம்பந்தம் ஒன்று வந்துள்ளது. ஜாதகம் பார்த் தேன். நல்ல பொருத்தம்! முறையான சீதனம் தருவார்களாம்! நீ என்ன சொல்கின்றாய்...?

—கந்தசாமி அவனைக்கேட்கும் பொழுது, பாலசிங்கம் சினம் கொள்வான். ஏதேதோ கூறி, தட்டிக்கழித்து விடுவான்.

கந்தசாமி தன் மகள் பத்மாவினது மன ஓட்டத்தையோ" அல்லது பாலசிங்கத்தின் எண்ணத்தையோ புரியாத மாதிரி இருக் கின்றாரோ? அல்லது புரிந்தும், இது நடக்கக்கூடாது என்ற தீவிர துடன் இருக்கின்றாரோ?

பத்மா, 'என் அத்தானையே விரும்புகின்றேன். அவருக்கே என்னைக் கட்டி வையுங்கள்' என்று எப்படிக் கூறுவாள்?

தன் தாயின் முகத்தை நினைத்ததுமே அவளது சத்த நாடி களும் ஒடுங்கிவிடும்.

அவளால் செய்யமுடிந்ததெல்லாம், பாலசிங்கத்தின் முகத்தை நினைத்து அழுவதுதான்!

பாலசிங்கத்தின் நிலையும் அதுதானே!

மாமன் மீது ஆத்திரப்பட்டான். ஆத்திரப்பட்டு என்ன பிரயோசனம்?

சில சமயம், வேறு இடத்தில் நல்ல சப்பந்தம் பார்த்து திருமணம் செய்து கொண்டு, தங்கையின் கல்யாணத்துக்கு பட்ட கடனையும் அடைத்து விட்டு வாழ்க்கையைத் தொடங்குவோமா என்று கூட யோசிப்பான்.

ஆனால் பத்மாவை நினைத்ததும் அந்த எண்ணம் பறந்துவிடும்.

இப்படியிருக்கும் பொழுது தான் பத்மாவின் கடிதம் வந்தது.

அத்தான்,

''நிலைமை மோசமாகிவிட்டது. இங்கு என்னை ஒரு நில அளவையாருக்கு கல்யாணம் செய்துவைக்க என் பெற்றோர் முயற்சி செய்கின்றனர். எங்கள் மன நிலையை உணர முடியவில்லை இவர்களால். ஒருவேளை உணர்ந்தும், பிடிவாதமாய், இருக்கின்றார்களோ தெரியாது மனதால் தங்களையேகணவனாக வரித்துவிட்டேன். இனிவேறு ஒருவரை கணவனாக அடைந்து வாழ என்னால் முடியாது. நீங்கள் ஏதாவது முயற்சி எடுத்து என்னை கைப்பிடிப்பீர்கள் என இத்தனை நாள் காத்திருந்தேன் ஆனால் என் அப்பாவுக்கு பயந்து, பயந்து நீங்கள் மௌனமாகி விட்டீர்கள்.

பயந்தால் வாழ முடியாது?

இக் கடிதம் கண்டதும் இங்கு வந்து என்னை அழைத்துச் செல்லுங்கள். நான் வயது வந்தவள். எனக்கு இஷ்டமானவரை கணவனாகவரிக்க எனக்கு சகல உரிமையுமுண்டு. தங்கையின் கல்யாணத்தால் ஏற்பட்ட கடன், ஒரு சுமையாக நிற்கின்றதே என்று யோசிக்காதிர்கள்.

வாழும் விதத்தால் அக்கடனைத் தீர்க்கலாம்.

மனத் துணிவு இருந்தால் வந்து அழைத்துச் செல்லுங்கள்

இல்லாவிடில்...

என் உயிரைப்போக்க பல வழி உண்டு . .

—உங்கள்
பத்மா''

தனக்காக, பெற்றோர், வீடுவாசல் எல்லாவற்றையும் இழந்து விட்டு தன்னை விரும்பி, நம்பி தன்னுடன் வரச் சித்தமாய் இருக்கின்ற பத்மா எதிரில் நின்றதும், பாலசிங்கத்தின் மனம் வர வர தைரியம் பெறுகிறது.

''என்ன சிலை மாதிரி இருந்து விட்டீர்களே?

பாலசிங்கத்தின் சிந்தனை பத்மாவின் கேள்வியால் குலைகின்றது.

சிந்தை தெளிந்து விட்டதின் பிரதிபலிப்பு அவன் முகத்தில் தெரிகிறது.

''பத்மா. நான் மாமாவுக்கு பயப்படவில்லை.

ஆனல் எனக்கே புரிந்த ஒரு விததர்மத்துக்காகப் பயந்தேன் .. நாளை மறுநாள் திங்கட்கிழமை; ஐப்பசி மாதத்து முதல் முகூர்த்தம்! சிவன் கோயிலுக்குக் காலையில் வந்துவிடு நான் தெய்வத்தின் ஆசியோடும், சாட்சியோடும் உன்னைக் கைப் பிடிப்பேன்''

பாலசிங்கத்தின் தைரியமான பேச்சைக் கேட்டு பத்மாவின் முகம் பல கோடிசூரியப் பிரகாச ஒளிபெற்று மலர்ந்தது.

சுதந்திரன்- 1970

# கனவுகள் கலைகின்றன

"அப்பாடா ஒரு மாதிரி காலை அலுவல்கள் முடிந்து விட்டன சற்று நிம்மதியாய் உட்காரலாம்!"

தன்னுள் சொல்லிக்கொண்டே காவேரி நடு அறைக்கு வந்து கதிரையில் இருந்தாள்.

வீடு நிசப்தமாய் இருந்தது. அதிகாலை 'புதுக் கோயில் முருகன்' கோவில் மணி கேட்டதும் நித்திரை கலைந்து விடும். சற்று நேரம் விழித்திருந்தபடியே பேசாமல் படுத்திருப்பாள் எழுந்ததும், முருகனை நினைத்து இரண்டு 'திருப்புகழ்' தன் மனதுக்குள் சொல்லிக் கொள்ளுவாள். அது வழக்கம். இதற்குள் அலுப்புக் கலைந்துவிடும். எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, பால் கறந்து, தேநீரோ, கோப்பியோ கலந்து முடிப்பதற்குள் மெல்ல மெல்ல ஒவ்வொருவராக எழுந்து வருவார்கள்.

வயது பதினேழு ஆகப்போகின்ற சுமதி கூட குழந்தை மாதிரி! முகம் கழுவியதும் ஓடி வந்து விடுவாள் குசினிக்குள்

"அம்மா கோப்பி!"

"வயது வந்த பொம்பிளைப் பிள்ளை! போடி போ... நெற்றியில் வீபூதியைப் பூசிக் கொண்டு வா! ஓடு" விரட்டி விடுவாள் மகளை.

அதற்குள் மணி, ரவி, சிவா மூவரும் எழும்பிக் கிணற்றடிக்குப் போய் விடுவார்கள். மூவரும் ஒவ்வொரு வயது இடை வெளியில் பிறந்தவர்கள்.

"அம்மா ரவி பற்பொடியைத் தரமாட்டானும்..." மணி கத்துவான்.

"இந்தச் சிவாவை வந்து பாருங்கோம்மா! தலையிலை தண்ணியை ஊத்துறான்..." ரவி கத்துவான்.

''காலையில் எழும்பினதும் தொடங்கிவிட்டாங்கள்;''

காவேரி கிணற்றடிக்குப் போனால்தான் மூவரையும் ஒரு மாதிரி முகம் கழுவித்து அழைத்து வர முடியும்.

''அம்மா கோப்பிக்கு சீனிபத்தாது!''

''அம்மா எனக்கு இன்னும் கொஞ்சக் கோப்பி...''

எல்லாப் பிரச்சினைகளையும் காவேரி தீர்த்து வைப்பாள்:

இதற்குள் அவளது கணவன் கேசவன் எழுந்து வருவான் அவனுக்குக் காவேரி பற்பொடியை இலையில் வைத்துக் கையில் கொடுக்க வேண்டும். இல்லாவிடில் அவனுக்குப் பத்தியப்படாது. கல்யாணமான நாள் தொடக்கம் இன்று வரையும் உள்ள பழக்கம் இது.

இதில் அவளுக்கு ஒரு சந்தோஷம்! அவனுக்கு ஒரு திருப்தி முகம் கழுவியதும், அவள்தான் கோப்பியை ஆற்றி ஆற்றிக் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டுக் கொடுக்க வேண்டும். இல்லா விட்டால் கேசவனுக்குக் கோப்பி குடித்த மாதிரியே இராது விசித்திரமான தாம்பத்தியப் பழக்கம்...!

இதன் பின்னர் உணவுக் கடை....

பள்ளிக்குப் போகும் சுமதி, மணி, ரவி, சிவா யாவருக்கும் சாப்பாடு கட்டிக் கொடுத்து விடவேண்டும். மத்தியான வெயி வில் அவர்கள் வரமாட்டார்கள். இனி சாப்பாடு கொடுத்து கேசவனையும் கந்தோருக்கு அனுப்ப வேண்டும்!

''கொஞ்சநேரம் சிப்பிலி ஆட்டிவிட்டார்கள்!'' மனதுக்கும் உடலுக்கும் அலுப்பாய் இருந்தது. ஆனாலும் அவளுக்கு உள் ளுக்குள் ஒரு திருப்தி கலந்த மகிழ்ச்சி!

பக்கத்தில் கேசவன் கந்தோரிலிருந்து கொண்டுவந்த 'இலஸ்ட்ரேட்டட் வீக்லி' ஆங்கில சஞ்சிகை கிடந்தது எடுத்துப் புரட்டினாள்.

'ஓவல்டின்' விளம்பரத்துக்காக ஓர் அழகிய வாலிபனின்

ஆரோக்கியமான முகத்துடன் கூடிய படத்தைப் போட்டிருந்தார்கள்.

அகன்ற கண்களும், பரந்த நெற்றியும், அலைபாயும் கேசங்களும் உடைய அந்த இளைஞனது படத்தையே ஆவலோடு பார்த்தாள் காவேரி.

"அசப்பில் என் ஜெகன் போலல்லவா இருக்கிறது!" அவளது நினைவிலும் பார்வையிலும் பெருமிதம் தொனித்தது. தாய்மையின் பூரிப்பு அது.

"என் ஜெகன் கொழும்புக்கு உத்தியோகம் என்று போய்க் கடைகளில் சாப்பிட்டு உடம்பு அரைவாசியாய்ப் போய்விட்டது! கொஞ்ச நாளுக்காவது அவனோடு கூடப்போய் இருந்து அவனுக்குருசியானதாய்ச் சமைச்சுப் போடவேண்டும்!" உள் மனம் அசைபோட்டது.

வேறொரு விளம்பரத்துக்காக ஒரு முழுக் குடும்பத்தையே படம் பிடித்துப் போட்டிருந்தார்கள்.

"அவரும், நானும், பிள்ளைகளும் சேர்ந்து படம் எடுத்தால் இப்படித்தான் இருக்கும்."
அவளுள் எழுந்த இந்த நினைவால் தன்னை அறியாமல் சிரித்துக்கொண்டாள்.

அவள் அமர்ந்திருந்த இடத்துக்கு நேராகச் சுவரில் கேசவனும் அவளும் கல்யாணமான புதிதில் எடுத்த பெரிய 'சைஸ்' படம் தூக்கிவிடப்பட்டிருந்தது. ஏதோ ஒரு நினைவுவர எழுந்து சென்று படத்தையே உற்றுப்பார்த்தாள் காவேரி.

"அவர்தான் எவ்வளவு அழகாக இருக்கிறார்—!" கேசவனின் முகத்தைப் பார்த்ததும் அவளது உள்ளத்தில் எழுந்த நினைவால் அவளின் முகம் நாணத்தினால் குங்குமமாய்ச் சிவந்தது.

இருந்தாற்போல், படம் தூக்கி விடப்பட்ட நூலின் மேல் அவளது பார்வை சென்றது.

"என்ன இது! கயிறு அரைவாசி அறுந்து போயிருக்கின்றதே! அவர் வந்த பின்பு சொல்லி நல்ல நூலாய்ப்போட்டுக்

கட்டவேண்டும். இல்லாவிடில் படமே கீழே விழுந்து நொறுங்கிவிடும்'' அவளது மனதில் எண்ணம் ஓடியது.

டக்! டக்

யாரோ கதவைத் தட்டினார்கள். யாராயிருக்கும் என்று எண்ணியவாறு வெளிக்கதவைத் திறந்தாள் காவேரி. கையில் ஒரு சிறு குழந்தையுடன் ஓர் இளம் பெண் நின்றாள். காவேரியின் பார்வை முதலில் குழந்தை மீதுதான் சென்றது. வட்டக் கண்களும், நீண்டநாசியும், சுருண்ட கேசமும் அவளுக்கு ஏதோ ஒன்றை ஞாபகப்படுத்தின. ஆனால் அந்த ஞாபகம் வந்த மாதிரியே மறைந்தும் விட்டது.

அப்பெண் நல்ல சிவப்பு நிறமுடையவளாய், அழகாக இருந்தாள். மெல்லிய தோற்றம் கொண்ட அவள் கட்டியிருந்தது என்னவோ சாதாரண நூல்சேலை என்றாலும், மிகவும் கவர்ச்சியாய் அதை உடுத்திருந்தாள்

சட்டென்று எல்லாவற்றையும் காவேரி கவனித்துக்கொண்டாள். ஆனால் அப்பெண்ணின் முகத்தில் அழகு இருந்தாலும் ஏதோ சொல்ல முடியாத சோகமொன்று அந்த அழகைத் திரையிட்டு மறைத்தது போன்ற பிரமை!

காவேரிக்கு வந்திருப்பது யாரென்று விளங்கவில்லை,

ஏதாவது யாசகத்துக்கு வந்தவளோ... இல்லாவிடில் வீடு மாறி வந்து விட்டாளோ...

இப்படிப் பலவாறு அவளின் சிந்தனை விரிந்தது.

''நீங்கள் யார்? யாரைத் தேடி வந்தீர்கள்?

''...!''

காவேரியின் கேள்விக்கு அப்பெண்ணிடமிருந்து பதில்கிடைக்கவில்லை ஆனால் அதற்கு மாறாக அவள் தன் கையில் பிடித்துக் கொண்டு நின்ற குழந்தையை அணைத்தபடியே காவேரியை உற்று நோக்கினாள்'

அவளின் வெறித்த பார்வைக்குள்ளனதான் பொருள்... அறையைச் சுற்று முற்றும் நோட்டம் விட்டாள் அப்பெண் இருந்தாற் போல் அவளது பார்வை அறையில் நடுநாயகமாய் மாட்டியிருந்த போட்டோவின் மேல் சென்றிருக்க வேண்டும். அதை நோக்கி நடந்தாள்.

அது காவேரியும் சேகரனும் கல்யாணமான புதிதில் எடுத்துக் கொண்ட படம் தான்!

படத்தை நெடுநேரம் உற்று நோக்கினள் காவேரி, அவளது பார்வையை விசித்திரத்துடன் செலுத்திக் கொண்டிருந்தாள் ஆழ்ந்த பெருமூச்சொன்று அப் பெண்ணிடமிருந்து புறப்பட்டுக் காற்றில் கலந்ததைக் காவேரியின் உட்புலன் காட்டிக் கொடுத்து விட்டது.

அவளுள் ஒரு சிறுநடுக்கம்... படத்தையோ பார்த்துக் கொண்டிருந்த அவள் திரும்பிக் காவேரியைப் பார்த்தாள். அவ ளின் கன்னங்களில் கண்ணீர் கரகரவென்று வடிந்தது.

'இதென்ன அவள் அழுகின்றளா? வந்தவள் யாரென்று கேட்கப் பதில் கூறவில்லை இப் பொழுது எங்களின் படத்தைப் பார்த்து அழுகின்றாள்... காவேரிக்கு ஒரு புதிராய் இருந்தது

''அம்மா நீங்கள் யார்? யாரைப் பார்க்க வேண்டும்?'' காவேரியின் கேள்வியில் சினம் தலை தூக்கியது.

''அவளுக்குத் தெரியும் ..'' விம்மலோடு பதில் கிடைத்தது.

காவேரி அதிர்ந்து போனாள்: ஆயிரம் மின்னல் பொறிகள் அவளைத்தாக்கிய மாதிரி இருந்தது பெண்ணுடன் நின்ற பெண் குழந்தை மீது காவேரியின் பார்வை சென்றது. அவளுக்குத்திக் கென்றது.

முதலில் வீட்டுக்குள் அப்பெண்ணுடன் அக்குழந்தை நுழைந் ததும் ஏதோ ஒரு ஞாபகம் வந்தது, இப்பொழுது அவள் நினை வில் உறைத்தது.

'ஒ அப்படியும் இருக்குமோ' ' அவளின் சந்தேகத்துக்கு இப்

பொழுது பதில் கிடைத்து விட்டதோ...?

அப்பெண்ணின் வெறித்த பார்வை, பெருமூச்சு, படத்தைப் பார்த்து அழுதது

காவேரியின் மெல்லிய உடம்பு நடுங்கியது. பக்கத்திலுள்ள சுவரை ஆதாரத்துக்காகப் பிடித்துக் கொண்டாள்.

இன்றும் நன்ருக நினைவிருக்கின்றது. கல்யாணம் முடிந்து நாலு மாதங்களாகியிருந்தன. கேசவனின் நண்பர் இராசதுரை வீட்டு வாசலில் வந்து கூப்பிட்டார். கேசவன் வெளியே சென்ருர். இருவரும் என்னவோ கதைத்தார்கள்.

''கொஞ்சம் வெளியில் போட்டு வாறன்!''

அவன் இராசதுரையுடன் போய்விட்டான். இரவு வீடு திரும்ப வெகுநேரம் சென்று விட்டது. திரும்பி வந்த பொழுது கேசவனின் கண்களிரண்டும் கோவைப் பழமெனச் சிவந்திருக்க கேசக் கற்றைகள் தாறுமாருய்க் கலைந்திருக்க, அவனின் வாயிலிருந்து வீசிய நெடியைக் காவேரி புரிந்து கொண்டாள் தன்னுள் குமுறிக் குமுறி அழுதாள். கேசவன் திரும்ப ஒரு நாளும் இன்றுவரை அப்படி வரவில்லை, காவேரிக்கு உள்ளுக்குள் ஒரு பெருமை!

உண்மைதான். மூத்த மகன் ஜெகனுக்கு வயது இருபதாகப் போகின்றது, அனுகுப் பின்னர் சுமதி, மணி, ரவி, சிவா, என்று குழந்தைகள் பிறந்து குடும்பம் பெரிதாகி விட்டதே! கேசவன், வளர்ந்த குடும்பத்தின் நிலை உணர்ந்து திருந்தி விட்டானென்றே காவேரியின் சிந்தனை இதுவரை இருந்து வந்தது

குழந்தைகள் என்றதும் காவேரியின் முகம் சிவக்கும். ஆழமாய் வேர் விட்டு ஓடியிருக்கும் தாம்பத்திய வாழ்வின் உள்ரகசியங்களை, மாடு தான் தின்ற தீனியை மீண்டும் இரைமீட்கின்ற மாதிரி, உள்ளத்திரையில் ஓடவிட்டுப் பார்ப்பதில் எண்ணில்லா மகிழ்வுஉண்டு போலும்! அதில் தானறியாத நாணமும் கூட;

இதொல்லாம் அவனறியாத புதுமை. அவள் தன்னுள்ளே கேச வனின் உள்ளத்தெழுச்சிகளும் உடல் எழுச்சிகளும் தன்னுள் மட்டுமே சங்கமமாகி விட்டனவென்று பூரிப்படைவாள். தன் உடல், சுகம், பணிவிடை என்றெல்லாம் சமர்ப்பித்து அவனையே தன் உள்ளப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டி விட்டதாகப் பெரு மைப்பட்டாள் காவேரி.

ஆனால் பூட்டப்பட்டதாக எண்ணியது வீண்பிரமையோ... குழந்தைகளைக் காணும் போதெல்லாம், ஈரமணல் மேட்டில் அழசிய கூடுகளையும் கோபுரங்களையும் கட்டி விட்டு, கைகொட்டி மகிழ்ந்து, தாங்களே இதைக் கட்டினேம் என்று பெருமைப்படும் இளம் குழந்தைகளைப் போலவே, விவரிக்க முடியாத உணர்வுகளை அடைவாள். அவள் தாய்மையை என்றுமே அவள் சுமையாக எண்ணவில்லை. இதற்கு மாறாக -அவள் பெருமைப்பட்டாள்: அவைகளை எண்ணி. ஒவ்வொரு குழந்தைப் பேறு காலத்துக்குப் பின் காவேரியின் உடல் நலிந்து கொண்டுதான் வந்தது. ''என்னடி அவனுக்கு யோசனை இல்லாவிட்டாலும் உனக்குப் புத்தி உங்கே போச்சு!''

காவேரியின் தாய் கோபத்துடன் கேட்பாள். தன் மகளின் உடல் நிலை உருக்குலைந்து விடுகிறதே என்ற பெற்ற தாபம் அவளுக்கு ஆனால் காவேரி மெல்லெனச் சிரித்தாள்.

தன்னுல ஈடு கொடுக்க முடியாவிட்டாலும் கேசவனின் சபலத்தை, பலத்தை ஒரு நாளும் இழிவானதாகக் கருதவில்லை.; ஒரளவில் அவளுக்கும் அதில் சமபங்குண்டுதானே.

ஆனல் இன்றோ உள்ளம் பலமாக அழுதது!

எத்தனையோ நாள் கேசவன் வீட்டுக்கு நேரம் செல்ல அகாலத்தில் வந்திருக்கின்றான். பிள்ளைகள் யாவரும் சாப்பிட்டு முடிந்து, காவேரி அவனுக்காக காத்திருப்பாள். கேசவன் ஏதேதோ காரணங்கள் கூறுவான்.

''நண்பன் ஒருவன் அழைத்திருந்தான். அவன் வீட்டுக்குப் போயிருந்தேன்...

''நண்பன் ஒருவனேடு சினிமாவுக்குச் சென்றிருந்தேன்...'.

''கந்தோரில் அதிக வேலை...''

இப்படி எத்தனையோ சாட்டுகள் கூறுவான்: காவேரி அதெல்லாவற்றையும் பொருட்படுத்த மாட்டாள். அவளின் கவலையெல்லாம் கேசவன் நேரத்துக்குச் சாப்பிடாமல் உடம்பைக் கெடுத்துக் கொள்கிருனே என்பதுதான், ஆனுல் அப்படிக் கவலைப் பட்டதெல்லாம் வீண்தானே என்ற கேள்வி ஒரு வித ஆற்றுமையோடு அவளின் இதயத்தில் இருந்து கிளம்பியது.

சில சமயங்களில் அவனது சம்பளத்திலிருந்து பணம்குறைந்து காணப்படும். அவள் ஆச்சரியத்தோடு அவனின் முகத்தை நோக்குவாள்.

''என்ன காவேரி பணம் குறைகின்றது என்று பார்க்கின்ருயா? இந்த மாதம் இரண்டுபேர் இடம் மாறிப் போகின்ருர்கள், அவர்களுக்குப் பிரிவுபசாரம் நடத்துவதற்காகக் கொடுத்து விட்டேன்.''

அவளின் கேள்வி நிறைந்த பார்வைக்குப் பதில் கூறிவிடுவான்.

ஒரு முறை சரியாக ஐம்பது குறைந்திருந்தது''
''இதென்ன ஐம்பது ரூபாய் குறைகிறதே!''

காவேரி கந்தோரில் ஒரு சிறுதவறு நேர்ந்து விட்டது. தவறுதலாய் ஒருவருக்கு முன்நூறு ரூபாய் கொடுத்து விட்டேன். கணக்கில் தவறு ஏற்பட்டு விட்டது. இப்படி மாதம் சம்பளத்தில் ஐம்பது ரூபாய் கழிக்கிருர்கள்'' முகத்தைத் தூங்கவைத்தபடியே கூறிஞன் கேசவன். காவேரி பதறிப் போனுள்

''அப்படியானுல் இந்தாருங்கள், இதைக் கொண்டு போய் அடகு வைச்சுப் பணத்தைக் கட்டிவிடுங்கள். பின்னர் ஆறுதலாய் மீட்டுக் கொள்ளலாம்.'' தன் கையில் போட்டிருந்த காப்பைக் கழற்றிஞள்'

''வேண்டாம் காவேரி! வேண்டாம்!'' பதற்றத்துடன் கூறிய கேசவன் அவளின் செய்கையை என்னவெல்லாமோ காரணங்கள் கூறித் தடுத்துவிட்டான்.

"ஓ அப்படியும் இருக்குமா"

"நானும் பதறிப் போய்க் காப்பைக் கழற்றிக் கொடுக்கப் போனேன்!" நினைவே கசந்தது அவளுக்கு இப்பொழுது

தீபாவளி வந்த பொழுது... தீபாவளிக்கு நாலு நாட்கள் முன்னர் புது உடுப்புகளுடன் வீட்டுக்குள் நுழைகின்றான் கேசவன் மணி, ரவி, சிவா மூவரும் அவனைச் சூழ்ந்து நின்றனர்.

சுமதி தாயின் பக்கத்தில் நின்றபடியே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நிற்கின்றாள்.

புது உடுப்புகளைக் கண்ட குழந்தைகளின் முகங்கள் சந்திரன் மாதிரி மலர்கின்றன. அவர்களின் மகிழ்ச்சியைக் காவேரி அனுப வித்தபடியே பார்க்கின்றாள்.

"இந்தா காவேரி உனக்கு!" — கணவன் நீட்டிய சேலையை பவ்வியமாகப் பெற்றுக் கொண்டாள்.

'எனக்கு ஏற்ற கலரில்தான் எப்பொழுதும் வேண்டிக் கொண்டு வருகிறார்! கெட்டிக்காரர்தான்!" பெருமிதத்தால் உள்ளம் நிறைந்தது.

பிரிக்கப்படாமல் வேறொரு பார்சல் கிடந்தது. அவர் தனக்கு ஏதும் சாரம், துவாய் வேண்டி இருப்பார் என்று நினைத்த காவேரி அதைப் பற்றிக் கேட்கவில்லை.

ஆனால் கடைக்குட்டி சிவா சும்மாயிருக்கவில்லை. "இஞ்சை இன்னுமொரு பார்சல்!" கூறிக்கொண்டே எடுத்துப் பிரித்து விடு கின்றான் முற்றாக.

ஒரு பச்சைநிறச் சேலையும் ஒரு குழந்தைச் சட்டையும் கீழே விழுந்தன. காவேரியின் புருவங்கள் உயர்ந்தன,

காவேரி, எங்கள் கந்தோருக்குப் பக்கத்தில் ஓர் அநாதை விடுதி இருக்கின்றது. தீபாவளி சமயத்தில் இதைக் கொடுக்க வென்று வேண்டினேன்!"

காவேரி தன் கணவரின் பரந்த செய்கையை எண்ணி மகிழ்ந்தாள்! ''இவருக்குத்தான் எவ்வளவு தாராள எண்ணம்'

இப்பொழுது அவளின் பார்வை அப்பெண்ணுடன் நின்ற பெண் குழந்தை மீது சென்றது.

அநாதை விடுதிக்குக் கொடுக்க' வென்று கொண்டு வந்த பார்சலில் இருந்த அதே சிவப்புக் கட்டம் போட்ட சட்டையைத் தான் அக்குழந்தை அணிந்திருந்தாள். எல்லாமே காவேரிக்குப் புரிந்தது.

கேசவனுக்குத் தாராள மனமா? அவள் பெருமிதப்பட்டது...? இப்பொழுது என்ன செய்வது ....?

''நான் இப்பொழுது என்ன செய்வது!'' அப்பெண்ணின் கேள்வியால் காவேரியின் எண்ணத் தொடர்பு அறுந்தது. சடாரென்று அப்பெண்ணின் பக்கம் திரும்பினுள். காவேரியின் முகத்தில் என்ன உணர்ச்சியைக் கண்டாளோ, அவளது முகம் கீழே நிலத்தைப் பார்த்தது.

''என்னைக் கேட்டுக் கொண்டா இவ்வளவும் நடந்தது...?'' காவேரியின் பதில் அப்பெண்ணை அதிர்ச்சியுறச் செய்திருக்கும்.

அங்கு மௌனம் நிலவியது

''அவர் எத்தனை மணிக்குச் சாப்பிட வருவார்?'' அந்த "அவர்'' என்ற வார்த்தையை அவள் ஏதோ ஒரு சுவாதீனத்துடன் கூறியதாகத் தோன்றியது. காவேரிக்கு உடலெல்லாம் எரிந்தது. பொறுமையா? அல்லது தனக்குரிய ஒன்று பறிபோய் விட்டது என்ற ஏமாற்றத்தின் விளைவா அந்த எரிவு?

''அவர் வாற நேரம் எனக்குத் தெரியாது!''

''இல்லை நீங்கள் பொய் சொல்லுகின்றீர்கள்!''

''......''

அவளின் குற்றச்சாட்டு அங்கு எடுபடவில்லை;

காவேரி சிலையாக நின்றாள். கண்களை மூடிக் கொண்டாள் பூமி ஒரே ஒரு கணம் பிளந்து தன்னை உள்ளே கொண்டு போகக் கூடாதா என்று கூட ஆசைப்பட்டாள்; ஆனால் எல்லாம் ஆசைப்பட்டபடியே நடந்து விடுமா என்ன?

காவேரியின் கண்கள் திறந்து கொண்டன; அப்பெண்ணும் குழந்தையும் வெளியே போய் விட்டார்கள். காவேரியின் கண்கள் மட்டுமல்ல, மனமும் திறந்து கொண்டது. வழக்கமாக இந்த நேரத்தில் அவள் சோறு வடித்து கறியும் குழம்பும் ஆக்கி வைத்து. விடுவாள் பின்னர் தான் பொரியல், அது இது வென்று மேலதிகமாக ஏதும் தேவையெனில் செய்து வைப்பாள்.

உச்சியைப் பிளக்கும் நடு வெயிலில் ஆக்கப்பறக்க ஓடி வரும் தன் கணவன் முகம்கழுவி விட்டு, சாப்பாட்டு மேசையில் வந்து அமர்ந்ததும் பக்குவமாக ஒவ்வொன்றாக அவனுடைய தட்டில் எடுத்துப் பரிமாறி அவன் இரசித்துப் சாப்பிடுவதை ஆவலோடு பார்த்து நிற்பாள்.

ஆனால் இன்று...

''வரட்டும்! ஊட்டி ஊட்டிக் கொடுக்கத்தான் நினைத்த மாதிரி... கட்டு அவிழ்த்த மாடு மாதிரி !''

சைக்கிளை நிறுத்தி விட்டு வாயில் ஏதோ ஒரு பாட்டைச் சீட்டி அடித்த படியே உள்ளே வந்தான் கேசவன்'

வழக்கமாக அந்தச் சீட்டு ஒலியை வெகுவாக இரசிப்பாள் காவேரி.. உல்லாசமானவர்!'' என்று எண்ணிக் கொள்ளுவாள்.! ஆனால் இன்றோ?

கணவனின் உல்லாசம் எவ்வளவில் சென்றுவிட்டது என்று இன்று தான் தெரிந்து விட்டதே!

இன்று அந்தச் சீட்டி ஒலி தன் அமைதியான வாழ்வுக்கு அடிக்கின்ற சாவு மணி மாதிரிக் காவேரிக்குப் பிரமை தட்டியது;

உள்ளுக்கு வந்த கேசவன் காவேரி இருந்த நிலையைக் கண்டு நின்றுவிட்டான்;

"என்ன காவேரி ஒரு மாதிரி இருக்கிறாய்?"

"......"

காவேரியின் மௌனம் கேசவனுக்கு ஆச்சரியத்தை அளித்திருக்க வேண்டும்.

"என்ன ராணி அம்மா! என்ன கோபம்!" சிரித்தபடியே காவேரியின் இரு மென் பட்டுத் தோள்களையும் தன் கரங்களால் பற்றினான்.

சர்ப்பமெனத் துள்ளி விலகி நின்றாள் காவேரி

"இனி என்னைத் தொடாதீர்கள்!"

சிலையென நின்றான் கேசவன்.

(யாவும் கற்பனை)

வீரகேசரி வாரவெளியீடு

27 - 3 - 1977

# சலனம்

ஆளையே அள்ளிக் கொண்டு போய் விடும் போல் வீசியது மணற்காற்று. கோணேஸ்வரத்தில் மலை உச்சியில் பூசை நடந்து கொண்டிருந்தது. பாறையின் நுனியில் என்ன லாவகமாய் இந்தக் குருக்கள் பயமின்றி நிற்கின்றார்!

நான் என்னுள் வியந்து கொள்கின்றேன்.

எல்லாமே எனக்கு வேடிக்கையாய்த் தோன்றுகிறது. திருகோணமலைக்கு மாற்றலாகி வந்ததும் கோணேஸ்வரப் பெருமானை உடனே தரிசிக்கவேண்டு என்ற பேராவல் உந்த இன்று காலைப் பூசைக்குவந்து நிற்கின்றேன்.

முன்பு ஒருநாளும் இங்கு வரவில்லை. ஆனால் பாடல் பெற்ற இத் தலத்தைத் தரிசித்துவிட வேணும் என்றஆவல் பல காலமாக உண்டு. இறையருளால் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்துவிட்ட கருணையை எண்ணி என்னுள் சிலிர்த்துக்கொண்டேன்.

கம்பித் தடுப்பின்கீழ் நோக்கினேன். பொங்கும் வெண்ணுரைகள் எழும்ப, கடல் கன்னி பாறையில் மோதுகிறாள்! பூசைநடக்கும் போது இப்படி வெண்ணுரை பொங்கும் என்று யாரோ ஒருவர் கூறியது என் ஞாபகத்துக்கு வருகின்றது.

பூசை முடிந்தவுடன் குருக்கள் எறியப்போகும் பிரசாதத்துக்கு ஆவல்தேங்கப் பார்த்துக் கொண்டிருக்கும் குரங்குகள், எப்படியாவது அப்பிரசாதத்தில் பங்கு பெறவேண்டு மென்று அங்குமிங்கும் பறந்த காகங்கள்!

என் பார்வை சுழல்கின்றது!

'மாலினி, அங்கே போகாதே! குரங்கு பிடித்து விடும்!

—யாரோ ஒரு பெண்ணின் குரல். எங்கேயோ கேட்ட குரலாகவும் இருக்கவே, என்னையறியாமல் திரும்புகிறேன்.

அதிர்ச்சியும், ஆச்சரியமும் எனக்கு ஏற்பட்டது!
குரலுக்குரியவள் சாரதா!

'நீங்களா......? — இது நான்.

'ஓ! மூர்த்தி ...!' — சாரதாவின் குரலில் தொனித்தது வியப்பா, அல்லது அலட்சியமாவென்று புரியாதஇரண்டும் கெட்டான் தொனி.

சாரதாவை உச்சியிலிருந்து 'உள்ளங்கால்வரை என்பார்வை என்னை அறியாமல் பார்வையிட்டது.

பக்கத்தில் அவளின் சேலையைப் பிடித்தபடி நின்ற சிறுமியையும் பார்க்கத்தவறவில்லை என் கண்கள்.

'மகள்தானே...!'—நான்வினவினேன்.

'ஓமோம்! மகள்தான்!, முகத்தில் செம்மை ஏறியபுன்னகையுடன் கூடிய பதில்.

'இப்ப எங்கே வேலை?' — அவளின் கேள்வி.

'நான் இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பெருந்தெரு பள்ளிக்கூடத்துக்கு மாற்றலாகி வந்துள்ளேன். நீங்கள்...?

'நாங்கள் இப்பவும் பேராதனைதான். இங்கு என் அண்ணு இருக்கிறார். அவரின் மகளுக்குக் கல்யாணம். கல்யாணத்துக்கு வந்ததோடு, அத்துடன் கோவிலையும் தரிசித்துவிட்டுப் போகலாமென்று வந்தோம்.

'அது சரி, ஐயா வரவில்லையா?'

'அவருக்கு லீவு இல்லை. நாங்கள் மட்டும்தான் வந்தனாங்கள் குசலப் பிரச்சனை முடிந்துவிட்டது.

இதற்குள் குருக்கள்பூசையை முடித்துக் கொண்டு கோவில் உள்ளுக்குள் போய்விட்டார்.

நாங்களும் நகர்ந்தோம்.

எனது நடைதொய்வது போல் எனக்குள் ஒரு பிரமை. ஆனால்

நான், கால்கள் பின்னிட்டு நடந்த மாதிரி சாரதா அவஸ்தைப் படவில்லைப் போலிருந்தது.

அவள் மகளின் கையைப் பிடித்த படியே படிகளில் இறங்கி கோவிலுக்குள் நடந்து சென்றாள்.

என்னை அறியாமல் நானும் மெதுவாக நடந்து கோவில் வெளிவாசலில் போய் நின்றேன்.

உள்ளேபூசை நடந்து கொண்டிருந்தது மனம் ஒருநிலைப்படாது தத்தளித்தது. கடல் காற்று கேசக்கற்றைகளை அலைக்கழித்தது.

கற்பூர ஆராத்தி நடந்தது. கண்களைமூடி ஒரு நிமிஷம் மௌனமாகத் தியானித்து விட்டு, கோவிலுக்கு இடது பக்கத்திலுள்ள மொட்டைப் பாறையைச் சுற்றி வெளிப் பிரகாரத்திற்கு நடந்து சென்றேன்.

என்னை அறியாமல் ஒரு குற்ற உணர்வு உடலெங்கும் வியாபித்து நின்ற மாதிரி ஓர் சிலிர்ப்பு!

தண்ணீர்ப் 'பைப்' அமைந்திருக்கும் இடத்துக்கு வந்து, இறங்குபடிகளுக்கு ஆதரவாகக் கட்டப்பட்டிருந்த சிறு மதிலில் இருக்கிறேன்.

குருக்கள் ஐயாவின் வீட்டுக் கூரையில் குரங்குகள் தாறுமாருக ஓடித்தாவின.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ...மூத்தமகன்! நன்ருகப் படித்து பல்கலைக்கழகம் போய் பட்டமேந்தி வெளிவந்து கைநிறையச் சம்பளம்கொண்டு வருவான் என்ற நெஞ்சு நிறைந்த ஆசையுடன் நின்ற என் தந்தையின் இடைவிடாத ஊக்கத்தினல் எனது பல்கலைக்கழகப் பிரவேசம் நடந்த நேரம்...படிப்பைத் தவிரவெருென்றினும் புலன் செலுத்த மனம் இல்லை!

தந்தையின் முகம் ஒவ்வொரு நிமிஷமும் எனது கடமையை என் அகக்கண்ணில் தோன்றிப்பயமுறுத்தும் பிரமை!

'ஹாலில்' இடமில்லாத படியால் என்னை நன்கு நேசித்த விரிவுரையாளர் குகநாதனின் குவார்ட்டர்சில் ஓர் அறை எனக்கு கிடைக்கிறது.

குகநாதர் இளவயது. தமிழ் அவரது உயிர்! வேதம் படித்த முகம் காந்தியுடன் திகழும். வீட்டில் அவரும், மனைவி சாரதாவும் தான்! திருமணமாகி நாலு ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை. அந்த ஏக்கம் குகநாதரின் பேச்சில் இடைக்கிடை குறுக்கிடும்,

'எல்லாம் அவன் செயல் தம்பி!' — இடைக்கிடை சித்தாந்தம் அவர் பேச்சில் தொனி தட்டும். புரியாமல் நிற்பேன் நான்! எனது மனமும் ஓர் குரங்காகி... எண்ணங்கள் மாறி மாறித்தாவி ஓடு கின்றன 'அவர் மனைவி சாரதா சற்றுக் கலகலப்பானவள் மாதுளை போன்ற முகம், பேராதனையின் மாவலிக்காற்றின் செழுமையில் செம்மைஏறி பார்ப்போரை மறுபடியும் பார்க்கவைக்கும் சபலத்தை அளிக்கும் மோகன சக்தியை தன்னுள் கொண்டிருந்தது.

ஆனல் நான் இதில் ஈடுபடவில்லை.

மனம் இல்லை என்று நான் பீஷ்மவேடம் போடவில்லை சாரதா கலியாணமான பெண் என்ற உணர்வு மேலோங்க நான் என் பார்வையைத் திருப்பிவிடுவேன்.

பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளிவிளையாடுவானும்; என்றோ எனது பாட்டி கூறிய கூற்றில் இவ்வளவு காலமும் அர்த்தம் புரிபடாமல் இருந்தது.

ஆனல் இப்போ .....

சாரதா இளமைகுலுங்க சதா வீட்டில் சிரித்துச் சிரித்து வளைய வருவாள்.

நான் படிப்பிலும் மூழ்கி இருந்தால் வலிய வந்து பேச்சுக் கொடுப்பாள்.

'என்ன மூர்த்தி! புத்தகத்தைக் கரைத்துக் குடித்து விடுவீர்கள் போலிருக்கிறது!—' பேச்சில் கிண்டல்.

அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்துவைப்பேன்.

நான் எடுக்கும் சஞ்சிகைகள், நான் கொண்டுவந்ததும் முதலில் படிக்கமுடியாது. சாரதா முழுவதையும் ஒரேயடியாய்க் கொண்டுபோய்விடுவாள்.

திருப்பித் தரும்போது அவற்றில் ஒருவித வாசனை அடிக்கும்.

பெண்களின் கைக்குள்ளும் இயற்கை நறுமணம் உண்டோ? என்னுள் தடுமாற்றம்......

ஆனால் அதே வாசனை சாரதா எனது அறையில் நுழையும் போது குப்பென்று காற்றில் கலந்து பரவி நின்று என் நாசி வழியே நுழையும் போது என்னுள் ஒரு மயக்கம்!

மயக்கம் ஒரே ஒருகணம் தான்!

மனம் விழித்து விடும்...

சாரதா திருமணமானவளல்லவா...¡

நான் அவளை அம்மா என்றழைக்கப் பழகிக் கொண்டேன் அவள்முகம் அட்டகோணலாகி விடும். நான் அப்படி அழைத்தால்!

குகநாதர் பாவம்!

பல்கலைக்கழகம்! கோவில்! இவைமாறினால் தன் அறையில் புத்தகங்களுக்கு மத்தியில் தன்னைப் புதைத்துக் கொள்ளும் இயல்பு.

அவர் எனக்கு புரியாத ஒரு புதிர்.

சாரதாவோ...

காலம் மூன்றாண்டுகளை விழுங்கி விடுகிறது. பரீட்சை முடியும் தருணம்.

குகநாதர் ஏதோ ஒரு அவசர அலுவலாக யாழ்ப்பாணம் போய் விடுகிறார்.

'மூர்த்தி' நான் அங்கு இரண்டு நாள் நிற்க வேணும் வீட்டைக் கவனமாகப் பார்த்துக் கொள் தம்பி.

அவருக்கு என் மீதுஅசைக்க முடியாத நம்பிக்கை.

கண்டிக்கு ஓர் நண்பனைப் பார்த்து விட்டு வீடு வர இரவு எட்டு மணியாகிவிட்டது. மழை வேறு தூறிக்கொண்டிருந்தது. வழியில் ஒரு உணவுக்கடையில் சாப்பிட்டு விட்டேன், உடனே

போய் படுக்கையில் விழ வேண்டும் என்ற உடல் அசதியோடு நடை போடுகின்றேன்.

கதவைத் தட்டினேன்.

சாரதா கதவைத் திறந்தாள்,

'கம்', மென்று மல்லிகை மணமும், கோலோன் வாசனையும் சேர்ந்து என் முகத்தைத் தாக்கியது.

நிமிர்ந்து பார்த்தேன்.

நீல நிற சேலையும், வெள்ளை ரவிக்கையும் அணிந்து சௌந்தர்ய தேவதை போல் சாரதா நின்றாள். நான் ஒன்றும் பேசவில்லை.

ஒரு சிரிப்பு உதிர்த்து விட்டு என் அறைக்குப்போகத்திரும்பினேன்.

'மூர்த்தி!'

என் வழியை அடைத்துக் கொண்டு நிற்கிறாள் சாரதா எனக்கு ஒன்றும் புரியவில்லை.

மனம் ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என மட்டும் எச்சரிக்கை செய்தது.

இதில் இருங்கள் உங்களுடன் ஒன்று கதைக்கவேணும்!,

அவளின் குரலில் தோன்றியது கொஞ்சலா அல்லது கெஞ்சலா என்பது புரியவில்லை.

ஏதோ ஒரு மந்திர சக்திக்கு ஆளாக்கி இருக்கிறேன்.

'மூர்த்தி,...

கதிரையைப் பிடித்தபடி சாரதா!

அவளின் மூச்சுக் காற்று என் முகத்தில் படிவதை உணர முடிகிறது.

மெதுவாக நிமிர்ந்து சாரதாவின் முகத்தை நோக்கினேன்.

முகமெல்லாம் சிவந்து கண்கள் அலரி மலரெனத் தோன்ற ஏக்கப் பார்வை அங்கு சிதறியது.

மூர்த்தி, எல்லா இடத்திலும் பிழை நடக்கத் தான் செய்கிறது—

வார்த்தை தெளிவாக அவள் வாயிலிருந்து வெளிவருகிறது; இவள் என்ன சொல்கிறுள்?

பிழை நடக்கத்தான் செய்கிறது என்றுல்...?

வெளியே மழை தூற்றலில் இருந்து பலமாகப் பெய்யும் அறிகுறி.

என்மனதில் போராட்டம்.

உடலும், உள்ளமும் ஏதோ ஒரு வித முறுக்கேற கண்கள் எனையோ கக்க சற்று அசைகின்றேன்.

சாரதாவின் முகத்தில் தோன்றிய புன்னகைக்கு பொருள் சந்தோஷம் என்று கட்டியம் கூறியது.

'மூர்த்தி இரண்டு நாள் நிற்கவேணும். வீட்டைக் கவன மாகப் பார்த்துக் கொள் தம்பி!,

என்னிடம் சொல்லி விட்டுப் போன குகநாதரின் முகம் தோன்றுகிறது என்ற மனதில் சடாரென்று! குகநாதர் பாவம்!

ஏதோ ஒரு விழிப்பு என் மனதில் தோன்ற சாரதாவின் கைகளைத் தட்டிவிட்டு எழும்பி விட்டேன். சாரதாவின் முகம் கூம்பி விட்டது!

'என்ன அம்மா இது! போய்ப் படுங்கள்!'

'ஏதோ ஒரு வேகத்தில் சொல்லி விட்டு என் அறைக்குள் சென்று கதவைப்பூட்டிக் கொண்டேன்.

நான் தப்பி விட்டேன். நான் தப்பினதைக் காட்டிலும் சாரதாவைத் தப்பவைத்து விட்டேன்.

நித்திரை இல்லாமல் இரவு நீண்டு விடிந்தது.

இரண்டு நாள் கழிய குகநாதர் வந்து விட்டார்.

அவரின் சொத்து பறிபோகவில்லை என்று எனக்குத் தெரியும்.

பரீட்சை முடிந்து ஊருக்கு புறப்பட ஆயத்தம் செய்து, இவர்களிடம் நான் விடைபெற்றுக் கொண்ட பொழுது சாரதா முகத்தைத் திருப்பிக் கொண்டதையும் குகநாதர் கண்கலங்கியதையும் என்னால் வெகு நாட்களுக்கு மறக்கமுடியவில்லை.

நான் சலனத்துக்கு இடம் கொடுத்திருந்தால் இவை மனதில் இடம் பெற்றிருக்குமோ என்பது புரியாமல் இருந்தது.

பூசை முடிந்ததும் எல்லோரும் கோவிலை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தனர்.

'என்ன தம்பி, பூசை பார்க்காமல் இங்கே வந்து இருக்கிறீர்?'

கையில் வீபூதியுடன் மகனை ஒருகையால் பிடித்தபடி சாரதா நின்றாள்.

என் சிந்தனை கலைந்தது.

'தலை வலித்தது! அது தான் இங்கே வந்து...'

மனமறிய ஒரு பொய் சொன்னதவிப்பு என்னுள்!

'வீபூதி'.........

சாரதா நீட்டிய வீபூதியைத் தொட்டுப் பூசிக்கொண்டேன்.

'உங்களுக்கென்ன இங்கே உத்தியோகம் பார்க்கிறீர்கள்,

ஒவ்வொரு நாளும் கோணேஸ்வரப் பெருமானிடம் வரலாம் தானே!,

—அவள் சிரிப்புடன் கூறினள்.

நான் மௌனமாகத் தலையாட்டினேன்.

'மாமாவுக்கு டாட்டா சொல்லு மாலதி!'

சிரித்தபடி சாரதா சொல்ல, தன் பவளவாயைத் திறந்து "மாமா டாட்டா' என்று அழகு காட்டினாள் சாரதாவின் மகள் சாரதாவின் சிரிப்பின் சாயல் அதில் பூரணமாகத் தெரிந்தது சாரதா தன் முகத்தில் ஒரு வித சலனமுமின்றிபடிகளில் இறங்கி மகளுடன் நடக்கிறாள்.

நான் பார்த்துக் கொண்டே நிற்கிறேன்.

(யாவும் கற்பனை)

வீரகேசரி வாரவெளியீடு
27 - 3 - 1977

# மௌனம்

இப்படி பச்சை பச்சையாய் வக்கணை பேசும் மனிதரை நான் இதுவரை சந்திக்கவில்லை. இந்த ஊருக்கு மாற்றலாகி வந்த அன்றே பரமேஸ்வரி அம்மன் மிகவும் சக்திவாய்ந்த தெய்வம் என்றும் மாலைப் பூசைக்கு பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வருவார்களென்றும் கேள்விப்பட்டேன்.

அன்று மாலையே பள்ளிக்கூடம் விட்டதும் அறைக்குச் சென்று குளித்துவிட்டு கோவிலுக்குப் புறப்பட்டேன்.

பூசை இன்னும் ஆரம்பமாகவில்லை.

கோவில் முன்றலில் நல்ல வெள்ளை மணல் பரப்பி இருந்தது. பக்தர்கள் நாலு நாலு பேராய் வட்டமாய் இருந்து கதைத்துக் கொண்டிருந்தனர்.

கதைத்துக் கொண்டிருந்தனர் என்பதைவிட வம்பளந்து கொண்டிருந்தார்கள் என்பதே பொருந்தும். அநேகமாக எல்லோரும் கச்சேரியில் பணிபுரியும் உத்தியோகத்தரே.

சரியாக ஆறு மணிக்குப் பூசை என்றார்கள்.

இருபது நிமிஷம் இருந்தபடியால் நான் வாசலில் மௌனமாய் நின்றேன்.

எனக்குப் பக்கத்தில் ஒரு கூட்டம் வட்டமாய் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தது.

நட்டநடு நாயகமாய் ஒருவர். அவரைச் சுற்றி ஆறுபேர். நடுவில் இருப்பவருக்கு, ஐம்பதுக்குமேல் இருக்கும் வயது. வழுக்கைத்தலை, இரட்டைநாடித் தேகம், சரியான கறுப்பு திறம். வாய்நிறைய வெற்றிலை!

மாடு அசை போடுவதுபோல் நாக்கால் பிரட்டிப் பிரட்டி வாயில் வைத்துச் சப்பி ரசித்தார்.

இடைக்கிடை அவர் பக்கத்து வீதியால் நடந்து போகிறவர்களை ஒருவித லயிப்புடன் உற்றுநோக்குவதையும் அவதானித்தேன்.

பூசை ஆரம்பமாகியது, எல்லோரும் வெகு சிரத்தை

யுடன் வணங்கினர் பூசை முடிந்து அம்பாளுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை நடந்தது. கோவில் உள்ளுக்குள் நிசப்தமாயிருந்தபடியால், குருக்களின் வேத ஒலி வெகு துல்லியமாக வெளியே கேட்டது. ஆனால் இந்தக் கூட்டம் மறுபடியும் வம்பளக்க ஆரம்பித்து இடையிடையே சிரிப்பொலிகளை எழுப்பி குருக்களின் மந்திர ஒலியை அழித்தது.

இருந்தாற் போல் என்னை நோக்கினார் அப்பெரியவர். "தம்பி, நீர் டிரான்ஸ் பரிலை வந்தனீர் போலைகிடக்கு! எந்தக் கந்தோர்?"

மற்றவர்கள் என்னையே நோக்கினார்கள்

எனக்கு வெகுகூச்சமாய் இருந்தது

'ஓமோம் டிரான்ஸ் பரில் தான் வந்தேன்! நான் இந்த பெருந்தெரு பாடசாலைக்கு மாற்றலாகி வந்துள்ளேன்!''

'ஓ! மாஸ்ரரோ !

—அவரின் குரலில் தொனித்தது ஆச்சரியமா அல்லது இகழ்ச்சியா என்பது எனக்குப்புரிய வில்லை.

இப்படி ஏற்பட்டது தான் கந்தையாவின் பரிச்சயம்!

ஆள் நல்ல நல்ல ரசிகன். எதிலென்று குறிப்பிடத் தக்கதாகச் சொல்ல முடியாது'

வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் ரசித்து அனுபவித்து வாழவேண்டுமென்ற கொள்கையே அவருடையது.

'தம்பி நீயும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்க வைக்க வேணும்!'

கந்தையா அடிக்கடி கூறும் வார்த்தைகள் இவை. ஆனால் அவர் மற்றவர்களை சிரிக்கவைப்பதற்கு கூறும் சிலேடைகளும் விஞ்ஞேக் குறிப்புகளும் சற்று மிகையாகவும் ஆபாசம் நிறைந்ததாவும் அமைந்திருக்கும். மற்றவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுக் கதைக்கும் விஷயங்கள் முழுப் பச்சையான ஆபாசமாய் இருக்கும்.

ஆனால், அந்த ஆபாசமான நகைச்சுவையைக் கேட்டு ரசிக்கவென்றே கந்தையாவுக்கு அப்படி ஒரு ரசிகர் கூட்டம்! எல்லாம் பரமேஸ்வரி அம்மன்கோவில் வாசவில் நிற்கும் பக்தர்கள் கூட்டம் தான்!

பூசை நடந்து கொண்டிருக்கும்.

கூப்பிய கைகள் ஒரு புறம், சுழலும் பார்வைகள் ஒருபுறம், வாய்நிறைய வெற்றிலையை மென்று அசை போடும் லாவகம் ஒருபுறம்!

'என்ன மருதநாயகம்! அதிலே போறது எங்கடை லத்திப் பிள்ளைரை டெண்சாதி தானே! பாரப்பா!

மருதநாயகம் என்பவர் கச்சேரியில் கந்தையாவுடன் கூட வேலை செய்பவர்.

அவரும் கூப்பிய கரங்கள் அப்படியே இருக்க கண்களை சுழல விடுவார்.

'அவள் தான்......!

'பிள்ளைத் தாச்சிபோலே கிடக்கு! எத்தனை மாசமோ!'

'ஆருக்குத் தெரியும்...! பார்த்தால் ஆறேழுமாதம் போலே கிடக்கு!'

'இவன் லத்தீப் சும்மா இருக்கமாட்டான் போலே கிடக்கு!'

கந்தையாவின் கூற்றைக் கேட்டு பக்கத்தில் நின்றவர்கள் சிரித்தார்கள்,

அவர்களின் பக்திலைக்குலைத்த பாவத்தை கந்தையா கட்டிக் கொள்ளுவார்.

தனக்குத் தெரிந்தவர்கள் யாரும் தன் கதையில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்றால் அவர் விடமாட்டார்.

'என்ன மாஸ்டர் துலையிலே நிற்கிறீர்! இஞ்சை வாரும்!,

மனுசன் லேசில் ஆளை விடமாட்டார். தன் அருகில் இழுத்து ஏதாவது குத்தல்கதை சொல்லி தானும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்கப்பண்ணி விட்டுத்தான் விடுவார்.

அவரின் விமர்சனத்தில் இன்று யார் தலை உருளும் என்பதில் எல்லோரும் அக்கறை காட்டுவார்கள்! அதில் பாரபட்சம் கிடையாது அரசாங்க அதிபர் தொடக்கம் கடைநிலை ஊழியர் வரை அவரின் விமர்சனத்திற்கு ஆளாவார்கள்.

'இண்டைக்கு ஒரு விசேஷம் தெரியுமோ?'

-கேள்விக்கணையைத் தொடுத்துவிட்டு மேலே வானத்தை நோக்குவார்.

வாயில் வைத்துக் குதப்பும் வெற்றிலையை நாவால் சுழற்றி இரு கதுப்புகளிலும் புரட்டி எடுத்து மெல்லுவார்.

பின்னர் சுற்றுமுற்றும் பார்ப்பார்.

இவர் சொல்லப் போகும் விசேஷத்தை அறியும் ஆவலுடன் எல்லோரும் இவரையே எதிர்நோக்குவார்கள்.

'என்ன ஐயா விசேஷம்?'

மருதநாயகம் ஆவலுடன் கேட்டார்.

'இவன் முருகேசுவின்ரை பெண்சாதியல்லோ கந்தோருக்கு வந்து பெரிய சண்டித்தனம் பண்ணிப் போட்டான்!'

'என்ன சங்கதியாம்...?'

'அவள் முருகேசுவோடை பேச்சுவார்த்தைப் பட்டவுடனே எனக்கு ஒரு அம்மிச்சம்! நான் ஒரு மாதிரி விஷயத்தை அவ ளின்ரை வாயாலை எடுத்துப்போட்டன்!'

'ஏன் முருகேசு காசுகீசு கொடுக்கிறான் இல்லையோ?' மருதநாயகம் கேட்டார்.

'காசு கொடாட்டி பரவாயில்லையே! இது கொஞ்சம் பார தூரமான விஷயமப்பா!'

கதை கேட்கும் ஆவலைத் தூண்டி, 'சஸ்பென்ஸ்' ஒன்றை நிலவவிடுவார். சற்று அமைதிக்குப் பிறகு தொடர்வார்.

'இவன் முருகேசு இரண்டு கிழமையாய் வீட்டுக்குப் போக வில்லையாம்! நிலாவெளிக்குப்போய் மினக்கெட்டிருக்கிறார் தம்பி...'

'ஏன், அவன் வெள்ளாமை ஏதும் செய்யுறானோ?' - இது மதுரநாயகம்.

'நல்ல வெள்ளாமையைக் கண்டிட்டார் இவர்! அவன் அங்கே ஒருத்தியோடு தொடர்பாமடாப்பா! அது முருகேசுவிலை பிழையில்லை. இவள் சரியாக இருந்தால் அவன் இப்படிப் போவானே? சொல்லுங்கோ பார்ப்பம்...!' - கந்தையாவின் வாயில் பியோன் முருகேசுவின் தலை உருண்டது.

என்க்கு இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்க ஆத் திரம்தான் வந்தது.

'ஏனையா உங்களுக்கு இந்தக் கதை! அவன் என்ன செய் தாலும் உங்களுக்கென்ன? கோவிலடியில் கதைக்கிற கதையே?' - நான் சாதாரணமாகத்தான் கூறினேன். அவருக்கு வந்துவிட் டதே கோபம்.

'ஓகோ எண்டாணும்! மாஸ்டர், கோவிலுக்கு வந்து போகிறவர்களெல்லாம் பெரிய ஆசாரசீலர்களோ?' - கந்தையா கூறுவதைக் கேட்டுக் கூட்டம் சிரித்தது.

நான் மௌனமானேன்.

இரண்டு நாட்களாக கந்தையா கோவிலுக்கு வரவில்லை. இரண்டு நாட்களும் கோவிலடி வெகு அமைதியாய் இருந்தது.

'கந்தையா அண்ணை வராதது பிறம்பாய்த் தெரியுது! கோவிலடியே கலகலப்பில்லாமல் கிடக்குது!' - மருதநாயகம் கூறினார்.

அவர் ஒருவர்தான் கவலைப்பட்டார்போலத் தெரிந்தது.

'ஏன் அவருக்கு ஏதும் சுகமில்லையோ?' -நான் கேட்டேன்.

'அவருக்கென்ன! மனுசன் குண்டு மாதிரி இருக்கிறார். செபஸ்தியின்ரை பெண்சாதி கிணற்றடியிலை விழுந்து கை முறிஞ்சு போச்சாம்! இவர்தான் ஒறுவலைக்குக் கூட்டிக்கொண்டு போய் இருக்கிறார்!'

'ஆள் ஒரு சமூகசேவகர்தான்;'

'சமூக சேவகரோ...? மாஸ்டருக்கு இன்னும் சங்கதி தெரியாதுபோலை...!'

மருதநாயகம் ஏதோ வெடிவைத்துக் கதைத்த மாதிரி இருந்தது.

'என்ன மருதநாயகம்! என்ன விஷயம்!'

நீங்கள் இஞ்சை வந்து வருஷம் இரண்டாகப் போகிறது! இன்னும் தெரியவில்லைப்போலை கந்தையா செபஸ்தியின்ரை பெண்சாதியோடை ஒரு மாதிரித்தானே! அது இப்ப அஞ்சாறு வருஷமாய்... எல்லோருக்கும் தெரிஞ்ச விஷயம்தானே!' -சர்வ சாதரணமாகக் கூறினர் மருதநாயகம்.

என் காதுகளை நம்பமுடியவில்லை. தனியே அறை எடுத்து தங்கியிருந்து கடையில் சாப்பிடாமல் மூன்று நேரமும் செபஸ்தின் வீட்டில்தான் சாப்பிடுவது எனக்குத் தெரியும்.

ஆனல்...

மனுசன் ஊர், உலகத்தை எல்லாம் கேலி செய்தாரே! ஊருக்கெல்லாம் சாத்திரம் சொல்லும் பல்லி தான் கூழுக்குள் விழுந்த கதையாய்...

அவரைப்பற்றி தாழ்மையான நினைவே என்னுள் பரவியது. எல்லாம் வீண் வதந்தியாய் இருக்குமென நான் எண்ணிக் கொண்டேன்.

இருந்தாற்போல் ஒருமுறை எனது மருமகளின் கணவன் பாஸ்கரன் ஊர் சுற்றிப் பார்ப்பதற்காக திருகோணமலைக்கு வந்தார்.

அவரையும் அழைத்துக் கொண்டு பரமேஸ்வரி அம்மன் கோவிலுக்குச் சென்றேன. வழமைபோல் கந்தையரவும், அவரின் ரசிகர் கூட்டமும் வம்பளந்து கொண்டிருந்தனர்.

நான் மௌனமாய் நின்றேன். பக்கத்தில் பாஸ்கரன். கந்தையா கவனித்துவிட்டார்.

'டேய் பாஸ்கரன்! இஞ்சை வா... இஞ்சை வா... எங்காலை இந்தப் பக்கம்?'

எனக்கு வியப்பு!

''என்ன கந்தையா அண்ணை இவரைத் தெரியுமோ உங்களுக்கு?' -நான் கேட்டேன்.

'நல்ல கதைதான், நீளமில்லை எண்டானாய்! ஓய்! இவன் எங்கடை பெடியன்தானே! கரவெட்டிதானே!'

'இவர்தான் எனது மருமகளின் புருஷன், கிட்டடியில்தான் கலியாணம் நடந்தது!'

'அடிசக்கை! அதுதானே பார்த்தன்! கலியாணம், என்று கேள்விப்பட்டனான். எங்கை இடமென்று தெரியாது!'

'சரி சரி! அப்ப மாஸ்டரும் எங்கடை ஆளாக்கிவிட்டீர்கள்!' -நான் மெல்லிய சிரிப்பொன்றை பரவவிட்டேன்.

'மெய்யே தம்பி பாஸ்கரன், எங்கடை மூலைக்கடை தம்பத்துறை மூத்த பெட்டை ஆரோடையோ ஓடிப்போயிட்டாளாம்! ஆர் மோனை பெடியன்?'-மிகவும் ஆவலோடு கேட்டார்.

எனக்கு அவருடைய கேள்வி மிகவும் அநாகரிகமாகப்பட்டது. ஊரில் வேறு நல்ல விஷயங்களே கிடையாதா? போயும் போயும் யாரோ ஒருவரின் மகள் யாரோ ஒருவருடன் ஓடிப்போன விஷயத்தை மிகவும் கரிசனத்தோடு விசாரிக்கிறாரே!

ஆனல் பாஸ்கரன், 'நானும் கேள்விப்பட்டேன். ஆனால், விபரம் ஒன்றும் தெரியாது' என்று கூறினர்.

அதற்கிடையில் பூசை தொடங்கவே அத்துடன் அக்கதை முடிந்து விட்டது.

அறைக்குத் திரும்பினோம்

'இவரை என்னமுறையில் உங்களுக்குப் பரிச்சயம்?'— ஆவலை அடக்க மாட்டாமல் பாஸ்கரன் கேட்டார்.

'எனக்கு முன்பின் பழக்கமில்லை. திருகோணமலைக்கு வந்த பின்னர், அதுவும் தினமும் பரமேஸ்வரி அம்மன் கோவிலுக்கு போய் வருகிறபடியால் தான் இப்பழக்கம் ஏற்பட்டது' —நான் கூறினேன்.

'இவர் எங்களுடைய ஊர் தான். பாவம். மனுசனுக்கு வீட்டில் மிகவும் கரைச்சல்! —பாஸ்கரன் கூறியது எனக்கு ஆவலை உண்டாக்கியது.

'கந்தையாவுக்குக் கரைச்சலா? ஆளைப்பார்த்தால் யாரும் அப்படிச் சொல்லமாட்டார்களே!'

'அவருடைய குடும்ப வாழ்க்கை மிகவும் சிக்கலானது. அவருடைய மனைவியோடு மனஸ்தாபம். மனைவி பக்கத்துவீட்டில் உள்ள ஒருவருடன் தொடர்பு என்று இவர் சந்தேகித்து, ஊர் அறிய சண்டைபிடித்து பெரியரகளை செய்தார். மனுசி பாவம்,! இவரோடு இருக்கமுடியாமல் தாய்வீட்டுக்குப்போய் விட்டாள் இவருடைய நாலு பிள்ளைகளும் இவருடைய வீட்டில்! ஆனால் ஊரில் யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள் இவருடைய மனைவி மிகவும் ஓர் அப்பாவி என்று.

நான் எனக்குள் யோசித்தேன். கந்தையாவின் சொந்த வாழ்க்கையில் உள்ள சில குறைபாடுகள் அவர் நிலையைப் பெரிதும் பாதித்திருக்கின்றன. அதனால் அவர் குணநலன்களும் பாதிக்கப் பட்டுள்ளன போலும்.

சொந்த மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொண்டு சண்டைபிடிக்கும் மனுஷன் பிற பெண்களையும், ஆண்களையும் பற்றி அவதூறு செய்யும் பழக்கத்தைக் கொண்டுள்ளாரே!

என்னுள் கசப்புநிறைந்த ஓர் வியப்பு!

சிலர் தமது சொந்த வாழ்க்கையில் காணப்படும் குறைகளை மறைக்கவோ, மறக்கவோ தெரியாது. மற்றவர்களிலும் அப்படியான குறைகளைக் கற்பிக்கவும், காணவும் பெரிதும் ஆர்வம் கொண்டிருப்பார்கள். இது ஒரு குறைபட்ட மனத்தின் தாக்கம்.

அதில் ஆத்மதிருப்தியைக் காண்பார்கள், கந்தையாவும் அந்த வர்க்கத்தில் ஒருவராகத்தான் இருக்கவேண்டும். இந்த மன நிலையின் தாக்கமே அவருடைய அன்றாட வாழ்க்கைப் பழக்கங்களாகிவிட்டன.

இரண்டு வருடங்களாகி விட்டன அவருடன் பரிச்சமாகி, இருந்தாற்போல் கந்தையாவுக்கு திடீர் சுகவீனம்உற்று] அரசாங்க ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

எல்லோரும் சென்றுபார்த்தனர்,

நானும் ஒரு நாள் மாலை ஆஸ்பத்திரிக்குச் சென்றேன் பக்கத்தில் நாலு பிள்ளையளும் ஒரு நடுத்தர வயதுள்ள பெண்ணும் நின்றார்கள்,

முகமெல்லாம் வெளுத்து பார்வை மேலே நிலைகுத்த படுத்திருந்தார்,

மருதநாயகமும் உடன் நின்றார் 'திடீர் என்று என்ன சுகவீனம் ஏற்பட்டது? மருதநாயகத்திடம் வினவினேன்'
விஷயம் உங்களுக்குத் தெரியாதே மாஸ்டர் ஆளுக்கு பாரிசவாதம் வந்து......

ஒரு கையையும்' காலையும் இழுத்து விட்டது, இரண்டும் இயங்காது, அதோடு வாயையும் இழுத்து விட்டது! பேசப் பறைய முடியாது!

சர்வ சாதாரணமாய் அவர் கூறினார்,

நான் திடுக்கிட்டு விட்டேன்,

கோவில் வாசலில் இருந்து வாய்நிறைய வெற்றிலையை மென்றுகொண்டே, ஊர் உலகத்து ஆண்' பெண் மிச்சமின்றி எல்லோரையும்பற்றி வம்பளந்து கொண்டிருந்த வாய் இப்பொழுது மௌனமாகிவிட்டதே!

(யாவும் கற்பனை)

வீரகேசரி வாரவெளியீடு

1977 - 3 - 27.

# கிணறு

மினிபஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. வழக்கமான உற்சாகமோ கலகலப்போ காணப்படவில்லை வழமையாகக்கேட்கும் மட்டரகமான சினிமாக் கீதங்களும் ஒலிக்கவில்லை.

''சந்தி வருகிறது சிலோவா ஓடப்பா!'

நடத்துநரின் பயம் கலந்த குரல். மினி பஸ்ஸின் வேகம் குறைகிறது.

சம்பு குன்றம் சந்தியில் சீருடை அணிந்து நிற்பவர்கள் கண்ணுக்குத் தென்படுகிறார்கள்.

பிரயாணிகள் சகலரது கண்களிலும் பீதி கோலம் போட்டது.

வண்டி நின்றதும் பிரயாணிகள் ஒவ்வொருவராக இறங்கி நடக்கின்றனர். பூஞ்சோலையில் இருந்துவந்த மினிவானும் நிற்கிறது. அதிலிருந்தும் பிரயாணிகள் இறங்கினர். மேலே மண்டையைப் பிளக்கும் வெய்யில். கடல் ஏரியின் மேற்பரப்பு வெய்யிலின் ஒளிபட்டு, பார்க்க முடியாமல் தகித்தது.

''கியூ விலே வா...!''

அடித் தொண்டையில் குரல் ஒன்று கர்ணகடூரமாக ஒலித்தது.

தலைவிதியை நொந்து கொண்டே எல்லோரும் தகிக்கும் வெய்யிலில் கியூவரிசையில் நின்று நகர்ந்தனர். பரிசோதனை மிகக்கடுமையாக இருந்தது.

ரமணன் கிளிவெட்டியில் இருந்து வருகிறான். வண்டியில் ஏறும்போதே கூட்டம் விழி பிதுங்கியது. இந்த நேரமட்டும் நின்றேவந்தபடியால் கால்கள் வலித்தன. நெற்றியால் அருவியெனப் பாயும் வியர்வையைத் துடைத்தபடியே நகர்ந்தான்

''சேர் நீங்களும் இதிலே அகப்பட்டு விட்டியள் போலே கிடக்கு!''

குரல்கேட்டு ரமணன் திரும்பிப் பார்த்தான்.

அவனுக்குப் பின்னால் பூஞ்சோலையைச் சேர்ந்த பூபதி நின்றான்.

ரமணன் பார்த்ததும் பூபதி சிரித்தான்.

''மோர் னிங் சேர்! கிளிவெட்டியில் இருந்து வருகிறீர்கள் போலே...''

ரமணன் பதில் கூருமல் தலையைமட்டும் ஆட்டினுன்.

''நான் கச்சேரிக்கு ஒரு அலுவலாகப் போகவேணும், இப் போதைக்கு இது முடியாது போலே கிடக்கு நேரமும் சென்று போச்சு.''

பூபதி சொல்லிக்கொண்டே தன் கைக்கடிகாரத்தை நோக் கினுன். ரமணன் ஒன்றும் கூறவில்லை.

''எப்படி சேர் கிளிவெட்டி? புது இடம்...?'' — மறுபடியும் பூபதி.

''பரவாயில்லை...''-ரமணன் ஒரு வார்த்தையில் பதிலிறுத் தான்.

''நீங்கள் அவசரப்பட்டு மாற்றம் எடுத்துப் போட்டியள் கொஞ்சநாளைக்குப் பூஞ்சோலையில் இருந்திருக்கலாம்!''-பூபதி சிரித்தபடியே கூறினுன்.

ரமணன் ஒன்றும் பேசாமல் மெதுவாக நகர்ந்தான்.

ரமணன் பூஞ்சோலைக்கு உதவி அரசாங்க அதிபராய் இடம் மாறி வந்தபொழுது. முதலில் இடத்தைப்பற்றி அவனின் நண்பர்கள் பலர் பலவிதமாய்க் கூறினுர்கள். ஆனல் அவன் அவைகளைப்பற்றிப் பொருட்படுத்தவேயில்லை. எங்கே என்ருலும் வேலைபார்க்கத்தானே வேண்டும் என்ற மனப் பான்மை அவனுடையது.

அது பல குட்டிக் கிராமங்களை அடக்கிய பகுதி. தினமும் ஏதாவது ஒரு பிரச்சனையோடு மக்கள் வருவார்கள். கிராம சேவை யாளர்களின் உதவியோடு முடியுமானவரை அவற்றை அவன் தீர்த்துவைப்பான். தன்னுல் முடியாதவற்றைச் சட்ட நடவடிக்கை எடுக்கும்படி அனுப்பிவிடுவான்.

பூஞ்சோலையில் பூபதி தான் ஒரு முக்கியமான ஆள் என மற்றவர்கள் சொல்லவேண்டும் என்ற மாதிரி நடந்துகொள் வதை ரமணன் கேள்விப்பட்டிருந்தான்.

பூபதி இடைக்கிடை அலுவலகத்திற்கு வருவான்.

''சேர் இவருக்கு உணவு முத்திரை கொடுக்க வேணும்.''

'சேர் இவருக்குத் தர்மக் காசு கொடுக்க ஏற்பாடு செய்ய வேணும்...,, இப்படிக் கோரிக்கைகளோடு வருவான்,

''அவற்றை நான் கவனிக்கிறேன். நீங்கள் போகலாம்' ரமணன் ஒரு நாள் இப்படிப் பதில் கூறினன்.

''எங்கடை எம் பி. இதிலே அக்கறையாய் இருக்கிறர்! நீங்கள் இதைக் கட்டாயம் செய்யவேணும்!''- பூபதியின் குரல் கொஞ்சம் ஓங்கியது.

அந்தப் பகுதி எம். பி. யினது செல்லப்பிள்ளை இந்தப் பூபதி என்றும் ரமணன் கேள்விப்பட்டிருக்கிறன்.

எம்பிக்கு விருப்பமென்றால் அவர் என்னிடம் சொல்லட்டும்' நீங்கள் போகலாம்!,'-நிர்த்தாட்சணியமாய் ரமணனின் குரல் அமைந்திருந்தது.

இப்படிப் பல சந்தர்ப்பங்களில், பல சம்பவங்கள்!

ஏதோ ஒரு கிராமத்து விழாவில் கலந்துகொண்ட எம்பி ரமணனிடம், பூபதி தனது நம்பிக்கைக்குரிய ஆள் என்றும் அவன் ஏதாவது கோரிக்கை கொண்டுவந்தால் அது அநேகமாகத் தனதாகவே இருக்குமென்றும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும் சூசகமாக வற்புறுத்தினர்.

''உங்களுக்கு அக்கறையுள்ள விஷயமானுல் ஒரு கடிதமூலம் தெரிவித்திருக்கலாமே...''-ரமணன் கூறினன்.

எம். பி. க்கு ரமணனின் பதில் அவ்வளவாகப் பிடிக்கவில்லை என அவர் முகம் காட்டியது.

ஒரு நாள் அரசகேசரி என்பவன் ஒரு முறைப்பாட்டுடன் வந்தான். அவன் பூஞ்சோலையில் ஒரு சலவைத் தொழிற்சாலை நடாத்தி வருகிறன் அத்துடன் ஒரு சிறு வான்வைத்திருந்து குறிஞ்சிக்குடா, புள்ளிக்குடா ஆகிய இடங்களிலிருந்து மீன், இறால் மொத்தமாக வாங்கிவந்து சில்லறை வியாபாரிக்கு விற்பான்

கொஞ்சம் வசதியான வாழ்க்கை! எல்லோருடனும் மிகக் கௌரவமாகப் பழகுவான். துறையடியில் வள்ளத்தில் இறங்கும் பிரயாணிகள் குறிஞ்சிக்குடாவுக்குச் செல்லப் பஸ் இல்லாமல் தவிக்கையில் தனது வானில் கொன்ளுமளவிற்கு ஏற்றிக்கொண்டு போய் இறக்கிவிடுவான் பணம் பெறமாட்டான். ''எப்படியோ

இஞ்சை வாறவான் தான்! காசு வேண்டாம் போங்கோ...!, என்று சிரித்தபடி கூறுவான்.

ஒருமுறை கிராம வீதி ஒன்று அமைக்கச் சிரமதானம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து-உழவு யந்திர உரிமையாளர்களிடம் உதவி கோரியபோது அரசகேசரிதான் தனது வண்டியை முதலில் அனுப்பிவைத்தான். சேர்ந்த பணத்தில். டீசல் வாங்குவதற்கு என்று ரமணன் சிறிது பணம்கொடுத்தான்.

''ஐயா! நீங்கள் செய்வது பொதுவேலை. இந்தக் கிராம வளர்ச்சிக்கு எமது பங்காக இருக்கட்டும். எனக்குப் பணம் வேண்டாம்!'' -அவன் மறுத்துவிட்டான்.

ரமணன் இவையெல்லாவற்றையும் கவனித்திருக்கிறன்.

விஷயம் இதுதான்!

அரசகேசரியின் வீடு அமைந்திருக்கும் ஆத்திமோட்டைப் பகுதியில் நல்ல தண்ணீர்க்கிணறு ஒன்றே ஒன்றுதான். சுற்று வட்டாரம் மூன்று மைல்களுக்குள் அமைந்திருக்கும் குறிச்சிகளில் வதியும் மக்கள் இக்கிணற்றுக்குத்தான் தண்ணீர் அள்ள வருவார்கள்.

''எங்களைக் கிணத்திலை தண்ணி அள்ள விடமாட்டினமாம். தாங்கள் நிற்கும்போது வந்தால் அள்ளி ஊத்துவினமாம்! நீங்க வந்து பார்த்து இதுக்கு ஒரு முடிவு காணவேனும் ஐயா...!'' -அழாக் குறையாக அரசசேகரி முறையிட்டான். அவனை வெளியே அமரும்படி கூறிவிட்டு ஆத்திமோட்டைப் பகுதிக் கிராம சேவையாளரை ரமணன் அழைத்தான். அன்று புதன் கிழமை ஆனபடியால் சகலரும் வந்திருந்தனர். கிராம சேவையாளர் பழைய ஆள்.

''என்ன ஜீ எஸ்... இதை உம்மாலை தீர்க்கமுடியாதா?, ரமணன் கேட்டான்.

''ஐயா, இது மிகவும் சிக்கலான விஷயம்! தண்ணி அள்ளி ஊத்துறதுதான் வழமை...''

''நீர் போய்ப் பார்க்கவில்லையா?''

''நான் ஒவ்வொரு நாளும் பார்க்கிற விஷயம்தானே! ஐயா, நான் இன்னும் நாலு மாதத்திலை பென்சனிலை போகப் போறன்... ஊருக்குள் ஏன் பொல்லாப்பு?''- அவரின் நிலை பரிதாபமாய்

இருந்தது. பிரச்சனைக்கு முகம் கொடுக்க அவர் விரும்பவில்லை.

ரமணனின் புருவங்கள் உயர்ந்தன.

"இப்படிச் சொல்ல உமக்கு வெட்கமில்லையா? கிராம சேவகர் வேலை என்றால் கூப்பன் கொடுக்க மட்டும்தான் என்று மற்றவர்கள் நினைத்தகாலம் இல்லை இப்ப! ஊர் மக்களின் பிரச்சனைகளை நாடி பிடித்துப் பார்க்கத் தெரியாதவர்கள் இந்த வேலைக்கு வரக்கூடாது..."-ரமணன் கோபமாய்க் கூறுவதை அந்த வயதான கிராம சேவையாளர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

பின்னர் ரமணன் அரசகேசரியை அழைத்துக்கொண்டு ஆத்தியோட்டைக்குச் சென்றான். கிராமசேவையாளரும் உடன் சென்றார்: ஏ ஜீ. ஏ. கிணற்றுப் பிரச்சினை விசாரிக்க வருகிறார் என்று கேள்விப்பட்டு இருபது முப்பது சனங்கள் கூடிவிட்டனர் பரந்த வயல் வெளிக்கு அருகாமையில் வீதிக்கு ஒதுக்குப்புறமாக அந்தக் கிணறு அமைந்திருந்தது. சுற்றிவர எல்லாமே குடிசைதான்

ஒரு வயதானவர் ஓடி வந்தார் நெற்றி நிறைய விபூதிப் பூச்சும், காதில் செருகிய செவ்வரத்தம் பூவுமாய்க்காட்சி அளித்த அவர் ".ஐயா கிணறுபாக்க வந்ததுபோலை" என்று வாயெல்லாம் பல்லாகக் கேட்டார்.

"நான் கிணறு பார்க்க வரவில்லை! இஞ்சை என்ன பிரச்சினை...? யார் தண்ணீர் அள்ளக்கூடாது என்று சொன்னது...?" - ரமணன் கிழவரை நோக்கிக் கேட்டான்.

"ஐயா விஷயம் உங்களுக்குத் தெரிஞ்சுதானே வந்திருகிறியள்! இஞ்சை கண்ட கிண்ட ஆட்கள் தண்ணி அள்ள முடியாது. நான் தான் இவையை அள்ளக் கூடாது எண்டு சொன்னனான். இவ்வளவு காலமும் இவையளுக்கு நாங்கள் தான் அள்ளி ஊத்துறது வழக்கம். நேற்றைக்கு வழக்கத்துக்கு மாறாக இவை இதிலை துணிஞ்சு கை வைச்சு அள்ளிப் போட்டினம்..."

கிழவரின் பார்வை அரசசேகரியின் பக்கம் திரும்பியது

"ஏன் அவை அள்ளினால் என்ன அவையும் மனுஷர் தானே",

"ஐயா நீங்கள் இப்ப வந்தனீங்கள், உங்களுக்கு இது விளங்காது இது கோயில் கிணறு. இவையை அள்ளவிடமாட்டம்!

கிழவரின்குரல் சற்று ஓங்கியது.

''கோயில் கிணறோ? எங்கே இருக்கு கோயில்?''

ரமணன் ஆச்சரியத்துடன் சுற்றும் முற்றும் நோக்கினன்

''அது தான் கோயில்''

கிழவர் கை காட்டிய பக்கம் பார்த்தான் ரமணன். நூறு யார் தூரத்தில் ஒரு சிறிய ஓலைக் கொட்டில் பூஞ்சோலைப்பகுதியில் நூற்றுக்கு நூறு கோயில் என்றால் இப்படித்தான் அமைந்திருந்தன.

"பரவாயில்லை கோயில் கிணறு என்றாலும் இது ஒன்று தான் இங்கு நல்லதண்ணீர்க் கிணறு. இது ஒரு பொது இடம் இந்தக் காலத்தில் பழைய கொள்கைகளைத் தலையில் போட்டுக்கொண்டு நின்று வாதாட முடியாது சட்டத்தில் இப்படித் தண்ணீர் அள்ளாமல் தடுக்க இடம் கிடையாது. நீங்கள் இவர்களை இனித் தடுக்கவேண்டாம். அவர்களும் உங்கள் மாதிரி அள்ளிப் பாவிக்கட்டும்.''

''ஐயா நீங்கள் வீணைப் பழியைத் தேட வேண்டாம், அவை வரட்டும் நாங்கள் அள்ளி ஊத்துவம், ஆனால் அவையை அள்ள விடமாட்டம்'' கிழவரின் குரலில் அகங்காரம் கொடி கட்டியது இதற்குள் அரசகேசரியின் ஆட்கள் குடம் கயிறு சகிதமாக வந்து நின்றனர்.

ரமணன் கிழவனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான், ஆனால் அவரோ மசிவதாக இல்லை.

''அரசகேசரி, இஞ்சைவா!'' ரமணன் அழைத்தான்.

''நான் நிற்கிறன் நீ தண்ணிஅள்ளு! நடக்கிறதைப் பார்ப்பம்!'' ரமணன் உத்தரவிட்டான்.

அரசகேசரி தனது ஆட்கள் ஒருவரிடமிருந்து கயிற்றை வாங்கிக் குடத்தைக் கட்டித் தண்ணீர் அள்ளினன்.

''நான் குடிச்சுப் பார்ப்பம். ஊத்து ...'' ரமணன் கேட்க, வெகு உற்சாகத்துடன் அரசகேசரி குடத்தைச் சரித்து நீர் வார்க்க, ரமணன் கைகளை ஏத்திக் குடித்தான். உண்மையில் தண்ணீர் அந்த வெய்யில் நேரத்தில் தேவாமிர்தமாய் இருந்தது.

''இன்னும் இரண்டு தரம் அள்ளு!''

ரமணன் கூற அரசகேசரி அள்ளினன். அதைத்தொடர்ந்து தண்ணீர் அள்ள வந்தவர்கள் அள்ளினர்கள்.

கிழவரும் அவரை சேர்ந்தவர்களும் பேசாமல் பார்த்துக் கொண்டு நின்றனர்.

''சட்டப்படி தண்ணீர் அள்ள ஒருவரையும் யாரும் மறுக்க முடியாது உனக்குத் தெரிய வேண்டும், இப்ப இங்கு பொலிஸ் நிலையம் இல்லை இன்றோடு இந்தப் பிரச்சினை முடிந்து விட்டது இனியாராவது தண்ணீர் அள்ளச் கூடாது என்று தடுத் தால் நானே வந்து பொலிசுக்குக் கொண்டுபோவன்''

ரமணன் அவர்களை எச்சரித்துவிட்டு வந்த ஜீப்பில் ஏறிக் கொண்டான் தொடர்ந்து இரு வாரங்களுக்குத் தினமும் அந்த நல்ல தண்ணீர்க் கிணறு இருக்கும் இடத்துக்குச்சென்று பார்வை யிட்டு அறிக்கை அனுப்பும்படி கிராம சேவையாளரைப் பணித் தான் தான் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி விரிவான அறிக்கை ஒன்றை எழுதி வைத்தான்.

அதன்பின் ஆத்திமோட்டை நல்ல தண்ணீர்க் கிணறு ஒரு விதமான பிரச்சினையும் எழவில்லை.

ஒருவாரம் சென்றதும் பூபதி ஒருநாள் அலுவலகத்துக்கு வந்தான்.

''சேர் நீங்கள் ஆத்திமோட்டைக் கிணற்றுப் பிரசைச்சனையில் யோசிக்காமல் ஒரு முடிவு எடுத்துப்போட்டியள். ஊருக்குள் கொழுவலை உண்டாக்கி போட்டியள் ..,'

'பூபதி உமக்குச் சம்பந்த மில்லாத வேலையில் தலையைப் போட வேண்டாம்! எனது கடமை எனக்குத் தெரியும் நீர் போக லாம் !'' ரமணன் கூறி விட்டு தன் அலுவலில் ஈடுபட்டான்

இச்சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரும் ரமணன் பூபதியுடன் மோத வேண்டிய கட்டம் ஒன்று ஏற்பட், டது. உள்ளூராட்சித் திணைக்களத்திலால் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுப் பூஞ்சோலைப்பகுதியில், கிணறு அமைப்பதற்கான உப ஒப்பந்தம் ஒன்று கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக பூபதி எடுத்திருந்தான். கிணறு கட்டுவதற்குத் தோதான இடம் இல்லாமல் இருந்தது. தனது காணியின் ஒரு பகுதியைக் கிணறு அமைப்பதற்குக் கிராமசபை நிர்வாகத்தினருக்கு இலவசமாகத் தந்து உதவுவதாகச் சொல்லியிருந்தான் பூபதி கிணறு வேலை முடிந்து ஒப்பந்தப்படி பணமும் கிராம அபிவிருத்திச் சங்கத் தின் மூலம் அவனுக்குக் கிடைத்து விட்டது. ஆனால் காணியை இலவசமமாக எழுதித்தருவதாகக் கூறியும் சம்மதம் எழுத்து

மூலம் கையளிக்கப்படவில்லை உள்ளுக்குள் யார் யாரையோ கைக்குள் போட்டு தில்லு முல்லு வேலைகளுடன் விஷயத்தை சாதுரியமாய் மூடித்துவிட்டான்.
விஷயம் அவ்வளவோடு முடிந்திருந்தால் பரவாயில்லை.
ஆனால்

ஊர்ப்பொதுக் கிணறு தானே என்று அரசாங்க ஆஸ்பத்திரியில் கூலி வேலை செய்யும் மாயாண்டி அக்கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற போதுதான் பிரச்சனை உருவாகியது. தண்ணீர் அள்ளவிட முடியாது எனபூபதி தடுத்து விட்டான்.
'வீசி கிணறு தானே ஐயா... நான் அள்ளினல் என்ன?, மாயாண்டி வாதாடினன்.

'என்னுடைய காணிக்குள் வரக்கூடாது.'

இப்படிக் கூறிப் பூபதி அவனைக் கலைத்து விட்டான்.

வேறு எங்கே என்பது மாயாண்டிக்கு மட்டுமல்ல வேறு எவருக்கும் புரியவில்லை மாயாண்டி நேரே சென்று ரமணனிடம் பெட்டிசம் ஒன்றை எழுதிக் கொடுத்து முறையிட்டான்

ரமணன் விசாரித்தான்.

விசாரணையில் பூபதியின் குட்டுக்கள் வெளிவந்தன.

பூரண விசாரணை ஒன்றை மேற் கொள்ளுமாறு ரமணன் மேலிடத்துக்கு அறிவித்துவிட்டான். பூபதிக்கு இதில் ரமணன் மீது தாங்க முடியாத கோபம், பகைமை எல்லாமே ஏற்பட்டன!''

''தம்பிக்குப் பாடம் படிப்பிக்கிறன், எம். பீ இந்தியா வாலை வரட்டும்!''

பூபதி பூஞ்சோலையில் பலரிடம் சொல்லிக் கொண்ட விஷயம் ரமணனுக்கு எட்டியது.

இரண்டுவாரங்கள் அமைதியாய்க் கழிந்தன.

ஒரு நாள் ரமணனைப் பூஞ்சோலையில் இருந்து கிளிவெட்டிக்கு மாற்றியிருப்பதாக அவசரக் கடிதமொன்று அமைச்சின் அலுவலகத்திலிருந்து அவனது மேலதிகாரி மூலம் வந்தது

இந்த அவசர உத்தரவின் பின்னணியில் எம். பி மறைமுகமாகச் செயற்பட்டார் என்று அறிவதில்ரமணனுக்குச் சிரமம்

ஏதும் இருக்கவில்லை எதிர்ப்பு ஒன்றும் தெரிவிக்காமல் அவன் கிளிவெட்டிக்குச் சென்று பொறுப்பை ஏற்றுக் கொண்டான். இரண்டு வருடங்களுக்குப் பின்னர் இப்போ பூபதியைக் காண் கின்றான்,

பரிசோதனை ஒரு மாதிரி முடிவடைந்தது.

"நீங்கள் அவசரபட்டு மாற்றம் எடுத்துப் போட்டியள் இன்னும் கொஞ்சக்காலம் எங்கடை ஊரிலே இருந்திருக்கலாம் சேர்...,,

மீண்டும் பூபதி பக்கத்தில் நடந்தபடியே கூறினான்.

ரமணன் ஒன்றுமே கூறாமல் பூபதியைப் பார்த்துச் சிரித்த படியே நகர்ந்தான்.

மினிபஸ் வண்டிகள் மீண்டும் தமது பிரயாணத்தை ஆரம் பிக்கின்றன.

(யாவும் கற்பனை)

ஈழநாடு வாரவெளியீடு

20-10-85

# இன்ஞெரு நாள் போதுமா!

நிறை கர்ப்பிணி போல் ஆடி ஆடி வந்த மினிபஸ் பெருமூச்சுடன் பூஞ்சோலைச்சந்தியில் பிரயாணிகளைப் பிரசவித்தது. வீட்டிலிருந்து ஐந்து மைல் தூரம் பயணம் செய்தே அலுவலகம் வர வேண்டும். அவரின் வீட்டருகில் வரும்போதே மினிபஸ் நிறைந்திருந்தது. ஏறியவுடன் பின்னர் இறங்க வசதியாய் இருக்குமென நினைத்து ஒரு பக்கமாய் நிற்க முற்பட்ட அவரின் முயற்சி பலிக்கவில்லை!

ஒவ்வொரு பஸ்தரிப்பிலும் பிரயாணிகள் முண்டியடித்துக் கொண்டு ஏறினர்.

''தயவு செய்து நிற்கிற ஆட்கள் பின்னுக்குப் போங்கோ! மனுசருக்கு ஒருக்காச் சொன்ஞல் விளங்கவேண்டும்!''

பஸ் கண்டக்டரின் கோபமான வார்த்தைகள் அவரை மிகக் கௌரவமாகப் பின் பக்கத்திற்கு அனுப்பி வைத்தது. பிரயாணிகளுக்கு நடுவே புளிமாதிரி நசுக்கப்பட்டு, சலவை செய்யப்பட்டு மடிப்புக் குலையாத வெள்ளைக் களிசானும் சேர்ட்டும் கசங்குவதற்கு மேலும் இடமில்லாமல் காட்சியளித்தது. கொழும்பில் வேலை செய்தபோதுதான் அலுங்காமல் குலுங்காமல் கந்தோருக்குச் சென்ற நாட்களை எண்ணிப் பார்த்தார். என்ன செய்கிறது?

''இதுவும் எனக்கு ஒரு தலைவிதி!''—தனக்குள் முணுமுணுத்துக்கொண்டு ஒரு மாதிரி தனது அலுவலகப் பையையும் கையில் கொண்டு வெளியே இறங்கிஞர்.

முருகேசு உதவி அரசாங்க அதிபர் அலுவலக உதவியாளர் அண்மையில்தான் பிரமோஷன் கிடைத்து இங்கு வந்திருக்கிஞர்.

''இனிடைக்குத் திங்கட்கிழமை! சனங்களும் எக்கச் சக்கமாக வருவினம்! ஏஜி ஏயும் இரண்டு நாள் லீவு!

தனக்குள் சொல்லிக் கொண்டே அலுவலகம் இருக்கும் ஒழுங்கையில் இறங்கி நடந்தார்.

ஒழுங்காய் ஒரு ரோட்டில வைச்சாங்களே கந்தோரை? கொண்டுபோய் எங்கேயோ ஒரு பழைய கட்டிடத்தில் வைச்சிருக்கினம்.

தனக்குள் நினைத்துக் கொண்டார்.

அலுவலகத்தைப் பற்றி நினைத்தாலே அவருக்குப் பற்றிக் கொண்டு வரும். அந்தப் பிரிவு நிர்வாகத்துக்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கென்று ஒரு நிரந்தர மான கட்டிடம் கிடையாது.

முன்பு அது ஒரு தனியாரின் பெரியதொரு வீட்டில் அமைந் திருந்தது. வீட்டுக்காரர் வெளிநாட்டில் உத்தியோகம் பார்க்கும் வரை ஒரு தொல்லையும் இருக்கவில்லை.

வெளிநாட்டிலிருந்து வந்தவுடன் தனக்கு வீடு தேவை என்று சொல்லி திரியாய்த் திரிஞ்சார். முன்பிருந்த உதவி அரசாங்க அதிபரும் புதிய இடத்துக்கு உடனே எங்கு போவார்?

கூடுமானவரை இழுத்தடித்துப் பார்த்தார். அவருக்கு இருந் தாற்போல் இடமாற்றம் வர வீட்டுக்காரருக்கு அடித்தது யோகம்

பதில் கடமையாற்ற வந்தவரைப் பிடித்து. ஒரு ஞாயிற்றுக் கிழமை அலுவலகத்தை இப்பொழுது அமைந்துள்ள இடத்துக்கு மாற்றம் பண்ண ஏற்பாடுகளைச் செய்து விட்டார்.

இப்பொழுதுள்ள இடமோ அஸ்பெஸ்டஸ் தகடு அடிக்கப் பட்ட பதிவான ஒரு நீண்ட மண்டபம். அந்தக் காலத்தில் எம் பி யாக இருந்த ஒருவரைப்பிடித்து ஓய்வு பெறும் நிலையில் இருந்த கடமையாற்றிய காரியாதிகாரி ஒருவர், கலாசார மண்டபம் என்று இதைகட்டுவிக்கப் பண்ணினாராம்?

முன்பு சிலகாலம் கந்தபுராண வகுப்புகள் நடந்தது என் றும் இடைக்கிடை சிலகலாச்சார நிகழ்ச்சிகளும் நடந்தன என்றும் முருகேசு இங்குவந்த பின்னர் கேள்விப்பட்டிருந்தார்

அவரும் முப்பது வருஷங்கள் கொழும்பில் வேலை பார்த்து விட்டு ஒய்வு பெறும் காலத்திலாவது சொந்த ஊரில் கடமை யாற்றலாம் என்ற ஆசையில் வந்தவர்.

ஏட, ஒரு பகுதிக்கு நிர்வாகத்தை கவனிக்கும் துறைக்கு ஒரு நல்ல கட்டிடம் கட்டுவிக்க, செல்வாக்காய் இருந்த எம். பி யின் செல்வாக்கைப் பயன்படுத்த ஒருவரும் முன்வரவில்லையே? என்று தனக்குள் ஆதங்கப்பட்டுக்கொள்ளுவார்,

அலுவலகத்தில் பகல் பத்து மணிக்கு மேல் இருக்க முடி யாது. உலகத்து வெய்யில் எல்லாவற்றையும் அஸ்பெஸ்டஸ் தக டுகள் முழுமையாக விலைக்கு வாங்கி உள்ளே ஊழியர்களுக்கு இல வசமாக அனுப்பும்!

தகித்து விடுவார்கள் எல்லோரும்.

முருகேசுவுக்கு இரத்த அழுத்த வியாதி வந்து பெரிய டாக்டர்களைக் கண்டு எக்ஸ்ரே இ சி.ஜீ ரத்த சோதனை என்று பலவித கட்டங்களைத் தாண்டி இப்பொழுது மாதத்துக்கு ஒரு தடவை 'கிளினிக்டே' என்று அலைந்து, அலுவலகப்பையில் மூன்று போத்தல்களில் மருந்துக் குளிசைகளைக் காவுகின்முர்.

இருக்காதா ஆத்திரம் அவருக்கு?

கொஞ்ச நாளைக்கு முன்பு, உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் கட்டுவதற்கு ஏற்றதொரு காணியைத் தேடிக்கொண்டிருந்தார். அரச காணிகள் இப்பகுதியில் குறைவு. பொதுச்சந்தைக்கு பக்கத்தில் சிதம்பரம் கோயிலுக்கு சொந்தமான காணி ஒன்று இருக்கின்றது என அறிந்து அப்பகுதி கிராம சேவகரோடு சென்று அக் காணியைப் பார்த்துவிட்டு வந்தார்.

அடுத்தநாள் காணியின் படமும் கீறி, அதன் எல்லைகள், விஸ்தீரணம் முதலிய விபரங்களை அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்தார். காணியைச் சுவீகரித்து ஒரு புதிய கட்டடத்தை நிர்மாணிக்கலாம் என்பதே திட்டம்.

அவர் கிராம சேவகரோடு காணியைப் பார்வையிடும் போது சிலர் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர்.

இரண்டு நாட்கள் கழித்து காணியைச் சுற்றி தென்னங் கீற்றுக்களால் உயரமான வேலி அடைக்கப்பட்டது.

பத்துநாட்களில் கடகட வென்று அத்திவாரம் போடப்பட்டு மூன்று கடைகள் கட்டத்தக்க அளவுக்கான சிமெந்து சுவர்கள் எழுப்பப்பட்டு விட்டன.

சிதம்பரம் காணியை தானே பராமரிப்பவர் என்றும் தனது அனுமதியின்றி வேருெருவர் கடைகள் கட்டத்தொடங்கியுள்ளார் என ஒரு முகியவர் முறைப்பாடு ஒன்றை எழுதி அரசாங்க அதிபருக்கு அனுப்பி அதனுடைய பிரதி ஒன்றை உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்தார்.

அலுவலகம் அமைக்கும் முயற்சியும் அத்துடன் கைவிடப்பட்டது. இப்பொழுது நல்லதொரு இடத்தைத்தேடிக் கொண்டு இருக்கிருர்கள். இறந்து போன எம். பியை மனதுக்குள் திட்டியபடியே அலுவலக வளவுக்குள் இறங்கினுர் முருகேசு.

யாரோ ஒரு வயதான பெண் அங்குமிங்கும் திரிந்து கீழே பார்த்தபடி ஏதோ தேடிக் கொண்டிருந்த மாதிரி இருந்தது.

கடந்த இரண்டு வாரங்களாக அவருக்கு அலுவலக வாழ்க்கை சீ என்றாகி விட்டது.

உணவு முத்திரை எடுக்க வந்த சனக்கூட்டம் தேர்த்திரு விழா மாதிரி அலைமோதியது.

தினமும் முந்நூறு பேர்களுக்கு குறையாது.

ஏ. ஜீ. ஏ. கொஞ்சப்பேரையும், மிகுதி ஆட்களை முருகேசு வும் விசாரித்தனர்.

'ஐயா, எனக்குப் 'போம்' நிரப்பத்தெரியாது தெரிஞ்ச ஆள் ஒருவர் தான் நிரப்பியது. அவர் என்னுடைய வருமானத்தை கூடப்போட்டுவிட்டார். ஏதோ நீங்கள் தான் பார்த்து முழு முத்திரைகளையும் தரப்பாருங்கோ!''

''ஐயா, என்னுடைய புருஷன் என்னைவிட்டிட்டு வேறை கலியாணம் முடிச்சுக்கொண்டு வேறை குடும்பமாய் இருக்கிறார் நீங்கள் அவர் வெளிநாடு எண்டு சொல்லி முத்திரை முழுவதை யும் வெட்டிப் போட்டியள் அவருடைய பெயரை வெட்டிப் போட்டுஎனக்கும் பிள்ளையளுக்கும் தாருங்கோவன்!''

''ஐயா என்னுடைய இரண்டாவது மகன் எங்கை எண்டு தெரியாது, அவனுக்குத் தராவிட்டாலும் பரவாயில்லை மற்ற வைக்கு எண்டாலும் தாருங்கோவன்'

ஒரே மாதிரியான பல்லவிகள்

முறைப்பாடுகளை இரண்டு கிழமைகளாய் மாறி மாறிக் கேட்டு காது புளித்து விட்டது.

முறைப்பாடுகளில் சில உண்மையாய் இருந்தன.

பல உண்மைக்குப் புறம்பாய் இருந்தன.

இரண்டு பிரிவுகளுக்கான கிராமசேவை அலுவலர்கள் மிக அண்மையில் தான் புதிதாக நியமனம் பெற்று வந்தவர்கள் அவர்களுக்கு போதிய விபரங்கள் எடுப்பது மிகச்சிரமமாய் இருந் தது. கடந்த ஆறுமாதங்களாய் ஒவ்வொரு மாதமும் பல்வேறு கோணங்களில் வந்த சுற்றறிக்கைகள் யாவும் தலையைச் சுற்ற வைத்தன.

ஒரு வித ஒழுங்கான முறையிலும் வேலை செய்ய முடியாமல் இருந்தது. பிரச்சினைகளோடு வருபவர்களது நிரப்பப்பட்ட பிரக டனப்பத்திரங்களை ஒவ்வொன்றாகப் பார்த்து என்ன வீதத்தில் மாத வருமானங்களை வெளிப்படுத்தியுள்ளார்கள். குழு சிபார்சு செய்துள்ளதா இல்லையா, கிராம சேவையாளர் என்ன எழுதி

யுள்ளார் என்பன போன்ற விபரங்களைப் பார்த்து.........பத்திரங்களை மீண்டும் உத்தரவுக்காக ஏ.ஜியின் பார்வைக்கு அனுப்பி..

திரும்பத் திரும்ப அவர்களது முறையீடுகளை கேட்டு கேட்டு மனமே சலித்தது

சிலர் தங்கள் முறையீடுகளை நியாயப்படுத்த ஒரு ரூபா முத்திரை ஒட்டி சமாதான நீதவான் மூலம் 'சத்தியக்கடதாசி யைக் கொண்டு நீட்டுவார்கள்

''இப்ப எல்லாம் சரிதானே! முத்திரைக்கு எப்ப வர? -அதிகாரம் தூள் பறக்கும்!

சத்தியக் கடதாசி என்ற சொல்லுக்கே அர்த்தம் இல்லாமல் போனமாதிரி இருந்தது.

''நீங்கள் போங்கோ! முத்திரை எழுதியபின் அறிவிக்கிறோம்/, அவர்களை விடை கூறி அனுப்பி வைக்க வேண்டும்

''இன்னொருக்கு முத்திரை கொடுக்கப்பட்டுள்ளது. அவருடைய மகன் சவுதியில் வேலை செய்கிறார். முத்திரையை நிறுத்தாவிடில் மேலிடத்துக்கு அறிவிப்போம்.''

இப்படி வரும் சில பெட்டிசன்கள்:

இதற்குள் மீனவர்களுக்கான உணவு முத்திரை வரவில்லை எப்ப வரும் என்று கேட்டு வருபவர்களுக்கு ஒரு மறுமொழி.

இதைவிடத் திருமலை போன்ற இடங்களிலிருந்து மாதாந்தம் வந்து நிவாரணம் எடுக்கும் அகதிகளின் 'பேர்மிட்' வழங்கும் வேலை: அவர்களின் பிரச்சனைகளை மிகவும் அனுதாபத்துடனும் அவதானத்துடனும் கவனிக்கவேண்டியதுமுக்கியம்.

அதற்குள்ளும் எப்பவோ எடுத்திருந்த தேசிய அடையாள அட்டையுடன் வந்து, ''நேற்றுத்தான் ஐயா அங்கிருந்து வந்தனான். அகதிச்சாமான் வேணும்!'' இப்படிக் கூட்டத்தோடு கூட்டமாய்க் கிடைத்ததை ஏன் விடுவான் என்று அலையும் போலி அகதிகள்

அது வேறு தலைவலி

அசல் எது நகல் எது என்று இனம் காணமுடியாத சிக்கல்

அலுவலகத்தில் இரண்டு லிகிதர்களின் இடங்கள் காலியாக கடந்த நாலு மாதங்களாக நிரப்பப்படாமல் இருக்கின்றன

கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார் ஏ ஜி ஏ ஆனால் பலனில்லை.

அடுத்த ஆண்டு பிறக்கும் போது தான் இடமாற்றம் செய்ய லாம் என்ற யோசனையில் இருக்கும் மேலிடம், இருக்கும் இலிகி தர்களிடம் எல்லா வேலைகளையும் பகிர்ந்து கொடுத்து அலை அலைரயும் குறையுமாய்க் கிடக்கின்றன.

''எல்லா வேலைகளையும் எங்கள் தலைமேல் சுமத்துகின்றனர்! அவை பெரிய ஆட்கள்! கச்சேரிக்குப் போய் நேரிலே வலுவாய் எடுத்துச் சொல்லிக் காலியாக இருக்கிற இடத்தை நிரப்ப வேண்டியது தானே. நாங்கள் எதிர்த்துக் கதைத்தாலும் பிழை யாய் எடுத்துக் கொள்ளுகிறார்கள்..........''

இடைக்கிடை இரண்டொருவர் மனக்கசப்புடன் முணுமுணுப் பது தெரியும்.

கொழும்பிலிருந்து இடமாற்றம் பெற்று வந்ததும் பேசாமல், கச்சேரியில் இருந்த மாதிரி இருந்திருக்கலாம்,!''

இடைக்கிடை முருகேசுவின் மனம் அசைபோடும்.

அலுவலகம் நுழையுமுன். அந்தப் பரந்த வளவில் சின்னஞ் சிறு சாந்து பூசிய கட்டிடத்தின் மேழே குமிண் சிரிப்பும் கொவ் வைச் செவ்வாயுமாய் காட்சியளிக்கும் முருகன் ஆலயத்துக்கு முன் நின்றார்.

''எத்தனையோ கோயில்களில் பார்த்து விட்டேன் ஆனாலும் இதைப் போல அழகிய முருகன் சிலையைக் நான் என்றுமே கண்டதில்லை' முருகேசு அடிக்கடி கூறுவார்.

சிற்பியின் கைவண்ணம் பளிச்சிட்டது. அது ஓர் ஆதியான கோயில் கூட்டுறவுச் சங்க ஊழியர்களால் பராமரிக்கப் பட்டு வருகிறது. தேவியர் இருவர் பக்கத்தில் நிற்க, நின்ற திருக்கோ லத்தில் அமைந்திருந்த முருகனை ஒரு சில கணங்கள் நின்று நெஞ்சார வணங்கினார்.

''முருகா, இன்றைய நாள் நல்லதாகக்கழிய வேண்டும்!''

கலாசார நிகழ்ச்சிகள் நடாத்தவென அமைக்கப்பட்டிருந்த மேடைப்படிகளில் ஏறித்தான் முற்றத்தைக் கடந்து அலுவல கத்தை நோக்கிச் சென்றார். பொதுமக்கள் ஒருவரையுங்காண வில்லை, வாசலில் வரும் போது காணப்பட்ட அப்பெண்ணையும் காணவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் வந்து குவிந்து விடு வார்கள்.

அலுவலகத்துக்குள் நுழையக் காலடி எடுத்து வைத்தவர் ஒரு கணம் நின்ருர். இருந்தால் போல் அவரது பார்வையில் ஒரு பொருள் தெரிந்தது. காலை இளம் வெயிலில் மண்ணில் கிடந்து மின்னலடித்தது ஒரு கழுத்துச் சங்கிலி. ஒரு சிறிய சிவப்புக்கல் பென்ரனும் கோத்திருந்தது. சடாரென்று கீழே குனிந்து சங்கிலியை எடுத்தார். அவர் நின்றதையோ குனிந்து சங்கிலியை

எடுத்ததையோ யாரும் காணவில்லை.

வாசலில் அமர்ந்திருந்த பியோன் செல்லையா எழுந்து, வாய் நிறையத் தாம்பூலத்துடன்' குட்மோணிங் சேர்' என்றான்.

அவரும் புன்முறுவலுடன் 'மோணிங் செல்லையா' என்று கூறி விட்டுத் தனது இருக்கையில் சென்று அமர்ந்தார்.

செல்லையா தினவரவு இடாப்பை எடுத்துக் கொண்டு போய் அவரிடம் நீட்டிஞன்.

''எங்கை தவராசா?' கேட்ட படியே தனது கையொப்பத்தை இட்டுவிட்டு நேரத்தையும் எழுதி அப்புறம் வைத்தார். தவராசா மற்றப்பணியாள்.

''தவராசா மெயில் எடுக்கப் போட்டார். மற்றவை இனித் தான் வருவினம் .....''

சொல்லிக் கொண்டே செல்லையா இடாப்பை எடுத்து கொண்டுபோய் நடுமேசையில் வைத்தான்.

அரைமணி நேரம் சென்றது. உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு வராக வரத் தொடங்கினர்.

தங்கராசாவும் மெயிலோடு வந்து விட்டான்.

பிரதம இலிகிதர் சிவநேசன் மெல்ல வந்து தன் இருக்கையில் அமர்ந்து கொண்டார். அவர் ஒருகடுமையான இருதய நோயாளி வேலையில் மிகவும் அனுபவசாலி அலுவலகத்துக்குக் கிட்டத்தான் வீடு. அதிகம் நடக்க மாட்டார். அதுபோல் அதிகம் பேசவும் மாட்டார். எல்லாம் அளவோடு தான்!

தான் உண்டு தன் வேலை உண்டு என்று அலுவல்களைக் கவனிப்பார்.

''மிஸ்ரர் சிவநேசன்! ஒரு அலுவல்......'' முருகேசு அழைத் ஞர்:

சிவநேசன் மெல்ல எழுந்து போய் முருகேசுவின் மேசைக்கு முன் அமர்ந்தார்.

''நான் காலை கந்தோருக்கு வரும்போது முற்றத்து மண்ணிலை ஒரு சமான் கிடந்தது. நீங்கள் பாருங்கோ.''!

சேட் பொக்கற்றில் இருந்து, தான் காலையில் கீழே கிடந்து எடுத்த கழுத்துச் சங்கிலியைக் காட்டினார்.

''இதிலை கிடந்ததோ......!'' சிவநேசன் வியப்புடன் கேட்டார்.

''தவராசா விடிய முற்றம் கூட்டித் தள்ளியிருப்பானே! அவனுடைய பார்வையிலை தட்டுப்படவில்லைப்போலை கிடக்கு!'' சிவனேசன் கூறினார்.

''கூட்டினால் பிறகு யாரும் வந்து போனார்களோ தெரியாது நான் வாசலில் வரும் போது ஒரு மனுசி எதையோ தேடிக் கொண்ட மாதிரி இருந்தது.''

நான் இஞ்சை வர ஆளைக்காணவில்லை ஒரு வேளை கோயிலடிப் பின்பக்கத்தாலை போட்டுதோ தெரியாது!''

''நீங்கள் சொல்வது சரியாய்த்தான் இருக்கும். நான் இப்ப வரும்போது பார்த்தன். ஒரு மனிசி நிண்டு ஏதோ தேடிக்கொண்டு நிற்கிறா. என்னைக் கண்டவுடனை பேசாமல் எங்கையோ பார்க்கிறமாதிரி ஆள் நிற்குது! ஒருவேளை அவவின்ரை சங்கிலியோ தெரியாது! நீங்கள் இப்ப விஷயத்தை வெளிக்காட்டாதேயுங்கோ பார்ப்பம் என்ன நடக்கிறதெண்டு!''

சிவநேசன் மெல்லமாகக் கூறிவிட்டு எழுந்து போய்த் தன் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்.

நேரம் ஏறிக்கொண்டு சென்றது. வெயிலும் வெகு உக்கிரமாய் எறித்தது.

பதினொரு மணியாகிவிட்டது.

''முருகா!'' என்றபடியே கதிரையின் மேல்ப் பகுதியில் தலையைச் சாத்தியபடி, கண்ணாடியைக் கழற்றி மேசையில் வைத்து விட்டுச் சற்று ஆறுதலாக இருந்தார் முருகேசு.

''செல்லையா!''

அவரின் அழைப்பு அவனுக்குப் புரிந்தது.

வெளியே சென்று பக்கத்தில் உள்ள கன்ரீனில் பிளேன்ரீ ஒன்று வேண்டிக்கொண்டு வந்து அவரின் மேசையில் வைத்தான்

வெவ்வேறு விதமான மூன்று குளிசைகளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு பிளேன் ரீயையும் குடித்தார்.

''என்னை தேடுகிறாய்!''

செல்லையாவின் உரத்த குரல் எல்லோரது பார்வையையும் அங்கு நோட்டமிட்டன.

காலையில் முருகேசு கண்ட அதே பெண். கையில் ஒரு பையுடன் நின்றாள். சற்று வயதான தோற்றம்.

''காசு ஒரு பத்து ரூபாவைப் போட்டுவிட்டன். அதுதான் பார்க்கிறன்......'' மெல்லிய குரலில் சொன்னாள் அவள்.

''காசு ஒரு பத்து ரூபாவைப் போட்டிட்டியோ? எங்கையனை போட்டனி? ஆயிரக்கணக்கிலை சனம் வாறஇடத்திலை ஆருடைய கையிலை அம்பிட்டதோ! வடிவாய்த் தேடிப்பார்!''

செல்லையாவின் உரத்த குரல் வழக்கமாக அவன் அப்படித்தான். ஆனால் ஒரு சோலிசுரட்டுக்கும் போகமாட்டான்.

அப்பெண் ஒன்றும் பேசாமல் பழையபடி அங்குமிங்கும் பார்த்து மிரண்டபடியே போய் பொது மக்கள் தங்குவதற்கு அமைக்கப்பட்டிருந்த தகரக் கொட்டகையின் கீழ் போடப்பட்டிருந்த மரவாங்கில் அமர்ந்து கொண்டாள்.

முருகேசுவும் சிவநேசனும் ஒருவரை ஒருவர் பார்த்து அர்த்த புஷ்டியுடன் சிரித்துக் கொண்டனர்.

★

மணி இரண்டாகி விட்டது. ஒருமாதிரி வந்த சனங்கள் தங்கள் தங்கள் அலுவல்களைக் கவனித்துக்கொண்டு போனதில் முருகேசுவுக்கு கொஞ்சம் மனநிம்மதி!

''இன்றைக்கு திருவிழா முடிந்துவிட்டது! இனி நாளைக்கு விடியத்தானே.. ...''!

சொல்லிக் கொண்டே சாப்பிட்ட களைப்புப்போக முன் கதிரையில் வந்து அமர்ந்தார்.

உது இப்போதைக்கு முடிகிற வேலையில்லை சேர்! புதுப் 'போம் எடுக்கலாம் என்று சேக்குலர்' வந்திருக்கு இனி ஒரு சனக் கூட்டம் அள்ளுப்படும்!'' மகேந்திரன் கூறினார்.

''நாங்கள் என்ன செய்யிறது? போமைக் கொடுக்கச் சொன்னால் கொடுக்க வேண்டியதுதானே! முருகேசு கூறினார்.

இருந்தாற்போல் பத்மராசன் என்ற கிராம சேவை அலுவலர் சயிக்கிலை மாமரத்தின் கீழ்நிறுத்திவிட்டு ஒரு அலுவலகப் பை சகிதம் உள்ளே வந்தார்.

''என்ன சேர் எல்லாரும் ஆறுதலாய் இருக்கிறியள்! சாப் பாடு எல்லாம் முடிஞ்சுது போலை!'' பத்மராசன் முருகேசுவைப் பார்த்துக் கேட்டார்.

வாரும்! உம்மைத்தான் பார்த்துக் கொண்டு இருக்கிறன்: தேர்தல் இடாப்பு வேலை இன்னும் நீர் முடிச்சுக் கொடுக்கவில்லை என்று இன்றைக்கும் ஒரு அவசரக் கடிதம் வந்திருக்கு! ஏனப்பா அதை அந்தந்த நேரத்துக்கு முடிச்சுக் கொடுத்தால் என்ன?

''சேர் ஒரு இரண்டு நாள் அவகாசம் தாங்கோ. வியாழக் கிழமை காலை நான் கொண்டுபோய் கொடுக்கிறேனே இல்லையோ பாருங்கள்!''

இதற்குள் வாசலில் நிழல் தட்டவே கிராமசேவகர் திரும்பிப் பார்த்தார்.

'பத்து ரூபாய் தொலைத்த' பெண்:

''எட, இந்த மனுசி என்னுடைய டிவிசன் ஆளல்லே! ஏனணை வந்து நிற்கிறாய்?''

பத்மராசன் கண்ணாடியைக் கழற்றிக் கையில் பிடித்தபடியே வாசலை நோக்கிப் போனார்.

''உங்களைத்தான் விதானையார் பார்த்துக்கொண்டு நிக்கிறன் ஒரு அலுவல்...'

அப்பெண்ணின் வார்த்தைகள் மிகவும் பரிதாபமாய் இருந் தது, 'என்னணை விசயம்?'

பத்மராசன் வாசலை விட்டு அந்தப்புறம் நகர்ந்தார்.

''விதானையார் இன்டைக்கு விடியக்காலமை தொடக்கம் முத்திரை எடுக்க வந்து நிற்கிறன். நான் போட்டுக்கொண்டு வந்த கழுத்துச் சங்கிலியை இஞ்சை எங்கேயோ போட்டுவிட் டன்!'

அவளின் குரல் தளதளத்தது.

சங்கிலியைத் தொலைச்சுப் போட்டியோ... அதற்கு நான் என்ன செய்கிறது? வடிவாய் தேடிப்பாரணை!'' கூறிக்கொண்டே உள்ளே வந்தார்.''

''ஏ. ஓ ஐயா! விசயம் கேள்விப்பட்டீங்களே? உந்த மனுசி தன்ரை கழுத்துச் சங்கிலியை இஞ்சை எங்கையோ தொலைத்து போட்டாளாம்! என்ன கறுமம் அப்பா இது!'' பத்மராசன் அலுத்துக்கொண்டார்.

செல்லையா நிமிர்ந்து பார்த்தான்.

இஞ்சை வாணை? அப்ப காலமை நான் கேட்டவுடனை பத்து ரூபாய் தொலைச்சுப் போட்டன் எண்டு சொன்னுய் இப்ப விதானையார் கேட்க கழுத்துச்சங்கிலி துலைஞ்சு போச்செண்டு சொல்லுகிருய். உனக்கென்ன விசரே?''

''அதென்ன பத்துருபாய் தொலைச்சகதை? இஞ்சை வா உள்ளுக்கு!'

கிராமசேவகர் போட்ட அதட்டலில் அப்பெண் உள்ளே வந்தாள்.

''உண்மையைச் சொல்லணை! பத்துரூபா தொலைஞ்சதோ இல்லை சங்கிலிதான் தொலைஞ்சதோ? எது உண்மை?''

''ஐயோ விதானையார் முருகன் ஆணை !காலமை இதிலை வந்து நிண்டனுன். இஞ்சைதான் எங்கையோ தொலைச் சுப் போட்டன்.

இவைகேட்க, நான் காசுதொலைச்சனுன் எண்டுதான் சொன்னேன்...'' அவள் விம்மினுள்.

''சங்கிலி தொலைத்தது என்ருல் உண்மையைச் சொல்லியிருக்கலாமே! அப்ப ஏன் காசு தொலைத்தது என்று பொய் சொன்னனி?''

பத்மராசன் கேட்டார்.

அப்பெண் பேசாமல் நின்ருள்.

நடப்பனவற்றை எல்லாம் முழு அலுவலர்களும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

முருகேசு எழுந்து வந்தார்.

''இஞ்சை வா! கழுத்தாலை சங்கிலி விழுகிற அளவுக்கு, கழன்றதும் தெரியாமல் இருந்தனியே?''

''நான் கழுத்திலை போட்டுக் போட்டுக் கொண்டுதான் வந்தனுன் ஐயா. இஞ்சை வந்து நிண்டு கழட்டி இந்தக் கடதாசிப்பையிலை வைச்சிருந்தன் இதிலைதான் எங்கையோ விழுந்து போச்சு, மூண்டுவுண் சங்கிலி ஐயா... ''

அவளின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

போட்டுக் கொண்டு வந்து வாசலில் கழட்டிக் கையில் வைச்சிருந்தனியோ? ஏன் கழட்டி வைச்சிருந்தனி? முருகேசு கேட்டார்.

''ஐயா நான் வருமானம் கூடப்போட்டதென்று சொல்லி எனக்கு மூன்று முத்திரை தான் தந்தவை. எல்லாமாய் ஏழு வரவேணும். மிச்சமுத்திரையும் எடுக்கத்தான் வந்தனான். கழுத்திலே சங்கிலி கிடந்தால் நான் வசதியானவள் எண்டு நினைச்சு நீங்கள் மற்ற முத்திரைகளைத் தரமாட்டியள் எண்டுதான் நான் கழட்டிக் கையிலே வைச்சிருந்தன்! என்ர காலம்...... அது தொலைந்து போச்சு......!''

அடக்கடவுளே!

முருகேசு உட்பட எல்லோரும் திகைத்துப்போனார்கள்.
''என்ன அடையாளமிருக்கணை அதிலே? நாங்களும் தேடிப் பார்ப்பம்!'' முருகேசுவுக்கு உள்ளுக்குள் சிரிப்பாய் இருந்தாலும் முகத்தைச்சீரியசாக வைத்துக் கொண்டார்.

''அதிலை ஒரு சின்னப் பென்ரன் சிவப்பு நிறத்திலே மாட்டிக்கிடக்கு! அப்பவும் என்ரை மூத்தவள் சொன்னவள் சங்கிலி போடாமல் போ எண்டு! நான் தான் மடத்தனமாய் போட்டுக் கொண்டு வந்திட்டன்.''

நீ ஒரு மோட்டு மனிசியணை! சங்கிலியும் தாலிக்கொடியும் பார்த்தே இஞ்சை முத்திரை கொடுத்தவை? உனக்கு யார் சொன்னது சங்கிலி போட்டுக்கொண்டு வந்தால் முத்திரை தரமாட்டார்கள் என்று?''

பத்மராசன் கேட்டார்.
அதற்கு அப்பெண் பதிலளிக்காமல் பேசாது நின்றாள்.

முருகேசு ஒன்றும் பேசாது தன் மேசையடிக்குச் சென்று தன் அலுவலகப்பையைத் திறந்து தான் எடுத்த சங்கிலியை எடுத்துக் கொண்டு வந்தார்.

இந்தாணை! இதுதானே பார்! சங்கிலியை அப்பெண்ணிடம் நீட்டினார்.

மறுபடியும் எல்லோரது முகத்திலும் திகைப்பு சிவநேசன் கன்னத்துக்கு கைகொடுத்தபடி புன்முறுவலுடன் இருந்தார்

''என்ரை ராசா!உதுதான் மோனை என்னுடைய சங்கிலி...... எங்கை அப்பு கிடந்தது?''

அப்பெண்ணின் முகம் மலர்ந்தது பேச்சும் தளதளத்தது. இனிமேல் கவனமாய் இரு! யாரும் சொல்லுவினம் எண்டு விசர் தனமாய் நடக்காதை? நகைகளேயும் உடுப்புக்களேயும் பார்த்துத் தான் இந்தக் கந்தோரிலே காரியங்கள் நடப்பதில்லே! நியாயம் என்ருல் எதையும் செய்து கொடுப்பம்!'' என்று முருகேசு கூறி விட்டு ''முருகா ஒரு நாள் பொழுது கழிந்து விட்டது'' என தனக்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

(யாவும் கற்பனை)

ஈழநாடு- வாரமலர் 9 - 11 - 86

# முற்பகலும் பிற்பகலும்

இன்று 'பென்ஷன்' நாள்.

செயலகம் அதிகாலையிலிருந்தே களைகட்டத் தொடங்கி விட்டது. இலிகிதர்கள் மற்றும் பணியாட்கள் அதிகாரிகள் வருமுன்னரே ஓய்வூதியம் பெறுவோர் வந்து 'கியூ' வில் நிற்கின்றனர்.

வங்கியின் வாசலில் ஆரம்பமான கியூ, விசாரணை மண்டபத்தையும் கடந்து உணவுக் கட்டுப்பாட்டுக் கிளைவாசல் மட்டும் நீண்டது! முதுவயதுக்காரர், நடுவயதுக்காரர் என பல்வேறு ரகத்தினராய்.

இந்த அரசாங்கத்திற்குத் தன்னலமற்ற முறையில் விசுவாசமாய்ச் சேவை செய்து விட்டு அதற்குப் பிரதியுபகாரமாய் அரசாங்கம் வழங்கும் இந்த ஒய்வூதியப் பணத்துக்காக இங்கு காத்து நிற்கிறோம்... இப்படித்தான் அங்கு நிற்கின்ற சகல ஓய்வூதியம் பெறுவோரும் நினைக்கின்றனர்.

மணி ஒன்பதை நெருங்குகின்றது.

''மணி ஒன்பதாச்சு! இவை எப்ப வந்து கதவைத் திறந்து காசு தரப்போகினமோ தெரியாது...''

''முந்தியைப் போல எண்டால் சுணக்கமில்லை... இப்ப இந்தக் கரைச்சல் தொடங்கினப் பிறகுதான் இந்த மாதிரிச் சுணக்கம்...''

''எட அருமந்தாப்போலை எங்கட வீட்டுக்குப் பக்கத்திலை தபால் கந்தோரிலைதான் இவ்வளவு காலமும் எடுத்தனான்! இப்ப பாருங்கோவன் பஸ் ஏறி... வானிலை... இந்தக் கியூவில நிண்டு மனுசனுக்குச் சீ எண்டு போச்சு!'' பல்வேறு அபிப்பிராயங்கள் அந்த நீண்ட செயலக விறாந்தையில் காற்றோடு கலந்தன.

''நாங்கள் இண்டைக்கு இதாலை போகமுடியாது போலை...'' இப்படிச் சொல்லிக் கொண்டே கணக்குக் கிளையில் பணியாற்றும் இலிகிதர் உள்ளே புகுந்தார்.

''என்ன புண்ணியமூர்த்தி வாறபொழுதே புறுபுறுத்துக் கொண்டு வருகிறீர்...' ... கூட வேலைசெய்யும் மிஸ். உலகநாதன் கேட்டாள்.

''இண்டைக்கு கச்சேரி திருவிழா மாதிரிக் கிடக்கு! நடந்து வரவே முடியாமல் கிடக்கு! கிழடுகட்டையெல்லாம் வந்து கொறிடோர் முழுக்க நிற்குதுகள்...''

''இண்டைக்கு மட்டுமே... இப்ப கொஞ்ச நாளாய் ஒவ்வொருநாளும் திருவிழாத் தானே...

''இஞ்சை வங்கியிலும் காசில்லையாம்... இனிபெரிய வங்கியிலை இருந்து பதினொரு மணிக்குக் காசு வந்துதானே 'பேமென்ற்' — கணக்குக்கிளைச் சிற்றூழியர் சின்னத்தம்பி கூறினன்.

''அப்ப கிழடு கட்டையள் எல்லாம் இஞ்சை தான் இண்டைக்குப் படுக்கை...! அங்கை சிறுப்பற்றை அறைவாசலில் ஒருத்தர் இப்பவே கீழே இருமிக்கொண்டு, சக்கப்பணிய இருந்திட்டார் இப்படிச் சொல்லிவிட்டு இலிகிதர் புண்ணியமூர்த்தி பெரிதாகச் சிரித்தார்.

மிஸ்டர் புண்ணியமூர்த்தி... நேரத்துக்கு வரவும்மாட்டீர்! வந்தாலும் சும்மா கதைச்சுக் கொண்டு மற்றவையையும் குழப்பிக்கொண்டு... போய் இருங்கோப்பா கதிரையிலை!... பிரதம இலிகிதர் கூறியதும் புண்ணியமூர்த்தி அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

''என்ன இண்டைக்கு சீ. சீ கொதிக்கிருர். ''—புண்ணியமூர்த்தி தனக்குள் முணு முணுத்துக் கொள்கிருர்.

இந்த உரையாடல் யாவும் வெளியே தெளிவாகக் கேட்கிறது பென்ஷன்காரர்களுக்கும் கேட்கிறது.

''கதைகளைப் பாத்தியளே ?''

—ஒரு பென்ஷன்காரர் தனக்கு முன்னல் நின்றவருக்குக் கூறினர்.

''என்ன செய்வம்! நாங்கள் செய்த பாவம், இதிலை கால் உழைய நிக்கிறம்...! நாளைக்கு இவையும் தானே... நாங்கள் இதெண்டாலும் எடுக்கிறம் உவையின்ரை பாடு போறபோக்குகளை பார்க்க... நாளைக்கு இருக்கிரேமோ இல்லையோ எண்டு கூடச் சொல்லமுடியாத நிலை...!

''உவையின்ரை கதையைவிடும்! இந்தப் பென்ஷன்காரருக்கும் இந்தமுறை அலவுன்சு கூட்டினமோ .. பேப்பரிலை கிடக்கு பேப்பரிலை கிடக்குத்தான்... இவங்கள் இனிச் செய்து தந்தாலெல்லோ கொழும்பாலை காயுதம் வந்தாலும்இனி இவை பார்

த்து, ஒவ்வொரு மேசையாய்ப் போய் குறைஞ்சது இரண்டு மாதம் செல்லும்...!''

''என்னெண்டாலும் சாகிறதுக்குள்ளை போட்டுத் தந்தினம் எண்டால் சரிதான்...!''

''நல்ல பகிடிதான் ..!- — தன் பல்லில்லாத பொக்கை வாயால் சிரித்தார் அந்தப் பென்சனீயரர்,

''பகிடி இல்லைப்பாருங்கோ நானும் இந்தக் கச்சேரியிலை முப்பத்தி எட்டு வருஷம் வேலை செய்தனென்தானே... லேபாரராய்த் தான் வெள்ளைக்காரன் காலத்திலை சேர்ந்தனான்! பேந்து போகப் போக சின்னச் சின்னப் புரமோஷன் தந்து கடைசியிலை ஆராச்சியாய்த்தான் பென்ஷனிலை போனனான்!....

''ஓ! அப்படியே விஷயம்! அப்ப நீங்கள் இருக்கிறது கிட்டத்தானே...''

''ஓ! இஞ்சை பக்கத்திலைதான் — அரியாலைச்சந்திக்குக் கிட்ட இஞ்சை இவ்விடத்திலை கச்சேரி தம்பையர் எண்டால் ஆருக்கும் தெரியும்''

''சரிசரி! நான் படிப்பிச்சுப்போட்டுப் பென்ஷனை இருக்கிறன் உந்த வன்னிக்காடெல்லாம் திரிஞ்சு உத்தியோகம் பார்த்துப் போட்டுக் கடைசியிலை இஞ்சை வந்து கால் உழைய நிக்கிறம்!''

இருந்தாற்போல் 'கியூ'வில் ஒரு சலசலப்பு.

''கொஞ்சம் விலகுங்கோ! இவர் நடக்க மாட்டார்! அதிலை போய் இருக்கட்டும்,,

யாரோ ஒருவர் கூறினார். கையில் பொல்லுப்பிடித்தபடி ஒருவர் மெல்ல நடந்து வர, வேறொருவர் அவரை முதுகில் அணைத்துக்கொண்டு நடந்து வந்தார்.

பொல்லுப் பிடித்து நடந்தவருக்கு ஐம்பது வயதுக்கு மேல் சொல்லமுடியாது.

ஆனால் ஒட்டி உலர்ந்து... முகமெல்லாம் மீசையும் தாடியுமாய் குழிவிழுந்த கண்கள் பார்க்க மிகவும் பரிதாபமாய்] இருந்தது.

கால்சட்டை அணிந்து அரக்கை சட்டை அணிந்திருந்தார்

அவரை அணைத்து நடத்தி வந்தவர், கணக்குக்கிளை வாசல் விறுந்தையில் சுவர் ஓரமாய் இருந்த வாங்கில் அமர்த்தி விட்டார். அந்த மாவாங்கில் ஏற்கனவே இருந்த இரண்டு வயோதிபப் பெண்கள் கொஞ்சம் தள்ளி அமர்ந்து கொண்டனர்.

''நீங்கள் ஒதிலே இருங்கோ' இனி வங்கி திறந்து தானே மற்ற விசயங்கள்? எத்தனை மணி செல்லுதோ தெரியாது? நான் பிறப்புச்சாட்சிப் பத்திரம் இரண்டு எடுக்க வேணும். அப்பிளிக் கேசனைக் கொடுத்துப்போட்டு இப்பவாறன்..... ?''

அவர் போய் விட்டார்.

மரவாங்கில் அமர்ந்தவர் மலங்கமலங்க விழித்தார்.

கச்சேரித் தம்பையர் கியூவில் நின்ற இடத்தில் தான் இந் தமரவாங்கும் இருந்தது. அந்த நாலு அடி அகலமான விறாந் தையில் கியூவரிசையும் மரவாங்கும் விறாந்தையின் பெரும் பகு தியைப் பிடித்துக்கொள்ள நடமாடுவோர் பாடு பெரிய திண் டாட்டமாய் இருந்தது.

மரவாங்கில் அமர்ந்திருந்தவர் தம்பையரை உற்று நோக்கினர்

தம்பையரும். இந்தத் தாடிக்காரரர் பொல்லுப்பிடித்து மெது வாக அமர்ந்து கொண்டதையும் வைத்த கண்வாங்காது பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

நீங்கள்... நீங்கள் முந்தி இஞ்சை வேலை செய்தனீங்களோ தம்பி?...''

இந்தக் கேள்வியைக் கேட்டதும் தாடிக்காரர் சற்றுத்திடுக்கிட் டமாதிரித் தெரிந்தது

சாடையாக வசயைத்திறந்து சிரித்தமாதிரி இருந்தது.'' ஓ... நான் இஞ்சை வேலை செய்திருக்கிறன்...!'' -குரல் சற்றுக் கர கரத்தது.

உங்கடை பெயர் வந்து... நவரத்தினம் தானே''

''ஓமோம் நவரத்தினம் தான்...''

''அது தானே பார்த்தன்... நீங்கள் நடந்துவாறபொழுதே கவனிச்சனான்! எனக்குச் சரியாய் மட்டுக்கட்ட முடியாமல் போச்சு! இதென்ன தம்பி இவ்வளவு கேவலம்...!''

''தெரியாதே கொஞ்சக் காலம் சுகமில்லாமல் இருந்தனான்!

சொல்லும்போதே இருமினர்,

''அப்படியே...! அப்ப நீங்கள் பென்ஷன் எடுத்திட்டிங்களே உங்களுக்கு அவ்வளவு வயதில்லையே...?''

நான் மெடிக்கலுக்குப் போட்டு... அதுக்குப் பிறகுதான்...''

அவரால் வார்த்தை முடிக்குமுன்னர் இருமத்தான் முடிந்தது

''அதுதானே பார்த்தன்!

உங்களுக்கு என்ன இப்ப போயும் போயும் ஒரு ஐம்பது வயது தானே இருக்கும்...!''

''ஓ ஐம்பது தான்!''

''சரி சரி' உங்களைக்கண்டும் இப்ப பதினைஞ்சு வருஷங்கள் இருக்கும்... என்னைத் தெரியுது தானே...?'

கச்சேரித் தம்பையர் தாடிக்காரரை விடுகிறது மாதிரித் தெரியவில்லை.

''இதென்ன... தெரியாமல்... நீங்கள் தம்பையர் தானே...?

''அப்ப ஞாபகம் இருக்கு உங்களுக்கு...! தம்பியும் முந்தி இஞ்சை பென்சன் பகுதியிலை தானேவேலை செய்தவர்!'' தம்பையர் முன்னுக்கு நின்றவரைப் பார்த்துக் கூறினர்.

''இப்ப கிழடுபத்திப் போய் இஞ்சை பென்சனுக்கு நிக்கிறம் தம்பியும் வயதுவர முந்தி எங்களோடை சேர்ந்திட்டார்...! தம்பையர் சொல்லி விட்டுச் சிரித்தார்.

தாடிக்காரர் தம்பையரையும் பார்த்து பின்னர் அனுமார் வால் போல் நீண்டு போயிருந்த கியூவையும் பார்த்தார் அவரின் சிந்தனை எட்டிப் பரந்து விரிந்தது!

இன்று தாடியும் மீசையுமாய் வருத்தக்காரனைப் பொல்லு ஊன்றி நடந்து வந்துஒய்வூதியம் பெறுவதற்காக இருமிக் கொண்டே மரவாங்கில் அமர்ந்திருக்கும் நவரத்தினம் என்பவர் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இதே செயலகத்தில் லிகிதராக வேலை பார்த்தவர்.

பார்ப்பதற்கு நல்ல தோற்றம் சுருள் தலையும் மீசையுமாய் எந்த நேரமும் சுறுசுறுப்பாக ஓடியாடித் திரிந்த ஒருவர். அவர் பணிபுரிந்த ஓய்வூதியக் கிளையில் மொத்தமாகப் பதினுறு லிகிதர்கள்.

அவர்களுள் நவரத்தினம் தான் எதற்கும் முன்னுக்கு நிற்பவர். காலையில் வேலைக்கு வந்தால் பகல் பத்து மணிக்கு மற்றவர்கள் தேனீர் குடிப்பதற்கு 'கன்ரீன்' பக்கம் போக இவர் சற்று எட்ட நடந்து சட்டவிரோதமாகச் சாராயம் விற்கும் கடைக்குச் சென்று ஒருடிராம் அடித்து விட்டுவருவார்.

மத்தியானமும் சாப்பிட முன்னர் ஓடிப்போய் ஒருடிராம் சாராயம் குடித்து விட்டுத்தான் சாப்பிடுவார்.

கண் இரண்டும் சிவக்க வாயில் சிகரெட் புகைய பென்சன் வேலைகளைக் கவனிப்பார்.

''என்ன நவரத்தினம் கண் எல்லாம் சிவந்து போய்க்கிடக்கு பிழைவிட்டிடாதை...''

பிரதம இலிகிதர் திருநாவுக்கரசு எச்சரிப்பார்.

''அண்ணை பயப்படாதையுங்கோ? மழைக்கால இருட்டெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' குடிச்சாலும் இந்த நவரத்தினம் பிழைவிடான். எல்லாம் கணக்காய் இருக்கும் இருபத்திஐந்தாம் திகதி கிழட்டுப்பிள்ளைகள் கவுண்டரிலே வர ஐயா ரிசீற் கொடுப்பார்...''

சிரித்தபடியே பதில் கூறுவார் நவரத்தினம்.

தற்சமயம் உள்ள ஏற்பாடுகளில் இருந்து முந்திய ஏற்பாடுகள் வித்தியாசமானவையாய் இருந்தன.

முன்பெல்லாம் ஓய்வூதியம் பெறுவோர் தமது ஓய்வூதிய அடையாள அட்டைகளுடன் பென்ஷன் தினத்தன்று ஓய்வூதியக் கிளைக்குச் செல்வார்கள். அங்கு கவுண்டரில் இலிகிதர்கள் பணம் கொடுக்கும் ரசீதுகளுடன் இருப்பார்கள். தமது அடையாள அட்டைகளைக் காட்டி இலக்கங்களைக் கூறி ரசீதுகளைப் பெற்று சிறுப்பரிடம் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இப்பொழுது உள்ளது போல் வங்கிக்கிளை ஒன்றும் அப்பொழுது இல்லை:

சில ஒழுங்கீனங்கள் ஏற்பட்டு நிர்வாகத்துக்குத் தலையிடி வந்தபடியால் ஓய்வூதியம் பெறுவோர் கட்டாயம் அடையாள அட்டையுடன் வரவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

சிலபேர் மறதியில் ஓய்வூதிய அடையாள அட்டையைக் கொண்டு செல்லமாட்டார்கள்.

சிலர் கியூவில் நில்லாமல் இடையே நுழைந்து ரசீது கேட்பார்கள்.

ஓய்வூதியம் கொடுக்கும் நாளில் தான் ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படுவது அன்றையகால ஏற்பாடு சகலரும் சம்பள நாளன்று பரபரப்பு, குதூகலம், கலக்கம் என்ற உணர்வுகளால் ஆட்கொள்ளப்பட்டு நிற்பார்கள்.

''ஐடென்ரிக்காட் இல்லையோ அங்காலை போங்கோ மற்ற ஆள் உங்கடை நம்பர்...?''

நவரத்தினம் சிவில் பென்சன் வேலைகளைக் கவனித்தபடியால் அவர் நிற்கும் கவுண்டரில்தான் ஆட்கள் நிறைய நிற்பார்கள்

'கியூ' மீறிவந்தால் போச்சு..., 'பெரியவர் உமக்கு மற்ற ஆட்கள் கியூவிலே நிற்கிறது கண்ணுக்குத் தெரியவில்லைப்போலே'

நவரத்தினம் கத்துவார். இவர் இப்படி எரிஞ்சுவிழுவது மற்ற இலிகிதர்களுக்குப் பெரிய தர்மசங்கடமான நிலமை உண்டாகும்.

ஆனால் ஒன்றும் பேசாமல் நிற்பார்கள் ஒய்வூதியம் பெறுப வர்களுக்காகக் கொஞ்சம் பரிந்து பேசவந்தாலோ வந்தது வினை கேட்கவே வேண்டாம்!

''இஞ்சாலை வாரும் ஐசே..! கவுண்டரிலை நீர் நிண்டு நிசிற் றைக் குடும் நான் அங்காலை போறன்...! என்னுடைய வேலையை நான் பார்ப்பன் தானே...!''

சட்டென்று கன்சக ஊழியர் என்றும் பாராமல் நவரத்தினம் எரிஞ்சு விழுவார்.

இதற்குப்பயந்து மற்றவர்கள் இவரின் சோலிக்குப்போவதில்லை வழமையாகக் காலையில் சாராயம் குடிக்கும் நவரத்தினம் சம்பள நாள் என்றால் வழமையைவிடக் கொஞ்சம் ஓவராகவே போட்டு விடுவார்!

''உம்முடைய நம்பர் என்ன ?''

ஓய்வூதிய நம்பரைக் கேட்பார், பதில் கூறுபவர் சற்று நம் பரை மாறிச்சொல்லி விட்டால் போதும்.

''என்னப்பா பென்ஷன் நம்பர் கூடப் பாடமில்லையே .. மனு சரைப்போட்டு சிப்பிலி ஆட்டிறியள்''

பென்ஷன் எடுக்க வந்தவர் 'முழிப்பார்'.

அவர் வைத்திருக்கும் அடையாள அட்டையில் அந்தப் பென் ஷன் நம்பர் இருக்கின்றது.

அது நவரத்தினத்துக்குத் தெரியும். ஆனாலும் பென்ஷன்கா ரர் சொல்லட்டும் என எதிர் பார்ப்பார். சிலநேரம் அவரைப் போலவே இடக்குப்பேர் வழிகளும் வருவதுண்டு.

''நம்பர் என்ன...?'' வழமையான கேள்வி.

''நம்பர் காரிட்டிலை இருக்குப் பாருங்கோ''— விடையும் சட் டென்று வரும். கையில் வைத்திருக்கும் அடையாள அட் டையைப் பார்த்துத் தெரிந்துகொண்டால் என்ன என்ற மனோ பாவம் அந்த விடையில் தொக்கி நிற்கும்.

ஆனால் நவரத்தினமோ... ''கார்ட்டிலே இருக்கோ... அப்படி யென்றால் பார்த்துச் சொல்லும் நம்பரை...' அடையாள அட்டையைக் கவுண்டருக்கு மேலாலே தூக்கிப் போடுவார்.

நவரத்தினத்தின் போக்கு அங்கு பணியாற்றும் சக ஊழியர்களுக்கும், ஏன் பொதுமக்களுக்குமே மிகவும் எரிச்சலைக் கொடுத்தது என்னவோ உண்மைதான்.

இப்படியான சூழ்நிலைகளில் மட்டுமே அவர் சற்றுச்சூடாக நடந்துகொள்கிறார். சிலநேரங்களில் அவர் வேலைசெய்து கொண்டிருக்கும்போது அதை விட்டுவிட்டு எங்கேயோ யோசிப்பார். கண் அடிக்கடி கலங்கும் அவருக்கு முன்மேசையில் இராசையா என்ற வயதான இலிகிதர் அமர்ந்திருக்கின்றார்.

''என்ன இராசையாண்ணை இவள் இப்படிச் செய்து போட்டாளே !

இராசையாவின் வேலை நின்றுவிடும்.

மெல்லத் திரும்புவார்.

''என்ன நவம் சொன்னனி...? ''இல்லையண்ணை இவள் மனிசிக்காறி கோட்டடிக்கு இழுத்துப் போட்டாளே...!''

நான் உனக்குச் சொன்னனான் இனி அந்தச்சனியனைப்பற்றி யோசியாதை எண்டு .. விடுகதையை...!''

''அவள் எனக்கு நிம்மதியில்லாமல் செய்துபோட்டாள் அதுதான் இப்ப எனக்கு கவலை...!''

நவம் அந்த விஷயத்தை எப்பபார்த்தாலும் மனதுக்குள்ளே போட்டுக் குழப்பாதே! இனி நடக்கப்போறதைப் பார் ..!''

நவரத்தினத்தின் மனைவி தன்கணவன் மீது தாபரிப்பு வழக்குத் தொடர்ந்திருந்தாள்.

கணவன் மனைவிக்கிடையில் என்ன பூசலோ- அது இங்கு ஒருவருக்கும் தெரியாது ஆனால் நீதிமன்றத்திலிருந்து சம்மன்ஸ்வர அதிலிருந்து விஷயம் அம்பலமாகி விட்டது.

தன்னை மரியாதை கெடுத்து விட்டதாக எண்ணி நவரத்தினம் மனதுக்குள் குமைவார்.

சம்மன்ஸ் வந்தபின்னர் அவரது குடிப்பழக்கம் அதிகமாகி விட்டதென்றே சொல்லவேண்டும். குடிப்பழக்கம் அதிகமாக குணமும் குரங்காய் மாறும்

ஒரு நாள் இப்படித்தான் ஒய்வூதியம் கொடுபடும் தினம் கவுண்டர் மிகவும் 'பிஸியாகக் கருமங்கள் நடக்கின்றன.

வழமைபோல் நவரத்தினம் வெளியேபோய் வந்துவிட்டார்

கையில் சிகரெட் புகையுது விரல்கள் ரசீதுகளைத் தட்டிக் கொண்டு இருக்கின்றன கியூவில் பென்ஷன்காரர் ஒவ்வொரு வராய்த் தமது அடையாள அட்டையைக் காட்டி ரசீதுகளை வாங்குகின்றனர். இருந்தாற்போல் வயதுபோன ஒருவர் வட்டக் கழுத்து பெனியனும் பெரிய சந்தனப்பொட்டும் காதில் செவ்வரத்தம் பூவுமாய் கியூநகர்ந்த வாசலுக்குப் பக்கத்துவாசலால் உள்ளுக்குள் வந்தார். மிகவும் பரபரப்புடன் காணப்பட்டார் அவர்.

''தம்பி நம்பர் ஆயிரத்திநாற்றிப்பன்ரெண்டு என்ரை பென் ஷன் றிசீற்றைத் தாருங்கோ''

நவரத்தினம் நிமிர்ந்து பார்க்கவில்லை.

''தம்பி... நம்பர் ஆயிரத்துநாற்றிப்பன்ரெண்டு.''

'உதிலை நிண்டு கத்தாமல் கியூவிலை வாரும்..'' - நவரத்தினம் பதில் கூறினார்.

''ஒரு அவசரம் மோனை... இனிக்கியூவிலை நிண்டுவாச் செல் லும் தம்பி அவை கோபிக்காயினம் றிசீற்றைத் தாருங்கோ

''உமக்கு அவசரம் எண்டால் போய் அந்த அலுவலைப் பார்த்துப்போட்டு ஆறுதலாய் வாரும். இப்பமனுசரை வேலை செய்யவிடும்..''

''நீங்கள்வடிவாய் வேலைசெய்யுங்கோ... நான் குழப்பயில்லை அவசரமான அலுவல் எண்ட படியால்தானே கேட்கிறன்''

''மற்றவைக்கும் அவசரம்தான் போய் கியூவிலை வாரும்'...

...நிர்த்தாட்சணியமாய் பதில் வந்தது.

வந்தவர் சற்றுநேரம் பேசாமல் நின்றார். அவரின் பார்வை உள்ளே சென்றது உள்ளுக்குள் ஏதோ அலுவலாய் நின்ற சிற் றூழியர் சின்னத்தம்பியைக் கண்டுவிட்டார்.

''எடேய் சின்னத்தம்பி இஞ்சை வா ஒரு அலுவல்.....

சின்னத்தம்பி நிமிர்ந்து பார்த்தான்.

''தம்மையா அண்ணை என்ன அலுவல்...

-கவுண்டருக்கு ஓடி வந்தான்.

''தம்பி பேத்திலையப் பிள்ளைப்பெத்துக்கு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டிருக்கு ஒரு அவசரமாய் நான் இப்ப போக வேணும் இந்தமட்டையும் நான் கொண்டுவர மறந்துபோனேன் நம்பர் ஆயிரத்துநூற்றுப்பன்னிரெண்டு அவரிட்டைச் சொல்லி என்ரை பென்சன் றிசீற்றை ஒருக்கா வேண்டித்தாடா தம்பி...

சின்னத்தம்பி நவரத்தினத்தின் பக்கத்தில் மெதுவாக வந்தான் குரலை செருமிக்கொண்டான்.

''ஐயா'! இவர் எங்கடை பழைய ஆராச்சி தம்பையர் ஒரு அவசரமாய் போகவேணுமாம்' அடையாள அட்டையும் கொண்டுவர மறந்து போனாராம் ஆயிரத்திநூற்றிப்பன்னிரெண்டு நம்பருக்குரிய றிசீற்றை தாருங்கோ...

''இஞ்சை சின்னக்தம்பி பழைய ஆராய்ச்சி எண்டாலென்ன புதுஆராய்ச்சிஎண்டாலென்ன எனக்குப் பரவாயில்லை கியூவிலை வாச்சொல்லு''

.'ஐயா அவர் முந்தி இஞ்சை வேலைசெய்தவர் பாருங்கோ சரியில்லை. கட்டாயம் உதவி செய்ய வேணும். றிசீற்றைத் தாருங்கோ

''சின்னத்தம்பி அங்காலை போ... மனுசரைவேலை செய்ய விடு...'

நவரத்தினம் கோபத்தில் சற்று உரக்கவே கூறினர் சின்னத்தம்பி ஒரு சிற்றூழியன்தானே! அவனுல் எதிர்த்து ஒன்றும் கூற முடியவில்லை.

அவன் பரிதாபாய் கவுண்டருக்கு வெளியே நின்ற தம்பையரைப் பார்த்தான்.

''தம்பி டேய் அவர் தராவிட்டால் விடு நான் ஒரு அவசரம் எண்டபடியால் தான் வந்தனுன்.''

தம்பையர் கூறியது நவரத்தினத்துக்குக் கேட்டது ஆனுல் அவர் அசையவில்லை. பரவாயில்லை

தம்பையர் கவுண்டருக்கு மிக அருகில் வந்தார்.

''தம்பி மனுசரிலை எரிஞ்சு விழாதையுங்கோ நாங்கள் ஆடு மாடு இல்லை ஒரு அவசரம் அந்தரம் எண்டபடியால் தான் உங்களிட்டை வந்து கெஞ்சவேண்டிக்கிடக்கு!''

நாளைக்கு நீங்களும் எங்களைப்போல நிற்கிறகாலம் வராமல் போகாது!...

''நீங்களும் பென்ஷனுக்கு இஞ்சைவந்து என்னைப்போல இதிலை நிற்கத்தான் வேணும் அதைமறந்திடாதையுங்கோ...

படபடப்புடன் கூறிவிட்டுத் தம்பையர் நகர்ந்தார்.

நவரத்தினம் நிமிர்ந்து பார்த்தார்.

"இஞ்சை வாரும்... நான்நிற்கிற நேரம் என்னுடைய அலுவல் எனக்குப்பார்க்கத் தெரியும்

இப்ப நீர் போய் கியூவிலைவாரும்...

தம்பையருக்குச் செயலகத்தில் நல்லமதிப்பு. அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் இருந்தது அவர் உடனே அலுவலக உதவியாளரிடம் சென்று அவரின் உதவியுடன் அன்று பென்சன் பணத்தைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் நின்றுவிடவில்லை நடந்த யாவற்றையும் அரச அதிபருக்கு எழுதி முறையிட்ட தன் பலனாய் நவரத்தினம் அதிபரால் பொதுமக்களின் மனம் புண்படாமல் நடந்து கொள்ளவேண்டுமென்று புத்திமதியுடன் எச்சரிக்கப்பட்டார்

ஆனாலும் நவரத்தினம் மாறவில்லை.

ஓய்வூதியக் கிளையில் இருக்கு மட்டும் அவரது கெடுபிடிகள் குறையாமலே இருந்தன.

கடுமையான குடிப்பழக்கம் சிகரெட் புகைத்தல் இன்னும் பலவேண்டத்தகாத பழக்கங்களால் நவரத்தினம் கடுமையான நோய்வாய்ப்பட்டு ஒரு கையும் காலும் சரிவர இயங்க முடியாமல் பெரிதும் கஷ்ரப்பட்டு பின்னர் வைத்தியக்குழுவினால் ஓய்வு பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டார்.

இன்று அவர் ஓய்வூதியம் பெறுவதற்கு வந்துள்ளார். மற்றவர்களைப் போல் கியூவில் நிற்க அவரால் முடியாது.

தம்பையரும் மற்றவர்களும் சேர்ந்து தன்னைப்பார்த்துச் சிரிப்பது போல் ஒரு பிரமை நவரத்தினத்துக்கு ஏற்பட்டது.

(யாவும் கற்பனை)

ஈழநாடு வாரவெளியீடு

23-9-84

# தீர்ப்பு

வானத்தில் திட்டுத் திட்டாக வெண்பஞ்சுக் குவியல்கள் நீலக்கம்பளத்தில் வெண்முத்துக்களை இடை இடையே பரப்பி அழகு பார்ப்பது போலிருந்தது.

தெற்குத் திசையிலிருந்து சிறகுகளைப் பரப்பிக் கொண்டு பல நூற்றுக்கணக்கான வெண் கொக்குகள் பறந்து சென்றன.

இவ்வளவு அழகுக் கோலங்களையும், வீட்டு வாசலில் நின்று தன்னை மறந்து, சோதிலிங்க மாஸ்டர் ரசித்துக்கொண்டிருந்தார்

"இந்த முறை இவ்வளவு குறைஞ்சு போச்சு...!

தனக்குள் ஒரு முணு முணுப்பு.

'என்னப்பா, விசரன். பயித்தியகாரன் மாதிரி உங்களுக்குள்ளை கதைச்சுக் கொண்டு நிக்கிறியள்!'

குழந்தையைக் கையில் ஏந்தியபடி அவரது மனைவி சரசா வந்து நின்றாள். சோதிலிங்கம் மாஸ்டர் திரும்பினார்.

"ஓமோம்! உமக்கு என்னைப் பார்த்தால் விசரன் மாதிரித்தான் தெரியும்! இயற்கையை ரசிக்கத் தெரிய வேணுமப்பா

இஞ்சை பார், போனமுறை இந்தப் பக்கம் எத்தனை ஆயிரம் பறவைக் கூட்டம்! அதுவும் விதம் விதமாய் வந்து சேர்ந்தன!

எங்கடை மறவன் புலவுமாஸ்ரரின் மகன் கூட பேப்பரிலை இந்த பறவைக் கூட்டத்தைப் பற்றி ஒரு கொடர்கட்டுரை எழுதினார். அதை முற்றிலும் படிச்ச எனக்கு இந்த முறை இந்தப் பறவைகளைப்பற்றி தீர அறிய வேணும் என்று ஒரு ஆசை. யார் கண் பட்டதோ தெரியாது' இந்த முறை சொல்லி வைச்ச மாதிரி கொஞ்ச பறவைகள் தானே எங்கடை பகுதிக்கு வந்திருக்கு?"

'பறவை ஆராய்ச்சி இருக்கட்டும் கடைக்குப் போய் சீனி வாங்கிக்கொண்டு வாங்கோ! இரவுக்கு தம்பிக்கு பால் கொடுக்க சீனி இல்லை '

'எல்லாம் முடிஞ்சாப் பிறகு தான் மனுசனைப் போட்டு கரைச்சல் படுத்துவாயப்பா ...!"

சோதிலிங்கம் மாஸ்ரருக்குக் கோபம் வந்தது.

'சரி, சரி! கோபிக்காமல் போய் வேண்டிக் கொண்டு வாங்கோ... தம்பி அப்பாவை போகச் சொல்லுங்கோ...!

சரசா தனது கணவனைச் சாந்தப்படுத்த மகனின் தயவை நாடியது போலிருந்தது.

இந்த ஊடலை வெகுவாக ரசித்தோ என்னவோ குழந்தை ரவி சிரித்தான்.

'சரி. நான் முகம் கழுவி விட்டு வாறன்...'

மாஸ்ரர் கிணற்றடியை நோக்கிச் சென்றார்.

அவர் கை கால் முகம் கழுவி நெற்றியில் திருநீறு மிளிர சைக்கிளை உருட்டிக் கொண்டு வெளிவாசலுக்கு வந்தார்.

'சும்மா, வாடியடியிலே நிண்டு கதைச்சுக் கொண்டு இருக்காமல் கெதியாய் வாங்கோ...!'

''உனக்கு மனுசரைக் கண்டால் பிடிக்காது! அதுக்காக ஆரன் இரண்டு பேர் நிண்டு கதைச்சால் நான் விட்டுட்டு வாறதே?''

அவர் சயிக்கிளில் ஏற முற்பட்டார்.

'மாஸ்ரர், மாஸ்ரர்! ஒரு அலுவல்...'

கையைத் தட்டிக் கூப்பிட்டபடி கனகராசா விரைந்து வந்தார். அவருடன் கூடவே செல்வராசா.

''கொஞ்சம் நிண்டு போங்கோ.. வெளிக்கிடுகிற நேரம் மனுசன் பிறத்தாலே கூப்பிடுது''!

சரசா பின்னுக்கு நின்று முணுமுணுத்தாள்.

'இதுக்குள்ளை நீ சகுனம் பார்க்கிறாய்!'

சொல்லிக் கொண்டே மாஸ்ரர் சயிக்கிளை ஸ்ராண்டில் நிறுத்தினார்.

'என்ன கனகராசா...'

'மாஸ்ரர் துலைக்கே...' இண்டைக்கு ஏழு மணிக்கு சங்கக் கூட்டம் தெரியும்தானே.. !'

'ஓமோம் தெரியும்! வாடியடிக்குக் கொஞ்சம் சாமான் வேண்டப் போறன். நீங்கள் போங்கோ கெதியிலே வாறன்.'

''மாஸ்ரர், இண்டைக்கு இரண்டு முக்கிய விஷயங்களில் நாங்கள் தீர்மானம் எடுக்க வேணும்.

ஒன்று வரட்சி நிவாரணம் மற்றது முருகன் கோயில் விவகாரம்''

'இந்தக் கோயில் விவகாரத்தை ஒத்தி வைத்தால் என்ன கனகராசா? நிர்வாகத்திலே நாங்கள் தலையிடப் போனால் ஊருக்குள்ளை பெரிய பிரச்சனை உருவாகும்'

'மாஸ்ரர் நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்குது. இப்படியான பொது விஷயங்களில் கிராம முன்னேற்றச் சங்கம் தலையிட்டு நிலைமைகளைச் சீராக்க வேண்டியது அதன் கடமை! அதை நாங்கள் தயக்கத்தோடு அணுகக் கூடாது.''

கனகராசா சங்கக் காரியதரிசி. சதா உணர்ச்சி வசப்படுகிற தன்மை அவனுடையது.

'சரி சரி! நீங்கள் போங்கோ! நான் கெதியிலை வாறன்!'

'நாங்கள் நேரே சங்கத்திற்குப் போறம்! சுணங்காமல் வாங்கோ மாஸ்ரர்'

சோதிலிங்கம் மாஸ்ரர் சயிக்கிலில் ஏறினார்.

வாடியடியில் கந்தப்பிள்ளை கடையில் இரண்டு கிலோ சீனி வேண்டிக் கூடையில் வைத்துக் கொண்டு சயிக்கிலில் ஏறினார்.

சயிக்கில் விசையாக அசைய மறுத்துச் சண்டித்தனம் செய்தது.

கீழே குனிந்து பார்த்தார்.

சயிக்கில் ரியூப்பிடமிருந்து காற்று விடைபெற்றிருந்தது.

''இதென்ன வம்பாய் போச்சு!'

''முணுமுணுத்தபடியே சயிக்கிலை உருட்டிக்கொண்டு போனார்

சொல்லி வைத்தாற்போல், சயிக்கிள் கடை குண்டுமணி கடையைப் பூட்டிவிட்டுப் போய் விட்டான்.

திரும்பி வந்தார்.

பெற்றோல் நிலையத்துக்கு அருகில் பொறுப்பாளர் ராஜேந்திரம் நின்றார்.

'என்ன மாஸ்ரர் சயிக்கிலை உருட்டிக்கொண்டு வாறியள்?

'நேற்றுத்தான் தம்பி காத்தடிச்சது! இப்ப இதிலை நிப்பாட்டிப் போட்டு சீனிவேண்டிக் கொண்டு வாறதுக்குள்ளை காற்றுப்போட்டுது!. உங்களிட்டைப் பம்இருக்கே?''

'கைப்பம் ஒன்று கிடக்கு அடிச்சுப் பாருங்கோ ஒருவேளை ஒட்டுக்கிட்டோ தெரியாது'

ராஜேந்திரம் உள்ளுக்குள் சென்றார்.

'இது மனுசனுக்கு வேலைப்பாடுதான்... இருட்டியும் போச்சு!

முணுமுணுத்தபடியே சயிக்கிளை நிறுத்தி விட்டு, குந்திக் கொண்டிருந்து ரியூப்பின் காற்றுக் குமிழியைக் கழற்றினார்.

— 2 —

டேய் பாலு வாடியடிக்குப்போய் டீசலேயும் அடித்து காத்தையும் பார்த்துக்கொண்டு கெதியா ஏழுமணிக்கு வெளிக்கிட்டு வாங்கோ. நான் முதலில்போறன்'

சுந்தரம்பிள்ளை கூறிக்கொண்டே காரில் ஏறினர்.

பாலு மௌனமாக தலையாட்டினான்.

கறுக்காதீவு புழுதியெல்லாம் தழுவிக்கொண்டு சுந்தரம்பிள்ளை 'கேம்பிரிச்' ஓடியது.

கார் மறைந்ததும், சுந்தரம்பிள்ளையின் தம்பி பாலுவும் டிராக்ரர் சாரதி கண்ணனும் மிகவும் சந்தோஷப்பட்டனர்.

'டேய் கண்ணன் ஓடிப்போய் போத்தலேயும் கிளாசையும் எடுத்துக்கொண்டு வா –மிச்சத்தையும் அடிச்சுப் போட்டு வெளிக்கிடுவம்.'

கண்ணன் வெகு உற்சாகமாய் காவல் கொட்டிலுக்குள் சாக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தலேயும் கிளாசையும் எடுத்துக்கொண்டு வந்தான்.

போத்தலில் சரக்கு சரி அரைவாசிக்கு இருந்தது. இருவரும் போத்தலே காலியாக்கினர்.

'கல்ஓயா' முறையாகச் செயற்படத் தொடங்கியது.

'டேய் கண்ணன், திறப்பை என்னட்டைத் தா!'

டிராக்ரர் சாவி பாலுவின் கைக்கு மாறியது

'தம்பி இது ஒரு மூலைக்குக் காணுது பாந்தனிலை ஒரு அரை எடுத்தால் தான் கணக்காய் இருக்கும்.'

'பாந்தனிலை இல்லா விட்டால் பளையிலை எடுப்பம்!'

சொல்லிக்கொண்டே பாலு டிராக்ரரைக் கிளப்பினான்.

'தம்பி உனக்கு, லைசென்சும் இல்லை, கவனமாய் ஓடு!

'கண்ணன் நீ பயப்படாமல், இரு! நானல்லோ ஓடுறது!'

படுவேகமாக டிராக்ரர் ஓடியது.

'தம்பி மெதுவா! மெதுவா ஓடு!

கண்ணன் இடைக்கிடை கூறியும் பாலு அதைக் கவனிக்கவில்லை.

'வாடியடி வருகிறது.

வேகத்தைக்குறை! பொலிஸ்காரர் நிற்பினம் கவனம்!'

வாடியடி பெற்ரேல் நிலையம் நெருங்கி விட்டது. படுவேக மாய் ஓடி வந்த டிராக்ரரைக் கண்ட சிலர் பயந்து வீதியின் இரு மருங்கும் ஒதுங்கினர்.

'ஆரடா இவன்! வெறியிலே ஓடுருனே...?'

யாரோ ஒரு பாதசாரி கூறியது காற்றில் கலந்தது.

பெற்ரேல் நிலையத்திற்கு வெகு அருகில் வந்தும் பாலுவால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

கிளிநொச்சிக்குப் போகவேண்டிய பஸ் வாடியடியில் தரிப்பில் இருந்து புறப்பட்டது.

'நல்லா வெட்டி நிற்பாட்டு பஸ்வருகுது!'
கண்ணன் கத்தினன்.
பாலு பிரேக்கை மிதித்து சாய்த்து வெட்டினன்.
'எட ஆளடா! ஆளடா! இஞ்சாலே திருப்பு!'
மறுபடியும் கண்ணன் கத்தினன்.
ஆனல் அதற்குள் காரியம் மிஞ்சிவிட்டது.

சயிக்கிலின் அருகில் குந்திக்கொண்டிருந்த சோதிலிங்க மாஸ் ரரை டிராக்ரரின் முன்சில்லு மோதிவீழ்த்த, பின்சக்கரம் அவரது தலையில் ஏறியது.

'என்ரை ஐயோ அம்மா' தீனமான குரல்...

நெஞ்சை ஊடுருவிப் பாய்ந்தது.

ஒரு கணம் என்ன நடந்தது என்று கணிக்குமுன் பாலுவும் கண்ணனும் டிராக்ரரை விட்டு இறங்கி இருளில் சங்கமமாயினர்

—3—

ஆஸ்பத்திரிக்கே உரித்தான மருந்து நெடி ஆஸ்பத்திரி வள வுக்குள் காற்ருேடு கலந்து ஐக்கியமாகின்றது. இனம் புரியாத ஏதோ ஒரு உணர்வு சரசாவின் அடிவயிற்றை பீருண்டியது. சூரு வழியால் தாக்குண்ட மரம்போல கையில் குழந்தையை ஏந்திக் கொண்டு நின்ருள்.

இரவு முழுவதும் அழுததாலோ என்னவோ அவள் கண் முகம் இரண்டும் வீங்கியிருக்கின்றன.

கூடவே அவளுடைய நெருங்கிய உறவினர் ஐந்தாறு பேர் ஊர்க்காரர் சிலர் எல்லாருமாக குழுமி நின்றனர்.

'சாய், நேற்றுக் கல்லுமாதிரி இருந்த மாஸ்ரர் இண்டைக் குப் பிரேதமாய்க் கிடக்கிருர்...'

'அதில்லைப் பாருங்கோ கூட்டத்துக்கு வாறன் எண்டு சொல்லிப்போட்டு சயிக்கிலில் ஏறிப்போனவர்தானே! இப்படி டிராக்ரர் அடிக்குமென்று நான் கனவில் கூட நினைக்கவில்லை' கனகராசாவின் குரல் தளதளத்தது.

''சங்கத்து வேலைகளை ஒரு உருப்படியாய் செய்த மனுசன் போட்டார் சாய்'

செல்வராசாவின் முகம் கவலையாய் இறுகிக் கிடந்தது.

'உங்களுக்குத் தெரியாது பாருங்கோ, சோதிலிங்க மாஸ்ரர் எங்கடை பள்ளிக்கூடத்துக்கு இடம் மாறிவந்த பின் எவ்வளவு மாற்றம் பிள்ளைகளுக்குள்! எல்லாரும் நல்ல ஒழுக்கம்!

'இனிப் பாருங்கோ சோதிலிங்க மாஸ்ரர் சிகரட் பீடி கள்ளுச் சாராயம் என்ற கதையே கிடையாது அவ்வளவு ஒரு ஆசாரமான குடும்பத்திலிருந்து வந்தவர்! கடவுளுக்குப் பொறுக்கவில்லை. கொண்டு போய்விட்டார்...!

பாடசாலை அதிபர் கந்தையாபிள்ளை கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''டிராக்ரர்காரனை பிடிக்கவில்லையோ தம்பி?''

யாரோ ஒருவர் கேட்டார்.

''அவன் நிண்டால் தானே பிடிப்பதற்கு''

கேட்டவரின் கேள்விக்கு விடை கிடைத்தது.

இருந்தாற்போல் அதிபர் கந்தையாபிள்ளை கனகராசாவை தனிமையில் அழைத்தார்.

'தம்பி பிணத்தை எப்ப தருவார்கள்? ஏற்பாடுகள் என்ன மாதிரிச் செய்வம்?''

'பிரேத பரிசோதனை செய்ய டாக்குத்தர் 10 மணிக்குத்தான் வருவாராம் அது முடிந்தால் தானே மற்றக்காரியங்களைக் கவனிக்கலாம்.

கனகராசா கூறினன்.

இதற்குள் கறுத்தக்கார் ஒன்று ஆஸ்பத்திரி வளவுக்குள் நுழையவே, எல்லோருடைய பார்வையும் அங்கு சென்றது.

'டாக்குத்தர் வந்திட்டார் போலை கிடக்கு'

கனகராசா கந்தையாப்பிள்ளையை விட்டு அப்பால் சென்றார் சரசாவின் தேகம் குலுங்கி விம்மல் அதிகமாகியது.

'நான் உங்களை விட்டு விட்டு வந்தது பெரிய பிழை அறு வான்கள் செய்த வேலையை நினைச்சால் எனக்கு என்ன செய்இற தென்று தெரியவில்லை'

முதலாளி சுந்தரம்பிள்ளையின் தேகம் படபடத்தது.

டிராக்ரர் சாரதி கண்ணனும், சுந்தரம்பிள்ளையின் தம்பி பாலுவும் ஒன்றும் பேசாமல் நின்றனர். இரவிரவாக ஓடிய களைப்பு அவர்கள் முகத்தில் தெரிந்தது.

சுந்தரம்பிள்ளை சிறிது நேரம் யோசித்தார் வீட்டுக்குள் போய் புதுச் சலவை நோட்டுக்களாய் பணத்தை எண்ணி தன் கைப்பையில் வைத்துக்கொண்டு வெளியே வந்தார்.

'ஏறுங்கோடா காரிலை ..' அவரின் அதட்டலோடு கண்ணனும் பாலுவும் காரில் ஏற, அது பறந்தது.

சுந்தரம்பிள்ளையின் ஆப்த நண்பனும், சட்ட ஆலோசகரு மான சட்டத்தரணி சங்கரனின் வீட்டு வாசலில் கார் உறுமி விட்டு நின்றது.

உள்ளுக்குள் விரைந்த சுந்தரம்பிள்ளை சங்கரனுடன் ஏதோ கதைத்தார்.

சற்றுநேரத்துக்கெல்லாம் சங்கரனையும் சுமந்துகொண்டு கார் மறுபடி விரைந்தது.

பொலிஸ் அதிகாரியின் வீட்டிலிருந்து புறப்பட்ட சுந்தரம் பிள்ளையின் முகமும் சங்கரனது முகமும் திருப்தியைக் கொண்டிருந்தன.

டாக்டர் கேசவன் காலையில் எழும்பும்போதே சோம்பலுடன் எழுந்தார்.

அவரின் மனைவி இருவாரங்களாக கொழும்பில் தாய்வீட்டில் நிற்கிறாள்.

'மனுசனுக்கு நல்ல நிம்மதியான சீவியம்...

மனைவி போனவுடன் தனக்குள் திருப்தியாகச் சொல்லிக் கொண்டார்

நேற்று இரவும் நண்பர்களுடன் 'கிளப்பில் கொஞ்சம் ஓவராக போட்டு விட்டார்.

காலைக்கடன்களை முடித்து விட்டு வேலைக்காரன் கொண்டு வந்து வைத்த உணவைச் சாப்பிட்டுவிட்டு பத்திரிகை படித்துக் கொண்டு இருந்தார்.

இடையில் ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு அவசர டெலிபோன் பத்து மணிக்கு வருவதாக அறிவித்துவிட்டு மறுபடி பத்திரிகையில் கண்களை மேயவிட்டார்.

வீட்டுவாசலில் நின்ற பெரிய காரைக் கண்டதும் அவரது புருவங்கள் உயர்ந்தன.

வீட்டுக்குள் வருபவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சட்டத்தரணி சங்கரன் டாக்டரது நண்பன். அவரது இளப் நண்பன் இருவரும் 'பிரிட்ஜ்' விளையாட்டில் தோழர்கள்.

சங்கரனைக் கண்டதும் அவரது முகம் மலர்ந்தது.

சுந்தரம்பிள்ளை காரிலிருந்து இரண்டு 'மெண்டிஸ் ஸ்பெசல்' போத்தல்களை கடுதாசியால் சுற்றி எடுத்துக் கொண்டுபோய் உள்ளே மேசையில் வைத்தார்.

மூவரும் உரையாடினர். டாக்டர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். இருந்தாற்போல் சங்கரன் சுந்தரம்பிள்ளைக்குக் கண் காட்டவே. சுந்தரம்பிள்ளை எழுந்து வெளியே சென்றார்.

தன் கால்சட்டை 'பொக்கற்றுகளில் இருந்து புது நோட்டுக் கற்றைகளை எடுத்து டாக்டருக்கு பக்கத்தில் இருந்த 'ரீப்போவில் வைத்தார் சங்கரன்.

'உதென்ன வேலை...

டாக்டர் முணுமுணுத்தார்.

'அதெல்லாம் சரி எடுத்து வையுங்கோ...

சங்கரன் சிரித்துக் கொண்டே கூறினர்.

டாக்டர் ஒன்றும் பேசாமல் நோட்டுக் கற்றைகளை எடுத்து மேசை லாச்சியைத் திறந்து உள்ளே வைத்தார்.

'அப்ப என்ன நான் வரட்டே... மிச்சமெல்லாம் நீங்கள் பார்ப்பீர்கள்தானே

சங்கரன் எழுந்தார்.

நீங்கள் கவலைப்படாமல் மற்ற அலுவல்களைப் பாருங்கோ இதை நான் கவனிக்கிறன்.

ஒருவித திருப்தியுடன் சங்கரன் வெளியே வந்தார்.

'என்ன சங்கரன்? விஷயம் சரியா...?

சுந்தரம்பிள்ளை கவலையுடன் கேட்டார்.

'எல்லாம் முறையாய் செற் பண்ணியாச்சு நாங்கள் மற்ற அலுவல்களைப் பார்ப்பம் ஏறு காரிலே

சுந்தரம்பிள்ளை மௌனமாகக் காரை எடுத்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட அலங்காரமான சுவர் மணிக் கூட்டின் சங்கீதஒலி வீடெங்கும் வியாபித்தது.

9 . 45

ஒருவித மந்தஹாசத்துடன் டாக்டர் கேசவன் எழுந்தார். சுந்தரம்பிள்ளை கொண்டுவந்த 'மெண்டிஸ் ஸ்பெசல் போத் தலை எடுத்து மூடியைத் திருகினார்.

குளிர்ப்பெட்டியில் இருந்த சோடாவை எடுத்து கிளாசில் நிறைய ஊற்றிக் கலந்து கடகடவெனக் குடித்தார்.

ஒருவிதத் திருப்தி அவர் முகத்தில் நிலவியது.

அலுமாரியைத் திறந்து போத்தல்களை வைத்துப் பூட்டினார்

'பெடியன் வீட்டைப் பார்த்துக்கொள்.

உள்ளே பார்த்துக் கத்தினார்.

வேலைக்காரப் பெடியனது முகம் தெரிந்தது.

அடுத்த கணம் அவரது கார் ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தது.

கிராம சபை வைத்தியசாலையின் வாசலில் நின்ற ஆலமரம் தன் நிழலால் வாடியடி முழுவதையும் தன்னுள் அடக்கி வியா பித்து நின்றது.

வாடியடி உயிர் பெற்றிருந்தது.

சந்தை வியாபாரம் மும்முரமாக நடக்கிறது.

சட்டத்துக்கு அமைந்த வியாபாரம், சட்டத்துக்கு அமை யாத வியாபாரம் என்று கலவையான சந்தைக் கூட்டம்.

எதிலும் ஓர் ஒழுங்கற்ற தன்மை

பஸ்கள் ஓடுகின்றன, டிராக்ரர்கள் வந்து திரும்பிப் போகின் றன.

பழைய ஓய்வு பெற்ற விதானையார் சட்டநாதர் ஏதோ ஒரு கடையின் உள்ளுக்குள் இருந்து வெளியே வருகிறார். வாயைத் துடைக்கிறார். இடைக்கிடை துப்பிக்கொள்கிறார்.

'அறுவான்கள் சரிக்குச்சரி தண்ணீர் கலக்கிறுங்கள்' அவருக் குத் திருப்தி இல்லை.

நெல்லு ஏற்றி வந்த டிராக்ரர் ஒன்று ஓடி வந்து வைத்திய சாலைக்குப் பக்கத்தில் நிறுத்தப்படுகிறது.

விதானையார் தள்ளாடியபடி சற்று விலகுகிறார்.

'கவனம் விதானையார் கடைசி நேரத்தில் டிராக்ரரிலை அடி பட்டுச் சாகப்போறியள்.']

பழகிய குரல்: கேலியாகக் கூறினர்.

'ஓமடா ஓம் விதி அப்படி எண்டால் சாக வேண்டியது தானே.

தானெண்டாலும் இப்ப குடிச்சுப் போட்டு வெறியிலை நிற்கிறன்.

அவன் சோதிலிங்க மாஸ்ரரும் குடிச்சவனே?

அநியாயமாய் அவனைத் தட்டிச் சாக்காட்டிப் போட்டு, வெறியிலை வந்து விழுந்து அடிபட்டதெண்டு தீர்த்து விட்டாங்களே பார்த்தியே!

'இது தான்ரா இண்டைய உலகம்.!

காறித் துப்பிவிட்டு மறுபடியும் அந்தக் கடையினுள் நுழைந்தார் பழைய விதானையார்.

யாவும் கற்பனை

வீரகேசரிப் பிரசுரம் 5 . 6 . 1982

# ஒரு காகிதப் பூ கருக்கட்டுகிறது

பங்குனி மாதத்து வெய்யில் உடலைத் தகித்தது. வியர் வைவெள்ளம் முகமெல்லாம் ஆறாகப்பெருக சிவராஜன் உலகத்து வெய்யிலெல்லாம் தன் தலைக்குத்தான் அர்ப்பணம் என்ற நிலை யில் சயிக்கிளில் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார்'

சயிக்கிலுக்கு முன் பக்கம் பின்பக்கம் இரண்டுக்கும் மக்காட் கிடையாது

''செயின் கவர் இல்லை லைற் இல்லை

ஏதோ சயிக்கிள் என்ற பெயரோடு ஓடிக்கொண்டிருக்கிறது

''பிரேக் மாத்திரம் நல்ல புல் பிரேக் அத்துடன் கிராமச் சபையில் பணம்கட்டி எடுத்த லைசென்ஸ் இலக்கத் தகடும் பளிச் செனத் தெரிந்தது.

வேகத்தைச் சற்றுத் தணித்து, நெற்றியில் வழிந்த வியர் வையை கைவிரலால் லாவகமாய் துடைத்தெறிந்தான், வியர்வை யைத் துடைத்தெறியலாம்.

ஆனால் வாழ்க்கையைக்கப்பியிருக்கும் துயரை யார் துடைத் தெறிவார்.

அவனுக்கு இதயமெல்லாம் கனத்தது.

''இன்னும் எத்தனை நாளைக்கு இந்த நாயோட்டம் ஓடப் போகிறேனோ தெரியாது:

வாய்க்குள் முணுமுணுத்துக் கொள்ளும்போதே அவனை அறி யாமல் சலிப்பு வந்து தொண்டையை ஏதோ அடைத்தது.

வரும்வழியில் முருகன் கோவில் இருக்கின்றது. கிராமத்துக் கே அழகூட்டுமிடம் ஆலும் அரசும் வேம்பும் போட்டி போட்டு சடைத்து வளர்ந்து நிழல் பரப்பிக் கொண்டிருந்தன.

கோவிலடியும் அதன் சுற்றுப்புறமும் பளிச்சென்று காட்சி யளித்தன.

வெய்யிலின் சூடு தணியட்டும் என்று நினைத்த சிவராஜன் தன்னையறியாமல் அரசமரத்தின் கீழ் சயிக்கிளை நிறுத்தினான்.

கோவில் வடக்கு வீதியால் கோவில் தர்மகர்த்தாவின் மாமி

யார் பாக்கியம் கையில் மரவள்ளிக்கிழங்கு இரண்டை ஏந்திய படி வந்து கொண்டிருந்தாள்,

சிவராஜன் பார்த்து விட்டான்,

''இந்த மனுசிகாணமுன் போய்விட வேண்டும்'' வாய்க்குள் முணுமுணுத்தபடி சயிக்கிளை நகர்த்தினான்.

ஆனால் அவனின் எண்ணம் பலிக்கவில்லை'

பாக்கியம் கண்டுவிட்டாள்.

'எட தம்பி சிவராஜன் .. இஞ்சை நில்லடா ஒரு அலுவல்',

'சனியன் பிடிச்ச மனுசி என்ன விடுப்பு கதைக்கப்போகுதோ மனம் சலித்தவாறு நின்றான்.

முகத்தில் ஒரு போலியான சிரிப்பை வரவழைத்தான்.

என்ன பாக்கியக்கா...

''எங்கையடா போட்டு வாறாய் ..? உதென்ன பையிலை...? சயிக்கிளில் தொங்கிக்கொண்டு இருந்த ஓலைப்பையை நோக்கிய படியே விசாரணை தொடங்கியது.

நான் பால்கொடுத்து விட்டு ரவுணுக்குப் போட்டு வாறன்

''எட தம்பி நீ வெளிநாட்டுக்குப் போறியாம் உண்மையேடா

வெற்றிலைக்காவிதெரிய பாக்கியம் சிரித்தபடியே கேட்டாள்

''இதென்ன புதுக்கதை ... ஆர்சொன்னது...?

எட ஒளியாதையடா... எனக்குச்சொன்னால் என்ன ஆரெண்டாலும் நல்லாயிருக்கவேணும். உன்ரைகொப்பரும் கொம்மாவும் படுகிறகஷ்டத்திற்கு நீ இப்ப ஏதும் போய் உழைத்தால் தானடா தம்பி ஒருமாதிரி முன்னுக்கு வரலாம்...

''அது சரி பாக்கியக்கா உங்களுக்கு ஆர்இந்த வெளிநாட்டுக் கதை சொன்னவை? வெளிநாட்டுக்குப் போறது எண்டால் சும்மாவே அப்பிடி ஒரு விஷயமும் இல்லை... ஆரோ உங்களுக்குப் பிழையாய் சொல்லிப் போட்டினம் போலகிடக்கு

சிவராஜன் சிரித்தபடி கூறினான்.

ஒருவேளை உன்ரை சின்னம்மாவின்ரை மோன்ரகுபோறானோ பாக்கியம் தொடர்ந்தாள்.

''என்னவோ தெரியவில்லை போறதெண்டால் தெரியவரும் தானே நான் வாறன் சிவராஜன் சயிக்கிளை நகர்த்தினான்.

சயிக்கிளில் தொங்கிக் கொண்டிருந்த ஓலைப்பையில் சிறைப் பட்டுக்கிடந்த வெற்றுப் போத்தல்கள் தம்முள் சப்தஜாலங்களை எழுப்பின.

வீடுசேரும்வரை அவனதுமனம் சிந்தனையில் மூழ்கியது.

''ஒருவேளை ரகுபோகப்போறுனே .. நேற்றுக் கண்டுகதைத் தவன்தானே... அப்படி ஒன்றும் கதைக்கவில்லையே...

சயிக்கிளை தாழ்வாரத்தில் நிறுத்திவிட்டு போத்தல்கள் அடங் கிய பையை உள்ளே கொண்டுபோய் வைத்தான் ஆள்அரவம் கேட்டு அவனது தாய் சாவித்திரி வெளியே வந்தாள்.

''சிவா, கை காலை கழுவிப்போட்டு வா வந்து சாப்பிடு...

அப்பா எங்கே அம்மா?...

அவர் விதானை வீட்டை போட்டார் தம்பி எங்களுக்குஉணவு முத்திரை இந்தமுறை தரமுடியாது என்று சொல்லிப்போட்டின மாம் அதுதான் விதானையாரைக் கேட்டுப் பார்ப்பம் என்று போய் விட்டார்.

''அப்பாவின்ரை சம்பளம் முன்னூறுக்கு குறைவுதானே போனமுறை முத்திரை தந்தவை தானே... இந்த முறை ஏன் இல்லையாம் ...

ஆருக்குத்தெரியும் இவங்கடை சட்டம். ஆரோ விதானை யாருக்குப் பெட்டிசம் போட்டிருக்கினமாம். நாங்கள் மாடுவைச்சு பால் வித்து நல்ல வருமானம் எடுக்கிறம் எண்டு... விதானை யாரும் புதுப்பெடியன்... உணவுமுத்திரை சிபார்சு செய்யமாட் டாராம்...'' சாவித்திரியின் வார்த்தைகளில் ஒரு அலுப்பு.

''தாரட்டி விடட்டும்... இதைநம்பியா நாங்கள் சீவிக்கிறம் சிவராஜன் சொல்லிக்கொண்டே கிணற்றடிக்குச் சென்றுன்.

விதானையார் என்ற சொல்லைக் கேட்டவுடன் அவனுக்குத் தேகமெல்லாம் எரிந்தது...

கூட்டுறவுச் சங்கத்தில் இரவுக் காவலாளி வேலைகாலியாக இருப்பதை அறிந்து அந்த வேலையை எப்படியாவது பெற்றுவிட வேண்மென்று மடியாய் நின்றுன்.
எம். பி. யின் சிபார்சுக் கடிதம் இருந்தால் வேலைநிச்சயமென் றுர்கள்.

எம், பி. யை அவனுக்குத் தெரியும். ஆனுல் எம். பி க்கு அவனைத்தெரியாது.

என்ன செய்வது அவர் இருபது மைல்களுக்கு அப்பால் உள்ள ஊரைச் சேர்ந்தவர்! இந்தத்தொகுதியில் நின்று வென்று இன்று எம். பியாக இருக்கிருர். எம். பிக்குத் தெரிந்த ஒருவரைப் பிடித்துக்கொண்டு சென்றபொழுது ''விதானையாரின் நற்சாட்சிப் பத்திரம் வேண்டிவா!'' என்ருர்.

விதானையார் வீட்டுக்குப் பத்துநாள் அலைந்தான்.

''புத்தகம்முடிந்துவிட்டது நாளைக்குவா!

இரக்கமற்ற இந்தப் பதில் பத்துநாள் தொடர்ந்தது பின்னர் அரும்பாடுபட்டுக் கிடைத்த நற்சாட்சிப் பத்திரத்துடன் எம். பி, வீட்டுக்குச் சென்ருன்

அவன் உள்ளமெல்லாம் குதூகலித்தது வேலைகிடைத்துவிடுமென்று

அவனைக்கண்டதும் எம் பி எரிந்து விழுந்தார்

என்னப்பா உங்கடை தொந்தரவு யெரிய தொந்தரவாய்ப் போச்சு! இவ்வளவு நாளும் வருவாய் வருவாய் என்று பார்த்துக்கொண்டு இருந்தேன் நேற்றுத்தானே ஒரு பெடியனை சிபார்சு பண்ணி அனுப்பிப் போட்டன் போய்விட்டு வா அடுத்தமுறை ஏதும் வேலைவந்தால் பாப்பம்...!''

உள்ளம் வலிக்க வீடுவந்து சேர்ந்தான்.

அடுத்தநாள் காலை பால் கொண்டு போகும்போது சங்கக் கடை வாசலில் கையில் ரோச்லைற் சகிதமாய் இரவுக்காவலாளி தன்கடமையை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட ஆயத்தம்செய்து கொண்டிருந்தான்

சிவராஜன் திடுக்கிட்டான்

அந்த இரவுக் காவலாளி வேறுயாருமல்ல அவனை பத்துநாள் அலையவைத்த விதானையாரின் தம்பி முத்தையாதான்!

சிவராஜனுக்கு நெஞ்சமெல்லாம் வலித்தது தான் நன்ருக ஏமாற்றப்பட்டு விட்டதாக எண்ணி எண்ணிக் குமைந்தான்

நயவஞ்சக உலகம் அவனைப் பார்த்துச் சிரிப்பதாக அவனுள் ஓர் பிரமை"

வீட்டுக்கு வந்தபோது விதானையார் கொடுத்த நற்சாட்சிப் பத்திரம் அவனைப்பார்த்துச் சிரிப்பது போல் தெரிந்தது.

கந்தையா, சாவித்திரி, சிவராஜன் மூவரும் கொண்ட சிறு குடும்பம் அது.

கந்தையா பஞ்சாங்கம் அடிக்கும் அச்சுக்கூடத்தில் மாதம் இருநூற்று ஐம்பது ரூபாவுக்கு மாரடிக்கும் ஒரு ஊழியர்

சீவியம் கஷ்டமானது தான். ஒருமாடு நின்று பால்கறந்தது காலையில் நாலுபோத்தல் மாலையில் மூன்றுபோத்தல் வாடிக்கையான சில இடங்களுக்குக் கொடுத்து வருகிற வருமானத்தைக் கொண்டு ஒருமாதிரி அக்குடும்பம் சீவியத்தை ஓட்டுகின்றது.

சாப்பிடும்போது சாவித்திரி சிவராஜனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''அம்மா நான் வாறவழியில ஆறுமுகத்தின்ரை பாக்கியக்கா கண்டு கதைச்சவ ..

எங்கடை ரகு வெளிநாட்டுக்குப் போகப் போறதாக தான் கேள்விப்பட்டாவாம். உங்களுக்கு ஒன்றும் தெரியாதே...

சாவித்திரியின் சொந்தத் தங்கை மகன் ரகு.

''அவன்தானே முந்தி எங்கேயோ கொண்டுபோய் காசு ஐயாயிரம் கட்டிப்போட்டு ஏமாந்துபோனனே! பேந்தும் வெளிக்கிடப் போறுணுமோ...!''

''அவையளுக்கு காசு ஒரு தூசு. எங்களைப் போலையே'' சிவராஜனின் பேச்சில் விரக்தியின் சாயல்.

''அதுக்கு என்ன செய்கிறது மோனை... அவை அவையள் கொடுத்து வைச்சளவுதானே எல்லாம்...''

சாவித்திரி மகனைச் சமாதானப்படுத்தினாள்.

சிவராஜன் சாப்பிட்டுவிட்டு வெளிவிறுந்தையில் இருந்து வீரகேசரி பார்த்துக் கொண்டிருந்தான். புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படக்கூடும்'' என்ற செய்தி அவனது கவனத்தை ஈர்த்தது

''என்னவாம் புதினங்கள்...?''

குரல்கேட்டு நிமிர்ந்தான் சிவராஜன். வந்தது அவனது நண்பன் ஆனந்தன்.

''வாடா வா!''— சிரித்தபடியே தன்நண்பனை வரவேற்றான் சிவராஜன்.

ஆனந்தன் நண்பனது வரவேற்பை ஏற்று சிரித்தபடியே அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்தான்.

''எப்படிக் கொண்டக்டர் உத்தியோகம்?'' சிவராஜன் கேட்டான்.

''ஒருமாதிரிப்போகுது... அனுகிடக் கட்டும் நீ ஒண்டுக்கும் முயற்சி எடுக்கவில்லையா சிவா?''

''எடுக்காமல் என்ன...... எனக்கு மனம் களைத்து விட்டது போடாத விண்ணப்பமில்லை. காணாத ஆட்கள் இல்லை... 'அவனது பதிலில் சொல்லமுடியாத விரக்தி தொக்கி நின்றது:

''பாங்கில் ஆட்களை எடுக்கப் போகினமெண்டு கதை நடந்ததே. உனக்குத் தேவையான தகுதி இருக்கிறதுதானே... அதுக்கு முயற்சி பண்ணியிருக்கலாமே'

''அந்தப் பரிதாபத்தை ஏன் கேட்கிறாய் ஆனந்தன்! எம். பி ஐந்து ஆட்களுக்கு பாங்கில் உத்தியோகம் கொடுக்கப் போவதாக அறிந்து நானும் என்னுடைய சேர்டிபிகேட் எல்லாவற்றையும் சுமந்து கொண்டு போனதுதான் மிச்சம். எம். பி. யின் அந்தரங்கக் காரியதரசி எல்லாவற்றையும் பார்வையிட்டு இரண்டு மூன்று கிழமைக்குப் பிறகு வரச்சொன்னார். கடைசியில் எனக்குக் கிடைச்சது ஏமாற்றம் தான்...'

''தேர்தல் நேரத்தில் வேலையற்ற பெடியன்களுடைய பெயர்களை எல்லாம் எங்கடை சுப்பையாவின்ரை மகன் குமார் சேகரித்துக்கொண்டு திரிந்தானே சிவா...! அவனைப்போய் கண்டு கதைச்சால் என்ன...?

''தேர்தல் வாக்குச் சேகரிக்க அவன் ஒரு திறமையான பிரசார யந்திரமாய் செயல்பட்டான். இப்பொழுது அவனொரு பயிர்ச் செய்கை உத்தியோகத்தனாய் எடுபட்டு விட்டான். இப்ப என்னைப் பார்த்துக் கதைக்கக்கூட அவனுக்கு நேரமில்லை...!

',வேலை வங்கிக்குப் போட்ட அப்பிளிக்கேசனும் சரி வரவில்லையாக்கும்''

''வேலை வங்கியோ.........!

அதைப்பற்றிக் கதைத்து ஏன் வீணாக மனவருத்தப்பட வேண்டும். வேறு ஏதாவது கதையன் ஆனந்தன்...!

',அதுசரி: நீ ஏ. எல். சோதனையில் மூன்று பாடம் பாஸ் பண்ணியும் இந்தநிலை உன்னுடைய சின்னம்மாவின்ரை மோன் ரகு ஒருசாதாரண எஸ். எஸ்சி தானே! இப்ப தனக்கு ரீச்சிங் போஸ்ற் ஒன்று கிடைக்கும் என்று சொல்லிக் கொண்டு திரிகிறான்! அதுக்கு என்ன சொல்கிறாய்...'

''ரகு ஆறு ''சீ யும் இரண்டு'' டி'' யும் எடுத்துப் பாஸ் பண்ணினவன். அவனுடைய நல்ல காலம்உத்தியோகம் கிடைக்கப் போகுதாக்கும்.

''சிவா... அதைக் கதையாதை! அந்த நாலு ''சீ''யும் இரண்டு ''டீ''யும் வந்தவிதம் எனக்குத் தெரியும்.... அவன் பரமநாந்தன் தானே இவனுக்காக குதிரை ஓடினவன். எனக்கு நடந்ததெல்லாம் தெரியும் நான்தானே அதைப் பேசிஒழுங்கு படுத்தினவன்...... பரமநாதனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து சோதனை எழுதிவிச்ச படியால் இண்டைக்கு ஒரு மனுசனாய் திரியிறன்; எல்லாம் காசு செய்யிற வேலை மச்சான்!'' ஆனந்தனின் குரலில் ஆத்திரம் தொனித்தது.

''ஆனந்தன் நீ சொல்வது சரி! அவனுடைய காலம் பணத்தைக் கொடுத்தாவது ஒரு ஸ்தானத்தைத் தேடிக்கொள்ள முடிகிறது; நாங்கள் இதைக் கதைச்சு மனவருத்தப்பட்டுக் கிடைப்பது என்ன...? நாங்களும் முறையாகப் போய்ப் பார்ப்பம்!''

''நல்ல முறையைக் கதைக்க வந்திட்டாய் சிவா! நானும் இந்தமுறை எல்லாம் பார்த்துவிட்டு கடைசியில் அலுத்துப்போய் அம்மாவின்ரை தாலிக்கொடியை அடைவு வைச்சு காசு கொடுத்துத் தானே இந்தக் கொண்டக்டர் உத்தியோகம் கிடைச்சுது! ஆக மிஞ்சி என்னுடைய உத்தியோகத்தின்ரை விலை மூவாயிரம் ரூபாய் ஆனந்தன் விரக்தி கலந்த சிரிப்பு ஒன்றை உதிர்த்தான்.

''மூவாயிரம் ரூபாயோ'' வாயைப் பிளந்தான் சிவராஜன் அப்படி ஒரு மூவாயிரம் ரூபாய் கையில் இருந்தால் தனக்கும் உடன்ஒரு வேலை கிடைக்காதா என்ற நப்பாசை தோன்றி மறைந்தது.

ஆனல் அவன் எங்கே போவான் அவ்வளவு பணத்துக்கு...!

''மூவாயிரம் காசாய் அள்ளிக் கொடுத்தது... இரண்டு முறை ரெஸ்ட்க்கவுசில் கட்சி அமைப்பாளனுக்கும் அவன் கூட்டிக்கொண்டுவந்த பரிவாரங்களுக்கும் பார்ட்டி வைச்சதில் ஐந்நூறு ரூபாய் கரியாய்ப் போச்சு! இதையெல்லாம் ஆரிடம் போய்முறையிடுவது?,

''ஏன் ஆனந்தன், கட்சி அமைப்பாளன் உனக்குத் தெரிந்தவன். நிச்சயம் உதவிசெய்வான் என்று சொல்லிக் கொண்டிருந்தாயே...?'' சிவராஜன் வியப்புடன் கேட்டான்.

''அப்படித்தான் நானும் அவனுடைய சிரிப்பிலே மயங்கி அவனொரு நேர்மையான சமூகத்தொண்டன் என்று நம்பினேன் கடைசியில் எல்லாரும் ஒரே குட்டையில் ஊறியமட்டையள்தான்

''அவர்கள் கேட்கிற காசைக் கொடுத்து உத்தியோகம் எடுக்க ஆட்கள் தயாராயிருக்கிறார்களே. அப்படியிருக்க நாம் ஏன் திட்டு வான்?'' சிவராஜன் கேட்டான்.

''அதுதானடா சிவா எங்கடை சமூகத்தைப் பிடிச்சநோய்! இப்படியான மனோபாவம் வளர்ந்துதான் சமூகம் புரையோடிய புண்ணாக தோற்றமளிக்கிறது''

ஆனந்தன் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான்.

சிவராஜன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இரண்டு வாரம் கழிந்தன. ஒரு நாள் சிவராஜன் தன்னு டைய உடுப்புகளைக் கிணற்றடியில் தோய்த்து உலர்த்திக்கொண்டு இருந்தான்.

''என்னசிவா, வெள்ளாவி வைக்கிறாய் போலகிடக்கு''

—பேச்சுக்கேட்டு நிமிர்ந்தான் சிவராஜா.

மடிப்புக் குலையாத சுழிசானும் பட்டுச்சேட்டுமாய் நின்றான்ரகு

''என்னடாப்பா நீ வெளிநாட்டுக்குப் போறியாம்... ஊரெல் லாம் ஒரே கதையாய் கிடக்கு !''

''நான் டிரை பண்ணிக்கொண்டுதான் இருக்கிறன்; ஒன்றும் சரிவரவில்லையடா சிவா...''!

''முந்தி இரண்டு முறை கொழும்புக்குப் போனனி தானே! என்ன நடந்தது?''

''அதையேன் கேட்கிறாய்! நான் ஒருவனைநம்பி ஐயாயிரம் காசுகட்டி நம்பிக் கொண்ருந்துதான் மிச்சம்! காசு வேண்டிய வன் ஜேர்மனுக்குப் போய்விட்டான்...... எனக்குக் காசுபோனது பற்றிக் கவலே இல்லே...! ஆனால் விஷயம் சரிவரவில்லே... அது தான் கவலே...'

''அதுசரிரகுஉனக்கு ஒருகட்சி அமைப்பாளரைத் தெரியுமாமே என்னே ஒருக்கா கூட்டிக் கொண்டு போய் அறிமுகம் செய்து வைச்சால் என்ன...? ஆசிரிய நியமனங்கள் நடக்கப் போகுதாம் பேப்பரில் நியூஸ் வந்திருக்கு சிவராஜனின் முகத்தில் எப்படியா வது ஒருஉத்தியோகம் எடுத்துவிட வேண்டும் என்ற நப்பாசை துளிர்த்தது.

''ஓ! பேப்பரிலே நியூஸ்வந்திருக்கோ? அந்தாளைத் தெரியும் தான்... என்ன சொல்லுவாரோ தெரியாது பார்ப்பம்'

ரகு போய் விட்டான்.

புதிதாகக் கட்டி எழுப்பிய இரட்டை மாடி வீடு அது! திரும்பிய பக்கமெல்லாம் புதுமெருகு பளிச் சிட்டது! வாசலில் ஒரு புத்தம்புதிய வெள்ளைக்கார் அழகுக்கு அழகு கூட்டியது.

அரண்மனை மாதிரியிருந்த வீட்டுக்குள் ரகு முன்செல்ல சிவராஜன் தயங்கித் தயங்கிச் சென்றான். செற்றியில் கட்சி அமைப்பாளர் அமர்ந்திருந்தார். அறிமுகப்படலம் நடந்தது.

சிவராஜன் தன் குடும்ப நிலையை எடுத்துச் சொல்லி எப்படியாவது ஆசிரிய நியமனம் பெற்றுத்தரும்படி மன்றாடினான்.

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த அமைப்பாளர்.

"முந்தியைப் போலை இல்லை இப்ப விஷயங்கள்! எல்லாத்துக்கும் இரண்டு கிழமை கழிச்சு வாவன் பார்ப்பம்!

அவர் எழுந்து உள்ளே சென்றார்.

சிவராஜனுக்கு நாடி விழுந்துவிட்டது.

ரகு மெதுவாக எழுந்து அவரைத் தொடர்ந்து உள்ளே சென்றான்.

சிவராஜன் வெகு பரிதாபமாக அவர்களிருவர் சென்ற திக்கையே பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு மாதம் உருண்டோடியது.

ரகுவுக்கு ஆசிரிய நியமனம் கிடைத்து விட்டது என்றறிந்தான் சிவராஜன் அவன் நம்பவில்லை.

ரகுவைத் தேடிக்கொண்டு அவனின் வீட்டுக்குச் சென்றான்.

"என்ன ரகு உனக்கு ரீச்சிங் போஸ்ற் கிடைச்சிருக்காம் உண்மையே...?"

"ஓமோம்..."

"அப்ப நீ எனக்குச் சொல்லவில்லையே...!"

நான் ஆறுதலாய் சொல்லலாம் என்றுதான் வரவில்லை! இதடாப்பா பெரிய பாடுபட்டுத்தான் எடுத்தது"

"பெரியபாடோ... அப்படியென்றால்..."

"அந்தக் கட்சி அமைப்பாளர் தான் ஒழுங்குபண்ணினது, ஆனால் கொஞ்சம் செலவாய் போச்சு......!"

"செலவென்றால்..."

"தெரியாதே... ஒரு எட்டாயிரம் ரூபாய் செலவு"

சிவராஜன் ஒன்றும் பேசவில்லை. என்னத்தைப் பேசுவது... மௌனமாக வீட்டை நோக்கி நடந்தான்.

எட்டாயிரமும், பத்தாயிரமுமாய் அநியாயமாய்தாரைவார்த்து உத்தியோகம் எடுக்க அவன் எங்கே போவான்?

உள்ளமும் உடலும் நோக நடக்கின்றான். அவனின் அட்வான்ஸ்லெவல் சேட்டிபிகேற் பூதாகரரூபம் எடுத்து அவன் கண் மூன் தெரிந்தது!

காகிதப் பூக்கள் மலிந்துள்ள இந்த உலகத்தில் நிஜப் பூக்களுக்கு மதிப்பில்லையா என்ன!

(யாவும் கற்பனை)

வீரகேசரிப் பிரசுரம் 13 . 7 . 1980

# ★ நியாயங்கள் ★

அம்மாவின் கடிதம் வந்திருந்தது. ''சபேசனுக்கு கடும் சுகவீனம். உன்னைப் பார்க்க வேண்டுமென்று அடிக்கடி சொல்லுறான், ஒருக்கா வந்து போகவும்'' அம்மாவின் வாசகங்கள் இவை.

என் மனம் துணுக்குற்றது. கல்லுமாதிரி இருந்த சபேசனுக்கு என்ன வந்தது! ஐம்பது வயசிலும் தினம் யோகாசனம், மாலை சொல்லி வைத்தாற்போல் நாலு மைல் நடக்க வேண்டுமென்று தன்னுள் ஏற்படுத்திக் கொண்ட வழக்கம்...

இப்படி இருந்துமா?

எனக்கே வியப்பாக இருந்தது. நாமிருவரும் ஒரே வயதுக்காரர்கள். என் இளமைக்கால நண்பன். ஒன்றாகப் படித்து, ஒன்றாக விளையாடி, ஒன்றாகச் சாப்பிட்டு...

''இரட்டை வால்கள்''!

இது கிராமத்தில் சபேசனுக்கும் எனக்கும் ஏற்பட்ட பெயர் சிறுவயதிலேயே நல்ல வாட்ட சாட்டமாய், வயதுக்கு மீறின வளர்ச்சியோடு காணப்படுவான். படித்து பட்டம் பெற்று அவன் நில அளவைத் திணைக்களத்தில் ஓர் உயர் அதிகாரியாகப் பதவி வகித்தான். நானோ தபால் இலாகாவில் நுழைந்து இன்று திருநகர் தபால் நிலையத்தில் தலைமை அதிபராக கடமையாற்றுகிறேன்.

நான் திருநகருக்கு இடமாற்றம் பெற்று வந்து இரண்டு வருடங்களாகின்றன. எனக்கு முதலே திருநகருக்கு இடமாற்றம் பெற்று வந்து பணி புரிந்து கொண்டிருந்தான் சபேசன். அது என்னவோ அவனும் நானும் சிறுவயதில் பழகிய மாதிரி, உத்தியோகம் பார்க்குமிடங்களும், எங்கள் இருவருக்கும் ஒரேஊர். ஒரே காலகட்டத்தில் இதுவரை அமைந்து விட்டது. எங்களைப் பொறுத்தவரை ஒரு ஆச்சரியம்தான்' இதற்கு முன் கொழும்பு, கண்டி, காலி என்று நாங்கள் இணையாகப் பணியாற்றி விட்டோம்:

சபேசனுக்கு திருமணமாகி நாலு ஆண்பிள்ளைகள் இருக்கின்றனர். சபேசன் தன் மனைவி பேரில் உயிரையே வைத்திருந்தான். ஆனால் அந்த அபிமானத்தை நாணமின்றிப் பலர் முன்னிலையில்

வெளிப்படுத்தும் போது எனக்குக்கோபம் பற்றிக் கொண்டு வரும் ஆனல் அவன் அதைப் பொருட்படுத்த மாட்டான்.

திருநகரில் நான் குடும்பத்துடன் அரசாங்க விடுதியில் இருந் தேன். சபேசன் தனியே அறை எடுத்துத் தங்கியிருந்தான். இடைக்கிடை நான் அவனின் அறைக்குச் சென்று உரையாடுவது வழக்கம் ஒரு கிழமையில் மூன்று நாட்களாவது அவனின் மனைவி கடிதம் எழுதுவாள். கடிதம் வராவிடில் பித்துப் பிடித்தாற்போல் திரிவான்.

''என்ன மச்சான், மனுசிக்குச் சுகமில்லையோ...? கடிதத்தைக் காணவில்லையே ?

நான் ஏதாவது சமாதானம் சொல்லுவேன்.

''நான் அவளில் உயிரையே வைத்திருக்கிறேன். அவளுக்கு ஒரு தலையிடி என்றால் என்னல் அதைத் தாங்க முடியாது!'' சபே சன் கூறும்போது நான் பதில் கூருது மௌனமாகக் கேட்டுக் கொண்டிருப்பேன். இடைக்கிடை தனது மக்களைப் பற்றிக் குறை யாகக் கூறுவான்.

''என்னுடைய மூத்தமகன் மணி சரியான குழப்படி'' வீட்டு வேலை ஒன்றும் செய்வதில்லையாம் சாவித்திரி கடிதம் எழுதி இருக் கிறள்''.

அவளின் நாலுபையன்களும் நானறிந்த மட்டில் வெகு சூடி கையானவர்கள் மூத்த மகனுக்கு பதினைந்து வயதிருக்கும் கடைக் குட்டிக்கு எட்டு வயதிருக்கலாம் என்பது என் கணிப்பு.

''நீ நினைக்கிற மாதிரி இருக்காது சபேசா! இந்தக்காலத்துப் பிள்ளைகளின் போக்கே ஒரு தனி நாங்கள் தான் அனுசரித்துப் போக வேண்டும்.''

''மூர்த்தி உனக்குத் தெரிந்தது அவ்வளவு தான் சாவித்தி ரிக்கு அந்தப்பிள்ளைகளால் நெடுகலும் கரைச்சல் தான் வீட்டில் நானில்லாவிடில் ஒரே தலைகீழாய் பிரட்டி விடுவார்கள்!'' அவன் சலித்துக் கொள்ளுவான்.

சபேசனின் மேசை மேல் அவனும் மனைவியும் சேர்ந்து எடுத்த போட்டோவை பெரிதளவில் பிரேம் பண்ணி நிறுத்தி வைத்தி ருந்தான் அறைக்குள் நுழைந்தவுடன் அப்படம் பளிச் சென்று தெரியும். நானே எனக்குள் நினைத்துக் கொள்வேன்'' கண்ணூறு பட்டுவிடும் என்று உண்மையில் கண்ணுக்கு லட்சணமாய் அமைந் திருந்தது இருவரின் போட்டோ!

ஒரு நாள் அவனின் கட்டிலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த சமயம் தலையணையின் கீழ் ஒரு பட்டுச்சேலை மிக நேர்த்தியாக மடிக்கப்பட்டு இருந்தது. ''என்ன சபேசா பட்டுப் புடவை இங்கு கிடக்கிறதே!'

''ஓ! அதுவா அது என் மனைவி சாவித்திரியின் சேலை, தலையணையின் கீழ் அது இருப்பதால் தான் எனக்கு நித்திரை வரும்''! முகத்தில் ஒருவித சலனமுமில்லாமல் அவன் கூறினன். ஒருவேளை இதுவும் ஒரு 'செண்டிமெண்டலாய்' இருக்குமோ என நான் நினைத்துக்கொண்டேன்.

அவன் லீவில் யாழ்ப்பாணம் செல்லும்போது பலபொருட்கள் வேண்டிவருவான். ''என்ன சபேசா கொள்வனவு பலமாயிருக்கே''? நான் கேட்டால் மௌனமாகச் சிரிப்பான்.

''சாவித்திரி இதற்கு எழுதிவிட்டாள்''!

''சாவித்திரிக்கு இது பிடிக்கும்''! இப்படி ஏதோ சாக்குப் போக்குச் சொல்லுவான். அவன் ஒரு நாளாவது தன் பிள்ளைகளுக்கு அதுவிருப்பம் இதுவிருப்பம் என்று பொருட்கள் வேண்டியது கிடையாது. இது பற்றி நான் எனது மனைவியிடம் பேச்சுவாக்கில் கூறியுள்ளேன்.

''அந்த மனுஷனுக்கு மனைவியின் அருமை தெரியும்! அவர் ஆசையாய் வேண்டிக் கொடுக்கிறர்'' உங்களுக்கு ஏன் இந்தப் பொருமை?'' அவள் பெண் தானே. நான் மௌனமானேன்.

ஒருமுறை லீவில் யாழ்ப்பாணம் சென்று திரும்பி வரும்போது தன் மனைவியையும் அழைத்து வந்தான். எங்கள் வீட்டுக்கும் ஒரு நாள் வந்திருந்தார்கள். ''ஏன் பிள்ளைகளையும் அழைத்து வந்திருக்கலாமே? நான் கேட்டேன். உனக்குத் தெரியாது அவன்கள் சரியான குழப்படி!''

'சாவித்திரிக்கு உடல் நிலை மிகவும் கெட்டுவிட்டது' கொஞ்ச நாளைக்கு ஓய்வு தேவை என்று டாக்டர் கூறியபடியால் அவளை இங்கு அழைத்து வந்து விட்டேன்.'

''பிள்ளைகள் தனியே இருப்பார்களா?'' நான் ஆற்றுமையோடு வினவினேன்.

''அவர்கள் பேத்தியாரோடு இருப்பார்கள்''!

சபேசன் அலட்சியமாகக் கூறினன்; பேத்தியார் என்றது சாவித்திரியின் தாய்.

ஆனால் திருமலையில் சாவித்திரி நின்ற இருவாரங்களும் அவள் ஓய்வு எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. தனது காரிலும் அலு வலக ஜீப்பிலுமாக அவளைப் பல இடங்களுக்கும் சுற்றுலா, என்று அழைத்துச் சென்றான். பிள்ளையளை ஊரில் விட்டு விட்டு, இளம் சோடிகளைப்போல் குதூகலமாத் திரிந்தது எனக்கு மிகவும் ஆச்சரியம் அளித்தது உண்மையைச் சொல்லப்போனால் சபேசன் மீது ஒருவித வெறுப்பே எனக்கு வந்தது. ஆனால் நான் ஒன்றும் பேசவில்லை.

இது நடந்து மூன்று மாதங்களாகி விட்டன. வருடக் கடைசி நாள் புதுவருடம் பிறப்பதை வரவேற்கும் நோக்கில் எங்கும் ஒரே குதூகலமாய் இருந்தது. எனது விடுதி வாசலில் அமர்ந்து வெடிகொழுத்தி மகிழும் சிறுவர்களை வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தேன். மிகவேகமாக சபேசனின் கார் வந்து வாசலில் நின் றது. சபேசன் இறங்கி ஓடி வந்தான். அவனின் முகம் வெளிறி அவனைப்பார்க்கவே பெரிய பாவமாய் இருந்தது.

"என்ன சபேசா என்ன நடந்தது?

"நான் வார்த்தையை முடிக்கவில்லை. 'மூர்த்தி' பலமான கேவல் ஒன்று அவன் வாயிலிருந்து புறப்பட்டது. ஓடிவந்து அவன் என் கைகளைப் பிடித்துக் கொண்டான். "மூர்த்தி .. சாவித்திரி!" அவன் அழுதான்.

"என்ன நடந்தது சபேசா? சாவித்திரிக்கு என்ன......?"

பதிலேதும் கூறாது ஒருதந்தியை நீட்டினான்.

"ஓ கடவுளே..."!

சாவித்திரி இறந்து விட்டாள்! தந்தியின் வாசகம். சபேசனின் மைத்துனர் தந்தியை அனுப்பி இருந்தார். என்னால் ஒரு வார்த்தை யும் பேசமுடியவில்லை அவனை அணைத்துக்கொண்டேன். சபேசனின் தேகம் நடுங்கியது.

கார் ஓடத்தெரிந்த நண்பர் ஒருவரின் துணையுடன் நான் சபேசனை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்றேன் மரணவீட்டில் சபேசனின் பிரலாபத்தை என்னால் தாங்க முடியவில்லை. மதிய உணவு உட்கொண்டு விட்டு தலையைச் சுற்றுகிறது! என்றுசொல்லி நாற்காலியில் அமர்ந்த சாவித்திரி பின் எழும்ப வில்லையாம் பிணக்கோலத்தில் சாவித்திரியை பார்க்கமுடியவில்லை. மரணத் தின் நிலையிலும் மந்தஹாசத்துடன் முகம் பிரகாசித்தது. மூன்று நாட்கள் நின்று சபேசனையும் அவனது பிள்ளைகளையும் தேற்றி விட்டு திருமலைக்குத் திரும்பி விட்டேன்.

சாவித்திரியின் காரியங்கள் முடிந்த பின் திருமலேக்கு வந்த பேசன் நடைப்பிணம் போல் திரிந்தான். நான் இடைக்கிடை அவனது அறைக்குச் சென்று அவனை உற்சாகத்துடன் இருக்க பேச்சுக் கொடுப்பேன். ஆனல் அவனே தன் மனைவியின் கதை யை ஆரம்பித்து இடையே கண்கலங்கி விம்முவான். எனக்கு ஒரே பரிதாபமாய் இருக்கும்.

மேலிடத்துக்கு விண்ணப்பித்து, எவ்வளவோ கஸ்ரப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டான். அது மிகவும் நியாயமான செய்தியாய் எனக்குப்பட்டது. சாவித் திரி இறந்த பின் வீட்டில் அவனது பிள்ளையளை சரிவரக் கவ னிக்க அவனது நேரடிக் கண்காணிப்பு அவசியம் தானே; இடைக் கிடை கடிதம் எழுதி நான் விசாரிப்பதுண்டு. அவனும் எழுது வான். எல்லாம் ஒரே சாவித்திரியின் புராணம் தான். பாதிப்ப டைந்த அவன் மனதின் பிரதிபலிப்பு என்று நான் நினைப் பதுண்டு.

ஆறுமாதங்கள் கடந்திருக்கும் நான் கேள்விப்பட்ட செய்தி என்னை அதிரவைத்தது. சபேசன் மறுபடியும் திருமணம் செய்து கொண்டாணும் என்றல் நம்பமுடியவில்லை. "இதுதான் உங்கள் சிநேகிதனின் லட்சணம்!" இது என் மனைவியின் குத்தலான வார்த் தைகள். பிள்ளைகளைக் கவனிக்க அவனுக்கு ஒரு துணை வேணும் தானே! நான் சமாதானம் கூறினேன். எனக்கு இது நியாயமாய் பட்டது."நல்ல பிள்ளையள் நல்ல கவனிப்பு! அந்த மனுசன் பொம்பிளை இல்லாமல் இராதப்பா!"

ஏதோ ஒரு அலுவலாய் யாழ்ப்பாணம் வர நேர்ந்த சமயம் சபேசனின் வீட்டிற்கும் சென்றிருந்தேன். சபேசன் என்னை அமோ கமாக வரவேற்றன். 'இவள்தான் என்னுடைய மனைவி கோகிலா' தன் மனைவியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தான், அப்பெண் ணுக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம் சுமாரான அழகுடைய வளாய், நடை உடை பாவனைகளில் மிக நாகரீகமாய் தோற்றம ளித்தாள். "கோகிலாவும் எனது கந்தோரில் தான் வேலை செய் கிறா!" சபேசன் கூறினன்.

அவன் அதீதமான ஒரு சந்தோஷத்துடன் காணப்பட்டதாக நான் நினைத்தேன். அவனுடைய இரண்டாவது திருமணத்துக் கான காரணகாரியங்களைக் கேட்டு அவனை இக்கட்டான நிலைக்கு ஆளாக்கி விடுவேனே என்று பயந்தேன்.

''எங்கே உன் பிள்ளைகளைக் காணவில்லை?'' நான் விசாரித்தேன். ''பிள்ளையள் பேத்தியார் வீட்டிலை தான் ..!'' அவன் இழுத்தான். எனக்கு அவனின் செய்கை சரியாகப் படவில்லை. அவனைக்கேட்டால் ஆயிரம் நியாயங்கள் கூறுவான் அது அவன் சுபாவம். நான் ஒரு சிரிப்புடன் தலையாட்டி வைத்தேன்'

தேனீர் அருந்தி விட்டுப் பேசிக் கொண்டிருந்தோம் நானும் சபேசனும். ''கோகிலா நல்ல பெண் மூர்த்தி! வீட்டுவேலை எல்லாம் நல்ல கெட்டிக்காரத்தனமாய் செய்கிறாள்!'' சபேசன் ஆரம்பித்தான். ''அதுசரி சபேசா, சாவித்திரி சாவித்திரி என்று உயிரை விட்ட நீ இப்படி விரைவில் ஒரு கலியாணத்தைச் செய்திருக்க வேண்டாம் என எனக்குத் தோன்றுகின்றது!''

''சாவித்திரியின் கதையை இப்ப ஏன் எடுக்கிறாய்? நீ என் நிலையில் இருந்தால் இப்படித் தான் செய்திருப்பாய்!'' அவன் தன் செய்கையை நியாயப்படுத்த முயன்றான். நான் கதையைத் தொடர விரும்பவில்லை.

நான் நினைத்ததற்கு மாறாக இருந்தது சபேசனின் உடல் நிலை பக்கவாதம் வந்து ஒரே படுக்கையாய் கிடந்தான். வலது காலும் வலது கையும் பாதிக்கப்பட்டிருந்தன. வாய் பேச முடியாமல் வார்த்தைகள் கொன்னையடித்தன. என்னைக்கண்டதும் அவன் அழுதான் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவனின் மூத்த மகன் மணி சபேசனின் அருகில் காணப்பட்டான். தகப்பனின் படுக்கையை சரி செய்தும், முகத்தைத் துணியால் ஒற்றிவிட்டும் மிகவும் பரிவுடன் காரியங்களை கவனித்தான் மணி உன் சித்தி எங்கே? மெதுவாகக் கேட்டேன். நான் கேட்க விரும்பாத கேள்வியை அங்கு நிலவிய 'இறுக்கத்தின்' விளைவாக என்னை மீறிக் கேட்டு விட்டேன்.

''அப்பாவுக்குச் சுகமில்லாமல் வந்தவுடனே சித்தி தன்னுடைய வீட்டுக்குப் போய் விட்டா?'' நான் இறுக்குற்றேன்

குத்து விளக்காய் ஒளிவீசிக் கொண்டு இந்தவீட்டில் நடமாடிய சாவித்திரியின் முகம் ஒரு கணம் என் மனதில் தோன்றி மறைந்தது.

சபேசனை உற்று நோக்கினேன் கணவன் படுக்கையில் வீழ்ந்ததும் அவனைக் கைவிட்டுச் சென்றுவிட்ட அந்த நவநாகரீகப்பெண்ணைப்பற்றி என்ன விசாரிப்பது? எனது கேள்வியை, எனது மனோநிலையை அவன் ஊகித்திருப்பானோ என்னவோ? சபேசன் விம்மி விம்மி அழுதான்!

சிரித்திரன்

# நிதர்சனங்கள்

காலை இளம் சூரியனின் பொற்கதிர்கள் பொன்னாலைக் கடலைப் பளபளக்க வைத்தன. மினிபஸ் ஒன்று ஆடி அசைந்து வலந்தலைச் சந்திக்கு வரும்பொழுதே முற்றாக நிறைந்து காணப்பட்டது.

தூரத்தில் பஸ் வருவதைக் கண்டதும் நீண்ட நேரமாகக் காத்து நின்றவர்கள் பரபரத்தனர். யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய பஸ் அது. கார்த்திகேசு தன் சட்டைப் பையை தட்டிப்பார்த்துக் கொண்டார்.

கையில் இரண்டு சகாப்தங்களைக் கண்டுவிட்ட அரைக்குடை: ஓய்வூதிய அடையாள அட்டை தேசிய அடையாள அட்டை; முதல் நாள் தபால் கந்தோரில் எடுத்த இம்மாதத்திற்குரிய பென்சன் ரசீது. பணம் இருபது ரூபாய் எல்லாம் ஓர் என்வெலப்பில் வைக்கப்பட்டு அவரது சட்டைப் பையில் மிக அடக்கமாய் இருந்தது:

ஒரு திருப்தி மனதில்! யாழ்ப்பாணம் வரைக்கான கட்டணத்தை சில்லறையாய் கையில் பொத்தி வைச்சுக் கொண்டார். மினி பஸ் நின்றதும் பிரயாணிகள் முண்டி அடித்துக் கொண்டு ஏறினார்கள் கார்த்திகேசுவும் இந்த வண்டியை விட்டால் இன்று போன பாடில்லை என நினைத்துக் கொண்டு அவசரமாக ஏறினார் கால் செருப்பு தடக்கியது காலைவிட்டு அரைவாசி கழன்று விட்டது.

''என்ன கறுமம்!-'' மனதுக்குள் கூறிக்கொண்டே ஒருகணம் கீழே குனிந்து பார்த்து செருப்பைச் சரியாக மாட்டிக்கொண்டு ஏறினார். இவரின் கணநேரத் தயக்கம் பின்னால் நின்றவரின் வேகத்தைக் கட்டுப்படுத்தியது. இதற்குள் அவரது மூக்குக் கண்ணாடி தளர்ந்து கீழே இறங்கியது அதைநேராக்கினார். ''என்ன பெரியவர்! கெதியிலை ஏறுமன்! இப்பதான் கண்ணாடியைக் கழட்டி வடிவு பார்க்கிறியள்! உதுகளை வீட்டிலை போய்ப் பாருங்கோ... மற்றவையும் ஏற வேணும்...!''

கண்டக்டர் சலிப்புடன் கூறினார்.

கார்த்திகேசுவுக்கு மனதுக்குள் ஆத்திரம் தான். ஆனாலும் என்ன செய்வது? வந்த கோபத்தை அடக்கிக்கொண்டார். கோபிப்பதில் பிரயோசனமில்லை எனவும் ஒருகணம் நினைத்தார் இருக்க

இடம் கிடைக்கவில்லை மேலே கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றார்.

வழமைக்கு மாறாக இன்று பிரயாணிகள் அதிகளவு காணப்பட்டனர்.

இரவு முழுவதும் நாலா பக்கத்தாலும் ஒலித்த பீரங்கி வேட்டுச் சத்தங்கள் பஸ் ஓட்டங்களைத் தாமதப்படுத்தியிருந்தது. முன்பு எல்லாம் பீரங்கி முழக்கம் ஷெல் அடியின் அதிர்வுகள் துப்பாக்கி வேட்டுக்களின் சப்தங்கள் மக்கள் மனதில் கிலியை ஏற்படுத்தி நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தின ஆனால் இப்பொழுதோ எல்லாம் பழங்கதையாய் விட்டன.

மக்களை அவர்கள் அறியாமலே ஒரு 'ஸியட்ஞமியத்தன்மை பற்றிக்கொண்டது.

மூளாய் ஆஸ்பத்திரி இறங்குங்கோ!...

கண்டக்ரரின் குரல் பெரிதாக ஒலித்தது. கார்த்திகேசுவுக்குப் பரமசந்தோஷம் 'ஆஸ்பத்திரியடியில் சனங்கள் இறங்கினால் இருக்க இடம் கிடைக்கும்— தனக்குள் சொல்லிக் கொண்டார். அவரின் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை இறங்கிய தொகைக்கு இரட்டிப்பாக பிரயாணிகள் ஏறினார்கள். நின்றபடியே கழுகுப்பார்வை பார்த்துக் கொண்டிருந்த கார்த்திகேசுவுக்கு ஒரு சீற் கிடைத்தது பரம ஆனந்தத்துடன் அமர்ந்து தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டார். ஏறும் பொழுது கண்டக்ரர் மேல் ஏற்பட்ட கோபம் இப்போ தணிந்து விட்டது திரும்பிப் பார்த்தார்.

பின் சீற்றில் இருந்தவர் அவருக்குத் தெரிந்தவர்தான் ஆலடி மயில்வாகன வாத்தியார்.

''ஓ! நீங்களும் இருக்கிறியளே!' கார்திகேசு சிரித்தபடியே கூறினார்.

''ஓமோம்! இண்டைக்குப் பென்சன் அல்லே–' மயில்வாகன வாத்தியார் கூறினார்.

இரண்டுபேரும் முன்பே பழக்கமானவர்கள் தான் ஆனால் இப்போ கொஞ்சக் காலமாய் கோட்டைக்குப் பென்சன் எடுக்கப்போய் மிச்சம் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர்.

மினி பஸ் வண்டியின் வேகம் அதிகரித்தது.

'சித்தங்கேணிச் சந்தி...!'

—மறுபடியும் இறங்கலும் ஏறுதலும்

உத்தியோககாரர்கள், பாடசாலை மாணவ மாணவிகள், வியாபாரிகள், பெண்கள், வாலிபர்கள் வயோதிபர்கள் இத்தியாதி... இத்தியாதி...
ஒரு கலவையான கூட்டம்.

சாரதி ஓர் உற்சாகத்துடன் ரேங்கைப முடுக்கிவிட கைஷலசாவின் குரல் கிணுகிணுத்தது இளவட்டங்கள் இரண்டு ஏதோ சொல்லி கண்ணைச்சிமிட்ட இரண்டு குமரிகள் நீரில் கல்விழுந்து தெறித்தாற்போல்களுக்கென்றுசிரித்தனர்.

கார்த்திகேசு நன்றாகக் கவனித்தார்.

இந்தக் காலத்துப் பெடியன்கள் துணிஞ்சவங்கள்! எல்லாத்திலும் முன்னுக்குத்தான் நிற்கிறார்கள்!'
இருந்தாற் போல் அவரின் மனதில் ஒருமின் வெட்டு.

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் கொழும்பில் வேலைக்குச் சேர்ந்த நேரம் கொட்டாஞ் சேனையிலிருந்து கோட்டைக்குப் போகும்போது தினமும் ஒரே நேரத்தில் ஒரே இலக்கபஸ்சில் சகபிரயாணியாக வரும் நவநாகரீகமான ஒரு சிங்களப் பெட்டைக்கு ஆசையிலே அவளது தோளிலே சாடையாக தட்டப்போய் அவள் முறைத்த முறைப்பு இன்றும் கண்ணுக்குள் நிற்கிறது.

'கொடயா!' அவனின் கோபம் கலந்த சொல் இன்னும் காதில் கேட்கிறது. கந்தோருக்குச் சென்று அவரோடு நல்லாய் பழகிய ரணதுங்காவிடம் அந்தச் சொல்லுக்கு தமிழ் அர்த்தம் கேட்டு– கொடயா- என்றால் பட்டிக்காட்டான் என்றறிந்து தான் அசடு வழிய நின்றதை இப்ப நினைத்தாலும் வெட்கமாய் இருந்தது பின்பு கார்த்திகேசு மிகவும் கவனம்!

இந்தக்காலத்துப் பெடியன்களின் மேல் ஓர் அர்த்தமில்லாத கோபம் இப்பொழுது ஏற்பட்டது.

'போகட்டும்! அவன்கள் என்ன வாகிலும் செய்யட்டும்! இண்டைக்குப் பென்சன் எடுத்ததும் மறக்காமல் பிறஷர் பில்ஸ், வின்ரொலின், பிறிட்டோன் எல்லாம் வாங்க வேணும்! என்னெண்டாலும் ''ரவுணிலை சமான் வாங்கிற மாதிரி வராது!'' மனதுக்குள் சொல்லிக்கொண்டார்.

நேற்று இரவே இன்று ரவுணில் வேண்டவேண்டிய பொருள்களை ஒரு பட்டியலாக ஒரு சிறிய கடதாசியில் எழுதி வைத்திருந்தார்.

"பிறஷர் பில்ஸ் வெளியிலே ஒரு ரூபா அறுபதுசதம்! கிளினிக் டேக்கு இன்னும் ஒரு கிழமை கிடக்கு! கண்டறியாத ஷெல் அடியால் போன கிளினிக்டே அன்று போகவில்லை அப்படி என்றால் ஒரு இருபது பில்ஸ் வாங்குவம்! அவளுக்கு வின்ரொலினும் வேணும் அப்ப அதிலையும் ஒரு இருபது பில்ஸ் வாங்கவேணும்! தனக்குள் கூறிக்கொண்டார்.

அவள் என்றது அவரது மனைவி சொர்ணம் ஐப்பசி கார்த்திகை மாதங்கள் என்றால் மழையும் பனியும் சேர்ந்து ஆஸ்துமா நோயை 'எவர்ரெடியாய்' தோற்றுவிக்கும்.

காலையில் புறப்படும் போதே அவரது பேத்தி 'தாத்தா இண்டைக்கு கண்டோஸ்...' என்றாள். ஒவ்வொரு பென்சன் தினத்தன்றும் அவள் விடுக்கும் கோரிக்கை அது அவரும் மறக்காமல் வேண்டிக் கொண்டு போவார்.

"குடையும் மிச்சம் பழுதாய் போச்சு ! சாய்... இந்தமாதம் விடுவம்! வாறமாதம் பார்ப்பம்! நல்லதாய் ஒரு நாலுமுழ வேட்டி கட்டாயம் வாங்க வேணும் இந்தமுறை தீபாவளிக்கும் ஒண்டும் எடுக்கவில்லை இனி திருவெம்பா வருகிறது! கோயில் குளத்துக்கு கட்டத் தேவைதானே! இப்பவாற இஞ்சத்தை வேட்டியளும் ஒரு அலம்பல் வேட்டி! முந்தியெண்டால் கொழும்பிலை செட்டியார் தெருவிலை இந்தியாக்காறற்றை கடையிலை எட்டுமுழம் நாலு முழம் வேட்டியள் வாங்கினால் வரியக் கணக்கிலை நிண்டு பிடிக்கும்

எல்லாம் ஒரு காலம்...! என்னமாதிரிச் சீவியமெல்லாம்? பழுதாய் போச்சு! சாய், முந்தி வெள்ளவத்தையிலை சமறியிலை சாப்பாடு... மூக்கிமுக்கி மாதம் நாற்பது ரூபாய் தானே! மாதத்திலை இரண்டு படம்! பதினைந்து ரூபாவுக்கு நல்ல வெள்ளைக் களிசானும் செனிலி சேட்டும் !"

கார்திகேசு பழைய நினைவுகளில் மூழ்கி அசைபோட்டார்.

மினிபஸ் ஓடுகிறது.

'சண்டிலிப்பாய்ச் சந்தி...!

அவரது சிந்தனையைக் கலைத்தது கண்டக்ரரின் சப்தம் பிரயாணிகள் ஏறி புளியாய் நசுங்கினர் பஸ் நிறைந்து வழிந்தது இரண்டொருவர் கார்த்திகேசுவின் பக்கத்தில் உராய்ந்து நின்றனர்

முந்தி எண்டால் கொழும்பிலைதான் பிற்பொக்கற்காரர்! இப்ப இஞ்சையும்!... முன்பு மருதானையிலும், பொறளைச் சந்தியிலும் இரண்டு முறை பணத்தைப் பறிகொடுத்த கசப்பான அனுபவம் அவருக்கு மனதில் தட்டுப்படுகிறது.

இஞ்சை என்னத்திலை குறைஞ்சவங்கள்...? எல்லாத்திலையும் தான்...!' கசப்போடு தனக்குள் சொல்லிக் கொண்டார்.

இருந்தாற் போல் எதிரே ஒரு மினிபஸ் வர இந்த வண்டி நின்றது. சாரதி தலையை நீட்டினர். 'என்ன மச்சான் போகலாமே எதிரே வந்த சாரதியைக் கேட்டார்.

பிரயாணிகளின் காதுகள் கூர்மையாயின..

''அங்கே ஒரே ஷெல் அடி நடக்குது சிவன்கோவிலடி மட்டும் போகலாம்! கூறிவிட்டுத் தன்வண்டியை நகர்த்தினன் பிரயாணிகள் நீட்டிய தலையை உள்ளே இழுத்துக் கொண்டனர் அவர்களது மனதில் ஒருவித அமைதி! கொஞ்சத்தூரம் மட்டும் போகலாம் என்ற அமைதி தான்!

ஆனல்.

காத்திகேசு வெகு சிரமத்துடன் திரும்பிப் பார்த்தார். தன்ருகத் திரும்பிப் பார்க்க பக்கத்தில் இடித்துக் கொண்டு நின்றவர்கள் விட்டால் தானே! ''என்ன மாஸ்ரர் இண்டைக்குப் பென்சன் அரோகராதான் போலேகிடக்கு! அங்கை ஷெல் அடி நடக்குதாம்!'

ஏமாற்றத்தின் விளிம்பில் நின்றது அவரின் குரல்

''அதுதான் நானும் யோசிக்கிறன்!'' பரிதாபமாய் ஒலித்தது மயில்வாகன வாத்தியாரின் குரல் சென்றமாதம் இருவரும் பென்சன் எடுக்கச் சென்றபோது கோட்டையிலிருந்து 'அவர்களும்' பென்சன்காரரோடு சேர்ந்து வெளியே வர முயன்ற சமயம் ஏற்பட்ட அமளிகள்...! அப்பப்பா நினைக்கவே பயமாய் இருந்தது.

''என்ன பெரியவர் பென்சனுக்கோ?''

நக்கலுடன் ஒலித்த ஓர் இளவட்டக் குரலைக்கேட்ட கார்த்திகேசு நிமிர்ந்தார்.

'ஓம் தம்பி பென்சனுக்குத்தான்! இண்டைக்கு முடியாது போலை கிடக்குது!' உங்களுக்கு கிராமிய வங்கியிலை பென்சன் எடுக்கிறதிற்கு நல்ல வசதி இருக்குத்தானே இப்ப! கச்சேரிக்காரர் எத்தனை தரம் பேப்பரிலை போட்டவை நீங்களும் அங்கைதான் போகறிக்கிறியள்'

'மச்சான் சிலபேருக்கு பட்டணம் போகாவிட்டால் பொச்சம் தீராது போய் பார்க்கட்டன் விடு!' இது மற்றுமொரு குரல் இதைத் தொடர்ந்து மெல்லிய சிரிப்பு அலைகள். கார்த்திகேசு பதில் இறுக்கவில்லை மௌனம் மனதை இறுக்கியது. அவரின் சிந்தனை படர்ந்தது.

மினிபஸ் ஓடிக்கொண்டிருந்தது ஓட்டுமடச்சந்தி, சிவலிங்க புளியடிச்சந்தி, மனோகராத்தியேட்டர் சந்தி என்று இடங்கள் மறைகின்றன. சிவன்கோயிலடிச் சந்தியை பஸ்வண்டி நெருங்குகிறது. திடீரென்று ஒரு பலத்த சப்தம் கேட்டது.

விழுந்தது ஷெல்!

பஸ்நின்றது

''எல்லாரும் இறங்குங்கோ! அங்காலே போகாது!'

பிரயாணிகள் முண்டியடித்துக் கொண்டு பயப்பிராந்தியுடன் இறங்கினார்கள் கார்த்திகேசுவும் மிகுந்த சிரமத்துடன் இறங்கினார் ஏதோ ஞாபகம் வந்தவராய் தனது சட்டைப் பையைத் தட்டிப் பார்த்தார்.

பை வெறுமையாய் இருந்தது! கார்த்திகேசு முழித்தபடி நின்றார்

(யாவும் கற்பனை)

உதயன் முதல் ஆண்டு நிறைவு
சிறப்பிதழில் பிரசுரமானது

27.11 1986

# எங்கே போகின்றோம்?

காலையில் இருந்தே கோட்டைப் பக்கத்திலிருந்து ஒரே குண்டுச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் 'ஷெல்' அடிகளும் மாறி மாறி நகரையும் சுற்றுப்புற இடங்களையும் கலங்க வைத்தன. நகரிலிருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் இருக்கும் எனது வீட்டு யன்னல்கள் கூட இடைக்கிடை அதிர்ந்த மாதிரி இருந்தது.

வழமைக்கு மாருக நெஞ்சுவலி அதிகம். அரசாங்க சேவையிலிருந்து ஒய்வு பெற்றதும் இந்தவியாதிகள் சொல்லாமல் கொள்ளாமல் உடலில் ஒட்டி உறவாட வந்துவிடுகின்றனவே!

கொஞ்சக் காலமாக டாக்டரிடம் மருந்துகள் தொடர்கின்றன. பென்ஷன் பணத்தில் கூடியபகுதியை அவை விழுங்கிக் கொள்கின்றன.

'அதிர்வுகள், உணர்ச்சி வசப்படுதல் கூடாது! வெகுகவனமாக இருக்க வேண்டும்!'

இது எனது குடும்ப டாக்டரின் மருந்துகள் தரும்போது வழக்கமாகக் கூறும் ஆலோசனைகள்.

ஆனல் இந்தப் பயங்கர 'ஷெல்' அடிகள் மற்றும் பலதரப்பட்ட வெடிச்சத்தங்களும் அதிர்வைத் தராமல் மனிதனைத்தாலாட்டவா செய்கின்றன?

பகலில்தான் இந்தச் சத்தங்கள்! போகட்டும் என்று இரவில் ஏதோ கொஞ்சம் நித்திரை கொள்ள முடிகின்றதா?

இரவு முழுவதும் சத்தங்கள் ஒயவே இல்லை. மாறி மாறி இரு பகுதியினரும் வேட்டுக்களைத் தீர்த்தவண்ணம் இருந்தனர். அத்துடன் வீதியால் படுவேகமாக ஓடிய வாகனங்கள் நெஞ்சையும் தேகத்தையும் அதிரவைத்தன. நெடுநேரம் நித்திரை இன்றி படுக்கையில் புரண்டேன்.

அரைமைல் தூரத்தில் உள்ள காளிகோயிலில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி இன்று ஆறுவது திருவிழா; ஒலிபெருக்கி காற்றுடன் சங்கமித்து சுற்றுப்புறங்களை செவிடாக்கியது. பலசரக்கு கடைநடத்தும் கதிரவேலுவின் திருவிழா: அது வெறும் பலசரக்குக் கடை என்று பெயர்தான். ஆனல் இரவு பன்னிரண்டு மணி வரை அமோகமான சாராய விற்பனை நடக்கும்.

ஊரில் உள்ள சகல மேளங்களையும் பிடித்து இரவு இரவாக வெகு அமர்க்களமாக திருவிழா செய்வார்.

அத்தனை சத்தங்களுக்கிடையில் ஒலி பெருக்கியில் மேளச்சத்தம் கேட்காமல் கேட்டது!

மேளங்கள் அடித்து முடிந்த பின்னர் ஒரு இசைக்குழுவினர்களின் பாட்டு சகல அசுர வாத்தியங்களின் சத்தங்களுடன் முழங்கத் தொடங்கியது கோலா கோலா... "...கொக்கக் கோலா சோடாச் சோடா... விஸ்கிச் சோடா...

யாரோ ஒரு பெண்ணின் கீச்சுக் குரல்.

ஆலயத்தில் ஒலிக்கும் பாட்டு...! அட, இந்த 'ஷெல்' தாக்குதல் நடக்கும் போதாவது இந்தப் பாட்டுக்களை நிறுத்துவார்கள் என நினைத்தேன். ஆனல் நான் அப்படி நினைத்தது பெரிய மடைத்தனம் என்பதையும் உணர்ந்தேன்.

அவர்கள் இரவு பகலாக கண்துஞ்சாது தங்களை வாட்டிக் கொண்டு காவல் புரிகிருர்கள்! அந்தத் துணிவில் நாங்கள் ஊருக்குள் எவ்வித கவலையுமின்றி இரவுத் திருவிழாக்கள் என்ன, பிறந்தநாள் கொண்டாட்டங்கள் என்ன, வீடியோ படக்காட்சிகள் என்ன?

எல்லோரும் ஒரே ஜொலி மூட்!

நாங்கள் என்ன நினைத்துக் கொண்டு எங்கே போகின்றேம் இரவு என்ன நடந்ததோ, யார், இறந்தார்களோ, யார் காயப் பட்டார்களோ, எந்தக் கட்டிடம் இடிந்ததோ...?

இப்பொழுது சட்டங்கள் யாவும் செல்லாக் காசாகி விட்டனவே? மனச்சாட்சிதான் சட்டம் என்று நினைத்தோ என்னவோ அதைத் திருப்திப்படுத்தவோ அல்லது தெய்வத்தை திருப்திப்படுத்தவோ தெரியாது, திருவிழா இரவு இரவாக நடந்தது'

மேலால் 'ஹெலி' ஒன்று சத்தமிட்டுப் பறந்தது. 'ஷெல்' அடிகள் மாறி மாறி பலத்த சத்தத்துடன் பலதிசைகளிலும் வீழ்ந்தன.

இரவு எனக்கு நித்திரை இல்லாமல் நீண்டது.

காலையில் பத்திரிகையை கேற்றுக்கு மேலால் வீசிஎறிந்து விட்டுப் போனான் பேப்பர்காரப்பையன். மெதுவாக எழுந்துபோய் ஆவலுடன் முன்பக்கத்தை நோட்டம் விட்டேன்.

முதல்நாள் மாலைச் சம்பவங்கள் கோட்டை எழுத்தில் 'ஷெல்' அடிக்கு கல்லூரி ஆசிரியை பலி!

பரபரப்புடன் படித்தேன். எனக்குத் தொண்டைக்குள் ஏதோ ஒன்று வந்து அடைத்தது. இறந்தது என்னுடன் சக ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற ஆறுமுகத்தின் மகள்தான்.

அவள் என்னுடைய பழைய மாணவி படிப்பில் வெகு சூடிகையாய் இருந்தவள்.

பட்டதாரிப் படிப்பை முடித்து நகரில் ஒரு மகளிர் கல்லூரியில் ஆசிரியையாய் இருக்கிறாள்

அவள் என் கண்ணுக்கு நேரில் நிற்பதுபோல ஒரு பிரமை' அது ஒரு மறக்க கூடிய முகமா? அவளின் பெயர் சந்திரவதனா. எந்தநேரமும் புன்னகை தவழும் முகம் வீட்டில் மாலை நேரங்களில் வசதி குறைந்த பிள்ளைகளுக்கு இலவசமாக 'ரீயூசன்' சொல்லிக் கொடுப்பாள். ஊரில் உள்ள மாதர் சங்கச் செயலாளர். ஆரம்ப சுகாதார குழுவின் செயலாளர் என்று பலசமூகப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவள்.

கல்லூரிக்குச் சயிக்கிலில் போகும் போது நான் வீட்டுவாசலில் நின்றால் சயிக்கிலை நிறுத்தி' குட்மோனிங் சேர்' சிரித்தபடியே கூறுவாள்.

பண்புள்ள பெண்' நானும் ''மோனிங் தங்கச்சி'' என்று கூறி விடைகொடுப்பேன்.

அவளுடைய பெயருக்கு ஏற்றமாதிரி வட்டமுகம், ஒழுங்காக வாரப்பட்ட சுருண்ட கேசக்கற்றைகள், வெள்ளை உடுப்பு அவளை மற்றவர்களிடமிருந்து இனம் பிரித்துக் காட்டும்.

அகலமான கறுப்புக் கண்ணாடி ஒன்று போட்டிருப்பாள். மிக எடுப்பாக தோற்றமளிக்கும் அந்தப்பெண் இறந்து விட்டாள் என்பதை என்னால் நினைத்துக் கூட பார்க்கமுடியவில்லை.

'லீலா'!— எனது மகளை அழைத்தேன் லீலா முன்னுக்கு வந்தாள்.

'நேற்று ஷெல் அடியில் ரவுணில்செத்தது யார் என்று தெரியுமே...? எங்கடை ஆறுமுக மாஸ்ரரின் மகள் சந்திரவதனாவல்லே சொல்லிக்கொண்டே பத்திரிகையை அவளிடம் நீட்டினேன்.

'எங்களுக்கு நேற்றுப் பின்நேரமே தெரியும் அப்பா! உடனே சொன்னால் நீங்கள் ஏங்கிப் போவீர்கள் என்றுதான் நாங்கள் சொல்லவில்லை...' அவளுக்கு கண்கலங்கி குரல் கம்மியது. லீலாவும் சந்திரவதனாவும் வெவ்வேறு வகுப்பில் படித்திருந்தாலும்- இருவரும் நெருங்கிய சினேகிதிகள். லீலா பத்திரிகையுடன் உள்ளே போய் விட்டாள்.

இனி ஏங்கிச் சாவதற்கு என்று ஏதும் உண்டா? எல்லாந்தான் நடந்து விட்டனவே!

நான் சாய்மனைக் கதிரையில் மெதுவாகச் சாய்ந்துகொண்டேன் இருந்தாற்போல் நெஞ்சுவலி அதிகமானது.

'லீலா!'

மகளை மறுபடி அழைத்தேன். நெஞ்சைத் தடவிக் காட்டினேன்.

இதற்காகத்தான் நான் நேற்றைக்கே உங்களுக்கு ஒன்றும் சொல்லாமல் விட்டனான்'' சொல்லிக்கொண்டே உள்ளே ஓடிச் சென்று மாத்திரையும் சுடுதண்ணீரும் எடுத்து வந்தாள்.

மாத்திரையை விழுங்கி விட்டு கண்களை மூடிக்கொண்டு பேசாமல் படுத்து விட்டேன்.

இறந்துபோன அந்தப் பெண்ணின் முகம் மட்டும் மாறி மாறி மனத்திரையில் தோன்றிய வண்ணம் இருந்தது.

ஆறுமுகம் மாஸ்ரர் மிகவும் சாதுவான ஆள். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவர். கல்யாணமாகி பலவருடங்களுக்குப் பின்பு பிறந்தவள் சந்திரவதனா வேறு குழந்தைகள் இல்லை. ஒரே ஒரு செல்லமகள்.

என்னபாடு படுகிறார்களோ தெரியாது. என் ஆப்தநண்பனை இச்சமயத்தில் நேரில் சென்று ஆறுதல் சொல்ல முடியாமல் இருக்கின்றதே என்று என்னுள் கிடந்து மறுகினேன். எனது மனைவி பாக்கியம் மரணவீட்டுக்குச் சென்று வந்தாள்.

ஒருவாரம் சென்றது. உடம்பு சற்றுத் தெம்பாகி இருப்பது போல ஓர் உணர்வு.

ஆறுமுகம் மாஸ்ரரின் வீட்டுக்குச் சென்றேன்.

வீதிகளில் குறுக்கு மறுக்குமாய் கட்டி வாடிக் கிடந்த தென்னந் தோரணங்கள்...

இடைக்கிடை சுவர்களிலும் மின்கம்பங்களிலும் ஒட்டப்பட்டிருந்த சந்திரவதனாவின் அஞ்சலிப்படங்கள்...

வீடு மயான அமைதி பூண்டிருந்தது.

என்னைக் கண்டதும் ஆறுமுகம் ஓடிவந்து என் கைகளைப் பிடித்துக் கொண்டார்.'

'மாஸ்ரர் என்னுடைய மகளை கடவுள் கொண்டுபோட்டார் என்னுடைய பிள்ளை அனாதையாய் ரோட்டிலே செத்துப்போனாள் வாய்விட்டு அவர் அழுதார்.

நானும் கண்ணீர் விட்டபடியே ஒன்றுமே சொல்லத் தெரியாமல் சிலையாக நின்றேன்.

சிறிது நேரம் மௌனமாய் கலைந்தது,

'நாங்கள் கொடுத்து வைச்சது அவ்வளவுதான் மாஸ்ரர் நான் என்னமாதிரி உங்களுக்கு ஆறுதல் கூறுவது? உங்களுடைய மகள் எப்பொழுது கண்டாலும் சயிக்கிலை நிற்பாட்டி என்னோடை கதைக்காமல் போகமாட்டாள். இப்பவும் கண்ணுக்குள் நிற்கிறது அவளுடைய முகமும் அந்தக் கறுப்புக் கண்ணாடியும்; நான் ஏதோ வாயில் வந்ததைக் கூறினேன்.

''மாஸ்ரர்... ஆறுமுகம் மறுபடியும் விம்மினார்

''என்னுடைய பிள்ளை ஷெல் அடிபட்டு ரோட்டிலே பிரேதமாய்க் கிடக்க அவளுடைய கை மணிக்கூடு, அந்தக் கறுப்புக் கண்ணாடி எல்லாவற்றையும் களவெடுத்துப் போட்டாங்கள் மாஸ்ரர்!''

அட கடவுளே...! நான் மலைத்துப்போனேன்.

ஷெல் அடித்து மக்கள் சிதறி ஓடுகிறார்கள். வாகனங்கள் நிலைதடுமாறி ஓடுகின்றன. —கடைக்கதவுகள் படார் படார் என்று அடித்துச் சாத்தப்படுகின்றன—

அந்த அமளிதுமளிக்கிடையில் இப்படியுமா இழிவான வேலைகள். 'ஷெல்' என்தலைக்குள் வெடிப்பது போன்ற துயர்ப்பிரமை.

மாலை முரசு

யூலை 1986, தெல்லிப்பளை கலை இலக்கியக் களத்தினால் அம்மாத சிறந்த சிறுகதை என பாராட்டப்பட்டது.

# முரண்பாடுகள்

இளம் சூரியனின் பொற்சுடர்கள் அந்த புதிய இல்லத்தின் மேல் பூரணமாகப் படிந்ததால் இளம் மஞ்சள் வர்ணச் சுவர்கள் பளபளத்தன. ஓங்கி வளர்ந்திருந்த அசோகா மரங்களும் பெரிய தொட்டிகளில் மிகக் கவனமாக வளர்க்கப்பட்டிருந்த ரோஜாச் செடிகளில் மலர்ந்திருந்த ரோஜா மலர்களும் வீட்டின் சோபையை மேலும் மெரு கூட்டச்செய்தன.

சந்திரகுமாரர் முன் விருந்தையில் அமர்ந்து அன்றையத் தினசரியைப் புரட்டிக்கொண்டிருதான்.

பெயருக்கேற்ற உருவம் தான். விலையுயர்ந்த துணியில் நேர்த்தியாகத் தைக்கப்பட்டிருந்த ஆடைகள் அவனின் சுந்தரத் தோற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தவித்தன.

வெளிநாட்டுத் தயாரிப்பான வாசனைக் கொலோன் அவன் இருந்த இடத்தை சுகந்தமாக்கியது.

இருந்தாற்போல், வீட்டுக்குள் இருந்து, பணியாள் ஒருவன் வெள்ளை நிறக்கோப்பையில் தேனீர் கொண்டுவந்து சந்திரகுமாருக்கு முன் இருந்த அழகிய வேலைப்பாடமைந்த சிறிய ரீப்போயில்வெகு பவ்வியமாக வைத்துவிட்டு நகர்ந்தான். பத்திரிகையை வைத்துவிட்டு தேனீரை மெதுவாக, ரசித்துப் பருகினான் சந்திரகுமார்.

வெற்றுக்கோப்பையை மறுபடியும் ரீப்போயில் வைத்துவிட்டு சிகரெட் ஒன்றை எடுத்து ஆறுதலாகத் தட்டினான்.

வெகுநளினமாக வாயில் கொண்டுபோய்வைத்து பொன்நிற சிகரெட் லைட்டரைத்தட்டி சிகரெட்டைப் பற்றவைத்து புகையை மிக ஆழமாக உள்ளே இழுத்து, ரசித்து மறுபடியும் காற்றில் கலக்கவிட்டான். நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். சுற்றுப்புறங்களை ரசித்தபடியே சிகரெட்டை முடித்துக்கொண்டிருந்தான்.

சுருள் சுருளாகப் புகைவட்டங்கள்... புகையினூடே அவனது சிந்தனைகளும் வட்டமிட்டன.

தோட்டக்காரனின் பிள்ளை நான் வாழ்க்கையிலே நல்லாய் முன்னேறவேண்டும்... முதலில் இந்தமண்வீட்டை இடித்துவிட்டு நல்ல கல்வீடு கட்டவேண்டும்.

பாடசாலையில்... படிக்கும்போதே சந்திரகுமாரின் சிந்தனைகள் இப்படித்தான் வட்டமிடும்.

அவனுள் மறைந்திருந்த திறமை பலவழிகளிலும் வெளிவரத் தொடங்கின.

பாடசாலையில் அவனின் சூடிகைத் தனத்தைக் கண்டு மற்றவர்கள் வியந்தனர்.

அட்வான்ஸ்லெவல் சித்தியடைந்தும், பல்கலைப் பிரவேசத்துக்கு தகுதியடைந்தும், அவனால் மேலேபடிக்க முடியவில்லை.
படிக்க வசதி......

தம்பி. நான் உன்னைப் படிப்பிச்சுக் களைச்சுப்போனன்... எங்கையாவது ஒரு வேலையிலை சேரப்பார் தம்பி...

சந்திரகுமாரின் தந்தை முருகேசு கூறிவிட்டார். இலிகிதர் சேவைக்குப் போட்டிப் பரீட்சை அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதும் அவன் அகமகிழ்ந்தான்.

பரீட்சை அவனை ஏமாற்றவில்லை ..
மிகநன்றாகத்தேறி வேலையிலும் சேர்ந்து விட்டான்.

அவனின் முதற் சம்பளத்தில் ஊரில் உள்ள கோயில் எல்லாவற்றிலும் அர்ச்சனை, பூசை என்று முருகேசு அமர்க்களப்படுத்திவிட்டார்.

கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகத்தில் சந்திரகுமார் பணியாற்றத் தொடங்கியதும் மிகத்திறமையான இலிகிதர் எனப் பெயர்பெற்றதில் அவனுக்குள் ஒருபெருமை!

'குமார்' இஸ் ஏ ஸ்மாற் பெலோ... அவனின் உயர் அதிகாரி அடிக்கடி கூறிக்கொள்வார்.

அவனுடைய உற்சாகம், புது நீர்பீறுடுவது போல புத்துயிர் எடுக்கும்.

அவனின் இளமைத் துடிப்பு வேலையில் இருந்த ஆர்வம் எல்லாம் பொங்கிப் பிரவகித்த வேளையில் அவனுக்குப் பல நண்பர்களும் வாய்த்தனர்.

குமாரைப் பிடித்தால் இரண்டு நாளில் பாஸ்போட் எடுக்கலாம்...

சந்திரகுமார் என்றபெயர் வர்த்தக வட்டாரங்களில் மிகப் பிரசித்தம் வர்த்தகர்கள், ஏஜண்டுகள் என்று அவனுக்கு எப்பொழுதும் தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டே இருக்கும். மாலையில் அவன் அறைக்குச் சென்று விட்டாலோ கேட்கவே வேண்டாம்

காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ள வேணும் தம்பி.! யாரோ ஒருவர் சொன்ன பழமொழியைப் பொன்மொழியாக ஏற்றுக்கொண்டான்:

வாழ்க்கையில் முன்னேற வேண்டும்... வாழ்க்கையில் முன்னேற வேண்டும் · இவைதான் அவனின் இதயத்தின் அடித்தளத்தில் மறைந்திருக்கின்றன.

வெகு தாராளமாகப் பணம்தேடும் வழியை அவன் கற்று கொண்டான்.

தன்னை முதலில் பணத்துடன் சந்தித்தவர்களுக்கு வெகுசுலபமாக நேரத்துடன் பாஸ்போட் தனது அறையில் வைத்தே வழங்கத்தொடங்கிவிட்டான்.

மிகவேகமாக ஓடும்குதிரை ஓரிடத்தில் தடங்கத்தான் செய்யும்:

யாரோ ஒரு சூழ்ச்சிக்காரனின் தந்திரம் பலித்தது! பலன்...

சந்திரகுமார் இலஞ்சத் திணைக்களத்தால்கையும் மெய்யுமாகப் பிடிபட்டான்.

கண்கெட்டபின் சூரியநமஸ்காரம் செய்ய சந்திரகுமார் துணியவில்லை.

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். அவன் பிடிபட்ட காலத்தில் சட்டங்கள் மிகக்கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்ட நேரம்

''வழக்கை விசாரிப்பது ஆராம்''

''சிவகடாச்சம் நீதவான் ...!'

''அப்ப, தம்பி சரி!...''

முறையாய் தீட்டிவிடுவான் பாவி! சரியான கோபக்காரன் இப்படியான வழக்கென்றால் ஈன இரக்கமில்லாமல் குறைஞ்சது

இரண்டு வருஷம் தீட்டிவிடுவார்!

சந்திரகுமாரின் நண்பர்கள் குசுகுசுத்துக்கொண்டனர்.

அனாவசியமின் விசிறி சுழன்று கொண்டிருந்தது

உயர்பீடத்தில்— வழக்கை விசாரித்த நீதிபதி அமர்ந்திருக்கிறார்.

பெரிய விசாலமான முகம்; செக்கச் செவேலென்று... பெரிய கண்களும் வீங்கிய மூக்குமாய் நிமிர்ந்து பார்க்கவே சந்திரகுமாருக்குப் பயமாக இருந்தது;

குற்றவாளிக் கூண்டில் நிற்கும்போது பயத்தினாலோ என்னவோ அவனின் முதுகுப்புறமெல்லாம் வியர்வையால் நிறைந்தது. குற்றப்பத்திரிகை வாசிக்கப்படுகிறது.

''நீ குற்றவாளியா சுற்றவாளியா? மிகப்பயங்கரமாக அடிக்கட்டைக் குரலில் கேள்வி பிறக்கின்றது; 'குற்றவாளி' ... கிணற்றிலிருந்து வருவதுபோல் அவனின் குரல் கேட்கிறது.

வழக்கு முடிந்து விடுகிறது.

''உன்னைப்போல் குற்றவாளி சமூகத்தில் ஒரு நோயைப்போன்றவன்! இச்சமூகம் வரவரப் பாழ்பட்டு வருகிறது! லஞ்சம் ஒழிந்தால்தான் இந்தநாடு உருப்படும் என்னளவும் நீதிபதியின் கடுகடுத்த முகத்தில் இரக்கமில்லை.

வார்த்தைகளைத் தொடர்ந்து தீர்ப்பு படிக்கப்படுகிறது,

''உன் வயதைக் கணித்து உனக்கு ஓராண்டு சிறைவாசம் விதிக்கப்படுகிறது!''

ஒருவருடச் சிறைவாழ்க்கை சந்திரகுமாரின் மனத்தை மிகக்கெட்டியாக்கிவிடுகிறது.

வேலைபறிபோய், சிறைக்குச் சென்றவன் தனது ஊருக்குச் செல்லவில்லை.

எண்ணைக்கிணறுள்ள நாடு ஒன்று அவனை வரவேற்கிறது!

ஐந்துவருட வாழ்க்கை அவனைக் குபேரனாக்கி விடுகிறது.

காலத்துக்குத்தான் வெட்க மில்லையோ! அது தன்பாட்டுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற அவனின் தணியாத தாகத்துக்கு வெளிநாட்டுப் பணம் ஊக்கமளித்தது. பணம் கூடக்கூட அவனின் தேகமெல்லாம் மினுமினுப்பு ஏறியது.

ஆளை அடையாளம் காணமுடியாதவாறு அவனின் கறுப்புக் கண்ணாடி கட்டியம்கூறி பெரும்பணக்காரனாக ஊர்திரும்பியசந்திரகுமாரை உலகம் உவகையுடனும் வெகுபவ்வியத்துடனும் வரவேற்றது.

சந்திரகுமார் தன்னுள் சிரித்துக்கொள்கிறன்.

அவனின் இளமைக்கால ஆசைகள், கனவுகள் யாவும் செயல் உருவத்தில் காண்கிறன்! தான் நினைத்தமாதிரியெல்லாம் புது மோஸ்தரில் வீட்டைத் திறம்படக்கட்டி, என்னென்ன வசதிகள் உண்டோ அத்தனையும் அமைத்துக் கொண்டவனின் தாகம்தணியவில்லை.

ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் தொடங்கினன்:

அதிஷ்டதேவதை அவனைமேலும் அவனைத் துதிகொள்கிறுள் தனது ஊரில்ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க ஆசைப்பட்டான்

ஆனல் அரசியற் பின்னணியில் அவனது முயற்சிகள் தடைப்படுகிறது, எப்பாடுபட்டாவது இயந்திரங்களை வரவழைத்து தொழிற்சாலையை ஆரம்பிக்க முழுமூச்சாக நிக்கிறன்.

''ஒரு ஆள் இருக்கிறர்! அவரைப் பிடித்து முறையாக வேலை செய்தால் உன்நோக்கம் நிறைவேறலாம்...! அந்த ஆளுக்கு நல்ல செல்வாக்கு...''

சந்திரகுமாரின் நண்பன் ஒருவன் தூபமிடுகிறன். எவ்வளவானுலும் பரவாயில்லை! முயன்றுபார் சந்திரகுமார் பச்சைக்கொடி காட்டிவிட்டான்.

நண்பன் வேகமாகச் செயற்பட்டான்.

''அவருக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால் இரண்டு கிழமையில் அனுமதி எடுத்துத் தருவாராம்...!'' நண்பனின் வார்த்தைகள் அவனுக்கு உற்சாகமளித்தது.

''இவ்வளவுதான... பரவாயில்லை!

இன்று நண்பனேடு அந்தப் பிரமுகரை அவன் சந்திக்கக் காத்திருக்கிறன்.

குமார் லேட்டாகி விட்டதா...

நண்பனின் குரல் சந்திரகுமாரின் சிந்தனையைக் கலைத்தது

இருவரும் புறப்பட்டனர்.

பூஞ்சோலைகள் நிறைந்த அந்தப் பெரிய வீட்டுக்குள் சந்திரகுமாரின் புத்தம்புதிய கார் நுழைந்தது.

ஐயா உள்ளே பூஜையில் இருக்கிறர்... இருங்கோ! வேலைக்காரனின் பணிவான குரல்.

இருவரும் அமர்ந்தனர்.

உள்ளே சிறியமணியோசை கலகலவென்று கேட்டது. ஊது பத்தியின் சுகந்தம் காற்றேடு கலந்து வெளியிலும் பரவியது.

நாமார்க்கும் குடியல்லோம்... கட்டைக்குரல் கரகரவென்று ஒலித்தது. அந்த ஆள் சரியான கடவுள் பத்திக்காரன்! நண்பன் சந்திரகுமாரைப் பார்த்து கூறினன்,

இவர் முந்தி எங்கே வேலை பார்த்தவர்... சந்திரகுமார் கேட்டான்.

''அது தெரியாது! ஆனல் ஏதோ பெரிய உத்தியோகமாய் இருந்தவர்...! இப்பபென்சன்... ஆனல் ஆளுக்கு நல்ல நடப்பு!'' நினைத்தது செய்விப்பார்....

மௌனமாக இருக்கிறன் சந்திரகுமார். பூசைமுடிந்து அப் பிரமுகர் வெளியே வந்தார்.

செக்கச் செவேலென்ற இரட்டைநாடித் தேகம் மேனிபளபளத் தது.

காவிநிற நார்ப்பட்டு அணிந்திருக்கின்றர். இடுப்பில் -ஓம் முருகா என்னும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மஞ்சள் கதர் சால்வை நெற்றியில் அகலமான விபூதிப்பூச்சு மெல்லிய கீற்றெனத் தெரிந்த சந்தனம்; அதன் நடுவில் தெரிந்த குங்குமம்...

காதில் துளசி இலை ..

கையில் புகையும் ஊதுபத்தியுடன் வெளிமுற்றத்துக்கு வந்து சூரியனைப்பார்த்து மும்முறை பூமியைச் சுழன்று கும்பிடுகிறர். எரிந்த ஊதுபத்தியை முற்றத்தின் நடுவில் நின்ற துளசிமரத்தின் கீழ் குத்திவிட்டு விறுந்தைக்கு வந்தார்.

''வாருங்கோ...

இருகைகளையும் நெஞ்சுக்கு அருகில் குவித்து வணங்கினர்.

ஒரியண்டல் என்ரர் பிறைஸ் கொம்பனி உரிமையாளர்... நான் நேற்றுச்சொன்ன விஷயம்...... இவர்தான்.

நண்பன் எழுந்து நின்று கூறினன் ''ஓ ஓ...! சரி, சரி... வாருங்கோ, வாருங்கோ...! குமாரை நோக்கி தன்வலதுகரத்தை நீட்டினர்

ஹலோ...''

குமார் கைகொடுத்தான்.

மூவரும் கதிரையில் அமர்ந்து கொண்டனர்.

நான் உங்கடை விஷயம் எல்லாம் கதைச்சிருக்கிறன் அது... எல்லாம் அடுத்தகிழமை சரிவரும்... நானே அனுமதிக் கடிதம் கொண்டு வந்து தருவன் மற்றது நான்சொன்ன விஷயம் தெரியும்தானே...'' நண்பனின் முகத்தை அவர்பார்த்துச் சிரித்தார்?

''ஓ... அதெல்லாம் சரி... குமார்...

நண்பன் சந்திரகுமாரைப் பார்த்தான். குமார் தன் ஜேம்ஸ் பெண்ட் பெட்டியை மிக ஆறுதலாகத் திறந்தான்.

புதுச்சலவை நோட்டுக்களாக இரண்டு கட்டுகளை எடுத்து நண்பனிடம் நீட்டினான்.

நண்பன் அதைவேண்டி அவரிடம் நீட்டினான். அவர் சடாரென்று எழுந்து இரண்டு கைகளையும் நீட்டி அந்த நோட்டுக்கற்றைகளை வேண்டிக்கொண்டார்.

''அப்ப நீங்கள் போட்டு வாருங்கோ ! வாறகிழமை வாருங்கோ கடிதம் தயாராய் இருக்கும்''! அவசரமாக விடைகொடுத்தார்.

சந்திரகுமாரும் அவனின் நண்பனும் விடைபெற்றுக்கொண்டு காரில் ஏறினர்.

கார்சாலையில் வழுக்கிக்கொண்டே ஓடியது.

''என்ன உலகம்...! சந்திரகுமார் சொல்லிவிட்டுச் சிரித்தான்

''என்ன குமார்... உன்பாட்டுக்கு நீ சிரிக்கிறாய்... என்னவிஷயம்?

''ஒன்மில்லை அவரை உனக்குத் தெரியுமே...' என்னவேலை பார்த்தவர்...''

எனக்குத் தெரியாது குமார்.. ஒருவங்கி மனேஜரைக்கொண்டு தான் இவரை ஒழுங்குபடுத்தினனான்...''

சந்திரகுமாரின் மனம்விழித்துக்கொள்கிறது.

அந்த முகம் லேசில் மறக்கக்கூடியதா...

மெதுவாகச் சுழலும் மின்விசிறியின் கீழ் . செக்கச்செவேலென்று உப்பிய கன்னங்களுடனும், விரித்த மூக்குடனும், உலகத்துக் கோபமெல்லாவற்றையும் தனதாக்கிக் கொண்ட அந்த முகம் அவனால் அதை மறக்கவே முடியாது. அவனுள் ஒரு சிலிர்ப்பு! கார் ஓடிக்கொண்டு இருக்கிறது.

சிரித்திரன்

1984

# பிரபல்யம்....

சுய விளம்பரம் என்பது மனிதனைப் பிடித்தாட்டும் ஒரு விசித்திரமான தொத்து நோய்தான்.

சுய விளம்பரத்தையும் பிரபல்யத்தையும் விரும்புகிற பலரை நான் கண்டதுண்டு.

ஆனால் சங்கரனைப்போல் ஒருவரை இதுவரை நான் சந்தித்ததில்லை.

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் திருநகருக்கு மாற்றலாகி இப்பொழுது வந்துள்ளேன். வந்த இடத்தில் சங்கரனை காணுவேன் என்று நான் நினைத்துப் பார்த்தது இல்லை.

முன்பு இங்கு கடமையாற்றிய சமயம் எனது அலுவலகத்தில் சங்கரன்தான் பிரதம இலிகிதர் அவரும் வெவ்வேறு இடங்களில் சேவையாற்றி விட்டு திருநகருக்கு மறுபடியும் இடமாற்றம் பெற்று வந்துள்ளார். அதுவும் இருவரும் ஒரே அலுவலகத்தில் கடமையாற்றும் சந்தர்ப்பம்.

காலையில் எட்டுமணிக்கே வந்துவிடுவார். முழுவழுக்கையாய் இருந்ததலையில் பூசிய நல்லெண்ணெ சூரியஒளியில் துலங்கியபடியே இருக்கும்.

வேட்டி கட்டி 'நாஷனல்' அணிவார் ''தம்பி நாங்கள் பரம்பரைத் தமிழர்! உந்த கால்சட்டை மோகம் எங்களிடம் இல்லை!

அடிக்கடி கூறிக்கொள்ளும் வார்த்தைகள்.

நெற்றியில் எப்பொழுதும் சந்தனப்பொட்டு மினுங்கும்,

''நாங்கள் ஒரு நல்ல பரம்பரையிலை வந்தனுங்கள்! காலையிலை எந்தவேலையும் சிவபூசை செய்யாமல் தொடங்குவதில்லை!

பொட்டுக்கு அவர்தரும் வியாக்கியானம். ஆனால் அவர் அணியும் உடுப்பைப் பற்றியோ நெற்றியில் உள்ள சந்தனப்பொட்டைப் பற்றியோ நாங்கள் யாரும் அவருடன் தர்க்கிப்பதில்லை. அவராகவே முன்வந்து சொல்லுவதுதான் இவை.

அப்பொழுது நான்வேலைக்குச் சேர்ந்த புதிது.

"அலுவலகத்தில் நாங்கள் ஆமான வெள்ளைக்காரனுக்கு கீழே வேலை செய்தனுங்கள் தம்பி ஒரு பிழை விட்டால் வீட்டை அனுப்பிப் போடுவான்...!

என்னுடைய கை எழுத்தைப் பார்த்து அவன் என்னிலை ஒரு தனி விருப்பம்... வேலை செய்கிறதெண்டால் வெள்ளைக்காரனோட வேலை செய்யவேணும், நான் ஒன்றும் பேசுவதில்லை.

"வெள்ளிக்கிழமைகளில் பின்நேரம் சிவன்கோயிலுக்கு வர வேணும் தம்பி ..

நான் தலையாட்டுவேன்.

திருநகர் சிவன்கோயில் பஜனை சபைக்கு இவர் தலைவர், பட்டுவேட்டி, சால்வை கட்டி கழுத்தில் சங்கிலி தவழ நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நிற்பார்.

சும்மா சொல்லக்கூடாது. நல்ல ஆகிருதியான வெள்ளை வெளீரெண்ட தேகம்!

சபைக்கு ஏற்ற மனுசன்தான்.

வருடாந்த திருவிழா வந்துவிட்டால் கேட்கவேண்டாம்.

கையில் ஒரு சிறுதாளத்துடன் சிறு பெடியன்கள் பின்தொடர பஜனை பாடிக்கொண்டு சுவாமிக்குப் பின்வலம் வருவார்.

திருவிழா முடிவடைவதற்குள் ஒரு ரிப்போட்டரை'ப் பிடித்து படம் பிடிப்பித்து பத்திரிகையில் போடப்பண்ணுவார்.

"திருநகர் சிவன்கோவில் உற்சவத்தில் சங்கரன் குழுவினர் பஜனை பாடிவரும் காட்சி."

இப்படி வாசகங்களுடன் படம் பத்திரிகையில் வெளிவரும் குறைந்தது ஒரு தமிழ் தினசரி ஒரு தமிழ் வாரவெளியீடு இப்படி வெளிவரப் பண்ணி விடுவார் படம் வெளிவந்தால் போதும்.

அலுவலகத்தில் அடுத்த நாள் கலகலப்புத்தான்,

"தம்பி பேப்பரில் பார்த்தியோ"?

பார்த்திருந்து அவரைத் திருப்திப் படுத்துவதற்காக படம் நல்லாய் இருக்கிறது. என்று சொன்னால் போதும்.

தம்பி செய்யிறவன் செய்யவேணும்! ஏதோ அந்தப்பகவான் புண்ணியம்... சிவகாரியம் தம்மால் ஆகவேண்டி இருக்கு...

வாயெல்லாம் பல்லாக சிரிப்பார், தற்செயலாய் 'தான் பார்க்கவில்லை, எந்தப்பேப்பரில் வந்திருக்கிறது? என்று கேட்டு விட்டால்... வந்தது நாசம்.

மனுசன் தொடங்கி விடுவார்.

''நீங்கள் எந்த உலகத்திலை அப்பா இருக்கிறியள்! இதுகளைப் பார்க்க வேணும்! நாங்கள் எவ்வளவு வேலைகள் செய்யிறம்! உங்களுக்கு என்ன விளங்கும்?

இந்தப் பேச்சுக்குப் பயந்து பார்க்கா விட்டாலும் ''ஓ யார்த்தோமே! நல்லாய் இருந்தது!'' என்று' சொல்லும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டதுண்டு.

திருநகர் ஷயரோக தடுப்பு நிவாரணச் சங்கம் கலைவட்டம் யாவற்றிலும் அங்கம் வகிப்பார்.

ஊரில் உள்ள வாசிகசாலை சனசமூக நிலையத்துக்கு சங்கரன் போஷகர்.

ஒரு கூட்டம் நடந்தால் போதும். படத்துடன் அனேகமாக எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவரும்.

கதைப்பதற்கு ஒரு கிழமைக்கு விஷயம் இருக்கும் தான் என்ன செய்தார். என்ன செய்யப் போகின்ருர். என்று மணிக்கணக்காகச் சொல்லுவார். நாங்கள் வேலை செய்து களைத்த நேரங்களில் இவரது சுயபுராணம் ஒரு தென்றல் மாதிரி இருக்கும்.

கடற்கரை அருகில்தான் சங்கரனின் வீடு. மீனவர்கள் ஏராளமாய் வசிக்கும் பகுதியில் இவரது வீடு கம்பீரமாய் இருக்கும். வீட்டில் தொலைபேசி வசதி உள்ளது. மீனவர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் தெரிவு ஏகப்பட்ட போட்டி சங்கரன் ஒருவாரகாலம் அலுவலகத்திற்கு லீவு! பெரிய பாடுபட்டு தலைவராக தெரிவு செய்யப்பட்டு விட்டார்.

மீனவர் தொகுதியில் ஊர்வலம், மாலை, வெடி என்றுபெரிய அமர்க்களமாய் இருந்தது.

சங்கக்கட்டிடத்தில் வரவேற்புக் கூட்டம் நடந்தது, எங்களையும் அழைத்திருந்தார். அவரது உறவினர்கள் நண்பர்கள் தான் பேச்சாளர்கள்.

சங்கரன் மீனவர்களின் 'கலங்கரை விளக்கு என்று ஒருவர் புகழாரம் சூட்டினர்.

வழக்கப்படியே பத்திரிகைகளில் மாலையும் கழுத்துமாய் காட்சி அளித்தார் சங்கரன்.

சந்தோரில் இவர் 'மூட்' கெட்டுப்போய் கோபமாக இருந் தால் நாங்கள் செய்யும் தந்திரம் ஒன்று உண்டு.

''அண்ணை உங்களுடைய படம் அண்மைடக்குப் பேப்பரில் கண் டனான். சொல்ல மறந்து போனேன்... நீங்கள் பெரிய ஆள் தான்' இவ்வளவும் போதும்.

சங்கரனின் கோபம் இருந்த இடம் தெரியாமல் பறந்துவிடும். முகமெல்லாம் விகசித்து சூரியனைக்கண்ட தாமரைபோல் மலரும்

'எங்கையடா தம்பி பார்த்தனி...?'

—தர்மசங்கடமாய் விடும் எமது நிலை

ஏதாவது சந்தர்ப்பத்தை நினைவு கூர்ந்து படம் வெளிவந்த விஷயத்தை கூறிச்சமாளிப்போம்.

''ஓ! அதுவே... அதைப்போலை எத்தனையடா தம்பி ..'

ஒருவிதத் திருப்தி நிலவும் அவரது முகத்தில் அவரது மனைவி ஒரு ஆசிரியை.

ஒரு முறை அந்தப் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் வட்டாரக் கல்வி அதிகாரியாக பதவியேற்ற போது சங்கரனின் மனைவி தற்காலிக அதிபராக கடமையாற்றினர்.

விஷயம் தெரியுமோ தம்பி... ஒருநாள் காலை ஆரம்பித்தார்

''என்ன அண்ணை ஏதோ விஷயம் போலை...

''நம்ம மனிசிதானே இப்ப அவவின்ரை பள்ளிக்கூடத்தில் பிரின்சிப்பல்...!

உங்களுக்கு விடிஞ்சது பொழுதுபட்டது ஒண்டும் தெரியாது அவருக்குக் கோபம் வந்து விடும்.

இதற்கிடையில் ஒரு தமிழ் தினசரியில் ஒரு மூலையில் செய்தி வெளியாகி இருந்தது .. தற்காலிக அதிபர்' என்ற தலைப்பில்.

இச்செய்தி அடங்கிய பத்திரிகையை சங்கரன் அலுவலகத் திற்கு கொண்டு வந்தார்.

எல்லோருக்கும் காட்டினர்,

இருவாரங்கள் சென்றன...

மறுபடியும் ஒருசெய்தி.

அப்பள்ளிக் கூடத்துக்கு ஒரு நிரந்தர அதிபர் நியமிக்கப் பட்டு விட்டார் என்பதே அது!

இதைக்கொண்டு வந்து காட்டியது நடராஜா என்ற எங்களது சகஊழியர்.

அவருடைய மனைவியும் அந்தப் பள்ளிக்கூடத்தில்தான் ஆசிரியையாய்க் கடமையாற்றினர்.

நடராஜவுக்கு சங்கரன் மீது வேருெரு ஆத்திரம்.

இருவாரங்களுக்குள் ஒருநாள் பேச்சு வாக்கில் நடராஜாவுக்கு இஞ்சை நீ எனக்குக் கீழே வேலை செய்கிருய்! பள்ளிக்கூடத்தில் என்னுடைய மனைவிக்கு கீழ் உனது மனைவி படிப்பிக்கின்ற...

எப்படிப் பொருத்தம்...? சங்கரன் கூறினர்.

நடராஜா பொதுவாக இப்படியான தர்க்கங்களுக்குள் ஈடுபடுவதில்லை.

அதற்கு என்ன செய்யமுடியும்? ஒவ்வொருவரது திசை பலன் படிதான் காரியங்கள் இருக்கும் – தர்க்கம் முடிந்தது.

இப்பொழுது நடராஜா ஏதோ ஒரு உத்வேகத்தில் இச்செய்தியை வாசித்தார்.

இச்செய்தியைக் கேட்டதும் சங்கரனுக்கு முகம் கறுத்துவிட்டது.

ஆனாலும் ''விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை.'' என்ற வாக்கியத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர் அவர்.

''நான்தான் வேண்டாமப்பா உனக்கிந்தப் பதவி பேசாமல் ரிசைன் பண்ணிவிடு! என்று சொன்னனன். அதற்குப்பிறகு தான் ஒரு ஆளைப்போட்டிருக்கு...

சங்கரன் கூறியதைக் கேட்டதும் நாங்கள் அசந்து விட்டோம் மனுசன் என்ன மாதிரி கதையைப் பிரட்டி விட்டார்.

ஒருமுறை உயர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்திருந்தார்.

சேவைமூப்பின் பிரகாரம் அவர் அழைக்கப்பட்டிருந்தார். கொழும்புக்குப் போகமுன்னர் இதுபற்றிப் பலரிடமும் கூறிக் கொண்டார்.

எனக்கும் செய்தி தெரியும்.

ஒரு நாள் காலை கன்ரீனில் தேனீர் அருந்தும் நேரம்.

'அண்ணை எனது வாழ்த்துக்கள்! இண்டவியூவுக்கு அழைப்பு வந்திருக்காம்.'

என்னடாப்பா இவ்வளவு நாளும் உனக்குத் தெரியாதே? பெரியவர் நேற்று கூப்பிட்டு நல்ல ரிப்போட்தான் எழுதுவதா கச்சொன்னார்...

முகமெல்லாம் சிரிப்பாக மாறியது.

பெரியவர் என்பது எங்கள் இலாகாத் தலைவர்.

நான் நம்பவில்லையடா தம்பி முதலில்...

மனுசன் என்னைக் கூப்பிட்டு கை குலுக்கி கட்டாயம் நீங்கள் எடுபடுவீர்கள் சங்கரன்! என்று ஒரே புகழ்ச்சிதான்.

அப்ப பாரன் எங்கடை திறமை எங்களுக்குத் தெரியாது பிறத்தியார் சொன்னல் தான் எங்கடை ஆட்களுக்கு விளங்கும்.

இப்ப எனக்கு வெள்ளிதிசை நடக்குது. கட்டாயம் எடுபடுவன்.

நேர்முகப் பரீட்சை முடிந்து முடிவுகளும் வெளியாயிற்று.

தேர்வுப் பட்டியலில் சங்கரனின் பெயரே இல்லை.

மனுசனின் முகத்தில் களைத்தில்லை. இரண்டு நாள் அலுவலகத்திற்கு சுகமில்லை என்று லீவு போட்டார். லீவு முடிந்ததும் வந்தார்.

என்னல் சும்மா இருக்கமுடியவில்லை.

அவரைச் சீண்டிப்பார்க்க ஆசையாய் இருந்தது.

''என்ன அண்ணை விஷயம் சரிவரவில்லைப் போலை.. செலக்ஷன் லிஸ்ற் பேப்பரில் வந்திருக்கு.

எடை இது பெரிய வேலையே... எடுபட்டவங்களை பார்த்தியே யாரெண்டு! எல்லாம் நேற்றைக்கு முளைச்சவன்கள்... ஆ வெண்டால் வாயைத் திறக்கத் தெரியாது! இவன்களுக்கு என்ன தெரியும்...? எடுத்தவங்களும் அப்பிடி... எடுபட்டவங்களும் அப்பிடி...!

சங்கரனுக்கு எட்டாத பழம் புளிப்பது எங்களுக்கு புரிந்தது

பத்து ஆண்களுக்குப் பின்னரும் சங்கரனின்குண இயல்பு களில் ஒருவித மாற்றங்களும் இல்லை. இப்பவும் அதே விளம்பரப் பிரி யராய் காட்சி அளிக்கின்றார். திருநகர் சிவன்கோயில் திருவிழா ஆரம்பமாயிற்று. எனது பெரிய தந்தையார் சுவாமி தரிசனத்துக் காக வந்திருந்தார். அவரை அழைத்துக் கொண்டு கோவிலுக் குச் சென்றேன். அங்கு சங்கரன் நின்றார். அன்று பிரதோஷத் திருவிழா. மார்பில் தங்கச் சங்கிலி தவழ சங்கரன் பொட்டும் நெற்றியுமாய் சிவப்பழமாய் காட்சி அளித்தார்.

என்னையும் பெரியப்பாவையும் கண்டதும் சங்கரன் எங்களுக்கு அருகில் வந்து உரையாடினார்.

பெரியப்பா சங்கரனையே உன்னிப்பாய் கவனித்துக் கொண் டிருந்தார்.

'நீ சங்கரன் தானே...' பெரியப்பாவின் கேள்வி சங்கரன் திகைத்தார்.

ஓம்... நீங்கள்... எனக்கு விளங்கவில்லை...!

''என்ன தம்பி உன்னுடைய வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த என்னை மறந்திட்டியே... நீ கோணலிங்கத்தின்ரை மகன்தானே...

ஓமோம்... நீங்கள் கணபதிப்பிள்ளை அண்ணைதானே... மறந்து போய்விட்டது; எத்தனை வருசம் உங்களைக் கண்டு... எப்படி இருக் கிறியள்...

விசாரணை தொடர்ந்தது.

எனது பெரியப்பா முன்பு கடற்படையில் பணியாற்றிய சம யம் திருநகரில் சங்கரனின் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்திருக்கின் றார்.

வீட்டுக்குப் போகும் வழியில் பெரியப்பா சங்கரனைப் பற்றி யேகதைத்துக் கொண்டுவந்தார்.

அவர்களின் குடும்பம் ஏழ்மையால் பெரிதும் கஷ்ரப்பட்டவர் கள், என்றும் சங்கரன் தலைதூக்கிய பின்னர்தான் அக்குடும்பத் தின் கஷ்ரம் ஓரளவுக்கு நீங்கியதென்றும் கூறினார்.

அத்துடன், இவர்களது ஏழ்மையைக் காரணமாக வைத்து உற வினர்கள் யாவரும் சங்கரனின் குடும்பத்தை ஒதுக்கி வைத்தது

பற்றியும் கதைகதையாய் கூறினர் இக்கதையைக் கேட்டதும் சங்கரன் மீது எனக்கு என்னை அறியாமலே ஒருவித பரிதாப உணர்வு மேலோங்கியது.

அவரது பால்ய வயது ஏழ்மையும், உறவினர்களது புறக்கணிப்பும் அவரது உள்ளத்தை வெகுவாகப் பாதித்திருக்க வேண்டும்.

அந்தப் பாதிப்பின் எதிர் ஒலிதான் சங்கரனது தற்புகழ்ச்சிக்கு காரணமாய் அமைந்து விட்டதோ?

தான் பிரபல்யமாய் விளங்க வேண்டும், தனது பெயர் எங்கும் அடிபட வேண்டும் சமூகத்தில் ஒரு முக்கிய புள்ளியாக திகழவேண்டும் என்ற ஆசைகள் மனிதனை வெகுவாக ஆட்டி வைத்திருக்க வேண்டும்.

இருவார லீவில் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். லீவுமுடிந்து திரும்பினேன். அலுவலகத்தில் சங்கரனின் இடம் காலியாக இருந்தது.

எங்கே சங்கரனைக் காணோம்...!

எனது பக்கத்து மேசைக்காரரைக் கேட்டேன்.

அவர் ஒன்றும் பேசாமல் தன் இருக்கையை விட்டு எழுந்து எனக்கருகில் வந்தார்.

''உமக்குச் சங்கதி தெரியாதா மூன்று நாட்களுக்கு முன் சங்கரன் ருக்குமணி கம்பனி மனேஜரிடம் லஞ்சம் வேண்டிய சமயம் பிடிபட்டு விட்டார். பொலிஸ் ரிமாண்டில் இருந்து இப்ப பிணையில் நிற்கிறார் அதுமட்டுமல்ல வேலையிலிருந்தும் தற்காலிகமாக அவரை நிறுத்தி வைத்தாகி விட்டது.

சங்கரன் லஞ்சம் வேண்டினரா!

என்னால் நம்பமுடியவில்லை...

''அவப் பொழுதும் தவப்பொழுதாய் இருக்கவேணும் தம்பி இது சங்கரன் அடிக்கடி கூறும்வார்த்தைகள்

இப்பொழுது அது என் காதில் கேட்டது போன்ற பிரமை.

''இந்தக்காலத்தில் எதுநடக்கும் எதுநடக்காது என்றுயாரும் திட்டமிட்டுக் கூறமுடியாது.

எந்தப்புற்றிலே எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத் தெரியும்! எனதுசகா பட்டும் படாததுமாய் கூறினர்.

அது அலுவலக நேரமென்றபடியால் சங்கரனைப் பற்றியோ அவர் லஞ்சம் வேண்டிப் பிடிபட்டது பற்றியோ விபரமாக உரையாட நான் விரும்பவில்லை.

சங்கரனின் நிலைக்காக நான்பெரிதும் வருந்தினேன். பாவம் மனுசன் தான் பிரபல்யமாக இருக்க வேண்டும் தனது படம் பெயர் யாவும் பத்திரிகைகளில் சதாவெளி வர வேண்டும் என்ற ஒரு வெறியில் திரிந்தவர்.

இந்தச் செய்தியும், அவரது படமும் பத்திரிகைகளில் வெளியானல்...!

★

சிரித்திரன்

1980

# ஆலடி வயிரவர்

ஆல மரத்து இலைகள் சலசலத்து அசைகின்றன. காற்றின் அசைப்பிற்கு ஈடுகொடுக்க முடியாத பழுத்த இலைகள், வயிரவர் கோயில் கூரையில் விழுகின்றன. ஆலமரத்தின் கீழ் எவனோ ஒரு பக்தன் நாட்டிவிட்ட வைரவசூலத்தினை மழை வெய்யிலில் இருந்து காப்பாற்றுவதற்காக கடைக்கார மாணிக்கத்தார் ஓலையால் சிறுகொட்டில் போட்டு விட்டிருந்தார்.

யார் யாரைக் காப்பாற்றுவது...?

அக்கொட்டிலின் ஓரமாக அதோ அவர் நிற்கின்றார். எவ்வளவு கம்பீரம்..? கறுத்த அந்த உடலின் முறுக்கும்... நிமிர்ந்த நோக்கும்... அப்பப்பா, அவர் தான் எவ்வளவு அழகு?

கொழும்பில் நான் கண்ட எத்தனையோ ஆட்களில காணாத பேரழகு அல்லவா இவர் மேனியில் கொலு வீற்றிருக்கின்றது!

வாலை மெதுவாக அசைத்து உடலையும் மெதுவாக அசைத்து என்னைப் பார்க்கின்ற அவர் விழிகளில் தான் எத்தனை ஆர்வம் எத்தனை ஆசை.

நான் அவரைப் பல நாட்களாகப் பார்த்து வருகின்றேன்: அவர் என்னை இன்றுதான் கவனித்திருக்கிறார் போலும். அவரிடம் ஓடிவிடவே என் உள்ளம் விரும்புகின்றது.

ஆனால்...

மெதுவாக என்னை நாடி அவர் நடந்து வருகின்றார். என் உடல் நடுங்குகின்றது. அவருக்கும் எனக்கும் இடையே நீண்ட மதிலும் இரும்புக் கேற்றும் உள்ளன.

அவரை வைத்த விழிஎடுக்காமல் பார்க்கின்றேன்.

'நீ மிக அழகா இருக்கிறாய்! நீ யார்? இவ்வளவு காலமும் எங்கு இருந்தாய்?

அவர்தான் கேட்கின்றார்.

எவ்வளவு துணிச்சல்! இந்த யாழ்ப்பாணத்து ஆண்களுக்கு துணிச்சல் அதிகம்தான்... ஆனால்...

என்னல் பேசமுடியவில்லை வெட்கம் என்னைப் பிடுங்கித் தின்கிறது.

'ஏன்வெட்கப்படுகிருய்? நாய்களுக்கு வெட்கம் ஏன்?'

'நாய்களுக்கு இருக்கக் கூடாதோ?'

'ஓ -- நீ ஊமையல்ல!'

'போங்கள்... நீங்கள் யார் என்று சொல்லுங்களேன்' என்று கேட்டபடி அவரை நிமிர்ந்து பார்த்தேன் அவரும் என்னையே பார்க்கிருர்.

'என் பெயர் வயிரவன். ஆலடிதான் என் இருப்பிடம். புத்தி தெரிந்த நாள் முதலா இங்குதான் இருக்கிறேன்!'

'ஆலடி வயிரவர்... நல்ல பெயர்! என் பெயர் ரோஸி... கொழும்பில் இருந்தனன். இங்கு வந்து ஐந்தாறு நாள்தான்!

'ரோஸி! ரோஸி!' என்ருர் அவர்.

'இங்காலை வந்துவிடேன்'

—அவர் கண்களில் ஆசை சதிராடியது.

'எப்படி வாறது? நீங்கள் வாருங்களேன்!'

'நானும் எப்படி வாறது?'

வழி தெரியாது திகைத்து நிற்கின்ருேம். அவர் நிலையைக் காண எனக்குப் பரிதாபமாக இருந்தது. கேற் நீக்கலூடாக அவர் முகத்தை நக்கிவிட்டேன்.

'ரோஸி! ரோஸி!'- என்னை வீட்டில் யாரோ கூப்பிடுகிருர்கள். அக்கா தான்; புவனம் அக்கா எப்பவும் இப்படித்தான்... ஒரு.... இது... தெரியாத அக்கா !

'நான் வாறன் .. வீட்டை கூப்பிடுகினம் .. நீங்கள் போங்கோ... பிறகு வாறன்...' என்று வீட்டுக்குள் பாய்ந்து ஓடினேன்

இருள் சூழ்ந்து விட்டது. அவரை என்னல் மறக்கவே முடியவில்லை. 'ஆலடி வயிரவர்...... ஆலடி வயிரவர்!...' என்று என் பெண் மனம் அவரையே சுற்றிச் சுற்றி வந்தது. இருப்புக் கொள்ளாது கேற்றடிக்கும் திண்ணைக்கும் அலைந்தேன். ஆலடியில் அவர் கேற்றடியைப் பார்த்தபடி நிற்பதை என்னல் காண முடிந்தது.

வீட்டில் எல்லோரும் தூங்கி விட்டனர்.

'இதென்ன மதிலோரமாக ஆரோ போகினம்..' தலையை நிமிர்த்தி, மூக்கை அசைத்துப் பார்க்கின்றேன். புவனம் அக்கா தான் தன் வீட்டிலேயே கள்ளனைப் போல ஏன் நடக்கவேணும் அதுவும் எல்லோரும் தூங்கிய பிறகு?

நானும் மெதுவாக அவள் பின்னால் போனேன். அக்கா சத்தமின்றி கேற்றைத் திறந்தபடி ஆலமரத்தை நாடிப்போகின்றாள். நல்ல சந்தர்ப்பம் நானும் 'டக்'கென்று வெளியே பாய்ந்தோடினேன்.

'ரோஸி!' என்று அக்கா மெதுவாக அழைக்கின்றாள் பயத்துடன் நான் ஒருகணம் நின்று அவளைப் பார்த்துவிட்டு வயிரவரை நாடி ஓடினேன்.

'வந்துவிட்டியா ரோஸி ' என்றபடி அணைத்துக்கொண்டார் அவர்.

'புவனம் என் புவனம் !'

யாரோ மெதுவாக அழைக்கின்ற குரல் எழுகின்றது அக்காவை யார் கூப்பிடுகின்றார்கள்? ஆலமரத்தின் மறைவில் இருவர் நிற்பது தெரிகிறது.

ஒன்று புவனம் அக்கா: மற்றது...?

'என்ன ரோஸி... பார்க்கிறாய்?... கடைக்கார மாணிக்கத்தாற்றை கடையிலை வேலை செய்கிற பெடியன் சுப்புறு அது. மற்றது உன் எசமானி! ஓவசியர் நடராசாவின் மகள் புவனம்!இரண்டு பேரும் இட்படி அடிக்கடி சந்திக்கிறவை,'

புவனம் 'விம்மி விம்மி' அழுகின்றாள், அக்கா! அக்கா! ஏன், அழுகிறாய்?

'புவனம் அழாதே! உன்னைக் கடைசிவரை கைவிடமாட்டேன்'

இந்த ஆலடி வயிரவர் ஆணையாக உன்னைத்தான் மணப்பேன் என்கிறான், சுப்புறு.

''உங்களை நான் சந்தேகிக்கவில்லை. என் அப்பாவை நினைக்கத்தான் பயமா இருக்கு! எங்கடை கலியாணத்துக்கு உடன்படவேமாட்டார்! என்னால் உங்களை விட வேறொருவருடன் வாழவமுடியாது' என்று அழுகிறாள் அக்கா.

புவனம்! உன் அந்தஸ்துக்கு ஏற்றவன் நான் அல்ல, நீ பணக்காரர் ஒருவரின் மகள். நான் அனுதைகடையிலே வேலைசெய்துபிழைப்பவன்! புவனம்! நாங்க காதலிக்கக்கூடாது? புவனம் இந்த உலகமே எதிர்த்தாலும் என்னுல் உன்னை மறக்கவே முடியாது. யார் எதிர்த்தாலும் உன்னை என்னிடமிருந்து பிரிக்க முடியாது.'

நீங்கள் இல்லா விட்டால் எனக்கும் வாழ்வில்லை. என் உலகமே நீங்கள் தான்!' என்று புவனம் அக்கா விம்முகிருள்.

'ரோஸி! அவையளை விட்டிட்டு என்னைப்பார்' என்று என்னைக் கூப்பிடுகிறுர் அவர், அவசரக்காரர் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள் நாங்களும்தான். வீட்டுக்குப் போகும் போது அக்காவுடன் அவரைப் பிரிய மனமின்றி நானும் போனேன்.

கொடிய நாட்கள் மூன்று அவரை என்ருல் சந்திக்கவே முடியவில்லை. கேற்றைத் திறந்து விடுவார் எவருமேயில்லை. கேற்றுக்கு அப்பால் ஆலமரத்தின் கீழ் கவலேயோடு அவர் எனக்காக மூன்று நாட்களாகக் காத்திருக்கிருர். கேற்றடிக்கு அடிக்கடி நான் ஓடுவேன். அவரும் வருவார்!

நாங்கள் சந்தித்துக் கொள்வதை ஓவசியர் ஐயா அவதானித்து விட்டார்.

'டேய் .. கணபதி!' என்று கூச்சல் போட்டு வேலைக்காரனை அழைத்தார். "அல்சேஷன் நாய் பழுதாகப் போகப் போகுது... உங்கை ருேட்டிலே ஒரு பறநாய் நிக்குது. அடிச்சுத் துரத்து அதை!'

என் இதயம் ஒரு கணம் நின்றது போல இருக்கிறது. அவர் என்னைப் பார்த்தால் என்ன? நான் உயர்சாதி நாயாம் அவர் அந்தஸ்துக் குறைந்தவராம்,

கணபதி பெரிய கற்களாகப் பொறுக்குகின்ருன். கேற்றைத் திறந்து கொண்டு வெளியே போகின்ருன். நானும் வெளியே ஓட எத்தனிக்கின்றேன், வலுவான இருகரங்கள் என்னைப் பற்றிச் சங்கிலியை மாட்டுகின்றன.

'புவனம்! ரோஸியைக் கூட்டில் அடைச்சு வை! பறைநாயளோடு சேரப் பாக்குது.'

வெளியே 'டொக்! டொக்!' என்று கற்கள் வீசப்படும் ஒலி கேட்கின்றது. 'வாள்! வாள்!' என்று அவர் கதறியழும் ஓசையும் கேட்கிறது. என்னுல் தான் அவருக்கு இந்தத் தண்டனை

நான் பாவி! கூட்டை உடைத்து விடும் ஆவேசத்தோடு நான் துடிக்கின்றேன்.

புவனம் அக்கா என்னையே ஆதரவோடு பார்க்கின்ருள். பின் திரும்பிப் போகின்ருள்.

பெண் மனம் பெண்ணுக்குத் தானே புரியும்!

இரண்டு நாட்கள் கழிந்து விட்டன. ஊண் உறக்கமின்றிக் கிடக்கின்றேன்.

கணபதி கூட்டில் போட்ட இறைச்சித் துண்டுகள் அப்படியே சிதறிக் கிடக்கின்றன.

என் ஆசைகளும் அப்படியே.

என் மனதை ஏதோ ஒன்று வந்து அடைத்துக் கொள்கிறது

புவனம் அக்கா மகிழ்ச்சியாகத்தான் காணப்படுகின்ருள். வழக்கம் போல எல்லோரும் தூங்கிய பின் ஆல மரத்தடிக்குப் போகின்ருள். நேரம் கழித்து வருகின்ருள் அவ்வேளைகளில் கேற்திறந்தபடிதான் கிடக்கின்றது! ஆனல் என் கூண்டு திறக்கவில்லை!

இன்று இரவு எப்படியாவது வெளியேறி விடவேண்டும், என் அவனுடன் எங்காவது கண்காணுத இடத்திற்கு ஓடிவிட வேண்டும்! அவருடன் தனிக்குடித்தனம்... ஆகா! நினைக்கவே இனிக்கிறது

இருள் படர்கின்றது- ஆலடியில் அவர் கதறும் ஒலி கேட்கின்றது, 'அன்பே!' அவர் அழைக்கின்ருர். இதோ! புவனம் அக்கா போகின்ருள். பதுங்கிப் பதுங்கிக் கேற்றைத் திறந்து கொண்டு போகிருள்.

அவள் கொடுத்து வைத்தவள்.

ஆ .— இதென்ன? நம்பவே முடியவில்லை...... என் அவர் ஆலடி வயிரவர்... திறந்த கேற்றுக்குள்ளால் புகுந்து என் கூண்டைநோக்கிப் பாய்ந்து வருகின்ருர்.

'ரோஸி! ரோஸி!'

கூண்டை உடைத்தெறிகின்ற வெறியோடு மோதுகின்றேன் அவர் கூச்சலிட்டபடி கூண்டின் மீது பாய்கின்றார்.

என் ராசாவுக்குத்தான் எத்தனை தைரியம்! எங்களை மறந்தோம்.

இருந்தாற் போல் வீட்டு லைற்றுகளெல்லாம் எரிந்தன ஒவசியரும் கணபதியும் கதவுகளைத் திறந்தபடி ஓடிவந்தார்கள்.

'ஓடிவிடுங்கள்... ஓடிவிடுங்கள்...' என்று நான் கூச்சல் போட்டேன் அவர் கவனிக்கவே இல்லை,

அத்தனை ஆத்திரம்!

'கணபதி! அடிச்சுக் கொல்லடா!' என்று ஒவசியர் கூச்சலிட்டார். கணபதி பாய்ந்து ஓடி வந்தான். ஒரே வீச்சு... 'ரோஸி' என்று அவர் கதறினர். மண்டையில் அலவாங்கு அடி பலமாக இறங்கி விட்டது!

என் கண்முன்னல் என் காதல் தெய்வம்' என் இன் உயிர் துடித்துத் துடித்து...... ஐயோ... நான் பாவி!

,என்னெண்டு இந்தப் பறைநாய் உள்ளுக்குள் வந்தது... உதென்ன கேற்திறந்திருக்கு '

'ஒவசியர் வேகமாக வெளியே ஓடுகிறார்.

'கணபதி ..! ரோச்சை எடுத்துவா '

கணபதி ஓடிப்போகின்றன்.

புனவம் அக்காவும் சுப்புறுவும் அகப்பட்டுக் கொண்டார்கள் ஒவசியரின் கைகளில் அகப்பட்ட சுப்புறு துவைக்கப்படுகின்ற ஒலி கேட்கிறது.

'ஐயோ! அப்பா! அவரை ஒன்றும் செய்யாதையுங்கோ... அவரை விட்டிடுங்கோ என்று புவனம் அக்கா துடிக்கிறள்.

'போடி. உள்ளே உவனை அடிச்சுக் கொல்லடா, கணபதி

சுப்புறு என்ன நாயா, கணபதி அடிப்பதற்கு?

பலர் வெளியே கூடிவிட்டார்கள் போல இருக்கிறது. யார் யாரோ விளக்குப் பிடிக்கிறர்கள்.

'என்னை விடுங்கோ! நான் இனி உள்ளே வர மாட்டேன்' என்று புவனம் அக்கா வீரிடுகின்றள்.

'புவனம்! யோசித்துத்தான் கதைக்கிருயா?' என்று ஓவசியர் குமுறுகிருர்.

'ஓம்... நான் இனி உங்கை வரமாட்டன்...? அவரோடை எங்காவது போகப்போகின்றேன்.'

'வெளியில் போன நாய் இனி உள்ளுக்கு வேண்டாம்... போடி ... நல்லாய்ப் போ! இண்டையிலிருந்து எனக்கு நீ மகளல்ல டேய், கணபதி, 'கேற்'றைப் பூட்டு!'

ஓவசியர் தள்ளாடித் தள்ளாடி வருகிருர். கணபதி 'கேற்றைப் பூட்டிவிடுகின்ருன்!

என் தெய்வம் இரத்தச் சேற்றில் கிடக்கின்றது.

கம்பீரமான அந்தக் கறுத்த உடம்பு அந்த முறுக்கு, நிமிர்ந்த தாக்கு...ஐயோ

எல்லாம் கனவாய்ப் போச்சே!

இது என்ன நீதி!

ஆலடி வயிரவர் ஆணையா, நீ போன இடத்திற்கு நானும் வருவேன். என்னைத் தடுத்து, அடைத்து வைக்க, ஓவசியரென்ன கணபதியென்ன, அப்போது எவராலும் முடியாது!

♥ ♥

சிரித்திரன்

1971 ஒக்டோபர்

முதலாவது பரிசு பெற்ற சிறுகதை

# உறவுகளும் எல்லைக் கோடுகளும்

வழக்கமாக அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் படுக்கையை விட்டு எழும்பி விடுவார் முருகேசர் ஆனால் இன்றோ இரவு நித்திரையில்லாமல் நீண்டது நேற்று நடந்த விசாரணை அவரை நித்திரை கொள்ள முடியாமல் செய்துவிட்டது. அவர் எழ முன்னர் அவர் ஆசையோடு வளர்த்து வந்த சேவல்கள் குரல் கொடுத்து எழுப்பிவிடும். அதுவும் அந்தசிவலைச் சேவலோ,

''என்ன நீ நித்திரையை விட்டு எழும்பி வெளியில் வருகிறாயா? அல்லது நான் உள்ளுக்குள் வரவா?'' என்ற தொனியில் மிகப்பெரிய குரலில் கூவும்.

ஆனால் இன்று மருந்துக்குக் கூட ஒருசேவலும் இல்லை, பேட்டுக் கோழிகளும் இல்லை.

துடைத்துவழித்து விட்டது போல அவர் பார்த்துக் கொண்டு இருக்கும் பொழுதே தடியெறிந்து பிடித்துக் கொண்டு போனார்கள். அவரின் பார்வை படாமலே போனவை அனேகம். அவற்றில் நல்ல முறுக்கேறி நின்ற கறுத்த ஆட்டுக் கடாவும் ஒன்று.

சும்மா சொல்லக் கூடாது,
கோழி பிடிப்பதில் என்ன லாவகமாய் செயற்பட்டனர்.

உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதும் பொழுது போக வேண்டுமே என்ற ஆதங்கத்தில் தான் ஆடு, மாடு, கோழி என்று வளர்க்கத் தொடங்கினார்;

மாதாமாதம் பால், முட்டை, எரு என்று விற்பனையில் கணிசமான பணம் கிடைத்தது.

பொழுது போக்கில்லை என்று ஆரம்பித்த வேலைகளுக்கு பின்னர் பொழுது போதாது என்ற நிலை வந்துவிட்டது.

வெளியே வந்த முருகேசர் காலைக்கடன்களை முடித்து விட்டு நெற்றிநிறைய வீபூதியைப் பூசிக்கொண்டு வரவும் பசுமாடு குரல் கொடுத்தது.

பாலைக்கறந்து, அடுப்பு மூட்டித் தேநீர் தயார் பண்ணி பெரிய கிளாசில் ஊற்றிக்கொண்டு வெளியே வந்து முற்றத்திலிருந்த சீமேந்துக் கல்லில் அமர்ந்து கொஞ்சம் கொஞ்சமாகப்பருகினார்.

ஒழுங்கையில் நாய்கள் பலமாக விடாமல் தொடர்ந்து குரைத்தன. 'சிக்னல்' தொடர்கிறது.

''ஓகோ, அவர்கள் இரவுக்கடமை முடிந்து திரும்பிப் போகிறார்கள் போலிருக்கிறது.'' தனக்குள் சொல்லிக் கொண்டு முருகேசர் வெளிக்கேற்றை உற்றுநோக்கினார்.

மெல்லிய வெளிச்சத்தில் மாறிமாறிக் கால்கள் அசைவது தெரிந்தது.

பீடியின் புகைமணம் காற்றில் பெருமளவில் கலந்து வந்த போது முருகேசர் மூக்கைச் சுழித்தார். இடைக்கிடை சில இந்திச் சொற்கள் கரகரத்த குரலில் கேட்டது.

தேநீர் குடித்து முடிந்ததும் ஒருவிதக் களைப்பும் ஏற்பட்டது.

அத்துடன் முழங்காலுக்குப் பின்பக்கம் அரிப்பு எடுத்தது. அவரை அறியாமல் அவரது கை சொறியத் தொடங்கியது. காலைத் தொடர்ந்து கை, அடிவயிறு தோள்மூட்டு என்று ஒவ்வொருஇடமாக அரிப்பு ஏற்பட்டு ஒருபாட்டம்சொறிந்துதீர்த்தார்.

சீ! என்ன வாழ்க்கை இது. சீவியத்தில் இப்படியொரு கடி சொறி தேகத்தில வந்தது கிடையாது. கோவிலிலும் பள்ளிக்கூடத்திலும் மாறிமாறி அகதியாய் இருந்து அங்கிருந்து பெற்ற பலாபலன் இதுதான் என அவர் நினைத்துக் கொண்டார்.

பூசாத மருந்து இல்லை. வருடம் ஒன்றுக்கு மேலாகி விட்டது. மறுபடியும் அவரின் சிந்தனை படர்கிறது.

அவருடைய மனைவி சிவகாமி கொழும்பில் இருக்கும் மகள் சித்திராவிடம் போய் நாலு மாதங்களாகப் போகின்றன.

''நான் உன்னுடன் வந்தால் இங்கு ஆர் ஆடு, மாடு, தோட்டமெல்லாம் பார்க்கிறது. நீ போய்விட்டு வா.''

அவர் தீர்க்கமாய் சொல்லிவிட்டார்:

சித்திரா அவர்களுக்கு ஒரே மகள். இரண்டு வாரம் இங்கு வந்து விட்டு போகலாமே என்று சித்திரா அடிக்கடி எழுதுவாள். கடைசியில் சிவகாமி மட்டும் புறப்பட்டுச் சென்றாள்.

அவள் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற அடுத்த நாள் தான் யுத்தம் ஆரம்பமாகியது.

ஊரோடு ஒத்து வாழ், ஷெல் சோனாவாரி மழைமாதிரி வந்து விழத்தொடங்கியதும், முருகேசர் முதலில்வீட்டுக்குப்பக்கத்தில் உள்ள பாடசாலைக்கு ஓடினார். அன்று இரவு ஒரு இடத்திலே அமர்ந்து கொண்டார்.

விடியற்காலையில் கால் மைல் தூரத்தில் அமைந்துள்ள பிரதான வீதியால் காதைச் செவிடாக்கும் சத்தத்துடனும் சங்கிலி உருளைகளின் கட்டியங்களுடனும் பயங்கரமான வெடிச்சத்தங்களுடனும் "டாங்கிகள்" ஊர்வலமாகச் சென்றன.

காலை பதினொரு மணிக்கு வீட்டிக்குத் திரும்பி வந்தவருக்கு ஒரே பெரிய அதிர்ச்சி பெரிய வெள்ளைப் பசுவும் கன்றும் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தன. மரக்கொப்புகள், இலைகள் எல்லாம் இரவு நடந்த பயங்கர ஷெல் தாக்குதல்களுக்கு சாட்சி கூறின. கனத்த இதயத்துடன் தானே கிடங்கு வெட்டிப் பசுவையும், கன்றையும் மண்போட்டு மூடினார்.

கூட நின்ற மற்றப் பசுவும் கன்றும் தங்கள் சோடிகளை இழந்து அரற்றிக் கொண்டு நின்றன. இரண்டு நாட்கள் அவருக்கு அன்ன ஆகாரம் இறங்கவில்லை.

"கொடுத்தாக்கிச் சந்திக்கு வந்து விட்டார்கள்......"

"உப்புமடச் சந்திக்கு வந்து விட்டார்கள்.. ..."

இப்படிக் கதைகள் அடிபட்டன:

அயல் சனங்கள் ஒவ்வொருவராக ஊரில் உள்ள பெரிய பாடசாலைக்குச் சென்றனர்.

முருகேசு ஒருவாரம் வீட்டில் இருந்து பார்த்தார்: இடைக்கிடை தோட்டத்துக்குச் சென்று புல்லுச் செருக்கிக் கொண்டு வருவார். தோட்ட வெளியில் நிற்கும்போது மிக அருகில் வந்து விழுவதுமாதிரி இடியோசை கேட்கும்,

தோட்டம் முருகேசுவினுடைய சிறியதாய் கனகவல்லிக்குச் சொந்தமானது. சிங்கப்பூர் பென்சன் பணம் மாதாமாதம் கணிசமாய் எடுக்கும் விதவையான கனகவல்லி தோட்டத்தைக் கவனிக்க ஆளில்லை என்று முருகேசர் உத்தியோகத்தில் இருந்து ஒய்வு பெற்றதும் குத்தகைக்குச் செய்யக் கொடுத்திருந்தாள். பண விஷயத்தில் அவள் கொஞ்சம் இறுக்கம். ஒவ்வொரு தைப் பொங்கலுக்கும் குத்தகைகாராராகக் கொடுத்துவிட வேண்டும் அரண்மனை மாதிரி வீடு அவளின் ஒரே ஒரு மகள் லீலா தனது கணவன் பிள்ளைகளுடன் அமெரிக்காவில் வசிக்கின்றாள்.

''எட தம்பி, இஞ்ச தனிய இருக்க எனக்குப் பயமாய் இடக்குது. என்னைக் கூட்டிக் கொண்டுபோய் முருகன் கோவிலில் விட்டுவிடு.''

அவளுக்கு இடைக்கிடை வாதக்குத்து வந்து நடக்க முடியாமல் சிரமப்படுவாள்.

முருகேசர் அவளை மெதுவாக நடத்திக் கொண்டு வந்து கோவிலில் விட்டார்.

முருகன் கோவிலைச் சாதாரண நாட்களில் எட்டிப்பாராதவர்களும் ஓடிவந்து மண்டபத்தில் தஞ்சம் புகுந்தனர். சாதி, மதம் பணக்காரன், ஏழை என்று பேதம் பார்ப்பவர்கள் எல்லோரும் பயப்பிராந்தியில் ஒரு கூரையின் கீழ் ஒருவரோடொருவர் மிக நெருக்கமாக இருந்தது ஒரு தனியான கதை.

கோவிலில் இருக்கும் போது கனகவல்லிக்குச் சுகவீனம் ஏற்பட்டு விட்டது: முருகேசர் தனது நித்திரையையும் மறந்து சிறிய தாயாரை கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டார்.

''பெத்த பிள்ளை எங்கேயோ இருக்கிறாள். நீ சொந்தப் பிள்ளைமாதிரி என்னைப் பார்க்கிறாய் முருகேசு... எனக்கேதும் நடந்திட்டால் தங்கச்சிக்கு அறிவிச்சுப்போடு. அவள் வீட்டை என்னவாகிலும் செய்யட்டும்... ஆனல் தோட்டத்தை நீ எடுத்துக் கொள். அது உனக்குத்தான்.''

கனகவல்லி கண்களில் நீர் வடியக் கூறினாள்,

''உங்களுக்கு அப்படி நடக்காது...... பேசாமல் படுத்துக் கொள்ளுங்கோ'' முருகேசர் கூறினார்.

இரண்டு கிழமைகள் கோவிலே தஞ்சமென்று எல்லாரும் அக திகளாக இருந்தனர். நிலைமை சற்று சீரானதும் முருகேசர் கன கவல்லியை அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டு தனது வீட்டுக்குத் திரும்பினார்.

கனகவல்லி மெல்ல மெல்ல குணமடைந்து விட்டாள். நாலு மாதங்கள் சென்று விட்டன. போக்கு வரத்துச் சீராக இல்லாத படியால் முருகேசரின் மனைவி சிவகாமி உடன் வரமுடியாமல் இருந்தது.

அமெரிக்காவில் இருந்த கனகவல்லியின் மகள் லீலா தன்தாயா ரை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லும் பொருட்டு கொழும் புக்கு வந்து அங்கிருந்து விமானத்தில் யாழ்ப்பாணம் வந்துவிட் டாள்.

முருகேசரை உடன் வரும்படி கனகவல்லி சொல்லியனுப்பி னாள்.

அமெரிக்கா வாடை வீச லீலா காலுக்குமேல் கால்போட் டபடி வெகு அட்டகாசமாக இருந்தாள், அவளது ஜீன்ஸ் உடை யும் பொப் செய்த கூந்தலும் ஆங்கில உரையாடலும் முருகேசரை அன்னியப்படுத்தியது.

'எப்படித் தங்கச்சி சுகம்?''

முருகேசர் தங்கை என்ற பாசம் மேலிட குசலம் விசாரித் தார்.

'ஐ ஆம் ஒகே.'

வெகு அலட்சியமாக பதில் வந்தது.

முருகேசர் அதை மெல்ல சீரணித்துக்கொண்டார்.

'மம்மி ...'' லீலா குரல் கொடுத்தாள்.

கனகவல்லி உள்ளுக்குள் இருந்து வெளியே வந்தாள்.

'வா முருகேசு நான் மகளோட அமெரிக்காவுக்குப் போகப் போறன், தோட்டக் காணியை வித்துப்போட்டு போக வேண்டுமென்று அவள் விடாப்பிடியாய் நிற்கிறாள். அதுதான்...''

முருகேசருக்குத் திக் என்றது.

'என்ன சின்னம்மா நீங்கள் திடீரென்று இப்படிச்சொன்னால் எப்படி? நான் மரவெள்ளி நட எல்லாம் ஏற்பாடு செய்துபோட் டன். இப்ப ஏன் அவசரப்பட்டு விற்கப்போறியள்?''

''வாட் நொன்சன்ஸ்...'' லீலா கையில் வைத்திருந்த ஆங்கிலச்சஞ்சிகை அனாதையாய் கீழே வீழ்ந்தது.

''நாங்கள் விக்கிறதெண்டு முடிவெடுத்தாச்சு. நீங்கள் இனித் தோட்டத்துக்குள் கால் வைக்கவேண்டாம்.''

லீலாவின் நிஷ்டூரமான கதையைக் கேட்ட முருகேசருக்கு தன்னை அறியாத கோபம் மூண்டது.

''என்னடி கனக்க கதைக்கிறாய்... நானென்ன குத்தகைதரா மலே தோட்டஞ்செய்தனான். இந்த முறை மரவெள்ளி செய்து போட்டுத்தான் தோட்டம் விடுவன். நீ செய்யிறதைசெய்'' விறு விறுவென்று வெளியே வந்துவிட்டார்.

அவருக்கு தேகமெல்லாம் எரிந்தது.

கடந்த ஐந்து வருஷங்களாக அந்தத்தோட்டமண்மீது, அது இரவல் என்றாலும் மாறாத பாசங் கொண்டுள்ளார், தனது உடல் உழைப்பால் விளையும் பலனைக்கண்டு அவர் தனக்குள் பெருமைப் படுவது வழக்கம்.

ஆனாலும் காணி விற்பதுபற்றி மனிதத்தன்மையாய் சொல்லியிருக்கலாம்.

யாரோ ஒரு அன்னியனைப் பார்த்துச் சொல்வது மாதிரி அல்லவா லீலா கூறிவிட்டாள். அதைத்தான் அவரால் தாங்க முடியவில்லை.

இரண்டு நாட்கள் சென்றன: இருந்தாற்போல் ஒருகாலைப் பொழுதில் இரண்டு ஜீப்வண்டிகள் உறுமிக்கொண்டு முருகேசரின் வீட்டுவாசலில் நின்றன. அவர் முற்றங் கூட்டிக் கொண்டு நின்றார்.

ஜீப்வண்டியில் இருந்த இராணுவ வீரர்கள் படபடவென்று இறங்கி ஒவ்வொரு மூலையாக நின்றனர்.

ஒரு ஜீப்பில் லீலா கறுப்புக் கண்ணாடி அணிந்து மிடுக்காக இருந்தாள்.

ஒருவர் விறைப்பாக இறங்கி கேற்றடிக்கு வந்தார்.

முருகேசர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றார்.

''ஓல்ட் மான்... கம்கிய'

அடேயப்பா, அதிகாரம் தூள்பறந்தது.

''யு நோ இங்கிலிஷ்?''

''ஐ நோ பெற்றர் இங்கிலிஷ்'' முருகேசர் மிடுக்காகப் பதில் அளித்தார்.

''நீ அந்த லேடியினுடைய தோட்டத்தைப் பலவந்தமாக வைத்திருக்கின்றாயாம். இனிநீ தோட்டப்பக்கம் போகக்கூடாது

''ஐயா. நான் பலவந்தமாக தோட்டத்தை வைத்திருக்க வில்லை. அந்த அம்மா வேறுயாருமில்லை. எனது சிறியதாயாருடைய மகள்தான். எனது ஒன்றுவிட்ட சகோதரி. கடந்த ஐந்து ஆண்டுகளாக குத்தகைக்கு தான் தோட்டம் செய்கிறன். இந்த முறையும் அதிக பணம் செலவழித்து தோட்டவேலை செய்ய ஆயத்தமாய் இருக்கிறேன்.''

வெகு நிதானமாக ஆங்கிலத்தில் முருகேசர் விடையிறுத்தார் ''ஓ ஐ சி.........''

தொப்பியைக் கழற்றி அந்த அதிகாரி தனது தலையைச் சொறிந்தார்.

''நாளை காலை பத்துமணிக்கு எங்களுடைய காம்புக்கு வரவேணும். எங்களுடைய பெரிய அதிகாரி விசாரணை ஒன்று வைப்பார்.''

இப்படிக் கூறிவிட்டு ஜீப்பில் ஏறி அமர்ந்து விட்டார், ஜீப் வண்டி நகர்ந்தது. லீலா ஒரு ஏளனப் பார்வையை வீசிவிட்டுச் சென்றாள். ஜீப்வண்டிகள் சென்றதும் அயலவர்கள் கூடிவிட்டனர்.

விஷயத்தை அறிந்ததும் எல்லோரும் வியந்தனர்.

''என்ன இருந்தாலும் இந்தப் பெட்டை இப்படிச் செய்திருக்கக் கூடாது.''
பக்கத்து விட்டு பார்வதிஆச்சி கோபத்துடன் கூறினாள்.

''அவள் வேணுமெண்டால் முறைப்பாடு செய்திருக்கலாம்' ஜீப்பில் ஏறிவந்தெல்லோ வெருட்டிவிட்டுப் போறாள்.''

இன்னுமொருவரின் அங்கலாய்ப்பு.

ஆனால் முருகேசர் மௌனம் சாதித்தார்.

மறுநாட் காலை முருகேசர் முகாமுக்குச் சென்றார். லீலாவும் மிகுந்த அலங்காரத்துடன் வந்திருந்தாள்.

புரியாத மொழியில் உரையாடியபடியே சிப்பாய்கள் அங்குமிங்கும் திரிந்தனர்.

முருகேசர் நெற்காணிச் சட்டம், சொந்தச் செய்கைக்காரன் குத்தகைச்செய்கைக்காரன் என்று தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் எடுத்துக் கூறி நியாயம் தேட முயன்றார்.

ஆனால் அந்தப் பெரிய அதிகாரியோ முகத்தில் சிரிப்பின்றி மிகக் கடுமையாக இருந்தார் அவருக்குப் பக்கத்தில் இரண்டு குட்டி அதிகாரிகள். இடையே மொழிபெயர்க்க என்று ஒரு சிப்பாய்' அவருக்கு சட்டதிட்டங்கள், பழக்க வழக்கங்கள், மரபுகள் பற்றி ஒன்றுமே அறிய விருப்பமில்லாமல் இருந்தது அவருடைய பேச்சில் தெரிந்தது.

''நீ ஒரு பென்சனியர். மாதா மாதம் அரசாங்கபணம் வருகிறது. உனக்கு ஏன் தோட்டம். அது அந்த லேடிக்குரியது.''

முருகேசர் எவ்வளவு செலவு செய்தார் எனக் கேட்கப்பட்டது அதில் அரைவாசியை முருகேசரிடம் கொடுக்கும்படி அந்த அதிகாரி லீலாவைப் பார்த்துக் கூறினார்.

லீலா தனது அமெரிக்கக் கைப்பையைத் திறந்து புதுச் சலவை நோட்டுக்களை எண்ணினாள்.

முருகேசர் வெகு பவ்வியமாக அதை ஏற்க மறுத்துவிட்டு, தான் இனி தோட்டத்துக்குள் கால் எடுத்துவைக்கவில்லை எனக் கூறினார்.

அதை எழுத்தில் தரவேண்டுமெனக் கூறிய அதிகாரி ஒரு வெள்ளைக்கடதாசியில்கோணல் மாணலாக எதையோ எழுதினார்.

மௌனமாக கையெப்பம் போட்டார் முருகேசர்.

தான் நிற்பது பிழையான இடம். தனது நிதானத்தை இழக்கக் கூடாது என்று வலுகவனமாக இருந்தார்.

கனக்கும் இதயத்துடன் வெளியே வந்து விட்டார்.

மாலை பக்கத்து வீட்டுத் தோட்டக்காரன் கந்தையா முருகேசர் வீட்டிற்கு வந்தார்.

கந்தையா முருகேசரின் ஆப்த நண்பன். நடந்தவை எல்லாவற்றையும் கேட்டறிந்தார்.

லீலா வீட்டை வாடகைக்கும் தோட்டத்தை வேறு யாருக்கோ குத்தகைக்கும் கொடுத்துவிட்டு தாயையும் கூட்டிக்கொண்டு அமெரிக்காவுக்குச் செல்லப்போகிறாள் என்று தான் கேள்விப்பட்டதைக் கூறினார்,

அது இப்போது அவர் மனதை வந்து தொட்டது.

மனமுடைந்து அழுதார் முருகேசர்.

உள்ளம் சித்திரை 1989

# கண்ணாடிக்கு எத்தனை முகங்கள்

காலை இளம் வெய்யில் சுள்ளென்று உடம்பைத்தாக்க, வழிந்தோடும் நெற்றிவியர்வையை கைக்குட்டையால் ஒற்றிய படியே அகிலன் தனது சைக்கிளை உருட்டிக்கொண்டு அலுவலக வளவில் பின்புறம் அமைந்திருந்த இடத்துக்குச் செல்லமுயன்றான். செல்லும் வழியை அடைத்தபடி பல சைக்கிள் வண்டிகள் தாறு மாறாக நிறுத்தப்பட்டிருந்தன. ப.நோ.கூ, சங்கத்திற்கு பொருட்கள் வேண்ட வந்தவர்களதும் கிராமிய வங்கியில் ஒய்வூதியப் பணம் எடுக்க வந்தவர்களதும் சைக்கிள் வண்டிகள்தான் அவை.

அகிலனுக்கு தாங்க முடியாத சினம் வந்தது. வழியை அடைத்துக்கொண்டிருக்கும் வண்டிகளை தனது வண்டியால் சிறுதட்டுத் தட்டி எல்லாவற்றையும் வீழ்த்திவிட்டு முன்னே போகலாமா என்று கூட ஒருகணம் யோசித்தான். ஆனால், மறுகணம் அவ் வெண்ணத்தைக் கைவிட்டான்.

காலையில் அலுவலகத்துக்குப் புறப்படும்போதே நேரம் சென்று விட்டது.

மானிப்பாய் சந்திகழிய முன்சக்கரம் காற்றைக் கோட்டை விட்டு விட்டு முழித்தது. அகிலன் பிற்பீலிச் சுடலைச்சந்தியில் ஒரு சைக்கிள் கடையில் ரியூப்பை ஒட்டிக்கொண்டு ஓடிவந்தான். சண்டிலிப்பாய் சந்தி வருவதற்குள் மறுபடி காற்றுப்போய் விட்டது. இப்போது மூழத்துக்கு முழம் சைக்கிள் திருத்தும் கடைகள். ஒரு காற்றடிக்கும் பம்பு, ஒரு பேசின் நிறையத் தண்ணீர் பழையரியூப், கத்தரிக்கோல்! ஒரு சைக்கிள் திருத்தும் கடை உருவாகி விட்டது. இவைமட்டுமா? ஒவ்வொரு இருநூறுயாருக்கும் ஒவ்வொரு பெட்டிக்கடை. ஒரு கள்ளிப்பலகையால் ஆன மேசை ஒரு கதிரை அல்லது ஸ்ரூல், மேசை மீது நாலு துணிதுவைக்கும் சவற்காரம், நாலு குளியல் சவற்காரம், இரண்டு போத்தல் மண்ணெண்ணை, இரண்டு போத்தல் தேங்காய் எண்ணெய், நாலு தேங்காய் ஒரு கடையின் இலட்சணம் இது.

அகிலன் தினமும் இவைகளைத் தரிசித்துக்கொண்டு அவற் றினமைப்புக்களை தன்னுள் ரசித்துக்கொண்டு வருவான். ஆனால் இன்று ரசிக்க முடியவில்லை. திரும்பவும் சண்டிலிப்பாய் சந்தியில் ஒரு சைக்கிள் கடையில் சைக்கிள் ஒட்டு வேலை தொடர்ந்து புறப்பட கணிசமான நேரத்தைப் பிடித்துவிட்டது.

இவன் அவதிப்படுவதைப் பார்த்துவிட்டு சங்கக்காவலாளி வீரசிங்கம் ஓடிவந்தான். 'இந்தசனங்களுக்குஎப்படிச்சொன்னாலும் விளங்காது! வழியிலை நிற்பாட்டிப்போட்டு போய் நிற்கினம்...'' கூறிக்கொண்டே இரண்டொரு சயிக்கிள்களை நகர்த்திவைத்து அகிலன் தனது சைக்கிளை உள்ளே கொண்டு செல்ல உதவினான். ஒரு நன்றிப்பார்வையை செலுத்திச் சிரித்துவிட்டு அகிலன் சென் றான்.

புதன்கிழமை என்றாலே அலுவலகம் ஒருதனிக்களை கட்டும் பல்வேறு ரகப்பட்ட மனிதர்கள் அலுவலகம் முழுவதும் நிறைந் திருந்தனர். முன் விறாந்தையில் போடப்பட்டிருந்த பெரிய நீட்டு மர இருக்கை நிறைந்து வழிந்தது. அரசாங்க ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதிபோல காட்சியளித்தது.

கிராமசேவை அலுவலர்கள் அன்றுதான் விழித்தெழுந்தவர் கள் போல மிகவும் பரபரப்பாக அங்கும், இங்கும் திரிந்தனர்.

உணவு முத்திரை, இடம் பெயர்ந்தோர் நிவாரணம், அகதி முகாம்களில் வசிப்பவர்களது விடயம் என்று கலவையான பிரச் சினையோடு மக்கள் காத்திருந்தனர்.

அகிலன் தன் இருக்கையில் அமர்ந்ததும் சிலர் கதவால் எட் டிப் பார்த்தனர். சிலர் யன்னலுக்கால் எட்டிப் பார்த்தனர்.

''இந்தா .. சொன்னால் கேட்கவேணும் ஐயாவைப் பார்க்க வாறஆட்கள் ஒவ்வொருத்தராய் வரிசையில் வாருங்கோ...'' அலு வலகத்தில் சீனியரான பணியாள் தருமராசா கரகரத்த குரலில் கூறியது அகிலனுக்குத் தெளிவாகக் கேட்டது.

தர்மராசா முன்பு இராணுவத்தில் பணியாற்றிய அனுபவம் கொண்டவன். நல்ல ஆகிருதியான தோற்றமும், முறுக்கிவிடப் பட்ட மீசையும் ஆட்களைச் சிறிது அடக்கித்தான் வைக்கும்.

''நாங்களெல்லாம் ஒரே குடும்பத்து ஆட்கள்தான் ஒரே இடத்தில்தான் இருக்கிறம்...!'' சொல்லிக் கொண்டே மூன்று

பெண்கள் முதலில் உள்ளே நுழைந்தனர். இரண்டு பெண்களின் இடுப்பில் சிறுமதலைகள். ஊட்டமான உணவின்றி மெலிந்து வாடி தோற்றமளித்த அக்குழந்தைகளின் தோற்றம் அகிலனது பார்வைக்குத் தப்பவில்லை. பிறக்கும்பொழுதே உலகத்தின் அவலங்களைச் சந்தித்துக்கொண்டு பிறந்திருக்கின்ற அந்தப்பாலமுகங்கள் அவனுள் ஒரு இனம் தெரியாத சங்கடத்தை ஏற்படுத்தியது. வந்தவர்கள் ஒவ்வொருத்தராக விண்ணப்பங்களை நீட்டினார்கள்.

''திருகோணமலையிலிருந்து எப்பவந்தீர்கள்? உங்களுடைய கணவன்மார் எங்கே?'' அகிலனது கேள்விக்கு விடைதாமதித்துத்தான் வந்தன.

''நாங்கள் போனகிழமைதான் ஐயா வந்தனாங்கள்.''

உங்களுடைய கணவன்மார்கள் எங்கே? அவர்கள் வந்திருக்கலாமே!''

''அவை கூலிவேலைக்குப் போய்விட்டினம்!''

''அப்படியென்றால் நாளைக்கு அவரை வரச்சொல்லுங்கள் நான் விசாரித்து விட்டு நிவாரணம் தர ஏற்பாடுசெய்கிறேன்!''

''இரண்டு மாதத்துக்கு மூந்தி வரவும் இப்படித்தான் சொன்னிங்கள் ஐயா! எங்களுக்குச் சரியான கஷ்டம் ஐயா!'' அகிலன் சடாரென்று நிமிர்ந்தான். ''போனகிழமை வந்தனான் என்று சொல்லிப்போட்டு இரண்டு மாதத்துக்குமுந்தி வந்தகதையும் சொல்லுகிறாய்! உண்மையைச் சொல்! எப்பவந்தனீங்கள்?''

இதற்குள் மற்றப் பெண்களிலொருத்தி நாக்கைக்கடித்து ஒரு கையால் தன் தலையில் அடித்ததை அகிலன் கவனிக்கத் தவறவில்லை.

''திருகோணமலையில் நீங்கள் எந்த இடம்?''

''அது உங்களுக்கு தெரியாதையா! இடம் சொன்னால் விளங்காது. ரவுணுக்குக் கிட்டத்தான்...!''

''இஞ்சைபார்! எனக்கு இப்படிச் சொல்லாதே! நான் அங்கு ஏழுவருசம் வேலை செய்தனான். உண்மையைச் சொன்னால் உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது! போய் உங்கள் கணவன் மாரை அனுப்புங்கள். நான் தீர விசாரித்துவிட்டு நிவாரணம் தர ஏற்பாடு செய்யலாம். நீங்கள் இப்பபோங்கோ!'' கூறிவிட்டு

அழைப்புமணியை அடித்தான். பெண்கள் வெளியே போய்விட்டார்கள். விண்ணப்பத்தை சிபார்சு செய்த கிராம சேவை அலுவலரை அழைத்தார்.

''என்ன ஜி. எஸ்.? இப்ப வந்த ஆட்கள் இந்த இடத்துக்கு எப்ப வந்தவை? தீரவிசாரித்தனீங்களே? இந்தக் கிழமைதான் வந்தவை என்று எழுதியுள்ளீர்கள்...!''

''சேர் இவர்கள் இரண்டு மூன்று மாதங்கள் முந்தி இங்கை வந்து ஒரு கிழமை இருந்துவிட்டு வேறு எங்கையோ போய் இருந்துவிட்டு இப்ப மறுபடி இஞ்சை என்ர பிரிவுக்கு வந்திருக்கினம். பாவங்கள்! ஒரு மாதிரிப் பார்த்து செய்ய வேணும் சேர் சரியாய் கஷ்டப்படுதுகள்.'' கிராமசேவை அலுவலர் தன் பருத்த சரீரத்தை வில்லாக வளைத்து அவர்களுக்காக வக்காலத்து வாங்குகிறார்.

''நீர் எப்பவும் நல்ல பிள்ளைக்கு விளையாடும்! அவதிப்படுவது நான்தானே...!'' அகிலனது குரலில் கோபம் தொனித்தது. ஜி.எஸ். மெதுவாக இடத்தைவிட்டு நகர்ந்தார்.

''குட் மோனிங் ஏ.ஜி.ஏ.!'' அட்டகாசமான குரலைக்கேட்டு அகிலன் நிமிர்ந்து பார்த்தான். வந்தவர் உள்ளூர் பிரமுகர் ''ஜே.பி'' என்று ஊரில் பட்டப்பெயர். அடிக்கடி அலுவலகத்திற்கு வருபவர். வயல் புலம் என்று சற்று வசதியானவர்.

''சரியான சனம் வந்து நிற்கினம் போலை, எனக்கு ஒரு சின்ன அலுவல் ஒன்று செய்து தர வேண்டும்.'' கூறிக்கொண்டே கதிரையில் அமர்ந்தார்.

''என்ன பிரச்சினை உங்களுக்கு, சொல்லுங்கோ!'' அகிலன் கூறினான்.

''என்ர இரண்டாவது மகன் இப்ப டென்மார்க்கில் போய் நிற்கிறான். அவனுக்கு நிரந்தர விசா கொடுக்கப் போயினமாம் முந்தி கொழும்பிலிருந்து அடிபட்டு இஞ்சை வந்ததென்றும்,. இப்பவும் இஞ்சையுள்ள பிரச்சினையாலை சரியாகக் கஷ்டப்பட்டுத்தான் அகதியாய் வந்தவரென்றும், ஒரு அத்தாட்சிக் கடிதம் வேணும் என்று எழுதியிருக்கிறார். ஒருக்கா உங்கடை கிளாக்கரைக் கூப்பிட்டு ஒரு சின்னக்கடிதம் அடிச்சுத்தாருங்கோ...!''

அகிலன் உசார் நிலைக்கு வந்தான். ''முன்பு கொழும்பிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் இங்கு பதிந்துதான் நிவாரணம் எடுத்தவை. உங்களுடைய மகனும் இங்கு பெயர் பதிந்தவரோ''

''அப்படியொன்றும் பதிவில்லை சேர்! சும்மா ஒரு கதைக்கு இப்படித்தான் கனபேர் கடிதம் எடுப்பிச்சு அங்கை விஷயங்களை முடிக்கினம். அதுதான் நீங்களும் ஒரு கடிதம் ரைப்பண்ணி உங்களுடைய சீலோடு தந்தால் பெரிய உதவியாய் இருக்கும்!''

இதற்குள் அறைக்கதவைத் திறந்துகொண்டு ஒரு சிறுபையன் உள்ளே நுழைந்தான். நல்ல களையான முகம். 12 அல்லது 13 வயதிருக்கும் கையில் வறுத்த கடலையை சிறு சிறுபொலுத்தீன் பைக்கட்டுகளில் போட்டு மாலைமாதிரி வைத்திருந்தான். அகிலன் அவனைப் பலமுறை பார்த்திருக்கிறான். இருந்த இருப்பிடங்களை இழந்து உயிர்தப்பினால் போதும் என்று இடம் பெயர்ந்து வந்தவர்களில் இவனும் ஒருவன். அமெரிக்கன்மிசன் பாடசாலை முகாமில் பெற்றோருடன் தங்கியிருப்பவன். ''என்ன தம்பி-''

''ஐயா கடலை வேணுமே? இரண்டு பற்கற் எடுங்கோவன்'' குரலில் ஒருகெஞ்சல்.

''எனக்கு வேண்டாம் தம்பி! நீகொண்டுபோய் மற்ற ஆட்களிடம் கேட்டுப் பார்!''

அகிலன்மறுமொழியை அடுத்து அச்சிறுவன்வெளியேசென்றான்

''நீங்கள் மிச்சம் கவனமாக இருக்கவேண்டும் ஏ.ஜீ. ஏ! இந்தப் பெடியன் இருக்கிற முகாம் பகுதி எல்லாம் துப்பரவில்லாத இடங்கள்! இதுகளை வேண்டிச் சாப்பிட்டால் [தேவையில்லாத வியாதிகள்தான் வந்துசேரும்: இனி இவன்களுடைய தொந்தரவு தாங்கமுடியாது. உங்களிடம் நிவாரணம் எடுத்துச் சாப்பிடுகினம் இரவிலை குடிச்சுப்போட்டுவிட்டு வந்து அவைபோடுகிறகூத்தை நீங்கள் பார்க்கவேணும்! மிச்சம் உதவாத சனங்கள்!'' ஜே பி. முகத்தைச் சுளித்தபடி கூறினார்.

அகிலன் ஒன்றும் பேசவில்லை. அவன் வேலைபார்க்கும் பிரிவில் மொத்தம் பன்னிரண்டு இடங்களில் முகாம்கள் அமைக்கப்

பட்டிருந்தன. பலவிதமான மக்கள்' பலவிதமான பழக்க வழக்கங்கள், மனித இயல்புகளை தரம் பிரித்து முகாம்கள் அமைக்கப் படவில்லை. எங்கும் பீதியோடு நிச்சயமற்ற நிலையில் இடம் பெயந்தவர்களுக்கு இயன்றளவு வசதிகளைச் செய்து அவர்களைப் பராமரிக்க அரச அதிகாரிகளும் பொது நிறுவனங்களும் படும்பாடு எல்லோருக்கும் புரியாது. இதைப்புரிய வைக்க அகிலன் என்றுமே முயன்றதில்லை.

''அதுசரி! உங்களுக்கு என்ன விதத்தில் நான் உதவிசெய்வதென்று புரியவில்லை. ஆனால் நான் அப்படி ஒரு கடிதம்தர முடியாது!' அகிலன் பவ்வியமாகக் கூறினான்.

''நீங்கள் பயப்படாமல் தாருங்கோ! எனக்கு இவனைப்பற்றித் தான் இப்ப பிரச்சினை. மூத்தவன் வலு கெட்டிக்காரன். அவன் ஜெர்மனியில் தானே, போனமுட்டம் ஐந்தாறு இடத்தில் பெயர் பதிந்து நியாயமான காசு உழைச்சுப் போட்டான். வலுசுழியன் இனி என்னுடைய மூத்தமகளும் இரண்டாவது மகளும் பிரான் சிலை! அவைக்கும் சீவியம் பறவாயில்லை. அவை அங்கை இந்த பிளாஸ்ரிக் கடதாசியிலை நல்லவடிவான பூக்கள் அலங்காரச்சாமான்கள் செய்து கொடுத்து நல்லவருமானமாம்! கேக்செய்து விக்கினம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கோவன்-! இந்த இரண்டாவது மகனுடைய விசயம்தான் இப்ப இழுபடுகுது-! நீங்கள்நினைத்தால் உதவிசெய்யலாம் ஏ ஜீ. ஏ! ஒரு கடிதக் தாருங்கோ உங்கட சீலிருந்தால்சரி! நீங்கள் ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை'' ஜே. பி. மூச்சுவிடாமல் கூறினார்'

அகிலனது பொறுமை மெல்ல மெல்ல அவனைவிட்டு நீங்கியது. முகம் எல்லாம் சிவந்து விட்டன, ''நான் பயப்படவில்லை நீங்கள் நினைத்தமாதிரி கடிதம் ஒன்று தரமுடியாது தயவுசெய்து நீங்கள் போகலாம்!' கூறிவிட்டு அழைப்பு மணியை அடித்தான்

''மற்ற ஆள் உள்ளே போங்கோ! தர்மராசாவின் கம்பீரமான குரல் ஒலித்தது.

சடாரென்று கதிரையை விட்டு எழுந்து ஜே. பீ. சற்றுநேரம் முகம் கடுகடுக்க அகிலனைப் பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு வெளியேறினார்.

அடுத்து உள்ளே வந்தவன் அழுக்குச்சாரமும், கசங்கிய சட்டையும் தாடியும், மீசையுமாக நின்றான்.

''ஐயா நான் தெரியாமல் செய்த பிழையால் மூன்றுமாதமாய் அலைகிறன்! இண்டைக்கெண்டாலும் என்னை மன்னித்து இஞ்சை நிவாரணம் தாருங்கோ ஐயா!''

இவனுடையகதை தனியானது!

இவன் திருகோணமலையிலிருந்து பன்குளப்பகுதியில் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தவன் முதலில் இங்குவந்தவன். பின் கஸ்ட நிலையில் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பெயரைப்பதிந்து நிவாரணம் பெற்று வந்தவன் பெட்டிசம் ஒன்றை அவனுடைய உறவினர் எழுதி அதன் பலனாய் இப்பொழுது ஒரு இடமும் நிவாரணமின்றி கஷ்ரப்படுகின்றான். அவனுடைய ஆவல் அவனைக் கஷ்ரப்பட வைத்துவிட்டது.

''மற்ற இரண்டு ஏ. ஜீ. ஏ ஐயாமார்கள் தங்கள் பகுதிகளில் இப்பொழுது நான் நிவாரணம் எடுப்பது நிறுத்தப்பட்டுவிட்டது! என்று அத்தாட்சிப்படுத்திய கடிதம் தந்திருக்கினம் ஐயா! தயவு செய்து என்னை மன்னித்து இஞ்சை தொடர்ந்து நிவாரணம் தாருங்கோ ஐயா!' கெஞ்சினான். அவனின் கலங்கிய கண் கண்டதும் அகிலனின் மனம் ஒரு கணம் அல்லாடியது ''நீபோய் வெளியிலை கொஞ்சநேரம் இரு நான்கூப்பிடுகிறன்!'

அவன் ஒரு நம்பிக்கை ஒளி முகத்தில் நிழலாட வெளியே சென்றான். அகிலன் அழைப்பு மணியை அடிக்கவில்லை அவனுக்கு மனம் களைத்துவிட்டது இருகைகளையும் தலைக்குமுட்டுக்கொடுத்து யோசித்தபடியே இருந்தான்.

தர்மராசா அழைப்பு மணியின் ஓசையை எதிர்பார்த்தவன் கதவை மெல்லத்திறந்து பார்த்துவிட்டு முகத்தில் ஒரு கேள்விக்குறியுடன் கதவை மெல்ல மூடிவிட்டு ஒதுங்கி நின்றான்.

அகிலனின் சிந்தனை ஓடியது சொந்தநாட்டிலிருந்த வீடுகள் சொத்துக்கள் எல்லாவற்றையும் இழந்து உற்றார் உறவினர் களைஇழந்து உயிருக்குப் பயந்து ஓடிவந்தவர்களும்- அவர்களது அவலம் தோய்த்த முகங்கள்-. முகாம்களில் வசதிகளற்ற நிலையில் வாழும்முறைகள் அவர்கள் தொழில் ஒன்றைத்தேடி கடலை வறுத்துவிற்றால் அதுமற்றவர்களுக்கு அருவருப்பு. இந்தஒருசாண்வயிற்றுக்காக ஒன்றுக்குமேல் வேறிடத்தில் பதிந்து நிவாரணம்பெற்

றால் மற்றவர்களின் பார்வையில் அவன் பயங்கர கிரிமினல் குற்றவாளி! சட்டம் ஒரு கழுதை என்பது உண்மைதான். சட்டங்கள், சுற்றறிக்கைகள் யாவும் அர்த்தமில்லாமல் போய்விட்டன. இருதயத்தை கல்லாக்கி வைத்துக் கொண்டு ஜடப்பொருளாய் இயந்திரமாகத்தான் நான் பணியாற்ற வேண்டுமா? வெளிநாட்டில் பல இடங்களில் பெயரைப்பதிந்து பண உதவிபெற்றால் அது கெட்டிக்காரத்தனம் 'சுழியன்' என்று பெயரெடுப்பதில் பெருமை!

பியரைக்குடித்துவிட்டு சடை நாய்க் குட்டிபோல் தலைவளர்த்து வீதியில் நின்று கையில் பியர் ரின்னோடு போட்டோ எடுத்து இங்கு அனுப்பினால் அது மெச்சத்தக்கது. இங்கு அகதிமுகாமில் கட்டுக்கடங்காமல் யாரும் குடித்துவிட்டு நின்றால் அது சமூகக்கேடு! இவைகளெல்லாம் எந்த நியாயத்தில் அடங்கும் அகிலனுக்குப் புரியவில்லை.

மேசையில் இருந்த கிளாஸ் நிறைய இருந்த குளிர்ந்த நீரை எடுத்துப் பருகினான். அவனுக்கு மனம் சற்று லேசாகியது. மறுபடியும் அந்தச்சிறுவன் கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

தர்மராசாவின் அனுமதி அச்சிறுவனுக்கு எப்பவும் உண்டு வந்தவன் அகிலனுக்குப் பக்கத்திலிருந்த குப்பைக்கூடையில் கையைவைத்து ஏதோதேடினான். கசக்கி எறிந்த பழைய என்வலப் ஒன்றை எடுத்தான். தன்சட்டைப்பையில் வைத்திருந்த சில்லறைகளைப் பத்திரமாக அதில் பக்குவப்படுத்தி காற்சட்டைபொக்கற்றில் திணித்துக்கொண்டான்.

அகிலன் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

''நான்போட்டு வாறன் ஐயா''
அகிலன் மௌனமாகத் தலையை ஆட்டினான். மறுபடியும்

அகிலன் சுறுசுறுப்படைந்தான். அழைப்புமணிகள் தொடர்ந்தன. ஒருமணிநேரத்தில் வந்தசனங்கள் தமது அலுவல்களை முடித்துக் கொண்டு போய்விட்டனர்.

''நீங்க நிற்கச்சொன்ன ஆளைத்தவிர ஒருவரும் இனி இல்லைச்சேர்!' கூறிக்கொண்டே தர்மராசா சுடச்சுடக் கப்பிஸ் தேநீரை மேசைமேல் கொண்டுவந்துவைத்தான். அகிலன் ஆறுதலாக அதைரசித்துக் குடித்தான். வந்தவர்கள் சகலரும் தத்தமது அலுவல்களை முடித்துக்கொண்டு போனதில் அவனுக்குத் திருப்திதான் வெளியே எழுந்து வந்தான். முன்வாசலுக்கு வந்துபார்த்தான் மூன்று இடங்களில் பெயரைப்பதிந்து நிவாரணத்தை இழந்தவன் அலுவலக வாசலில் ஓங்கிவளர்ந்து பரந்து குடைபிடித்துக்கொண்டிருந்த ஆலமரத்தின் கீழ் நின்றான்.

அகிலன் கையைக்காட்டி அவனை அழைத்தான். அவன் ஆவலோடு உள்ளே வந்தான்; அகிலன்தன் அறைக்குள் நுழைந்து அழைப்புமணியை மெல்லத்தட்டினான்.

''தர்மராசா கணேசனை வரச்சொல்!'' இலிகிதர் கணேசன் உள்ளே நுழைந்தார்.

''கணேஸ், இந்தவாரம் தொடக்கம் இவருக்கு நிவாரணம் தொடர்ந்து வழங்கச்சொல்லி எம். பீ. சி. எஸ். ஜீ எம். முக்கு கடிதம் அனுப்பும்!'' உத்தரவை எழுதிக் கடதாசியை நீட்டினான்.

''சேர்... – இவன் மூந்தி......' கணேசன் மெதுவாக இழுத்தார்.

''அது எல்லாம் இப்பசரி! நீங்கள் போய் கடிதத்தை அடித்துக்கொண்டு வாருங்கோ' கணேசன் உத்தரவோடு வெளியே சென்றார்.

அகிலன் மனம் மேலும் லேசாகியது.

யாவும் கற்பனை

வாரவெளியீடுவீரகேசரி 9.8.92

# தூரத்து நட்சத்திரங்கள்.

ஆவணி மாதத்து பகல் வெய்யிலின் சுமையை சுற்று புறக்கட்டிடங்களும் மேல்மாடிச் சீமெந்துக் கூரையும் தம்மை விட்டு விடுவித்துக் கொண்டிருந்தன.

பண்ணைப் பரவைக் கடலின் குளிர்ச்சி காற்றோடு உறவாடி வந்து தேகத்தைச் சிலிர்க்க வைத்தது.

இரவு ஒருகண் நித்திரை கொள்ள முடியவில்லை சிவநாதனால். மனம் அமைதி இல்லாமல் தவித்தது. பிரயாண ஏற்பாடுகளை எவ்வளவுக்கு எவ்வளவு ரகசியமாக வைத்திருக்க ஆசைப் பட்டாரோ, அது அவ்வளவுக்கு அவ்வளவு பரகசியமாகப் போய் விட்டது.

''இப்ப என்னத்துக்கு மகளை அனுப்புகிறீர்கள் ? படிக்கிற வயது. படிக்கட்டுமன்...''

''வசதி இருக்கிற நேரம் அனுப்பி விடுங்கோ சிவத்தார்! பின் ஒவ்வொருத்தராகப் போகலாம் தானே !''

இவ்வாறு அரிய ஆலோசனைகளும், கேள்விகளும்,

''ஏன் சிவத்தார் பெட்டையை அவசரப்பட்டு அனுப்புகிறார்? கனடாவிலை மச்சான்மார் சம்மந்தம் ஏதும் ஒழுங்கு பண்ணிப் போட்டினம் போலை!''

இப்படி ஒரு கிசுகிசுப்பு.

சிவநாதனுக்கு இவற்றையெல்லாம் கேட்டு மனம் சங்கடப் பட்டது.

இதைவிட கொழும்புத் தபால்கள். வெளிநாட்டுத் தபால்கள் என்று நண்பர்கள், உறவினர்கள், அயலார் என்று தந்தவை ஒரு பெரிய சூட்கேசின் கணிசமான இடத்தை ஆக்கிரமித்துக் கொண் டன.

''ஒரு சின்னப்பார்சல் தம்பி குறைவிளங்காமல் மகளிட்டை கொடுத்துவிடுங்கோ!''

கனடாவில் உள்ள தனது மகளுக்கு அனுப்ப என்று ஒருவர் வந்தார்.

''எனக்கும் நிறையச் சாமான்கள் இருக்கு .....'' சிவநாதனின் மறுப்பை வந்தவர் பொருட்படுத்தவில்லை திரும்பவும் பெட்டிகள் அடுக்கும் பொழுது சிறியபார்சலின் கட்டு சற்று தளரவே அவரின் பார்வையில் நாலு பெரிய பனங்கட்டிக் குட்டான்கள் தென்பட்டன.

இப்படியே எத்தனையோ

சிறியபார்சல் என்று சொல்லியே பத்துப் பார்சல்கள் சேர்ந்து விட்டன.

சிவநாதன் மனம் களைத்து விட்டார்.

உண்மையில் அவருக்கு இந்தப்பிரயாண ஏற்பாடுகள் பிடிக்கவில்லை.

''அவள் இப்ப ஏ. எல். படிக்கிறாள். படித்து ஒரு முடிவைக் காணட்டும். அதற்குப் பிறகு பார்ப்பம்''. இப்படியே கூறி நாட்களை இழுத்தடித்தார்.

''வேலாயுதம் பிள்ளையின் மகள், கடைக்கார குணத்தின்ரை மகள் எல்லாரும் தலைமாற்றி. களவாகப் போய் திரும்பி! வந்தது மறந்து போச்சே?

காசையும் செலவழிச்சு கடைசியில் ஏமாற்றம்தான் மிச்சம்...'
ஆனால் அவரின் வார்த்தைகள் வீட்டில் எடுபடவில்லை.

''நீங்கள் எடுத்தவுடனே எல்லாவற்றுக்கும் பல்லிசொன்ன மாதிரி தடை என்றால் மனுசர் என்ன செய்கிறது? ஊர் உலகத்திலை நடக்கிறதைப் பார்த்தெண்டாலும் செய்வம் என்றில்லை எந்த நேரமும் என்னத்துக்கும் மாறாய்தானே கதை !''

அவரின் மனைவி ராணி போர் கொடி தூக்கினாள். சிவநேசனின் மகள் கல்பனா முதலில் ஒன்றும் பேசாமல் இருந்தவள் மாமன்மாரின் தொடர்ச்சியான கடிதங்களையும் தாயின் அபரிதமான ஆதரவையும் கண்டு அவளும் துணிந்து நின்றாள்.

இவநாதனின் மனைவியின் தம்பிமார் இரண்டுபேர் கனடா வில் இருக்கின்றனர்:

''மூத்தவள் கல்பனாவை உடன் அனுப்புங்கோ!''

''அவள் உங்கை படிச்சு இப்ப என்னத்தைக் காணப்போகின் றீர்கள்?

இப்ப வசதியாய் ஆட்களை பலர் கொண்டு வருகினம்: நீங் கள் ஒன்றையும் யோசிக்காமல் இருங்கோ''

''சிங்கப்பூருக்கு வந்து ரெலெக்ஸ் அடியுங்கோ! நான் வந்து எல்லா ஒழுங்கும் செய்துகொண்டு கூட்டிக்கொண்டு போவன்...!'

மூத்த மைத்துனன் எழுதினான்.

''நீங்கள் ஒன்றுக்கும் யோசியாதையுங்கோ அப்பா! நான்முதல் போய் இரண்டு வருஷத்திலை தேவியையும் நந்தனையும் கூப்பி டலாம் தானே! பின் நீங்களும் ரிடையர் பண்ணிப்போட்டு அம்மா வோடு வரலாம்தானே...!''

கல்பனா உற்சாகத்தோடு கூறினாள்.

அவள் கூறுவதை தங்கை தேவியும் தம்பி நந்தனும் ஆச்சரி யத்தோடு கேட்டுக்கொண்டு நின்றனர்.

சிவநாதன் ஒன்றுமே கதைக்கவில்லை.

இரு வாரங்களுக்கு முன்...

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை நேரம். சிவநேசன் முன் அறையில் அமர்ந்து அன்றைய பத்திரிகையில் மூழ்கியிருந்தார்.

வீட்டு அமைதி யாவற்றையும் விரட்டி அடித்தன, கல்பனா வின் நண்பிகளின் உற்சாகக் குரல்கள்.

''அடி நீ இவ்வளவு நாளும் எங்களுக்கு ஒழிச்சுப்போட் டாய் என்ன... அங்கை போய் மறந்து விடாதையடி!''

-இது ஒரு குரல்-

''உனக்கென்ன... நீ அங்கை போய் நல்ல சுகமான சீவி யத்தை கண்ட உடனே பிரண்ட்ஸ் எல்லாரையும் மறந்து விடுவாய் என்ன...!''

-இது மற்றக்குரல்-

''இல்லை இல்லை நான் கடைசிவரை மறக்கமாட்டேன்... உண்மையில் எல்லா ஆயத்தமும் செய்த பின் உங்களுக்குச்

சொல்லலாம் என்று தான் நினைத்திருந்தனான்... நேற்றும் மாமாவின் கடிதம் வந்ததடி, கொஞ்சம் படங்களும் அனுப்பியி ருந்தார்.

இடங்கள் எல்லாம் 'ஸ்னோ' படர்ந்து ஒரே பால் வெள்ளை நிறம்! முதலில் பெரிய மாமாவோடு போய் எல்லா இடங்க ளையும் சுற்றிப் பார்க்க வேண்டும்!

முக்கியமாக அந்த நயாகரா நீர் வீழ்ச்சி!''

-இது கல்பனாவின் குரல்

தன் மகளின் குரலில் தொனித்த உற்சாகத்தையும் ஆர்வத் தையும் கண்ட சிவனேசன் பெரிய பெருமூச்சொன்றை விட்டார்.

''விசர் பெட்டை! தேவையில்லாத கற்பனைகளை தன்னு டைய மனதுக்குள் வளர்த்து விட்டாளே!''

''கனடா மோகத்திலை தாயும் மகளும் துள்ளுகிறார்கள்... மனதுக்குள் நினைத்துக் கொண்டார். பின் என்ன...

பாஸ்போட் எல்லாம் அவசரமவசரமாக எடுக்கப்பட்டன பிரயாண ஒழுங்குகள் கடுகதியில் செய்யப்பட்டன.

கடவுளே, இந்தக் கிளாலிப் பாதையால் பிரயாணம் செய்து கொழும்புக்குப் போய்... சிங்கப்பூருக்குப் போய்... சிவநாதனுக் குப் பிரயாணத்தை நினைக்கவே அடி வயிற்றை கலக்கியது,

அந்தக் கட்டத்தில் கூட மனைவி அவரை விட்டு வைக்க வில்லை.

''உங்களுக்குத் தான் கண்டறியாத பயம்! போய் பார்த்தால் தானே தெரியும் தேற்று! நல்லூருக்கு கார்த்திகைத் திருவிழாவுக்கு போட்டுவரும் போதுதானே ஓட்டோவிலை போற ஆட்களைப் பார்த்தன்!

கடவுளே... பெரியகிழவிகள்... கைக்குழந்தைகளோடை தாய் மார்...

ஆம்பிளையள் வலுதுறைவப்பா!

''ஏனப்பா நீங்கள் கச்சேரியிலை கேட்டுப் பார்த்தால் என்ன? கப்பலிலை இடம் தராயினமே?''

''சும்மா விசர்க்கதை கதையாதை ராணி! நான் அங்கு வேலை செய்கிறன் என்றுபோட்டு பாவத்துக்கு இரக்கப்பட்டு ஒரு இடம் ஒதுக்குவினம். ஆனால் பெண்சாதி பிள்ளைகளுக்கும் இடம்தா என்றால் முடியுமா?''

''தான்தான் சொன்னனே உங்களுக்கு வகிலமை இல்லை யப்பா... போனகிழமை கடைக்கார கந்தையா, தமையன், கந் தையா பெண்சாதி மாமியார்க்காரி எல்லாரும் கப்பலால் தானே போனவை! அவையும் கச்சேரியிலை வேலை செய்கிறவையே?''

''இந்த அப்பாவுக்கு...''

தாயின் துணிவைக் கண்டு மகளும் ஏதோ கூறத் தொடங் கினாள்.

''சரி சரி விடுங்கோ கதையை! தாயும் மகளும் முன்னுக்கு வந்து விட்டினம் கதைக்க...! சிவநாதன் கோபத்தில் கத்தினார்.

கல்யனாவின் கற்பனைகள் ஆசைகள் எல்லாம் உடைந்து காற்றோடு கலந்து விட்டனவோ?

எங்கேயோ தூரத்தில் விழ்ந்து வெடித்த ஷெல் சத்தம் இரவின் மௌனத்தைக் குலைத்தது. சற்றுக் கண் அயர்ந்த சிவநா தன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்.

''மண்டதீவிலிருந்துதான் அடிக்கிறான் போலை...!'' தனக் குள் கூறிக் கொண்டே சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்தி னார்.

அடித்துப் போட்டாற் போல பக்கத்து வீட்டுக் கோபா லுவும் சுந்தரமும் முற்றத்துப் பந்தலின் கீழ் நித்திரையாய் இருந்தனர்.

கொளுத்தி வைக்கப்பட்ட பெற்றோமக்ஸ்லைற், கடைசி மூச் சைவிடும் ஆத்மாவைப்போல் தோற்றமளித்தது.

காத்துக் காணாது போலை ...

கூறிக் கொண்டே சிவநாதன் எழுந்து லைற்றுக்குக் கிட்டச் செல்லமுன் அது தன் கடைசி மூச்சையும் விட்டுக் கொண்டது எண்ணெய் முடிந்துவிட்டது!

பெற்றோமக்ஸ் லைற்றுக்குத் துணையாக இருக்கட்டும் என்று ஏற்றிவைக்கப்பட்டிருந்த போத்தல் விளக்கு கம்பீரமாக எரிந்து அவரைப் பார்த்து சிரித்தது போல் இருந்தது. வீட்டுக்குள் இருந்து இரண்டு வயதுபோன பெண்மணிகளின் குறட்டை துல்லியமாகக் கேட்டது. அவர்கள் உறவு என்று சொல்ல முடியாது, உறவு இல்லை என்றும் சொல்ல முடியாத இரண்டும் கெட்டநிலை.

முன்பு எத்தனை உறவுக்காரர் அயல் வீடுகளில் இருந்தனர்! நல்லதோ கெட்டதோ ஒரு காரியம் என்றவுடன் வீடு முழுக்க உறவினர் கூடிவிடுவார்கள். இப்பொழுது மனம் தாங்க முடியாத அளவுக்கு ஒரு பெரிய வெறுமையும் இடைவெளியும் தான் மிஞ்சி நிற்கின்றன.

தம்பிமுத்து வீட்டுக்குப் பக்கத்து வீடுகள் யாவும் ஷெல் வீச்சு குண்டு வீச்சுகளால் பாழடைந்து இருந்த நிலையிலும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் வசித்தன. ஆனாலும் ஒட்ட முடியாத அளவுக்கு ஒரு அன்னியம் இருந்தது.

சிவநாதன் ஒருவரைத் தவிர இறப்பு நடந்த வீட்டில் கிட்டிய உறவுக்காரர் ஒருவருமில்லை.

பின் பந்தலை விட்டு வெளியே வந்து பார்த்தார். பகல் தேவைக்கென பாவிக்கப்பட்ட இரும்புக் கதிரைகள் இருட்டில் குட்டிப் பிசாசுகள் போலத் தோற்றமளித்தன. நிமிர்ந்துபார்த்தார்.

நிறைய நட்சத்திரங்கள் வானில் சிதறிக்கிடந்தன. திரும்பவும் வந்து கதிரையில் அமர்ந்தார்.

கதிரைக்குப் பக்கத்திலே போடப்பட்டிருந்த சாய்மானக்கதிரையில் படுத்திருந்த தம்பிமுத்து எழுந்து நிமிர்ந்திருந்தார்.

''என்னைத் தனிய விட்டிட்டுப் போய் விட்டியே அம்மா...'' விம்மலுடன் வெடித்தன வார்த்தைகள். பகல் முழுவதும் இதே

வார்த்தைகளை சங்கிலிக் கோர்வை போல் சொல்லிச் சொல்லி அழுதார். இரவு நெடுநேரம் வரை தம்பிமுத்து அழுது கொண்டிருந்தார்.

சற்றுமுன் தான் கண் அயர்ந்தார்.

ஆனால் அதற்குள் மறுபடியும்...
பின் இருக்காதா என்ன?

எட்டுப் பெண்களும் இரண்டு ஆண்களுமாய் பத்துப்பிள்ளைகளைப் பெற்றெடுத்து குடும்ப வண்டியின் நடு அச்சாணியாக இருந்த அவரது மனைவி திடீரென்று இறந்து விட்ட துக்கம் மலையாய் மனதில் மோத...

"பெரியப்பா, இப்படி நெடுகலும் அழுதால் என்ன செய்வது? உங்களுடைய உடம்பு இருக்கிற இருப்புக்கு இது தாங்காது!"

கூறிக் கொண்டே அவரைத் தோளோடு சேர்த்து மறுபடியும் படுக்கவைத்தார் சிவநாதன்.

"தம்பி நீ என்ன தான் சொன்னாலும் என்னாலை தாங்க முடியாது மோனை!

பத்துப் பிள்ளையளைப் பெற்றெடுத்தாள்...
கடைசியிலை ஒரு பிள்ளையும் பக்கத்தில் இல்லாமல் போட்டுதே !

எனக்கு அதுதான் தாங்க முடியாமல் கிடக்குதடா...
கடைசி மூச்சுமட்டும் பிள்ளைகளைப் பற்றித்தானே அவளுடைய சிந்தனை !"

மறுபடியும் விம்மல்.

அவரை ஆசுவாசப்படுத்துவது மிகவும் சிரமமாய் இருந்தது. தம்பிமுத்துவின் மனைவி தங்கமலர் நீரிழிவு நோய் முற்றிப்போய் அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றாள். எந்த மருத்துவத்துக்கும் நான் சளைக்கமாட்டேன் என்று கூறாமல் கூறி நீரிழிவு நோய் அவளைச் சிக்கெனப் பிடித்திருந்தது.

அவளுக்கு அந்த நோயின் அறிகுறிகள் முன்னரே இருந்து வந்தது. பெரிய ஆலமரம் போல் குடும்பப் பாரத்தைத் தாங்கியவளின் உடல்நிலை கடந்த இரண்டு வருடங்களாக மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது.

எந்த நேரமும் களைகட்டியிருக்கும் தம்பிமுத்துவின் வீடு பிள்ளைகள் எல்லோரும் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருவராக வெளிநாடு செல்லத் தொடங்கியதும் பொலிவிழந்துவிட்டது.

தங்கமலருக்கு உடல் நோயை விட உள்ளத்து நோய் தான் கூட,

"தம்பி சிவம், இப்ப நீதான் எங்களுக்கு ஒரே ஒரு துணை நீயும் இல்லாட்டி எங்கடகதி அதோகதி தான்...!" தம்பிமுத்து அடிக்கடி ஏக்கத்துடன் கூறுவார்.

இரவுச் சத்தத்தை மீண்டும் குலைத்தது வீட்டுக்குள் இருந்த அவர்மணிக்கூட்டின் சத்தம். பன்னிரண்டு மணி அடித்தன.

"சிவம் இந்த மணிக்கூட்டுக்கும் எங்கடை கலியாணத்துக்கும் ஒரே வயது மோனை!

கடைக்காரர் எல்லோரும் சேர்ந்து அந்த நேரம் எனக்குத் தந்த கல்யாண வீட்டு அன்பளிப்பு!

நாற்பத்தி ஐந்து வருஷம் அது சீராய் ஓடிக் கொண்டிருக்கு! இப்ப அது ஒன்றுதான் என்னோடு ஒட்டிக் கொண்டு இருக்கு! அழமாட்டாத குறையாய் தம்பிமுத்து கூறினார்.

"நான் படிச்சுப் படிச்சு சொன்னனான் தம்பி! பிள்ளையள் எல்லோரையும் ஒண்டாய் அனுப்பாதை! ஒரு ஆள் என்றாலும் எங்களுக்குப் பக்கத்திலை இருக்க வேணும். கடைசியில் நாங்கள் தனிச்சுப் போவோம்... அவள் கேட்டால்தானே! இப்ப பார்த்தியே..! எனக்கு அவள் அவளுக்கு நான் என்று வந்துவிட்டதடா கடைசியில... கடைசியில நான் தனியாய் போனனடா...!" தம்பிமுத்து குலுங்கிக் குலுங்கி அழுதார்,

''எத்தனை பேரப்பிள்ளைகள் .. உன்னுடைய மூன்று பிள்ளையளும் இல்லாட்டி அவளுக்கு நெய்ப்பந்தம் பிடிக்கக்கூட ஆள் இல்லாமல் போயிருக்கும் சிவக்...!'' சரி பெரியப்பா, இப்ப எல்லாம் முடிஞ்சு போச்சு! கொஞ்சம் நீங்கள் உங்களை ஆறுதல் படுத்திக் கொள்ள வேண்டிய கட்டம் இப்ப! அதுவும் உங்களுக்கு இருக்கிற நெஞ்சு வருத்தம் பொல்லாதது.

இப்ப நீங்கள் உணர்ச்சி வசப்படக் கூடாது!'' சிவநாதன் தன்னால் ஆனமட்டும் ஆறுதல் படுத்த முனைந்தார்.

''என்னுடைய மூத்தவள் வாசுகி, கலா, திலகம் அவையின்ரை விலாசம் உனக்குத் தெரியும் தானே? இவையிலை ஒரு ஆளுக்கு அறிவித்தால் மற்றவைக்கு அறிவிப்பினம் தானே! இவை கனடா ...

ஜெயாவும் ராஜியும் ஜேர்மனியிலை...

வசந்தமும் மல்லிகாவும் சுவிசிலை ..

மூத்தவன் குமாரும், கடைக்குட்டியன் ராசனும், சிவாவும் சீமையிலை கடவுளே ஆலமரம் மாதிரி இருந்த குடும்பம் இப்படிச் சிதறிக்கிடக்குதளே .. !

அவையின்ர ரெலிபோன் நம்பர்களும் விலாசங்களும் நெடுகலும் மாறி மாறி ஒரு ஆபத்து அந்தரத்துக்கு கூட செய்தி அனுப்ப முடியாது தம்பி சிவம் நாங்கள் பாவம் செய்த தாய் தகப்பனடா! இல்லாட்டி கடைசியிலை பால் பருக்கக் கூட ஒரு பிள்ளை பக்கத்தில் இல்லாமல் போய்விட்டதே!

காசை உழைத்தென்ன ..? வீடுகளைக் கட்டியென்ன ...? தம்பி முத்துவின் பெருமூச்சு காற்றில் கலந்தது.

''பெரியப்பா நான் செஞ்சிலுவைச் சங்கத்தாலை வாசுகிக்கு அறிவிச்சுப்போட்டன், இனி மறுமொழி வந்தால்தான் எல்லாம் தெரியும்''

சிவநாதன் ஆறுதல் கூறினார்.

''இனி வந்தென்ன போயென்ன மோனை! சரியாகக் கவலைப் படுகிறம் எண்டமாதிரி ஒவ்வொரு ஆளாய் கடிதம் போடுவினம் அதோடை சரி! என்னுடைய மூத்தவன் இப்ப மூன்று கிழமைக்கு

முந்தி ஒரு காயுதம் எழுதினவன் தாயையும் என்னையும் கப்பலாலை கொழும்புக்கு வரச்சொல்லி, தான் வந்து கூட்டிக்கொண்டு போவாராம் . கப்பலிலை போறதெண்டால் லேசான விசயமே . ! ஒட்டோ பிடிச்சு ஆஸ்பத்திரிக்குப் போய் கேட்டேன், இனி இல்லை எண்டு கடுமையாய், இஞ்சை தப்பாதெண்டு இருக்கிற நோயாளியைத்தான் கப்பலால் அனுப்புவினமாம்..!
அதுவும் ஒரு குழு கூடித்தான் தீர்மானிப்பினமாம்.
இப்ப பாத்தியே...!

எங்கையும் செல்வாக்கு இருக்க வேணும் மோனை! முந்தி எண்டால் வீட்டிலை ரெலிபோன் இருந்தது நினைச்ச நேரம் மாறி மாறிக் கதைப்பினம். இப்ப எல்லாம் கனவாய்ப் போச்சு ரெலிபோனும் சரி! வீடும் சரி!. தம்பிமுத்துவின் வீடு கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் வீச்சுக்களால் மிக மோசமாக அழிந்துவிட்டது. இப்பொழுது மூத்தமகளுக்கு சீதனமாகக் கொடுத்த வீட்டின் கீழ்பகுதியில் இருக்கின்றார். மேல் மாடி பாவிக்க முடியாத அளவிற்குச் சேதம்.

''படவசுவும் போய் கடைக்கணக்குகளை பார்த்து விட்டு வீட்டுக்கு வர பன்னிரண்டு மணியாகி விடும். எந்தநேரமெண்டாலும் எனக்காகப் பார்த்துக் கொண்டிருப்பாள்... மகராசி போய்விட்டாள்...!''

தம்பிமுத்து முணுமுணுத்தார்.

''தங்கமலர் கூல்பார்'' என்றால் அந்தக்காலத்தில் மிகவும் பிரசித்திபெற்ற கடை. தூரத்தில் வரும் பொழுதே தன் இனிமையான மணத்தால் ஆளை இழுக்கும் ''மல்லிகை சர்பத் ஐஸ்கிரீம் வெளிநாட்டு அப்பிள், திராட்சைப் பழங்கள், ஆளை மயக்கும் பீடா! இப்படி அந்தக் கூல்பார் நல்ல விலாசமான கடையாய் இருந்தது...

கொள்ளையாய்ச் சம்பாதித்தார் தம்பிமுத்து. இரண்டுதரம் கடை வன்செயல்களின் போது எரிக்கப்பட்டது. மீண்டும் செப்பனிட்டு வியாபாரத்தை ஆரம்பித்தார்; ஆனால் இப்பொழுது நடக்கும் சண்டை விமானக் குண்டு வீச்சுக்கு கடை முற்றாகச் சேதமடைந்துவிட்டது.

''அது ஒரு காலம் மோனை...! என்ன கூட்டம், என்ன வியாபாரம்!'' தம்பிமுத்து பழைய கனவில் மூழ்கினார்.

இருந்தாற்போல் வித்தியாசமான ஒலி ஒன்று சிவநாதனின் கோழித் தூக்கத்தை குலைத்தது. திடுக்கிட்டு எழுந்தார். தம்பிமுத்து காலை உதறிக் கொண்டிருந்ததும் தேகத்தை நெளித்ததும் போத்தல் விளக்கின் ஒளியில் மங்கலாகத் தெரிந்தது.

''என்ன செய்கிறது பெரியப்பா?'' அவசரமாகக் கேட்டார்.

''டேய் சிவம் என்னவோ செய்யுதடா... நெஞ்சைத் தடவிவிடு...'' தம்பிமுத்துவின் வார்த்தைகள் நின்று நின்று வெளிவந்தன.

சிவநாதன் மிகவும் பயந்துவிட்டார்.

''கடவுளே! இது என்ன சோதனை !'' கூறிக்கொண்டே ஆழ்ந்த நித்திரையில் கிடந்த கோபாலுவையும் சுந்தரத்தையும் அவசரமாக எழுப்பினார்.

''டேய் தம்பிமுத்து மாமாவுக்கு என்னவோ செய்யுதடா எழும்பு! எழும்பு!''

அவரின் அலறல் சத்தத்தைக் கேட்டு இருவரும் எழுந்தனர் சிவநாதன் தம்பிமுத்துவின் மார்பை மெதுவாக தடவிவிட்டார்.

தம்பிமுத்து மூச்சு விடுவதற்கு மிகவும் சிரமப்படுவது தெரிந்தது.

''சிவம் என்னை மெதுவாக தூக்கிவிடு. நான்... வெளியே போக வேணும்...'' வார்த்தைகள் புரண்டன.

சிவநாதனும் சுந்தரமும் கோபாலுவும் தம்பிமுத்துவை மெதுவாக கைலாகு கொடுத்து சுவர் அருகே கொண்டு சென்றனர்.

ஆனால் அதற்குள் தம்பிமுத்து இயற்கையின் உபாதைகளைக் கழித்துவிட அவர் அணிந்திருந்தவைகளை நீக்கி, மாற்று உடுப்பு அணிவிப்பதற்குள் சிவநாதன் களைத்துவிட்டார். கடவுளே ஒரு

பிள்ளை கூட பக்கத்தில் இல்லையே... இவருக்கு ஒன்று நடந்து விட்டால்...?

சிவநாதன் உள்ளுக்குள் மனம் குமுறினார். தம்பிமுத்துவின் நிலை பயமாக இருந்தது. மூச்சு விடக்கஷ்டப் பட்டார். அந்த அர்த்த இராத்திரியிலும் கோபாலு எங்கேயோ ஓடிச் சென்று ஓட்டோ ஒன்றை கொண்டு வந்தான். தம்பிமுத்துவை மெதுவ்வாக ஏற்றி அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தனர்.

அங்கு அவரைப் பரிசோதித்த டாக்டர் உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அனுமதிக்கப்பண்ணினார், உடனடியாக என்னவெல்லாமோ மெஷின்கள் கொண்டு வந்து வைத்தனர்.

ஒக்சிஜன் குழாய் வந்தது.

எல்லாவற்றையும் பார்க்க சிவநாதனுக்கு தலையைச் சுற்றியது.

விடியும் மட்டும் ஆஸ்பத்திரியில் நின்றவர் கோபாலுவிடம் தம்பிமுத்துவை கவனிக்கச் சொல்லி விட்டு நிலைமையை அறிவிக்க கொக்குவிலில் உள்ள தனது வீட்டுக்கு விரைந்து சென்றான்

''என்னப்பா முகமெல்லாம் ஒரு மாதிரிக் கிடக்கு..! என்ன நடந்தது?''

ராணி பரபரப்புடன் கேட்டாள். சிவநாதன் கூறுவதைக் கேட்டாள்.

''இதென்னப்பா கடவுளின் சோதனை? கடைசியில அவரும் ஒரு பிள்ளையளின்ரை முகத்திலும் முழியாமல் போகப்போறாரோ...?''

''இதெல்லாவற்றையும் பார்க்க எனக்கு, எனக்கு தலையை சுற்றுகிறது ராணி...!

இதற்கிடையில கண்டறியாத பிரயாணம் ஒண்டு எங்களுக்கு...''

சிவநாதன் முழுச்சலிப்போடு கூறினார். மகள் கல்பனா சடாரென வீட்டுக்குள் சென்றாள். சென்ற கணத்தில் திரும்பி வந்தாள்.

''அப்பா நீங்கள் கவலைப்பட வேண்டாம்! நான் வெளிநாடு போகப் போவதில்லை...!''

மிக ஆறுதலாக ஆனால் மனம் தெளிந்த வார்த்தைகள் வெளிவந்தன.

அவளின் புத்தம் புதிய பாஸ்போட் ஒவ்வொரு இதழாக அவளால் கிழிக்கப்பட்டு முற்றத்தில் மூலைக்கொன்றாக காற்றில் பறந்தன.

''உனக்கு என்ன விசரே!'' ராணி கத்தினாள்.

''நீ சும்மா இரு ராணி!'' மிகச் சாந்தமாக சிவநாதன் கூறினார். பெருமையோடும் பாசத்தோடும் தன் மகளை நோக்கினார். அவரின் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருந்தன.

( யாவும் கற்பனை )

வீரகேசரி வாரவெளியீடு
26.9.1993

★ ★ ★

# எதிரொலி

கொழும்பு நகருக்கே உரிய காலை நேரத்துப் பரபரப்பு உறுமிக் கொண்டு வந்த விமானப் படையைச் சேர்ந்த ஜீப் வண்டி விமானப்படை அதிகாரி திலக் ராஜபக்ஷாவின் வீட்டுவாசலில் நின்றது. மிக விநயத்துடன் இறங்கி வந்த சாரதி மிடுக்குடன் சலூட் அடித்தான்.

"சுமி"

கணவனின் குரலைக் கேட்டு ஓடோடி வந்தாள் சுமி. அவளின் முகத்தில் சுரத்தில்லை. இறுகிக் கெட்டியாகக் காட்சி அளித்தது.

சுமி வட் ஹாப்பின்ட் ரு யூ? வட்ஸ் த மாற்றர் திலக் மிக அவசரமாக கேட்டான்.

ஒன்றுமில்லை என்ற பாவனையில் சுமி தலையை ஆட்டினாள்.

"நோ நோ... நீ சந்தோஷமாக இல்லை"

இரவு நடந்த சம்பாஷணை திலக்கின் ஞாபகத்துக்கு வந்தது

"திலக், இந்தப் போர் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்? ஒவ்வொரு நாளும் அம்புலன்ஸ் வண்டி வீதியால் அலறிக்கொண்டு ஓடும் போது அதன் பயங்கர சத்தம் என்னைப் பைத்தியக்காரியாக்கி விடும் போல் தெரிகிறது.

யாருக்குத் தெரியும்? எங்களைப் படைத்த இறைவன்தான் பதில் கூறவேண்டும்.

யாரைப் பார்த்தாலும் போர் வெறி கொண்டு திரிகின்றனர். சுமி எனக்கு இந்த விமானமோட்டி உத்தியோகம், இந்த படாடோபம், இந்த இயந்திரமயமான வாழ்க்கை எல்லாமே வெறுத்து

விட்டது. பேசாமல் ஒய்வு பெற்று விட்டு கிராமத்துக்கு போய் விடுவோமா என என்மனம் விரும்புவதை என்னால் தடுக்க முடியாமல் உள்ளது.

பெருமூச்சுடன் திலக் திரும்பிப் படுத்தான்.

மாத்தறை நகரிலிருந்து உள்ளுக்குள், வளவை கங்கையின் அரவணைப்பில் உள்ள அழகான கிராமம் அது.

தன் சிறுவயதில் ஓடியாடிய இடங்கள், தன் இளமைக்கால நண்பர்கள்... எல்லாமே அவனின் ஞாபகத்துக்கு வந்து ஓடி மறைந்தன.

அவனின் நெருங்கிய நண்பன் சிவராஜாவின் முகம் வந்து காட்சி அளித்தது.

சிவராஜாவின் தந்தையின் பெரிய கடை மாத்தறையில் இருந்தது. திலக்கின் வீட்டுக்குப் பக்கத்தில் சிவராஜாவின் வீடு.

சிறுவயதில் மாத்தறைக்கு தன் தந்தையோடு வந்து விட்டான். சிவராஜா சிங்களப் பாடசாலையிலேயே படித்தான். மிகக் கெட்டிக்கார மாணவனாய் திகழ்ந்தான். திலக்கின் நெருங்கிய நண்பனானான்.

சிவராஜாவின் துணையுடன் திலக் சிறிதளவு தமிழ் பேசக் கற்றுக் கொண்டான்.

மாலை வேளைகளில் பாடசாலை விளையாட்டு மைதானம், சுத்தாரமா விகாரையின் அரச மரத்தடி, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் கூடும் கிராமச் சந்தை, இல்லாவிடில் சிவராஜாவின் தந்தையின் கடைவாசல் என்று மாறி மாறிப் பொழுது போக்குவார்கள்.

ஓ! எவ்வளவு சந்தோஷமான நாட்கள் அவை.

ஆனால்,

1958ன் இனக்கலவரத்தில் கடை எரிக்கப்பட்டு சிவராஜாவும் அவனின் தந்தையும் உயிருடன் எரிக்கப்பட்டது அந்தக் கொடூரமான சம்பவங்களை அடுத்து இடம் பெற்ற பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில், ஊராரால் மிக நேசிக்கப்பட்ட விகாரைப் பிக்கு இறந்தது சிவராஜாவின் மறைவால் உண்ணாமல், உறங்காமல் திலக் இரண்டு வாரங்கள் சுகயீன முற்று இருந்தது எல்லாமே திலக்கின் நினைவில் முட்டி மோதின.

''நாங்கள் எங்கே போகின்றோம்...''

உதடுக்குள் வெறுப்புடன் முணுமுணுத்துக் கொண்டான்.

பழைய சம்பவங்களை நினைத்ததும் அவனின் முகம் இறுகியது. கண்களில் இருந்து இரு சொட்டுக்கண்ணீர் தெறித்தன அவசர அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டான். ''ஏய் திலக் என்ன இது...?'' கூறிக் கொண்டே சுமி கணவனின் நெற்றியை ஆதாரத்துடன் தன்கை விரல்களால் தடவி விட்டாள்.

''அது சரி, இந்த முறை லக்கியின் சுகயீனத்தை சாட்டாக வைத்து மூன்று நாள் லீவில் வந்திர்கள். இனி எப்போ? இனி ஆறுமாதங்களின் பின்பா?

கவலையுடன் கேட்டாள் சுமி.

''ஒரு போர் வீரனைப் பார்த்து கேட்கும் கேள்வி இது அல்ல சுமி.''

திலக் அவசரமாக பதிலிறுத்தான்

''டாடி, நீங்கள் விமானத்திலிருந்து குண்டு எங்கே எல்லாம் வீசுவீர்கள்?''

தந்தையின் முகவாயை தன் சிறிய கைகளால் தடவியபடியே கேட்டாள் லக்கி.

''ஓ! அதுவா புலிகள் எங்கே எல்லாம் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் வீசுவேன்''

திலக்கின் குரலில் பெருமை

"வீடு, கட்டிடங்கள், கோயில்கள் எல்லாம் அழியுமா?"

இது நிமல்

"அப்படி என்றால் பாடசாலைகள்?"

சுரேனின் குரல் உயர்ந்தது

"அதெல்லாம் பார்க்க முடியாது, மகனே"

"அப்படியென்றால் எங்களைப் போல் சின்னப் பிள்ளைகள் செத்துப் போவார்களே டாடி" லக்கி கேட்டாள். அவளின் கேள்வியில் துயர் தொனித்தது. பார்வையில் மிரட்சி தெரிந்தது.

"அதையெல்லாம் பார்த்தால் முடியுமா? அவர்கள் எல்லாம் பெரியவர்களாக வந்து எங்களை யெல்லாம் இங்கே வந்து கொன்று விடுவார்களே மகளே."

"அ்னே டாடி! பவ் நேத ("அது பாவமில்லையா டாடி!")

"ஏக்கொலண்ட பொம்ஸ் தாண்ட எப்பா டாடி" ("அவைகளுக்கெல்லாம் குண்டு வீச வேண்டாம் டாடி!") லக்கியின் குரலில் ஏக்கம், பரிதாபம் எல்லாமே இருந்தன.

"ஓகே! ஓகே! நீங்கள் மம்மிக்குத் தொந்தரவு தராமல் படிக்க வேண்டும். நான் இரண்டு வாரங்களில் வந்து விடுவேன். கூறிக்கொண்டே இருக்கையை விட்டு எழுந்து மனைவியின் அருகில் வந்தான்.

"சுமி போய் வரவா?"

சுமி ஏதோ கூற விரும்பினாள். வார்த்தைகள் வெளி வரவில்லை. உதடுகள் மட்டும் துடித்தன.

"சுமி, உனக்கு மனம் சரியில்லை என்பது எனக்குப் புரிகின்றது. எனக்கு லீவு எடுப்பது சிரமம் என்ற விடயம் உனக்கு நன்கு புரியும்."

சுகயீனம் என்று கூறி, லக்கியின் பிறந்தநாளுக்கு வருவதற்கு நான் பட்டபாடு .. லீவு என்றாலே எனது மேலதிகாரியின் முகம் கறுத்து விடுகிறது! இயற்கையிலேயே சறுப்பான அவருடைய முகம் கோபம் வந்தால் கேட்கவா வேண்டும்?" இப்படிக் கூறி விட்டு பலமாகச் சிரித்தான் திலக்; தன் கேலிப் பேச்சால் அந்த இறுக்கமான சூழ்நிலையைச் சற்றுத் தளர்த்த விரும்பினான். குனிந்து மனைவியின் நெற்றியில் இறுக்கமான ஒரு முத்தத்தைப் பதித்து விட்டு தொப்பியை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

ஃ ஃ ஃ

வெய்யிலின் சூட்டிலும் பார்க்க உள்ளத்தில் சூடு அதிகமாகத் தகித்தது. அலுவலர்கள் மெஸ்ஸில் அமர்ந்திருந்தான் திலக்.

பொங்கும் நுரையுடன் இருந்த பியர் கிளாசை கையில் வைத்திருந்தபடியே தூரத்தே தன் பார்வையைச் செலுத்தினான்.

சதா இரைச்சலுடன் பறந்து திரியும் விமானங்களின் பயங்கரச் சத்தங்களையும். ஓயாமல் சிறிப்பாயும் எறிகணைகளையும் மௌனமாகக் கேட்டும், பார்த்தும் இருந்தபடியால் சோகத்துடன் காட்சியளிக்கும் தூரத்துப் பனங் கூடல்கள் வெய்யிலில் வாடி நிற்கின்றனவோ?

"என்ன திலக் பலமான யோசனை? இன்றைக்காவது இலக்கைத் தப்பாமல் அடிப்பியா?" கேலியுடன் எழுந்தது வியகேனயின் குரல்.

"திலக் சரியான இடத்தில் குண்டுகளை வீசினால் சூரியன் நாளைக்கு மேற்கேயல்லவா உதிக்கப் போகின்றான்!"

கூறிவிட்டு அட்டகாசமாகச் சிரித்தான். சில்வா.

"திலக் விமான மோட்டியாக நீடித்தால் போர் இன்னும் பத்து வருஷத்துக்கு நீடிக்கும்!"

மீண்டும் வியகேன.

"சட் அப்"

திலக் கோபத்தின் உச்சத்துக்குச் சென்றான். அவனின் முக மெல்லாம் சிவந்து விட்டது.

மீதியிருந்த பியரை கடகடவென்று வாய்க்குள் ஊற்றிவிட்டு சிகரெட்டின் அடித்துண்டை காலுக்குள் போட்டு சப்பாத்தினால் பலமாகத் தேய்த்தான்.

அவனின் சகாக்களைக் காலால் தேய்த்த திருப்தி.

மௌனமாக வெளியேறினான்.

ஃ ஃ ஃ

காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது அந்த இத்தாலிய தயாரிப்பான சியாமா செட்டி குண்டு வீச்சு விமானம்.

ஏதேதோ வரைபடங்கள் திலக்கின் முன்னிலையில் இருந்தன.

சிவத்தக் குறியீடுகள், கறுத்த மையினால் அடையாளமிடப் பட்ட இடங்கள்.

குறிப்பிட்ட இடத்துக்கு மேலாக தாழ்தரம் வட்டமிட்டான்;

கொக்குவில் சந்தி.. கோண்டாவில் சந்தி... ரயில் பாதை எனக் குறித்த கோடு...

பெரிய குளமொன்றில் நீர் மதிய வெய்யிலில் பளபளத்தது.

ஓங்கி வளர்ந்த கோயில் கோபுரம் துல்லியமாகதெரிந்தது. அதற்கு தெற்கால், கிழக்கால் நெருக்கமான குடியிருப்புகள் விமா னச் சத்தத்தைக் கேட்டு மக்கள் அங்கு மிங்கும் ஓடுவது தெரிந் தது. காலையில் தான் பார்த்த மனைவி சுமியின் சோகம் ததும்பும் முகம் தோன்றி மறைந்தது.

மகள் லக்கியின் முகம் தோன்றி மறைந்தது.

பிள்ளைகளின் கேள்விகள் காதில் ஒலித்தன.

ஓ! அது தான் இடம்.

தன் மனதை இறுக்கமாக்கிக் கொண்டான் திலக்.

சரியான இடத்தை கணித்துக் கொண்டு விமானத்தை கீழே இறக்க முற்பட்டான்.

படார்... படார்...

விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் நாலு பக்கங்களிலிருந்து இயங்கின.

விமானம் மேலே எழும்பியது.

மீண்டும் வட்டமிட்டான்.

மறுபடியும் இடத்தை குறி வைத்து விமானத்தை இறக்க முற்பட்டான்.

மறுபடியும் கீழிருந்து தீப் பொறிகளுடன் ரவைகள் வானத்தை நோக்கிச் சீறின.

மீண்டும் விமானம் மேலெழுந்தது.

திலக் ஆத்திரப்பட்டான்.

இன்றும் இலக்குப் பிழைத்து விட்டதே

ஆதங்கத்துடன் கூறிக்கொண்டான்.

''திலக் சரியான இடத்தில் குண்டுகளைப் போட்டால் சூரியன் நாளை மேற்கில் தானே உதிப்பான்.''

சிங்காவின் கேலிக் குரல்

நண்பர்களின் நக்கல் குரல்கள் மாறி மாறி நாராசமாக திலக்கின் காதுகளில் மோட்டி மோதின.

'சாய், இப்படிக்கூறி விட்டார்களே ..?'

மனம் ஆத்திரப்பட்டது.

பொறுமை இழந்தான் திலக்.

ஏதோ ஒரு வெறி அவனது உடல் எங்கும் பரவியது.

தன்னை மறந்த நிலையில் கைகள் இயங்கின.

இராட்சதக் குண்டுகளை கீழே தள்ளி விட்டு அந்த சியாமா செட்டி குண்டு வீச்சு விமானம் வானில் சென்று மறைந்தது.

ஃ ஃ ஃ

விமானச் சத்தத்தைக் கேட்டதும் காய் கறி விற்கும் பறுபதக் கிழவி ஒருகணம் நின்று நிமிர்ந்து பார்த்தாள்.

"அறுவான் வந்திட்டான்... அம்மான் ஆச்சி நீதான் துணை...!"

தலையில் இருந்த கடகத்தை கீழே போட்டு விட்டு, வேலி ஓரமாக குனிந்து படுத்துக் கொண்டாள். குண்டுகளை வீசிவிட்டு விமானம் சென்றதும், கடகத்தையும் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

சயிக்கிலில் இளைஞர்கள் ஓடினார்கள்.

"எங்கை மோனை போட்டவன்?"

பறுபதக் கிழவியின் கேள்வி எழுந்தது.

"நந்தாவில் அம்மன் கோவிலடியிலை ஆச்சி."

கூறிக் கொண்டே ஒருவன் சயிக்கிலில் விரைந்தான்.

ஆலும், அரசும், மகிழ மரமும் சூழ நின்று நிழல் பரப்பிய அந்த அழகிய கோயில் வாசல் சுடுகாடாகக் காட்சி அளித்தது மரங்கள் கொப்புகள், இலைகள் யாவற்றையும் இழந்து விட்டு அமங்கலமாக நின்றன.

கோயில் வாசலில் அடைக்கலம் தேடிய மூன்று பெண்மணிகள், நர்சரிப் பாடசாலை மழலைகள் மூவர், யாரோ ஒரு வழிப்போக்கர்.

எல்லாருமே உடல் சிதறி இரத்தமும் சதையுமாய்...

"ஐயோ என்ரை நந்தாவிலாளே...
உன்னுக்குள்ளை நீயிருக்கவோ இது நடந்தது?"

பறுபதக்கிழவி கோயில் வாசலை நோக்கிக் கதறினாள்.

"அறுவான் குண்டைப் போட்டு இந்தக் குஞ்சு குருமானை எல்லாம் சாகடிச்சுப் போட்டானே!
இவனுக்குப் பிள்ளையள் இல்லையோ...
தலையிலை இடிவிழாதோ"

அவளின் புலம்பல் ஓயவில்லை.

ஃ ஃ ஃ

இரவின் இருட்டை- ரியூப் லைற் வெளிச்சம் கலைத்துக் கொண்டு நின்றது.

கறுத்தக் கழுசானும், பச்சை ரீ சேட்டுமாய் காட்சியளித்தான் திலக்.

கையில் பியர் கிளாஸ், உதட்டில் சிகரெட் புகைத்தது.

விமானப்படை உயர் அதிகாரிகள் மூலைக்கு மூலை நின்று உரையாடிக் கொண்டு நிற்கின்றனர்.

மூலையில் இருந்த மேசையில் ரெலிபோன் அலறியது.

ஒரு அதிகாரி ஓடிச்சென்று ரீசிவரை எடுத்தார்.

சம்பாஷணை நீண்டது.

அவரின் முகம் இறுகியது.

ரீசிவரை ஒரு பக்கம் வைத்து விட்டு மெதுவாக நடந்து வந்தார்.

"திலக், உனக்கு .. உனக்கு ஒரு Sad News"

திலக் கிளாசுடன் ஓடினான்.

"பாவம் திலக், இன்று மாலை அவனது மூன்று பிள்ளைகளும், மனைவியும் வீதியைக் கடக்கும் போது பெரிய வாகனம் மோதி மூன்று பிள்ளைகளும் அதிலேயே இறந்து விட்டார்களாம்! மனைவி ஆபத்தான நிலையிலாம் !

ஒரு கணம் அந்த அதிகாரிகள் பெஸ் கணிசமான மௌனத்தை தழுவிக் கொண்டது. கலகலப்பு யாவும் மறைந்து விட்டன.

"ஓ! மை கோட்"

திலக் அலறியது மற்றவர்களின் இதயத்தை தொட்டது.

கிளாஸ் கீழே வீழ்ந்து நொருங்கியது. ரீசீவர் மேசையில் உருண்டது.

கீழே விழப்போன திலக்கை இரண்டு அதிகாரிகள் கைதாங்கலாகப் பிடித்துக் கொண்டனர்.

(யாவும் கற்பனை)

ஈழநாதம் வெள்ளி மஞ்சரி.

12.11 1994

★ ★ ★



# பதிப்புரை

யாழ் இலக்கிய வட்டத்தின் மூன்று தசாப்தக் கால கட்டத்தின் நிறை வாண்டில் நடப்பாண்டுத் தலைவர் **திரு. து. வைத்திலிங்கம்** அவர்களின் **'மண்ணின் கனவுகள்'** என்ற சிறுகதைத் தொகுதியை இலக்கிய வட்டத்தின் ஐம்பத்தி ஐந்தாவது நூலாக வெளியிடுவதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறோம்.

ஐயர் சச்சிதானந்தன்.
இணைச் செயலாளர்
யாழ்- இலக்கிய வட்டம்

விலை:
ரூபா 55/-

இவரைப் பற்றி...

**திரு. து. வைத்திலிங்கம்** (1939 –) அவர்கள், அரச நிருவாக சேவையில் உயர் பதவி வகிக்கும் (விரல் விட்டு எண்ணக் கூடிய) தமிழீழ முன்னணி எழுத்தாளர்களுள் ஒருவர் – யாழ். இந்துவின் புதல்வர்களுள் ஒருவர் – யாழ். கலட்டியைப் பிறந்த மண்ணாகவும், தாவடி – கொக்குவிலைப் புகுந்த வீடாகவும் கொண்டவர் – தற்போது, யாழ் – சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் / மேலதிக அரசாங்க அதிபர்.

**தமிழீழத்தில்** முகிழ்த்த இலங்கையர்கோன், க.தி. சம்பந்தன்... என்ற மூத்த எழுத்தாளர் பரம்பரையை அடுத்து, 'செங்கை ஆழியான்' , செ. யோகநாதன்... என்ற வரிசையில் நிலைகொண்டு நிற்கும் இவர், 'கனதியான ஒரு படைப்பாளி' என்ற மகுடத்துடன் விளங்குகின்றார்.

**யாழ்.** இலக்கிய வட்டம் – இலக்கியப் பேரவையின் தலைவராக இருக்கும் 'து. வை.', 125க்கு மேற்பட்ட சிறு கதைகள் எழுதியதோடு 'சிறைப் பறவை' (குறு நாவல்), 'ஒரு திட்டம் மூடப்படுகிறது' (இரசிகமணி கனக, செந்திநாதன் நினைவுப் பரிசுப்போட்டியில் முதற்பரிசுக் குறு நாவல்), 'பூம்பனி மலர்' (நாவல்), 'மண்ணின் குழந்தைகள்' (நாவல்) எனும் நான்கு நூல்களை வெளியிட்ட பெருமையும் இவருக்குண்டு.
'மண்ணின் கனவுகள்' எனும் இந் நூலே, இவரது கன்னிச் சிறுகதைத் தொகுதி நூலாகும்.

**'து.வை'.** யின் கதைக் கருக்கள் கடுகாகவும் கனதியாகவும் இருக்கும். அதே வேளையில், நெஞ்சை உறுத்தும் தீப்பொறியாகவும் இருக்கும். உணர்வில், பெண்ணின் மென்மையும், நளினமும், இனிமையும் இழையோடி நிறகும். எனினும், இவரது ஆளுமைக்கேற்றபடைப்புகள் இன்னும் முழுமை நிலைக்கு வந்ததாக இல்லை என்பது என் சிற்றறிவின் கணிப்பு. காலம் அதனைத் தரும். காத்திருப்போம்

– **அநு. வை. நாகராஜன்.**

"சாந்தி"
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில் . 23. 03.1994